# MAHAJANAN

# மகாஜனன்




Volume XXXIV

2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனன்

KNOW THYSELF

## யா/ மகாஜனக் கல்லூரி,
## தெல்லிப்பழை.

## *J/MAHAJANA COLLEGE,*
## *TELLIPPALAI.*

**XXXIV** பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம். **2009**

6164 (P) Archives

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனன் மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌரவ ஆலோசகர் | : | திருமதி சிவமலர் அனந்தசயனன் |
| மலர் ஆசிரியர் | : | திருமதி ரேணுகாதேவி கேசவன் |
| மலர்க்குழு | : | திரு. சு. சயந்தன் |
| | | திரு. ம. மணிசேகரன் |
| | | செல்வி. இ. சம்பந்தர் |
| | | திருமதி. சி. சயந்தன் |
| | | செல்வி. செ. இராஜேஸ்வரி |
| | | திரு. செ. சத்யநாராயணன் |
| | | செல்வி. வ. சுபாஷினி |


கல்லூரிச் சஞ்சிகை : "மகாஜனன்" 2009

பிரதிகளின் எண்ணிக்கை : 500

அச்சுப் பதிப்பு : **ANDRA**

வெளியீடு : மலர்க்குழு
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராஜன்*

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தெ. ஆ. துரையப்பாபிள்ளை



எங்களது ஸ்தாபக அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜன சிற்பி



அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KNOW THYSELF




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மண... என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம் பணி நினைவோம்.

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்.

வெல்லுக வெல்லுக மகாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மகாஜன மாதா.

**புலவர் நா. சிவபாதசுந்தரனார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக் கீதம்

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோல முற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

சரணம்

தீர முற்றுத் திருவடைந்த
தெய்வ துரை யப்பரது
தீர்க்கமான தியான மதில்
தேறிவந்த மகாஜனாவின்
(கொடி)

மலர் மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர் விரித்து
தவம் பொலிந்த மகாஜனாவைத்
தாங்கு கொடியின் தாள் பணிவோம்
(கொடி)

தன மளித்துத் தவம் மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மன மகிழ்ந்து மலர்கள் தூவி
வாழி என்று வணங்குவோம்.
(கொடி)

**ஆக்கம் : புலவர் நா. சிவபாதசுந்தரனார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ MAHAJANA COLLEGE

## *OUR MOTTO*
## *KNOW THYSELF*

## OUR VISION

CREATION OF PERFECT HUMANISTIC
SOCIETY OF GREAT VALUES

## *OUR MISSION*

We will promote knowledge, skill, mentality, interpersonal relations and social objectives and journey on as perfect men by preserving our language, art and culture with the sense of humanity friendliness with nature, spiritual awareness and intellectual maturity through the optimum utilization of available resources for formal, informal and non formal courses of Education.

## எமது பாடசாலையின் கல்விப் பயணம்

### விருது வாக்கு - "உனை நீ அறி"

### பயணத்தின் எல்லை

உயர் விழுமியங்களைப் பேணும் பூரண மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கம்

### பயணத்தின் பாதை

முறைசார் முறைசார்பற்ற முறையிற் கல்வி நெறிகளில் எமக்குக் கிடைத்துள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தி அறிவு, திறன், மனப்பாங்கு, தனியாள் இடைத்தொடர்பு, சமூக நோக்குகள் என்பவற்றை மேம்படுத்தி அதன் மூலம் மனித நேயம், இயற்கையுடன் தோழமை, ஆத்ம எழுச்சி, அறிவு முதிர்ச்சி, உடல், உள வலிமையுடன் எமது மொழி, கலை, கலாசாரங்களைப் பேணும் உயர் மனித விழுமியங்களையுடைய முழுமையான மனிதராகப் பயணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




திருமதி.சிவமலர் அனந்தசயனன் B.Sc.(Cey., PGDE (Merit)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர்



**திருமதி.சௌபாக்கியகௌரி பத்மநாதன்** B.A., PGDE, M.Phil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரியில் எழுந்தருளி, அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நடேஸ்வரர் ஆலயப் பிரதமகுருவின் ஆசிச்செய்தி

எல்லாம்வல்ல நடராசப் பெருமானின் திருப்பாதங்களைப் பணிந்து கொண்டு நம் எல்லோரினது மனமும் ஒருநிலையில் நிற்பதில்லை. "சென்ற இடத்தில் செலவிடாது தீது ஒரியீஇ நன்றின்பால் உய்ப்பதறிவு" என்கிறார் வள்ளுவர். மனதின் இயல்பு திரியின் அதைத் தீய வழிகளில் செல்லாது தடுத்து நல்வழிகளில் செலுத்துவதே அறிவு.

2009ஆம் ஆண்டு மலர இருக்கும் மகாஜனன் சஞ்சிகை வெளியீடு எதுவித குறைகளும் இன்றி நல்லபடியாக அமையவேண்டும் என்று எல்லாம்வல்ல சிவகாமி சமேதஆனந்த நடராஜப் பெருமானின் திருவருளும் எனது குருவருளும் கிடைக்கவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து, எனது இதயபூர்வமான நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபமஸ்த்து

**இ. மகாலிங்கக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மகாஜனாவின் நூற்றாண்டு விழாப் பயணத்தின் கால்கோள் காலமாகிய சிற்பி ஐயரத்தினம் தினம் 2009இல் மகாஜனன் மலர் – 2009 இற்குரிய வெளியீடு **XXXIV** வெளியிடுவது மிகவும் பொருத்தமானதும் தனிச் சிறப்புடையதுமான ஒரு நிகழ்வாகும். இன்று தொடக்கம் ஓராண்டு காலம் நூற்றாண்டு விழாக்காலமாக வகுத்து அக்கால வேளையில் பல்வேறு மாணவர், சமூக மேம்பாட்டு நிகழ்வுகளும் நடாத்த மகாஜன சமூகம் வரைந்து வைத்திருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைந்து இன்றைய 'மகாஜனன்' மலரையும் தொடர்ந்து மலரப்போகின்ற நிகழ்வுகளும் சிறப்புற வேண்டும் எனப் பூரிப்புடன் வாழ்த்துகிறேன். இச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒவ்வொருவரும் தம் அன்னைக்கு அளிக்கும் கடமையாக உணர்ந்து செயற்படுவது கண்கூடான விடயம். இதுவே மகாஜனாவின் பாரம்பரியம்.

நூற்றாண்டு காலமதில், சர்வதேசத்தில் தன் பெயர் பதித்து தனிப்புகழுடன் பிரகாசிக்கும் 'மகாஜன மாதா'வைக் கட்டிக்காக்கும் சிவகாமி சமேத நடராஜனின் பாதார விந்தங்களை நன்றியுடன் வணங்கி, வேண்டி மீண்டும் வாழ்த்துகிறேன்.

**சற்குணானந்தன் கைலாசநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டை நோக்கி வீறுநடை போடும் யா/ மகாஜனக் கல்லூரி வருடந்தோறும் வெளியிடும் "மகாஜனன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த பேருவகை அடைகின்றேன்.

மிகவும் நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட கல்லூரியாக மகாஜனக் கல்லூரி திகழ்கின்றது. கல்விப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தடம்பதித்து ஒளிர்கின்றது. இதற்கு அடிப்படையாக அமைவது அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரது அர்ப்பணிப்புமிக்க சேவையே காரணமாகும்.

அறிவொளி வீசிவரும் "மகாஜனன்" மலர் ஆழமான கருத்துக்கள் நிறைந்த, சிந்தனையைத் தூண்டும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. இம்மலர் தொடர்ந்தும் வெளிவந்து அறிவொளி பரப்பி நிற்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ப. விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

## 'KNOW THY SELF'
## 'உனை நீ அறி'

'மகாஜனன்' மலர் 2009 இவ்வாண்டும் ஜயரத்தினம் நினைவுதின விழாவில் வெளிவருவதையிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பேருவகை அடைகின்றது.

மேலும் இவ்வாண்டு மகாஜன மாதா தனது நூறாவது ஆண்டில் 15-10-2009இல் கால் பதிக்கின்றது. இவ் வேளையில் மகாஜனன் மலர் - 2009 வெளிவருவது சாலப் பொருத்தமானதும், மிகப் பெருமை சேர்க்கும் ஒன்றாகும்.

'மகாஜனன்' மலர் ஆண்டுதோறும் வெளிவருவதற்கு எமது பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குவதோடு, தங்களின் முயற்சி வெற்றிபெற எமது இதயபூர்வ வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'வெல்லுக மகாஜன மாதா'

**வை. சிவராசா**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL DEVELOPMENT COMMITTEE
# பாடசாலை அபிவிருத்திச் சபை

## 1910 - 2010

J/Mahajana College, Tellippalai.
Tel.: 021 222 3981 / 021321 4004
E.mail : jeyamahajana2010@yahoo.com
: Malar.sayanan@gmail.com

யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

Mrs.Sivamalar Ananthasayanan
**President**

Mr.K.Ravindra
**Secretary**

Mrs.P.Loganathan
**Treasurer**

**உறுப்பினர்கள்**

திருமதி சௌ. பத்மநாதன்
திரு. பொ. சுந்தரலிங்கம்
திரு.சி. தேவகுமாரன்
திருமதி பா. சுரேஸ்குமார்
திரு. செ. நம்பியாரூரான்
திரு. து. ஜெயஆனந்தராசா
திரு. ந. துளசிதாசன்
திரு. ம. லிங்கபாலன்
திரு. வே. பாலசுப்பிரமணியம்
திரு. க. மயில்வாகனம்

**வலயக் கல்வி அலுவலகப் பிரதிநிதி**
ச. நாகராசா
பிரதிக் கல்விப் பணிப்பாளர்



"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி
தன் மெய்வருத்தக் கூலிதரும்"

வள்ளுவப் பெருமானின் இவ்விரு குறட்பாக்களும் சமூகவாதிகளுக்குப் பொருந்தும். எனவே இதனை மனதில் நிறுத்தி.

எமது கல்லூரியில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்தநடராசப்பெருமானை முதற்கண் வணங்கி "உனை நீ அறி" என்னும் விருது வாக்குக்கு உடைய மகாஜனத் தாயேயினை தலை வணங்கும் மைந்தன் என்ற பணிவுடன் வாழ்த்துரை வரைய முன் வருகிறேன்.

யாழ். மண்ணில் கல்விப் பாரம்பரியத்தையும், சைவப் பாரம்பரியத்தையும் பேணிவரும் உயர்ந்த கல்லூரி எமது கல்லூரி இன்று நூற்றாண்டைக் கண்டு மனமகிழ்ச்சியில் இருக்கும் இவ்வேளையில் மகாஜனன் தனது முற்பத்தி நான்காவது (34) மலராக எமது பதினைந்தாவதும் முதற்பெண் அதிபரினதும், ஆசிரியப்பெருந்தகையினரதும், மாணவச்செல்வங்கள் ஆகியோரது பலவகையான சாதனைகளைத் தாங்கி வருவதையிட்டு மனப்பூர்வமாக வரவேற்பதுடன் சபை உறுப்பினர்கள் சார்பில் வாழ்த்துகிறேன்.

இவ்வேளையில் எமது சபையானது, பூரணமாகும் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு செயற்படத்தொடங்கியுள்ளது. இனிவரும் காலங்களில் அரசாங்கத்தாலும், கல்வி அமைச்சினாலும் பல திட்டங்களை உள்வாங்கிச் செயற்படக்கூடிய சபையாக உருவாகும். அந்தவகையில் எல்லோரும் தமது நற்பணிகளை எமது கல்லூரியில் ஆரம்பிக்கும் போது சிவகாமி சமேத ஆனந்தநடராஜப்பெருமானை வணங்கி ஆரம்பிப்பது வழக்கம் நடராசப்பெருமானுக்கு பூரணமான ஆலயம் இல்லாத காரணத்தால் ஓர் மண்டபம் (10 X10) மணிக்கூட்டுக்கோபுரம், அதன்கீழ் களஞ்சிய அறை உள் மண்டபத்திற்கு கருங்கல்பதித்தல், இரும்பு கிறில்கதவு, சுற்றுப்பூரகித் (6') கிறில் சுற்றுமதில் ஆனஅரைச்சுவர் அமைய உள்ளது. இவற்றினை ஸ்ரீராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் கல்லூரிக்கு நேரடியாக வந்து ஆலோசனை வழங்கியதுடன் தமது ஆசியினையும் வழங்கியுள்ளார். அவரின் ஆலோசனையினை தேவைக்காக கருதி எமது சபை இப்புனருத்தான வேலையை ஆரம்பிக்க உள்ளோம் இதற்கான உத்தேச செலவு 8 இலட்சமாகும் இவ்வேலையினை ஆரம்பிப்பதற்கு அன்பான உதவியினை பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் நடராஜப்பெருமானின் பக்தர்களிடம் இருந்து எதிர்பார்த்து நிற்கின்றோம். வாரிவழங்குவீர் நடராஜப்பெருமானின் அருளைப்பெறுவீர். எமது மகாஜனமாதா நூற்றாண்டைகாணும் இவ்வேளையில் மகாஜனன் உங்கள் அனைவரினது கைகளில் தவழ சபை உறுப்பினர்கள் சார்பில் வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி

"வெல்லுக வெல்லுக மகாஜன மாதா"

க.ரவீந்திரா
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைய மாணவர் தாய்ச் சங்க இணைச் செயலாளர்களின் வாழ்த்துச் செய்தி



உயர்ந்த விழுமியங்களைக் கொண்ட மகாஜனன்களை உருவாக்கும் பயன்தரு விருட்சம் போல் அகலக் கிளை பரப்பி ஓங்கி உயர்ந்து நிற்கும் எமது மகாஜன அன்னையைப் பார்க்கும்போதெல்லாம் அளவிலா இன்பம் தருகின்றது. எமது தாய் போலும் நன்மை வளர்த்தெடுத்த மகாஜன மாதா எமக்கு உபதேசிக்கும் தாரக மந்திரம் உனை நீ அறி. இம் மந்திரத்தை உணர்ந்து நாம் மகாஜனாவின் புதல்வர்கள் என்ற உணர்வோடு ஒருமித்துச் செயற்படுவோம். இந்த வகையில் சிந்தை செயல் யாவும் மகாஜனாவின் மேம்பாடே என அயராது உழைக்கும் மகாஜன சமூகத்தினருடன் ஒன்று சேர்ந்து பழைய மாணவர்களாகிய நாமும் பாடுபடுவோம்.

நூற்றாண்டு விழாவை நோக்கிய நகர்வில் எமது கல்லூரியின் அனைத்துத் தேவைகளையும் நிவர்த்தி செய்து இலத்திரனியல் கலாசாரத்துடன் கூடிய பூரணமான கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கக்கூடிய வகையில் கல்லூரியைக் கட்டியெழுப்பவேண்டிய சூழ்நிலையே இன்று எம்முன் உள்ள சவாலாகும்.

கல்லூரியின் சாதனை ஏடான "மகாஜனன்" சிறக்கவும் கல்லூரியின் சாதனைகள் மேன் மேலும் உயரவும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமான் திருவடிகளை உலகெங்கும் வாழும் மகாஜனப் பழைய மாணவர்கள் சார்பாக வேண்டி எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இணைச் செயலாளர்கள்
**சி. கயிலைமகான், சி. தேவகுமாரன்**
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
# பழைய மாணவர் சங்க
# கொழும்புக் கிளைத் தலைவரின்
# வாழ்த்துச் செய்தி.

காலத்தின் தேவையறிந்து கல்வியின் பெருமையுணர்ந்து உன்னத நோக்கத்தோடு இற்றைக்கு நூறு ஆண்டுகட்கு முன்பு பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தன்னலம் பாராது தமிழையும் தம்மவர்களையும் வாழ வைக்கும் நோக்கில் இப்பாடசாலையை நிறுவினார். அந்நோக்கம் இற்றைவரை நிறைவேறிக்கொண்டே வருகிறது.

இடப்பெயர்வுகள் காரணமாக மகாஜன மாதாவின் கல்வி நடவடிக்கைகளில் சிறிது தேக்கம், பின்னடைவுகள் ஏற்பட்டபோதிலும் மீளவும் பொற்காலத்தை நோக்கி வீறுநடை போட முற்படுவதைக் காணமுடிகிறது. இம்முயற்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பங்களிப்பு உன்னதமாகப் போற்றப்படவேண்டிய ஒன்றாகும்.

நூற்றாண்டில் கால் பதிக்கும் மகாஜன மாதாவின் பெருமை சாற்றும் “மகாஜனன்” மலர் மகாஜனாவின் சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் நினைவு தினத்தன்று வெளியிடப்படுவதையிட்டு மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையினராகிய நாம் மகிழ்ச்சியடைவதோடு இம்மலர் வெளியீடு சிறப்புற அமைய மகாஜனாவில் எழுந்தருளி இருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

**மனோ ஸ்ரீதரன்**
தலைவர்,
பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்

**THE MAHAJANA COLLEGE FOUNDATION FOR EDUCATIONAL DEVELOPMENT**

A Company Incorporated under the Companies Act of No 17 of 1982
Mailing Address: 36, Sagara Road, Bambalapitiya, Colombo-04, Sri Lanka
Telephone: + 94 11 2580876 Fax: + 94 11 2580876 Email: mcf_ed@yahoo.com


" கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக "

எமது சமுதாயம் போரினால் சிதைவுண்டு வருந்திக்கொண்டிருக்கின்றது. இச்சமுதாயத்தை மீண்டும் வளமுடன் கட்டி எழுப்புவது வருங்காலத் தலைவர்களாகிய மாணவர் சமுதாயத்தின் பெரும் பொறுப்பாகும். மகாஜனவின் மாணவர்களும் இப்பொறுப்பில் பங்கேற்பதற்கான கல்வி வசதிகளை இக்கல்லூரி வழங்க வேண்டும்.

இம்மாணவர்களுக்குத் தேவையான கல்வி வசதிகளை கொடுப்பதற்கு "மகாஜன கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்" பழைய மாணவர்களின் உதவியுடன் இயன்றளவு செயலாற்றி வருகின்றது. இந்த நிறுவனத்தினுடைய செயற்பாடுகள் வெற்றிகரமாக செயற்பட பழைய மாணவர்களின் தொண்டைநாடி நிற்கின்றேன்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் முயற்சியினால் இச்சஞ்சிகை தொடர்ந்தும் வெளியிடப்படுவதற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த.லங்காநேசன்
தலைவர்


Board of Directors
Mr. T. Lankaneson (Chairman), Mr. S. Jeyavarman, Mr. R. Selvaskandan, Mr. S. Sivabaskaran, Mr. S. Dhanabalaa, Mr. S. Sirikannathan, Mr.T. P. Murugiah, Mr. V. Nantheeswarar (Canada OSA), Mr.P. S. Kaneshalingam (Victoria OSA), Mrs. S. Ananthasayanan (Principal), Mr.K.V.MAHATHEVAN, MR.S.THIRUVATHAVOORAN





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(A registered Non Profit Organization # 001100556)


**International Co-ordinator**
Mr. P. Kanagasabapathy

**Patrons:**
Mr. M.Karthigesu
Dr. Shun Sundar
Mr. S. Subramaniam
Mr. K. Thuraisingam
Mr. V. Ranjan
Mr. T. Iswarakumar
Mr. N. Jeganathan
Mr. V. Nantheeswarar

**President:**
R. Ravindran
President@Mahajanan.org
647 989 6477

**Vice Presidents:**
N. Santhinathan
N. Pradeepan

**Secretary:**
Sriranjani Vijenthira
secretary@Mahajanan.org
416 429 9784

**Asst. Secretaries:**
K. Muthulingam
T. Vijayakumar

**Treasurers:**
K. Jeyandran
treasurer@Mahajanan.org
416 705 1493

**Asst. Treasurer:**
S. Gowripalan
Balaramani Srigunapalan

**Committee Members:**
Amirthy Puvanenthira
Ariyamalar Seevaratnam
K. Gnanasaravanapavan
Indradevi Kukapalan
Inthumathy Kumarakuruparan
S. Jalandran
Keetha Sriskanda
Kuru Aravinthan
V. T. Mahalingam
R. Muralitharan
S. Murugiah
Dr. K. Ravindran
Sakunthalathevy Vigneswaran
S. Santhiralingam
S. Selvaratnam
M. Sivakumaran
T. Sivalingam
Sumathi Pathmakanthan
Yasotha Aravinthan


அதிபர்,
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை,
இலங்கை.

மகாஜனா அன்னை நூற்றாண்டின் நுழைவாசலில் தனது காலை முன்னெடுத்து வைத்து மகிழ்வுடன் வருகிறார். அன்னையை இரு கரம் கூப்பி வாழ்த்தி வணங்குகிறோம்.

மகாஜனா அன்னை தனது நூற்றாண்டு காலத்தில் பலவிதமான நிலைகளை தாண்டியும், தடைகளை நீக்கியும், தனது பணிகளை செவ்வனே செய்து வந்துள்ளார். இக்காலத்தில் கல்லூரி பல சாதனைகளைச் செய்து வரலாற்றில் அழிக்க முடியாத சிறந்ததொரு உயர்நிலையை அடைந்துள்ளது.

இந்த நூற்றாண்டு காலத்தில் ஆசிரியர் பணிகளில் இருந்த பல ஆசிரியச் செம்மல்கள் தாங்கள் வாழ்க்கையின் கல்விப் பணியைத் தம் குடும்பப்பணியாகக்கருதி காலம் நேரம் பாராது கடமையைச் செய்து கல்லூரியின் கல்வியை, கவின்கலைகளை, விளையாட்டுத் துறையை மேம்படுத்தி நாட்டில் உள்ள பல்வளம் கொண்ட கல்லூரிகளுடனும், முதல்தரக் கல்லூரி களுடனும் பலவழிகளில் முன்னிலை வகிக்கச் செய்துள்ளனர்.

சாதனை படைத்த மகாஜனன் பலர் பல நாடுகளில் சிறந்த முன்மாதிரியாகவும், முதன்மை நிலையில் இருப்பதைக்காணும் போது அன்னையின் அறிவூட்டல் சிறப்பாக இருப்பதை காணமுடிகிறது.

எழுத்துத்துறையா, முத்தமிழ்த்துறையா, விளையாட்டுத்துறையா, சமயத்துறையா எத்துறையாயினும் அங்கு மகாஜனா தனது பங்கினை அந்தந்தத்துறைகளுக்கு வழங்கி தன் திறமையை முன்னிலைப் படுத்தி பெருமையையும், சிறப்பையும் பெற்றுக்கொண்டது.

அடுத்து வரும் தசாப்தங்களில் மகாஜனா தனது செயல்களில் காலத்திற்கு அமைய செயற் திட்டங்களை வகுத்து செயல்படுத்த அனைத்து மகாஜனன்களின் பங்களிப்பு மிகவும் முக்கியம்.

பாரெங்கும் பரந்து வாழும் மகாஜனன்களை ஒன்றாக இணைத்து செயல்திட்டங்களை முன்னெடுத்து செயற்படுத்துமாறு வேண்டி, அனைவரையும் நூற்றாண்டின் நுழைவாசலில் வரவேற்று நிறைவு செய்கிறேன்.

வெல்க மகாஜன மாதா!



இ.இரவீந்திரன்
தலைவர்
மகாஜனக் கல்லூரி ப.மா.ச கனடா.


104-1920 Ellesmere Road, Suite 203, Toronto, Ontario M1H 3G1 Canada.
www.mahajanan.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANANS OF VICTORIA (AUSTRALIA)
# விக்ரோறிய மகாஜன மாணவர் (அவுஸ்திரேலியா)

**Patrons**
Mr.V.Thiagarajah
Mrs.R.Ponnampalam
Mr.S.Kanesalingam
Mrs.R.Vinayagalingam

**President**
Mrs.Usha Sivanathan

**Vice President**
Mr.S.T.Sampanthar
Mr.T.Alagaratnam

**Secretary**
Mrs.C.Naguleswaran

**Assistant Secretary**
Mr.V.Ranjan

**Treasurer**
Mr.T Sriskantharajah

**Assistant Treasurer**
Mr.K.Rameswaralingam

**Committee Members**
Mr S. Khathirkanthan
Mr.S.Karunakaran
Mr.R.Rabinthiranathan

**Sports Secretary**
Mr.S,Mahalingam

**International Coordinator**
Mr.S.Vijeyakumar

**Coordinator**
Mr.P.Rajendran

**Auditor**
Mrs.G.Loganathan

30 September 2009

Mahajana College
OSA Canada

Dear fellow Mahajanans,

I feel previleged to have received your request to write a congratulatory message for your annual book. This is a special time for Mahajanans all over the world because we are approaching our centenary.I know that The Canada OSA in particular has contributed a lot to Mahajana College in the past few years. Co-ordinating the "Centenary Malar" is a huge task and we applaud you on your structured approach so far.

The sustainability, improving the quaility of education and growth of Mahajana College should be the main focus at this stage. Continued co-ordinated efforts from all over the world will be required to achieve this. We wish to continue our work with you and help Mahajna Matha so that a couple of generations after us can celebrate the bi-centenary.

On behalf of OSA Melbourne, I wish you continued unity and growth.

Yours sincerely,

Usha Sivanathan

**Address:** 34 Myrtle street, Glen Waverley, Victoria, 3150 Australia;
**Contact Numbers:** President - (03) 9808 8374; Secretary - (03) 9511 5425; Treasurer - (03) 9802 8281



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION NSW and ACT (AUSTRALIA)

### மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் சிட்னி - கன்பரா (அவுஸ்திரேலியா)



**Patrons**

Dr. A. Punniamoorthy
Dr. V. Manomohan





**President**

Mr. Tani Bakeerathan

**Vice President**

Dr. Bala. Vigneswaran
Mr. A. Ganeshamoorthy

**Secretary**

Mr .L .Indradeepan

**Assistant Secretary**

Mr. A .Nirmalendran

**Treasurer**

Mr. A. Poopalasingam

**Assistant Treasurer**

Mr .A. .Sivasothy

**Members**

Mrs. Nalini Rajkumar
Dr. Sivarathy Ketheswaran
Mr. Thiru Manoharan
Mr. M. Kantharuban
Mr. M. Piraveenan
Mr. S Thirunavukarasu(ACT)


05-10-2009

திருமதி. சி. அனந்தசயனன்,
அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை

# வாழ்த்துச் செய்தி

நூற்றாண்டு நிறைவை எதிர்நோக்கும் எமது கல்லூரியின் ஆண்டுமலாரன 'மகாஜனன்' மீண்டும் வெளிவருவதையிட்டு பேருவகை அடைகின்றோம். இம் மலர் எமது கல்லூரியின் ஆற்றலையும் அர்ப்பணிப்புகளையும் எமது சமூகத்திற்கு குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற பழைய மாணவர்களுக்கு அறியப்படுத்துவதில் பெரும்பங்காற்றுகிறது.

கடந்த நூறு ஆண்டுகளில் எமது கல்லூரியில் கற்ற பழைய மாணவர்கள் பாடசாலைக்கு பெருமை சேர்க்கும் வகையில் உலகெங்கும் தமது துறைகளில் சிறப்புற பணியாற்றி வருவது அறிந்ததே. சிக்கலான புறச் சூழ்நிலைகளிலும் தொடர்ந்து சிறப்பாக இயங்கிய எமது கல்லூரி மீண்டும் புதுப்பொலிவுடன் அடுத்த நூற்றாண்டைநோக்கி வீறுடன் வளர பிரார்த்திக்கின்றோம். .இத்தருணத்தில் மகாஜனக் கல்லூரியின் அபிவிருத்தியில் எமது பழைய மாணவர் சங்கக் கிளை தொடர்ந்தும் பங்களிக்கும் என்று உறுதி கூறி வாழ்த்துகின்றோம்.

இப்படிக்கு

திரு. த. பகீரதன்
தலைவர், சிட்னிக் கிளை


**Address:** 18 A Federal Road, West Ryde, NSW 2114 Australia; **E-mail:** t.bakeerathan@hotmail.com
**Contact Numbers:** President – 612-9874 7013, 612 404 499 786; Secretary – 61-413 248 864; Treasurer – 612- 9649 1003





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## Mahajana College, Tellippalai

Old Students Association - United Kingdom

பழைய மாணவர் சங்கம் · ஐக்கிய இராச்சியம்

*Proud to be a Mahajanan*

Est. 1987



1st October 2009


**EXECUTIVE COMMITTEE**

PRESIDENT
Mr A.Wimalathasan
awimal@yahoo.com
44 (0)78 0156 8925

VICE PRESIDENT
Mrs (Dr) Theva Nathan

SECRETARY
Mr R T Sambanthan
rasaiah@btinternet.com
44 (0)79 3921 2652

ASSISTANT SECRETARY
Mr N Ravindran

TREASURER
Mr V Thavamuruganathan
Ashni23@aol.com
44 (0)77 6166 6424

ASSISTANT TREASURER
Mr P Vigneswaran

SPORTS SECRETARY
Mr V.Shanmugarajah

CULTURAL SECRETARY
Mr S Kanesalingam

COMMITTEE MEMBERS
Mr Arul Thavasingam
Mr G Balakulendran
Mr K S Balakumar
Mr V Balasubramaniam
Mr B Buvanendra
Mr N Guganesan
Dr. K Jayanthan
Mr K Jeyavarathan
Mr S Kugananthan
Dr K Kularajan
Mr T Kumaran
Mr S Ramachandran
Mr V R Ramanathan
Ms A Selvarajah
Dr S Sivakumar
Mr V Sivanandarajah
Mr V Sivathas
Mr N Sri Sabesan
Mr S Vasanthakumar

CO-OPT MEMBERS
Mrs Bama Maheswaran
Mr K S Sharveswaran
Mr S Selvagunachandran
Mr N Sri Gengatharan

PATRONS
Mrs R Jeyaratnam
Mr G Natkunam
Dr S Navaratnam
Mr A Vairavamoorthy
Mr P Yogeswaran

CORRESPONDENCE
The Secretary
34 Donington Avenue Ilford,
Essex. IG6 1DP UK
www.mahajana.co.uk
info@mahajana.co.uk




அதிபர்
மகாஜன கல்லூரி

மகாஜன கல்லூரியின் "மகாஜனன் – 2009" என்ற மலர் வெளியீட்டு நிகழ்வை மகிழ்சியோடு பாராட்டுவது மட்டுமல்லது தாங்கள் கல்லூரி நூற்றாண்டையொட்டி முன்னெடுக்கும் சகல முயற்சிகளுக்கும் மனமுவந்து உதவ எமது சங்கம் தயாராகவுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறேன்.

தாயகத்தில் வருடாந்தம் இரு திருத்தலங்களில் திருவிழாக்கள் நடாத்துவதை நினைவில் கொண்டு இங்கும் வருடாந்தம் வரும் பெரிய வெள்ளிகிழமையில் அபிஷேகமும் ஆராதனையும் செய்வது சங்கத்தின் ஒரு வழமை. இவ்வருடமும் நிகழ்வுகளை, 'மகாஜன பூசை–2009'யுடன் ஆரம்பித்தோம். தொடர்ந்து மகாஜனன்களின் குடும்பங்கள் ஒன்றிணையும் வருடாந்த ஒன்றுகூடல் 'மகாஜன தினம்–2009' நிகழ்ந்தது. இந் நிகழ்வில் மெய் வல்லுனர், உதை பந்தாட்டம் மற்றும் வலை பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளைத் தொடர்ந்து வெற்றி வீரர்களுக்கு பரிசளிப்பும் இரவு விருந்துபசாரமும் நடைபெற்றது. இவ்விழாவில் மகாஜனவின் முன்னாள் பிரபல உதை பந்தாட்ட வீரர்களான திரு வி சிவானந்தராஜவும்(முயல்), திரு க சத்தியநாதனும் கௌரவிக்கப்பட்டார்கள்.

இலங்கைத் தீவில் மகாஜனக் கல்லூரி தொடர்ந்து உதை பந்தாட்டத்தில் சாதனைகள் படைத்தது போல ஐக்கிய இராச்சியத்திலும் எமது இளம் சந்ததியினர் தொடர்ந்து பல சாதனைகள் படைத்து வருகிறார்கள். இவ்வருடம் இளம் மகாஜனன்கள் தொடர்ந்து இரண்டு வருடங்களாக British Tamil Football Premier League cup ஐ வென்றதுடன் மட்டுமல்லாமல் பிரித்தானியாவில் இயங்கும் தமிழ் பாடசாலை விளையாட்டு அமைப்பின் TSSA Football Open champion cup ஐயும் வென்றார்கள். அத்துடன் 10 வயதுக்குட்பட்டோர், 16 வயதுக்குட்பட்டோர் அணிகளும் TSSA சம்பியன்கள் என்பதையும் மிகவும் பெருமையுடன் அறியத்தருகிறேன். இவர்களின் தொடர்ந்த வெற்றிக்கு காரணமான முன்னாள் உதைபந்தாட்ட வீரர் திரு ப புவனேந்திராவை மிகவும் பாராட்டுகிறேன்.

வருடாந்த கலைவிழா 'மகாஜன மாலை–2009' (10–10–2009) நிகழ்வுகள் கலாச்சார செயலாளர் திரு சி கணேசலிங்கத்தின் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சங்கத்தினரால் "மகாஜனன்–09" என்ற விழா இதழும் வெளியிடப்படும்.

கல்லூரியின் இன்றைய தேவை கருதி, நூற்றாண்டின் நினைவாக மகாஜன கல்லூரியில் புதிய அதிதொழில் நுட்ப வசதிகள் கொண்ட நூல் நிலையம் அமைப்பதுக்கு எமது சங்கம் உதவ தயாராக உள்ளதென்பதை உங்களுக்கு அறியத்தருகிறேன்.

இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்கின்ற நாம், இன்றைய காலத்தின் தேவை கருதி, புலமைமிகு மகாஜன மாணவ சமுதாயத்தை மீண்டும் உருவாக்குவதில் எமக்கு பாரிய கடமைப்பாடு உண்டு என்பதோடு மட்டும் நின்றுவிடாது, எமது மாணவ சமுதாயம் துறைசார் தொழில்நுட்ப கல்வி பெறவேண்டும் என்ற உயரிய நோக்கோடு "மகாஜனக் தொழில்நுட்ப கல்லூரி – Mahajana Institute of Technology (MIT)" என்பதை ஆரம்பிக்கவேண்டுமெனவும் இந்த ஆரம்பிப்பிற்கு பங்களிப்பது எமது கடமை என்ற புதிய சிந்தனையுடன் புதிய நூற்றாண்டில் காலடியெடுத்து வைப்போமாக.

அ.விமலதாசன்
மகாஜனக் கல்லூரி (1970 – 1976)
awimal@yahoo.com

உணர்வாலும், உறவாலும் ஒன்றிணைவோம்!

வெல்லுக மகாஜன மாதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பாரிஸ்

## ASSOCIATION DES ANCIES ELEVES DU COLLEGE MAHAJANA – PARIS

***President : P. Rajakanthan***



I am delighted and honoured to sent this message of congratulation on the occasion of this celebration for "MAHAJANA MALAR 2009".

Our college was founded in the year of 1910 by Mr. T.Thuraiappahpillai in a very small scale and later continued by Mr. T.T.Jeyaratnam was a principal for more than 25 years. Late Mr.T.T.Jeyaratnam once became its principal, he providing the necessary facilities for the study and practise of Hinduism. He devoloped Mahajana, as a modern public school and by his dedication and remarkable administration and organizational talent brought it up to the position of being one of the best 'A' grade colleges in Sri Lanka. He had a wind some personality and was a kind and amiable. These and his dedication won for him the esteem, affection and co-operation of the teachers, pupils, parents and the public.

It gives me a great pleasure to state that those who studied and passed out are in good position in the government services and the private sectors. I am pleased and glad to mention that many are working in foreign countries as Doctors, Engineers and consultants etc. The old students from Mahajana be a shinning example in throughness, devotion to duty, adherence to truth, beauty and goodness.

I am lucky to have my education in Mahajana from the kindergarten up to the senior grade. I am happy to mention I had my senior education and played all the games in outstanding level under the principal late Mr. T.T.Jeyaratnam also I would like to mention that my wife studied in Mahajana with me in similar classes. Many principal had worked in Mahajana and very few of them worked sincerely and hard to develop the college.

Our college is dedicated to the great people 'The MAHAJANA', This is the vision the founder has epitomized for us in naming this institution the "MAHAJANA COLLEGE".

I send my warm regards on behalf of our O.S.A. to the principal, Teachers and students to all those concern this programme and I wish our "MAHAJANA" continued success.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூற்றாண்டின் நுழைவாயிலில் அதிபரின் வாழ்த்துச் செய்தி

1910 ஒக்டோபர் 14ந் திகதி மகாஜனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 2010ல் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நூறாவது வயதில் காலடி எடுத்துவைத்த எம் மகாஜன அன்னையின் புகழ்கூறும் மகாஜனன் **XXXIV** சஞ்சிகை எங்கள் கைகளில் தவழும் இந்நேரத்தில் ஸ்தாபகர் அமரர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் தீர்க்கமான பார்வையுடன் கூடிய முகம், மனக் கண்ணில் வந்து போகின்றது. அமரர் கா.சின்னப்பா அவர்களின் சாந்தமான முகம், மகாஜன சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் கம்பீரமான முகம் எனத் தொடர்ச்சியாக எத்தனை முகங்கள் மனதில் வந்து செல்லுகின்றது.

மகாஜன மாதா உலகெங்கும் தன் மைந்தர்களைக் கொண்டு புகழ்பரப்பிக் கொண்டிருக்கிறாள். இதற்காக நூறு ஆண்டுகளில் இங்கே சேவை செய்த உள்ளங்களின் தியாகங்கள் எத்தகையதாக இருந்திருக்கும். அவையெல்லாம் நனவாகி இன்று கல்லூரி பொலிவுடன் திகழ்வது மிக்க மகிழ்ச்சியானது.

அன்னையின் நூறாவது வயதில் நாமெல்லாம் ஒவ்வொரு நாளும் மகாஜன மாதாவின் மண்ணில் பாதம் பதித்துக் கொண்டிருக்கிறோம் என்பது எத்துணை பாக்கியம். உலகெங்கும் உள்ள மகாஜனன்கள் மகாஜன அன்னையின் மண்ணைத் தொட்டு எப்போது வணங்குவோம் என ஏங்கிக் கொண்டிருக்கும் வேளையில், இங்கே கற்றுக் கொண்டிருக்கும் சிறார்கள் எவ்வளவு பாக்கியசாலிகள். நினைத்துப் பார்க்கும்போது உடல் சிலிர்க்கின்றது. நெஞ்சம் விம்முகின்றது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றது. எவ்வளவு மகிழ்ச்சியான காலம் இது.

இறைவா! ஒரு கல்லூரியின் நூறாவது வயதில் மிகப்பெரிய போற்றுதற்குரிய அதிபர்கள் இருந்த இடத்தில் நான் அதிபராக இருக்கின்றேன் என்பது ஆண்டவன் எனக்கு அளித்த ஆசியாகவே ஏற்றுக்கொள்கின்றேன். எனக்குக் கிடைத்த ஆசி இம்மலருக்கு வாழ்த்தாக அமையட்டும்.

அதிபர் என்ற வகையில் இம்மலருக்கு வாழ்த்துக் கூற எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நூற்றாண்டின் நுழைவாயிலில் வெளிவரும் இம்மகாஜனன் **XXXIV** சஞ்சிகையை நூறு ஆண்டுகளில் கல்லூரியைக் கட்டியெழுப்பிய அனைத்துத் தியாக உள்ளங்களுக்கும் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் இதயபூர்வமான சமர்ப்பணமாக முன்வைப்பதில் பெருமைப்படுகின்றேன். என்றும் அவ்வுள்ளங்களின் ஆசிகள் எமக்குக் கிடைக்கட்டும்.

வாழ்க மகாஜனன்கள்!

வெல்லுக மகாஜன மாதா.

அதிபர்

**திருமதி. சிவமலர் அனந்தசயனன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து....

மகாஜன அன்னை நூறாவது அகவையைக் காணும் இந்நன்நாளில் 2009 மகாஜனன் XXXIV ஆவது வெளியீடு நம் கரம் பற்றி நிற்கின்ற காட்சி மெய்சிலிர்க்க வைக்கின்றது. சென்ற காலத்தின் சிறப்புக்களைக் கூறவும் கடந்துவந்த பாதையின் தன்மையைக் கூறவும் எதிர்காலத் திட்டமிடலுக்கு உதவும் வண்ணமும் இத்தொகுப்பை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். வரலாற்றுப் பதிவுகளை முறையான வகையில் பேணி அதனைப் பிற்காலச் சந்ததியினருக்கு உதவக்கூடிய முறையில், ஒரு வரலாற்று ஆவணமாக இம்மலர் வெளிவருகின்றது என்று கூறின் மிகையாகாது.

1910ஆம் ஆண்டு பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் தாபிக்கப்பட்ட மகாஜனக் கல்லூரி இன்று பதினைந்தாவது அதிபரான திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களால் அதிபர் பீடம் அலங்கரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. கல்லூரியின் சாதனையில் தம்மை அர்ப்பணித்த அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் கடின உழைப்பும் எதற்கும் தயங்காத மனோ வைராக்கியமும் கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய அர்ப்பணிப்புள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் வழியில், வழி தொடர வகுத்தவர்களின் வழியில் தொடரும் எம் பணி, இந்தப் புதிய யுகத்திலும் சரித்திரம் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தவகையில் மகாஜனன் 2009 வெளியீடு XXXIV ஆனது கல்லூரிப் பதிவுகள், மாணவர்களின் சாதனைகள், சாதனைகள் மூலம் பெற்ற அடைவுகள் மாணவர்களின் ஆக்கங்களுடன் ஆசிரியர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின் 2007ஆம் ஆண்டிலிருந்து மகாஜனன் சஞ்சிகை ஆண்டுதோறும் வெளிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அதேவேளை இம்மலர் தொடர்ந்து மலரவேண்டும் என்பதில் உலகப் பழைய மாணவர்களின் ஆர்வமும் அக்கறையும் மலர்க்குழுவுக்கு மேலும் உந்துசக்தியாக அமைந்துள்ளது என்று கூறுவதில் பெருமைப்படுகின்றோம். இத்தனைக்கும் மேலாக மன உறுதியும் துணிச்சலும் மிக்க அதிபரின் ஊக்கமும் இன்று இம்மலர் வெளிவரக் காரணமாக அமைந்துள்ளது என்று கூறினால் மிகையாகாது.

மகாஜனன் சஞ்சிகைக்கான ஆசிகள் வாழ்த்துக்கள் வழங்கிய ஆசான்கள் பெரியோர்களுக்குக் கல்லூரி சார்பாக நன்றி கூறுகின்றோம். ஆக்கங்களை வழங்கிச் சிறப்பித்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் சாதனைகள் படைத்த மாணவர்களைப் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனன் உரிய காலத்தில் வெளிவர உறுதுணையாக இருந்து நெறிப்படுத்திய மலர்க்குழுவின் கௌரவ ஆலோசகர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களுக்கும் மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுவதுடன் சகல வழியிலும் ஒத்துழைப்பு நல்கிய பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா அலுவலர்களுக்கும் மலர்க்குழு சார்பாக நன்றி கூறுகின்றேன்.

"மகாஜனன்" கவினுறு தோற்றம் கொள்ளப் புகைப்படங்களை உரிய முறையில் வடிவமைத்து அன்பளிப்பாக வழங்கிய "மதுரா ஸ்ரூடியோ" – தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை உரிமையாளர் பா. பாலேந்திரா அவர்களுக்கும், போட்டோ செலக்ற் உரிமையாளர் சி. சிவமோகன் அவர்களுக்கும் கல்லூரி சார்பாக நன்றி கூறுகின்றேன். சஞ்சிகையை விரைவாகவும் தெளிவாகவும் கணணி வடிவமைப்புக்குட்படுத்தி நூல் வடிவில் அழகுறச் செய்த **"Andra"** நிறுவனத்தினருக்கும் மலர்க்குழு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மகாஜனன் சஞ்சிகை வெளிவர உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி

**திருமதி. ரேணுகாதேவி கேசவன்**
மலராசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| (i) | பிரார்த்தனை | I |
| (ii) | கல்லூரிக் கீதம் | II |
| (iii) | கொடிக்கீதம் | III |
| (iv) | கல்லூரியின் நோக்கக்கூற்றும் பணிக்கூற்றும் | IV |
| (v) | ஆசியுரை | V |
| (vi) | மலராசிரியரின் சிந்தனையில்... | XVIII |
| (1) | நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் – அதிபர் அறிக்கை – 2009 | 1 |
| (2) | நிறுவியர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் – 2009 பிரதம விருந்தினர் ஆற்றிய உரை | 33 |
| (3) | நிறுவியர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் – 2009 நினைவுப் பேருரை. | 40 |
| (4) | ஜயரத்தினம் நினைவு தினமும் மகாஜனன் நூல் வெளியீட்டு விழாவும் – 2008 பிரதம விருந்தினர் ஆற்றிய உரை. | 47 |
| (5) | உங்கள் பணியை நாம் மறவோம் | 51 |
| (6) | STAFF LIST | 62 |
| (7) | பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டறிக்கை – 2008/2009 | 65 |
| (8) | பழைய மாணவர் சங்க வருடாந்த திரட்டறிக்கை 2008/2009 | 67 |
| (9) | மன்றங்கள் கழகங்கள் | 69 |
| (10) | சாதனையாளர்களுடன் ஒரு பகிர்வு | 75 |
| | **மாணவர் பகுதி** | |
| (11) | மழலை விருந்து (தரம் 1 – 5) | 85 |
| (12) | மாணவர் பகுதி (தரம் 6 – 13) | 93 |
| (13) | **ஆசிரியர் பகுதி** | 140 |
| (14) | மகாஜனனுக்கு நிதி நல்கியோர் | 148 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை - 2009

வேளமுகத்து விநாயகனை மனதிலிருத்தி பாடசாலையில் குடிகொண்டுள்ள சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வணங்கி, இங்கு கூடியுள்ள ஒவ்வொருவர் உணர்விலும் சாந்தியும் சமாதானமும் வேண்டி நிறைந்த வணக்கங்களுடன் அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட 1910ம் ஆண்டிலிருந்து 99வது வருடத்தில் இத்தனை வளர்ச்சியைக் கண்டுள்ள இந்த நிறுவனம் தன் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களை நினைவுகூரும் நாளான ஆனித்திங்கள் 24ம் நாளான இன்று இப்பெருமகனாரின் 80வது நினைவுதினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். நிலையான கல்விச் செல்வத்தை ஏழைவிவசாயிகளின் பிள்ளைகளும் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கோடு 1910ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதி ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டு 25.06.1929 வரை அதிபராகவும் இருந்து மறைந்தார். அவரை நினைவு கூர்ந்து நன்றி கூறவும் தரம் 9 தொடக்கம் 13 வரையான மாணவர்களின் பரிசளிப்புக்காகவும் இங்கு கூடியுள்ளோம்.

நூற்றாண்டை இன்னும் ஆறு மாதங்களில் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் அன்பான அழைப்பை ஏற்று பிரதமவிருந்தினராக இங்கு வருகைதந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்புக்குரிய திரு. கதிரவேலு யோகநாதன், பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி அவர்களே, நினைவுப் பேருரை ஆற்ற வந்திருக்கும் திருமதி சரோஜினிதேவி நாகராசா, வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) அவர்களே, ஆசியுரை வழங்க வந்திருக்கும் தெல்லிப்பழைக் துர்க்கா தேவஸ்தான தலைவர் திரு. ஆறுதிருமுருகன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் தெல்லிப்பழை கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. சற்குணானந்தன் கைலாசநாதன் அவர்களே, கல்வித்திணைக்கள அதிகாரிகளே அயற்பாடசாலை அதிபர்களே, எமது பாடசாலை முன்னாள் அதிபர்களே, ஆசிரியர்களே, பழைய மாணவர்சங்க செயலாளர், உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், உறுப்பினர்களே, அன்பான பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, விழா நாயகர்களான மாணவச் செல்வங்களே, என்னோடு இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள பிரதி அதிபர்கள், உபஅதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோரே அனைவரையும் வணக்கம் கூறி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவ சமுதாயத்திற்கு ஒரு பாடசாலை ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. அத்தகைய தயாரிக்கப்பட்ட தரமான ஆசிரியர்களை வெளியீடு செய்யும் ஸ்தாபனத்திலிருந்து எமது பிரதமவிருந்தினர் அவர்கள் வருகை தந்திருப்பது இன்றைய விழாவிற்குப் பொருத்தமான தொன்றாகும்.

பிரதம விருந்தினர் திரு. கதிரவேலு யோகநாதன், பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, அவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடைநிலை, உயர்நிலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை முடித்துப் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரி ஆவர். 10 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய பின் 1993ல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பின் 1995ல் துறைசார் தலைவராகவும் கடமையாற்றி 2000 ஆண்டில் உபபீடாதிபதியாகச் செயற்பட்டார். 2005ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரியில் பீடாதிபதியாகக் கடமையாற்றும் இவர் கல்வி யமைச்சில் சமூகக்கல்வி பாடநூல் ஒழுங்கமைப்பு ஆலோசகராகவும், தேசிய கல்வி நிறு வனத்தால் நடாத்தப்படுகின்ற செயலமர்வுகளில் சிறப்பாக, ஆசிரியர் வாண்மை விருத்தி நிறுவன ஆலோசகராகவும் கடமையாற்றுகின்றார் இவரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஆசியுரை வழங்க வந்திருக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் யாழ்/ ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபருமாகிய திரு. ஆறுதிருமுருகன் அவர்களை நான் அறிமுகப்படுத்தத் தேவையில்லை. அவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது விருந்தினராக இங்கு வருகை தந்துள்ள திருமதி. சரோஜினிதேவி நாகராசா எமது பழைய மாணவி. 1969 – 1970 களில் கல்வி கற்றவர். ஆரம்பத்தில் விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர் (கணிதம்) ஆகக் கடமையாற்றி முதுகலைமாணிப்பட்டதாரியாக மிளிர்கிறார். வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஆகக் கடமையாற்றும் திருமதி. சரோஜினிதேவி நாகராசா அவர்கள் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆசிரியரின் வகிபங்கும் மாணவர் பெறும் திறன்களும் பற்றி நினைவுப் பேருரையாற்ற வந்துள்ளார். எமது பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். அவ்வப்போது தேவைப்படும் ஆலோசனைகளை வழங்கி வருபவர். பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் (Programme for school Improvement) கல்வி அமைச்சினால் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாடசாலை அபிவிருத்திக் குழுவிற்கு (School Development Committee – SDC) வலயக்கல்வி அலுவலகப் பிரதிநிதியாக எமது பாடசாலைக்கு இணைக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் எமது பாடசாலை அபிவிருத்திக்கு மிகுந்த உறுதுணையாக இருக்க வேண்டிய சிறப்பு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்களையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. சற்குணானந்தன் கைலாசநாதன் அவர்களைப்பற்றி நான் கூறி, மாணவர்கள் தெரிய வேண்டியதில்லை. எந்த ஒரு நிகழ்விலும் மகாஜனக் கல்லூரியை முதன்மைப்படுத்தும் அவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

**"உனை நீ அறி"** எனும் பாடசாலை விருதுவாக்குக்கு அமைய சுயஒழுக்கம் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

**பயணத்தின் எல்லை :**

"உயர் விழுமியங்களைப் பேணும் பூரண மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கம்"

**பயணத்தின் பாதை :**

"முறைசார், முறை சார்பற்ற முறையில் கல்வி நெறிகளில் எமக்குக் கிடைத்துள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தி அறிவு, திறன், மனப்பாங்கு, தனியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடைத்தொடர்பு, சமூகப் போக்குகளை மேம்படுத்தி அதன் மூலம் மனித நேயம், இயற்கையில் தோழமை, ஆத்ம எழுச்சி, அறிவு முதிர்ச்சி, உடல் உள வலிமையுடன் எமது மொழி, கலை, கலாசாரங்களைப் பேணும் உயர் மனித விழுமியங்களைப் பேணும் மனிதராகப் பயணிப்போம் என்பதாகும்".**

எமது பாடசாலையின் கனவு பூரண மனிதத்துவ சமூகம் என்பதாகும். பாடசாலையின் வளர்ச்சி கல்வி வெளியீடுகளினால் மட்டுமே தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். இக்காலகட்டத்தில் பாடசாலைகளின் கல்விப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது எமது கல்வித் திட்டத்தில் 2% மாணோரே பல்கலைக்கழகம் செல்கின்றனர். ஏனையோர் க.பொ.த உயர்தரத்தின் பின் சமுதாயத்திற்குள் காலடி எடுத்து வைக்கின்றனர். பல்கலைக்கழகம் கூட ஒரு சமுதாயம் தான்.

உலகளாவிய ரீதியில் சகலதுறை சிந்தனையாளர்களும் அபிவிருத்திக்கு paradigms changes – மனச்சுவர் மாற்றங்களையே குறிப்பிடுகின்றார்கள். மாற்றங்கள் என்பது தான் உலகில் மாற்ற முடியாதது. இம்மனச்சுவர் மாற்றங்கள் எம் மாணவர்களையும் பக்குவப்படுத்தி 18–19 வயதில் சமுதாயத்தில் அவன் காலடி எடுத்து வைக்கையில் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவனாக மாற்றும் களம் பாடசாலையே. தரமான கல்வியினால் ஒரு தரமான சமுதாயம் உருவாக்கப்படும் போது பயனாளிகள் சமூகத்தினரும் பெற்றோருமே.

எனவே கல்வி அமைப்பு முறையில் இவ்வருடத்திலிருந்து பாடசாலையின் வளர்ச்சிக்குச் சமூகம் ஒத்துழைக்க, சமூகத்தின் வளர்ச்சிக்கு பாடசாலை வகை கூறுபவர்களாகவும் மாறும் பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் (Programme for school Improvement – PSI) அறிமுகமாகி பாடசாலை அபிவிருத்திக்குழு (School Develpment Committee – SDC) சமூகத்தை இணைத்துக் கொண்டு உதயமாகிறது. இத்திட்டத்தின் பலம், நன்மைகளை அடுத்தடுத்த வருடங்களில் சமூகத்தினர் உணரக் கூடியதாயிருக்கும்.

**காலை ஆராதனை :-** பாடசாலை நாள் சிவகாமி சமேத ஆனந்த நடேச பெருமான் கோயிலில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்று கூடி அந்தணப்பெருமகனின் பூசை ஆராதனையுடன் தொடங்குகின்றது. அதைத் தொடர்ந்து திங்கட்கிழமைகளில் இடைநிலை, சிரேஷ்ட மாணவர்களின் ஒன்று கூடலும் புதன் கிழமைகளில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஒன்று கூடலும் நடைபெறுகின்றது. வெள்ளி தோறும் அவரவர் மத வழிபாட்டில் ஈடுபடும் வசதியுண்டு. பாடசாலை ஒழுக்கத்திற்கும் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்தாலும் ஒழுக்கமா, கல்வியா என்ற சீர்தூக்கலில் ஒழுக்கம் பக்கமே கூடியளவு சாரும் என்பதனை எமது மாணவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். பெற்றோர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஒன்று கூடலில் நாம் அடிக்கடி வலியுறுத்துவது சுயஒழுக்கம் பற்றியதாகும். (Self discipline)

**மாணவர் தொகை**

| | | |
|---|---|---|
| 01 – 05 | – | 302 |
| 06 – 11 | – | 534 |
| 12 – 13 | – | 390 |
| | | 1226 |

**ஆசிரியர் அவை**

| | |
|---|---|
| கலைப்பட்டதாரி | – 28 |
| விஞ்ஞானகணிதப்பட்டதாரி | – 09 |
| வணிகப்பட்டதாரி | – 07 |
| பயிற்சி ஆசிரியர் | – 12 |
| தேசிய டிப்ளோமா | – 11 |
| | 67 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் ஐவர் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் ஆவர். விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பின்வரும் பாடங்களில் உள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. விஞ்ஞானம் | 2. கணிதம் | 3. ஆரம்பக்கல்வி | 4. மனையியல் |
| 5. வணிகக்கல்வி | 6. விவசாயம் | 7. ஆங்கிலம் | 8. உடற்பயிற்சி |
| 9. சமயம் | 10. விசேடகல்வி | 11. நாடகமும் அரங்கியலும் | |

**கல்விசாரா ஊழியர்கள் :-**

| | |
|---|---|
| பாடசாலை பணியாளர் | – 03 |
| சுத்திகரிப்பு தொழிலாளி | – 0 1 |
| காவலாளி | – 0 1 |

முகாமைத்துவ உதவியாளர், நிதித்திட்டமிடல், எழுதுவினைஞர் இல்லை, பழைய மாணவர்களின் அனுசரணையில்

1. ஆங்கில ஆசிரியர்கள் – 02
2. உடற்கல்வி ஆசிரியர் – 01
3. தகவல் தொழிநுட்பம் உதவி – 02
4. முகாமைத்துவ உதவியாளர்– 01
5. எழுது வினைஞர் – 01
6. சுத்திகரிப்பு தொழிலாளி (பகுதி நேரம்) –01
7. வரலாறு (உயர் தரம்) – 01

**எம்மோடு புதிதாக இணைந்தவர்கள்**

செல்வி. வ. சுபாஷினி (தேசிய கல்வியியற் கல்வி டிப்ளோமா, ஆங்கிலம்)
செல்வி. சு. சுமதி (தேசிய கல்வியியற் கல்வி டிப்ளோமா, தகவல் தொழிநுட்பம்)
திரு. க. திலீபன் (தேசிய கல்வியியற்கல்வி டிப்ளோமா, நாடகமும் அரங்கியலும்)

இவர்கள் அனைவரினதும் ஒத்துழைப்புக்கு நன்றி.

**இடமாற்றம் பெற்றுச் சென்றோர் :-**

திருமதி . உஷாதேவி புஷ்பராசா
திருமதி. சுஜிகலா சுதாகரன்
திரு. இ. நந்தகுமார்
திருமதி. சு. நிஷாந்தன்
செல்வி. சு. கீதாஞ்சலி,
திருமதி யாழினி ஞானபரன்
திருமதி. சி.கேதீஸ்வரன்

திருமதி. உ. புஷ்பராசா எமது பழைய மாணவி, க.பொ.த உயர்தர பகுதித்தலைவர், கலைப்பட்டதாரியான இவர் 31.12.2008ல் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு மாற்றம் பெற்றுச் சென்றார். 10 வருடங்களாக எமது பாடசாலையில் சேவையாற்றிய இவர் பரிசளிப்பு விழா, விளையாட்டுத்துறை, தமிழ்த்தின விழா, சமய கழகங்கள் என்பவற்றிலும், உயர்தர மாணவர் மன்றத்திலும் பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்தார். இவர் ஒழுங்காற்றுக்குழுவிலும் நிர்வாக உறுப்பினராக இருந்தார். இவருடைய கற்பித்தல் 100% பெறுபேறு பெற்றுக் கொடுத்ததென்றால் மிகையாகாது. இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

செல்வி.சு.கீதாஞ்சலி ஆங்கில பட்டதாரியான இவர் 2008 யூலையில் 8 வருட சேவையின் பின் திருமணத்திற்காக இந்தியா சென்றார். ஆங்கில பாடத்தில் இவருடைய திறன் ஆங்கிலதினப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளில் எமது பாடசாலை உச்சப் பெறுபேற்றைப் பெறச் சாதகமாக இருந்தது. இவருடைய எதிர்காலம் சிறக்க வாழ்த்துக்கள்.

திருமதி. சு.சுதாகரன் பழைய மாணவி, ஆரம்பப்பிரிவு ஆசிரியரான இவர் 10.06.2009ல் 9 வருடச் சேவையின் பின் மாற்றலாகிச் சென்றுள்ளார். இவருடைய மாற்றம் ஆரம்பப்பிரிவிற்கு மிகுந்த இழப்பு என்றால் அது மிகையாகாது. இருப்பினும் அவர் சென்ற பாடசாலையில் அவருடைய பணி சிறக்க வாழ்த்துக்கள்.

திருமதி.சி.கேதீஸ்வரன் தற்காலிக இணைப்பைப் பெற்று வந்து ஒரு வருடம் கடமையாற்றிய இவர் விஞ்ஞானப் பட்டதாரி. உயிரியல் பாடத்தில் இவருடைய சேவைக்கு மிக்க நன்றி.

திருமதி. நி. சுதர்சினி பழைய மாணவி, ஒரு வருடம் ஆங்கில ஆசிரியராகக் கற்பித்தவர். சேவைக்கு நன்றி.

திரு.இ.நந்தகுமார் விசேட கல்வி ஆசிரியரான இவர் $1^1/_2$ வருடங்கள் கற்பித்தார். விளையாட்டுத்துறையிலும் சாரணியத்திலும் இவர் சேவை அளப்பரியது. இவர் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

## பாடசாலை நிர்வாக அமைப்பு :-

பாடசாலையின் முகாமைத்துவக் குழு

திருமதி சி. அனந்தசயனன் – அதிபர்
திருமதி சௌ. பத்மநாதன் – பிரதிஅதிபர்
திரு.சு. சயந்தன் – இணைப்பிரதி அதிபர், பகுதித்தலைவர், உயர்தரம்
திரு. இ. துரைசிங்கம் – உபஅதிபர், பகுதித்தலைவர், தரம் 8,9 ஒழுங்காற்றுக்குழு பொறுப்பாசிரியர்
திரு. ம. மணிசேகரன் – உதவி அதிபர் சிரேஷ்ட பிரிவு – இணைப்பாளர் உயர்தரம் – விஞ்ஞானம் கணிதம்
திருமதி. சௌ. விஸ்வலிங்கம் – உதவிஅதிபர், இடைநிலைப்பிரிவு
திரு.சி. தேவகுமாரன் – உதவி அதிபர், ஆரம்பப்பிரிவு
திரு.நா. புனிததயாபரன் – விளையாட்டுத்துறைத் தலைவர்
திருமதி. ப.லோகநாதன் – பகுதித்தலைவர் தரம் (10,11)
திருமதி. தெ. சௌந்தராஜன் – பகுதித்தலைவர் தரம் (6, 7)
செல்வி. இ. சம்பந்தர் – ஒழுங்காற்றுக்குழு பொறுப்பாசிரியர்
திருமதி. பா. கணேசதுரை – உளவள ஆலோசகர்
திரு.த. தவராஜா – அலுவலக நிர்வாகம்
திரு. சிறீஸ்கந்தராசா – அலுவலக நிர்வாகம்

முகாமைத்துவக்குழு பாடசாலையின் நிர்வாகக்கடமைகள், கற்றல் கற்பித்தல் இணைப்பாடவிதான செயற்பாடுகள், பாடசாலையின் விசேட நிகழ்வுகள், யாவற்றிலும் சிறந்த ஒத்துழைப்பை நல்குவதுடன் மாதத்தில் இருதடவை அதிபரைச் சந்தித்து முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடஇணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| தமிழ் | – திருமதி. ப.சிவசிவா |
| கணிதம் | – திருமதி. சௌ. விஸ்வலிங்கம் |
| விஞ்ஞானம் | – செல்வி. வே. பத்மலோஜினி |
| ஆங்கிலம் | – திரு.வ. உமாசுதன் |
| வரலாறு, குடியுரிமைக்கல்வி, புவியியல் | – திருமதி. பு. அகிலலோகநாயகம் |
| தொழில் முன்னிலை | – திருமதி. லோ. சுபேந்திரன் |
| அழகியல் | – திருமதி. கு. அன்பரசி |
| சமயம் | – திரு.ம. பாலமுரளி |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | – திருமதி. கு. உதயசுதர்ஷினி |

**தர இணைப்பாளர்கள்**

தரம் 6 – திரு.வே. ஜீவரூபன்

தரம் 7 – செல்வி. வ.சுபாஷினி

தரம் 8 – திருமதி. வ.அமரகுலசிங்கம்

தரம் 9 – திரு.சி. சிவகரன்

தரம் 10 – திருமதி. ரே.கேசவன்

தரம் 11 – திரு.சு. முருகமூர்த்தி

ஆங்கில மொழி மூல வகுப்பு இணைப்பாளர் – திரு.க.வாணிமுகுந்தன்

**ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள்**

தரம் 1 – திருமதி. சி.பரமசிவம், திருமதி. கா. சிவரூபன்

தரம் 2 – திருமதி. சு. சயந்தன், திருமதி. வ. சிவானந்தன்

தரம் 3 – திருமதி. சா. பிரதீபன், செல்வி. போ. டெய்சி

தரம் 4 – திருமதி. சி. கிரிதரன், திருமதி. அ. சிவகரன்

தரம் 5 – திரு. த.தயானந்தன், திருமதி. ஜெ. மயில்வாகனம்

**ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகள்**

எமது பாடசாலை ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திப்பயிற்சிகளை ESDFP திட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தி ஆசிரியர்களின் தரவிருத்தியை அதிகரிப்பதோடு அவர்களது உயர்கல்விக்கும் சகல ஊக்குவிப்பையும் வழங்கி வருகின்றது.

**2008 - 2009ம் கல்வியாண்டில்**

முதுமாணிப்பட்டப்படிப்பில் – 01 ஆசிரியர்

கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பில் – 03 ஆசிரியர்கள்

கல்விகற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அத்துடன் தரம் 12 புதிய கல்வித்திட்டத்திற்கு அமைய கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளுக்கு இதுவரை திரு.ம.மணிசேகரன் – இணைந்த கணிதம், திரு.சு.சயந்தன், – அளவையியலும் விஞ்ஞானமும், திரு. சிறீஸ்கந்தராசா – புவியியல் சென்று வந்திருக்கிறார்கள். இவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் வளவாளர்களாகத் தொழிற்பட இருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள்

### தரம் 5 புலமைப்பரிசில்

16 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 19 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள். இந்நிலையை அடைய உழைத்த அனைத்து ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள். கல்வி அபிவிருத்தி நிதியம் தரம் 05ல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதல் மூன்று மாணவர்களுக்கு மாதாந்தம் 500/= புலமைப்பரிசில் நிதி வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளார்கள் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

### க.பொ.த. சாதாரண தரம் - 2008

**9A - 01 8A - 02 7A – 05 6A – 04 5A-06 4A – 10**

### க.பொ.த (சா/த) பரீட்சை - 2008

### புள்ளிப்பகுப்பாய்வு

| பாடம் | இல. | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | A | B | C | S | W | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவ சமயம் | 12 | 89 | 89 | 69 | 09 | 04 | 06 | 01 | – | 88 | 98.4 % |
| றோ.க | 14 | 02 | 02 | 01 | – | 01 | – | – | – | 02 | 100 % |
| கிறீஸ்தவம் | 15 | 02 | 02 | – | – | 02 | – | – | – | 02 | 100% |
| தமிழ் | 22 | 93 | 93 | 44 | 16 | 16 | 11 | 06 | – | 87 | 93.5% |
| ஆங்கிலம் | 31 | 93 | 93 | 01 | 03 | 07 | 19 | 63 | – | 30 | 32.3% |
| வரலாறு | 33 | 93 | 93 | 26 | 12 | 22 | 23 | 10 | – | 83 | 89.2% |
| விஞ்ஞானம் | 34 | 93 | 93 | 10 | 11 | 18 | 27 | 27 | – | 66 | 71% |
| கணிதம் | 32 | 93 | 93 | 21 | 14 | 24 | 12 | 21 | – | 71 | 77.2% |
| **தொகுதி I** | | | | | | | | | | | |
| வணிகமும் முயற்சியாண்மையும் | 60 | 10 | 10 | 03 | 01 | 05 | 01 | – | – | 10 | 100% |
| புவியியல் | 61 | 04 | 04 | – | 03 | – | 01 | – | – | 04 | 100% |
| குடியுரிமைக்கல்வி | 62 | 22 | 22 | 03 | 06 | 07 | 05 | 01 | – | 21 | 95.5% |
| முயற்சியாண்மை | 63 | 57 | 57 | 07 | 12 | 19 | 12 | 07 | – | 50 | 87.7% |
| **தொகுதி II** | | | | | | | | | | | |
| சங்கீதம் | 42 | 20 | 20 | 02 | 09 | 06 | 03 | – | – | 20 | 100% |
| சித்திரம் | 43 | 02 | 02 | – | – | – | 01 | 01 | – | 01 | 50% |
| நடனம் | 45 | 04 | 04 | 01 | 02 | – | 01 | – | – | 04 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 51 | 66 | 66 | 18 | 22 | 19 | 07 | – | – | 06 | 100% |
| இலக்கியநயம் – தமிழ் | 48 | 01 | 01 | 01 | – | – | – | – | – | 01 | 100% |
| **தொகுதி III** | | | | | | | | | | | |
| தகவல் தொழிநுட்பம் | 80 | 24 | 24 | 05 | 10 | 08 | 01 | – | – | 24 | 100% |
| விவசாயம்04 | 81 | 31 | 31 | 05 | 01 | 07 | 13 | 05 | – | 26 | 83.9% |
| மனையியல் | 85 | 07 | 07 | – | – | 02 | 04 | 01 | – | 06 | 85.7% |
| சுகாதாரம் | 86 | 31 | 31 | 20 | 06 | 03 | 02 | – | – | 3 1 | 100% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5Aயிற்கு மேல் விசேட சித்திபெற்ற மாணவர்கள் (எமது பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்கும்) உலகெங்கும் உள்ள மகாஜனன்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்திற்குட்படுத்தப்படுகிறார்கள். இத்திட்டத்தில் 5A பெற்றிருப்பதோடு பிரதான 5 பாடங்களிலும் அவர்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். இத்திட்டத்தை கொழும்பிலுள்ள மகாஜனக்கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியம் அமுல்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் 9A பெற்ற செல்வன். புனிததயாபரன் திருமாறன் மாதம் 2500/=வும் மேற்படி தகைமைக்குட்பட்ட ஏனையோர் மாதம் 2000/= வும் 2009 மே மாதம் தொடக்கம் 2011 ஏப்ரல் வரை இரண்டு ஆண்டுகளுக்குப் பெற இருக்கிறார்கள். இதைவிட 2010 அணியில் 07 மாணவர்கள் கல்விமானியமாக மாதம் தோறும் 1000/=, 2008 மே மாதம் தொடக்கம் 2010 ஏப்ரல் வரை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இத்திட்டத்தின் இணைப்பாளராக உள்ள திரு.த.பூ.முருகையா அவர்களுக்கும் கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடாக உதவிசெய்யும் பழைய மாணவர்களுக்கும் நன்றிகள்.

க.பொ.த. சாதாரண தரத்தில் மெல்லக்கற்கும் மாணவர்களைத் தனியாகக் கவனித்து ஊக்குவிப்பதில் எமது ஆசிரியர்கள் ஆர்வமுடன் இயங்குகிறார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களது கல்வியை **ஒரு வருடம் தள்ளிப்போடுவதிலோ அல்லது மாணவர்களைப் பாடசாலையை விட்டு நீக்குவதிலோ ஈடுபடாமல்** கூடியளவு அவர்களைச் சித்தியடைய வைப்பதில் முழுமூச்சுடன் எமது ஆசிரியர்கள் ஈடுபடுகிறார்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன். **சில வேளைகளில் இதன் மூலம் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் சில பாடங்களின் சித்தி வீதம் குறைந்தது போல் தோற்றமளிக்கலாம்.** இருந்தாலும் 11 வருடங்கள் எமது பாடசாலையில் கல்வி கற்ற ஒருவனை ஒரு தகைமையோடு வெளியேற்றுவதில் திடமாக இருக்கின்றோம்.

இம்முறை தரம் 10ல் ஊடகக்கல்வியும் தொடர்பாடலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**க.பொ.த (உ/த) பரீட்சை - 2008**
**புள்ளிப் பகுப்பாய்வு**

| பிரிவு | பாடம் | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | A | B | C | S | W | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞானம் | பௌதீகவியல் (1) | 10 | 10 | - | - | 01 | 04 | 05 | - | 05 | 50% |
| | இரசாயனவியல் (2) | 10 | 10 | - | -- | 02 | 03 | 05 | - | 05 | 50% |
| | உயிரியல் (9) | 10 | 10 | - | - | 03 | 05 | 02 | - | 08 | 80% |
| கணிதம் | பௌதீகவியல் (1) | 10 | 10 | - | 02 | 03 | 01 | 04 | - | 06 | 60% |
| | இரசாயனவியல் (2) | 10 | 10 | - | - | 02 | 04 | 04 | - | 06 | 60% |
| | இணைந்த கணிதம் (10) | 10 | 10 | - | 01 | 03 | 02 | 04 | - | 06 | 60% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வர்த்தகம் | பொருளியல் (21) | 12 | 12 | 01 | 03 | 03 | 03 | 02 | - | 10 | 83% |
| | வணிகக்கல்வி (32) | 12 | 12 | 02 | 03 | 04 | 02 | 01 | - | 11 | 92% |
| | கணக்கீடு (33) | 12 | 12 | 04 | 02 | 01 | 04 | 01 | - | 11 | 92% |
| கலை | பொருளியல் (21) | 05 | 05 | - | - | 02 | 02 | 01 | - | 04 | 80% |
| | புவியியல் (22) | 19 | 19 | 02 | 01 | 11 | 03 | 02 | - | 17 | 89% |
| | அரசியல் (23) | 11 | 11 | 04 | 04 | 02 | 01 | - | - | 11 | 100% |
| | அளவையியல் (24) | 50 | 50 | 09 | 12 | 14 | 09 | 06 | - | 44 | 88% |
| | இந்து சமயம் (42) | 17 | 17 | 04 | 05 | 06 | 01 | 01 | - | 16 | 94% |
| | கிறீஸ்தவம் (43) | 03 | 03 | 01 | 01 | 01 | - | - | - | 03 | 100% |
| | இந்து நாகரிகம் (46) | 21 | 21 | 04 | 09 | 06 | 01 | 01 | - | 20 | 95% |
| | சித்திரம் (51) | 02 | 02 | - | - | 02 | - | - | - | 02 | 100% |
| | நாட்டியம் (53) | 04 | 04 | 01 | 02 | 01 | - | - | - | 04 | 100% |
| | சங்கீதம் (55) | 01 | 01 | 01 | - | - | - | - | - | 01 | 100% |
| | நாடகம் (58) | 47 | 47 | 09 | 13 | 16 | 08 | 01 | - | 46 | 98% |
| | தமிழ் (72) | 40 | 40 | 16 | 07 | 06 | 09 | 02 | - | 38 | 95% |

இவர்களில் 2A, B க்கு மேற்பட்ட பெறுபேறுகளைப் பெற்ற 17 மாணவர்கள் இலங்கை வங்கியினால் கௌரவிக்கப்பட்டார்கள். இதுவரை 2008ம் ஆண்டுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படாததால் பல்கலைக்கழக அனுமதித் தரவு தரமுடியவில்லை.

இணைப்பாட விதான செயற்பாடுகளுக்காக எமது பாடசாலையில் இயங்கும் கழகங்கள், மன்றங்கள், படைப்பிரிவு, சேவைப்பிரிவு :-

1. மாணவ முதல்வர் ஒன்றியம்
2. உயர்தர மாணவர் மன்றம்
3. தமிழ் மன்றம்
4. ஆங்கில மன்றம்
5. இந்து மன்றம்
6. கிறீஸ்தவ மன்றம்
7. விஞ்ஞான மன்றம்
8. வணிக மன்றம்
9. சைவ வளர்ச்சிக் கழகம்
10. நுண்கலை மன்றம்
11. சுகாதார மன்றம்
12. சமூகக்கல்வி மன்றம்
13. சாரணியம்
14. சுற்றாடல் பாதுகாப்பு மன்றம்
15. ஒழுங்காற்றுச் சபை
16. இன்ரறக் கழகம்
17. சதுரங்கக் கழகம்
18. இளம்புத்தாக்குனர் கழகம்
19. நூலக மன்றம்
20. பொது அறிவு மன்றம்
21. விவாத மன்றம்
22. மனைப் பொருளியல் மன்றம்
23. தகவல் தொழில்நுட்ப மன்றம்

இந்த மன்றங்கள் யாவும் புதன் கிழமைகளில் 8வது பாடம் மாணவர் திறனாய்வுப் பட்டறைகளாக இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இயங்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட கழகங்கள்.

1. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
2. புகைப்பட கலை மன்றம்
3. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு
4. மாணவர் நலன்பிரிவு படைப்பிரிவு

## எமது பாடசாலை கழக மன்றங்களின் செயற்பாடுகளுக்கு கிடைக்கப் பெற்ற சாதனைகள் :-

### தமிழ் மன்றம்

2008ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய மட்டம் வரை சென்றிருக்கின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது. கோட்ட மட்டத்தில் 11 முதலிடங்களையும் 5 இரண்டாம் இடங்களையும் 4 மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளோம். வலயத்தில் 6 முதலிடங்கயையும் 5 இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளோம்.

| | மாணவர் பெயர் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| 1. | செல்வி. ம. தரண்யா<br>பேச்சுப் பிரிவு II | 1ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் |
| 2. | செல்வி. மு. தர்ஷனா<br>கட்டுரை வரைவதலும் இலக்கியம் நயத்தலும்IV | 1ம் இடம் | 1ம் இடம் | – |
| 3 | செல்வன் கே. கௌசிகன்<br>பேச்சுப் பிரிவு III | 2ம் இடம் | - | - |
| 4. | செல்வன் து. கயூரன்<br>இலக்கணப் போட்டிப் பிரிவு IV | 3ம் இடம் | | |
| 5. | தமிழறிவு திறந்த போட்டி<br>(செல்விகள் சி. ரோபிதா, வி. கிருஜா, இ. ஶ்ரீவாணி, ஜ. தனுஷா, ம. நிலானி) | 2ம் இடம் | – | – |

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். தமிழ்த்தினப் போட்டிகளுக்குப் பொறுப்பாக இருந்த திருமதி. மனோகரி முருகமூர்த்திக்கு வாழ்த்துக்கள். நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2009 ஆண்டுக்கான தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 10 முதலாமிடங்களும் 9 இரண்டாம் இடங்களும் 1 மூன்றாம் இடமும் கிடைத்துள்ளது. இவ்வருடம் செல்வி. இராஜேஸ்வரி செனகரத்தினம் பொறுப்பாசிரியராக உள்ளார்.

### தமிழ் மொழித் தினவிழா

2008 தமிழ் மொழித்தின விழா 2008.11.07 செல்வன்.ந. விஜயரூபன் தலைமையில் நடை பெற்றது. இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக தகைசார் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் வருகை தந்திருந்தார். விழாவின்போது பிரதம விருந்தினர் கிராமிய கலை வரவேற்பு அணியினால் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் புடைசூழ அழைத்து வரப்பட்டமை முக்கிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## English Union

Our English Union is functions with the best sprit and effort. English language Day was celebrated at school with elaborate preparation and enthusiastic participation of students and staffs. We are proud to say that we have won the most number of prizes at Divisional level 17 First places, 12 second places & 11 third places in various species categories of competitions. The qualified participants were given reinforcement and sent to zonal level and District level competitions the participants of the district level are,

| | | | |
|---|---|---|---|
| Gr. 06 | Daranya Maniseharan | - Creative writing | 2nd |
| Gr.10 | Keerthika Gnanagurunathan | - Copy writing | 2nd |
| Gr.08 | Ketheeswaran Kowsikan | - Recitation | 3rd |
| Gr.13 | Luxchia Sivakumar | - Copy writing | 3rd |
| Gr.13 | Balasubramaniam Neethujan | - Impromptu | 2nd |

Balasubramaniam Neethujan got the third place in impromptu speech in Provincial Level.

In 2009 we have slight decline in getting places in Divisional Level for certain reasons. We got 10 1st places 06 2nd Places & 07 3rd places at Divisional Level.

In Zonal Level Miss. Daranya Maniseharan (Gr.7) 1st Place in Creative writing, 2nd place in Recitation & Ms. Kunthavi Ketheeswaran (Gr.3) 3rd place in Recitation.

Mr. V. Umasuthan is the Teacher In Charge & I wish him best.

An English camp for Grade 9 students was conducted under the ESDFP programme. The excellent programme had the prospectus activities to persuade the learners in whole skills based on English language. I take this opportunity to thank Mr.s.Murugamoorthy, Mrs. S. Pathmanathan & Ms. K. Manohari

Another valuable exam oriented seminer was conducted to guide Gr.11 students. This was arranged & conducted by Mr.S. Murugamoorthy & Mr. V. Vijaybaskaran, I am obliged to all.

As a revolution the scrabble club was formed with the guidance of our Deputy Principal Mrs. S. Pathmanathan on 21st of April 2008 and the activites of that club is going on hand in hand with the English union, wish them for more achievements in future.

## சைவ வளர்ச்சிக் கழகம்

சைவ வளர்ச்சிக் கழகம் பாடசாலைகளில் சகல இந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இக்கழகத்தின் அனுசரணையில் ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்பூஜையும், ஆலய அர்ச்சகருக்குரிய சம்பளம், மற்றும் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, நடேசர் அபிடேகங்கள் சிறப்பாக ஆனி உத்தரம் அபிஷேகம் பாடசாலையின் சமய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் நாயன்மார் குருபூசைகளும் சிறப்பாக நடைபெறுகின்றது. நடேசர் அபிடேகங்கள் ஆசிரியர் குழுக்களாக இணைந்து ஒழுங்கமைப்புச் செய்வது சிறப்பு.

சைவ பரிபாலன சபை, வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை, இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் சபை ஆகியோரின் சமய பாட பரீட்சைகளுக்கு எமது மாணவர்கள் தோற்றி ஆரம்பப் பிரிவை சேர்ந்த தே. சோவன்யா, உ. சருணுகா, வெள்ளிப்பதக்கத்தையும், தரம் 7ஐ சேர்ந்த செல்வி.ம. சகானா, தங்கப்பதக்கத்தையும் தரம் 9ஐச் சேர்ந்த செல்வி. சு. விஜிதா தங்கப்பதக்கத்தையும் பெற்றனர்.

இதைவிட வருடம் தோறும் திருக்கேதீச்சரம் 5ஆம் திருவிழாவும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் 17ஆம் திருவிழாவும் சிறப்பாக நடத்துகின்றோம். இதற்கு எமது பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும் லண்டன் பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினருமான திரு.க. செல்வக்குணச்சந்திரன் அனுசரணையாக உள்ளார். கீரிமலை நகுலேஸ்வரம் கோயிலுக்கு வருடாந்த உற்சவத்தில் எமது பாடசாலைக்கென ஒதுக்கப்படும் நாளில் மாணவர்களை அழைத்துச் செல்கின்றோம்.

2008ம் ஆண்டில் திருமதி. உஷா புஷ்பராசாவும் 2009ம் ஆண்டில் திரு கந்தரூபனும் திருமதி. ஜெ. மயில்வாகனமும் பொறுப்பாசிரியராகத் தொழிற்படுகின்றார்கள். இவர்களின் தொழிற்பாட்டிற்கு எமது பாராட்டுக்கள்.

## இந்து மன்றம்

பாடசாலையின் வாணி விழா இம்மன்றத்தால் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இது தொடர்பாக சகலகலாவல்லிமாலை பாடுதல், கோலம் போடுதல், மாலை கட்டல், கட்டுரைப் போட்டி, பண்ணிசைப் போட்டி, என்பன நவராத்திரி நாட்களில் நடத்தப்பட்டு விஜயதசமி அன்று மானம்பூ விழா நடத்தி பரிசு வழங்குகின்றனர்.

08.10.2009 செல்வி. ப.பிரியதர்சினி தலைமையில் திரு. சி. சிவஞானராசா பழைய மாணவனும் ஆசிரியர் யாழ்/ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வாணி விழா கொண்டாடப்பட்டது. பொறுப்பாசிரியராக தொழிற்பட்ட திரு.பா.பாலமுரளிக்கு பாராட்டுக்கள்.

## விஞ்ஞான மன்றம்

எமது கல்லூரியின் விஞ்ஞான மன்றம் மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது.

இந்த வருடத்திற்கான விஞ்ஞான தினம் 18.03.2009 புதன்கிழமை வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விஞ்ஞான தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சு, சுவரொட்டி, மற்றும் பொது அறிவுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இப்போட்டிகளில் தரம் 3 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் அனைவரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான தின நிகழ்வு மன்றத் தலைவர் செல்வன். S.யதுகுலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் R.குமாரவடிவேல் பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக திரு.S.கைலாசநாதன், கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

விஞ்ஞான தின நிகழ்வில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் "Discovery" சஞ்சிகையின் இரண்டாவது மலர் வெளியீடு செய்யப்பட்டது. இந்நூலின் ஆய்வினை திரு.K. ஜெகநாதன், அதிபர். யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் அவர்களை நிகழ்த்தினார்கள். இந்நூலின் முதற்பிரதியினை திரு.R.குமரன், ஆசிரியர் யா/புனித ஹென்றியரசர் கல்லூரி அவர்கள் பெற்றுச் சிறப்பித்தார்கள்.

சஞ்சிகைக்கு அனுசரணையாக இலங்கை வங்கி சுன்னாகம் 15000/= வும் 'ற்றன் நக்ஷனல் வங்கி 2500/= வும் தந்துதவினார்கள்.

மேலும் எமது விஞ்ஞான மன்றமானது நூற்றாண்டை நோக்கிய பாதையில் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி ஒன்றினை நடாத்தத் தயாராகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும் Royal Society of Chemistry (Sri Lanka Branch) நடாத்திய கட்டுரைப் போட்டியில் செல்வன் பா. நீதுஜன் அகில இலங்கை ரீதியில் 2ம் இடத்தினைப் பெற்று வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார். வாழ்த்துக்கள், திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கணிதவிஞ்ஞானப் போட்டிகளில் கோட்ட மட்டப் போட்டிகளில் 5 முதலாம் இடங்களும் 1 இரண்டாம் 2 மூன்றாம் இடங்களும் கிடைத்தன. மாவட்ட மட்டத்தில் கணித அறிவுப் போட்டியில் செல்வி. ம.தரண்யா (ஆங்கில மொழி மூலம் தரம் 6) செல்வன். கே. கௌசிகன் (தரம் 8) முதலாம் இடத்தினையும் செல்வி. கி. விஷ்ணுகா (தரம் 7) இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளனர். விஞ்ஞான மன்ற பொறுப்பாசிரியர் திரு.க. வாணிமுகுந்தனுக்கும் இணைப்பாளராகத் தொழிற்பட்ட செல்வி.வே.பத்மலோஜினிக்கும் ஏனைய விஞ்ஞான மன்ற ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்.

**சுகாதாரக் கழகம்**

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய இக்கழகம் இவ்வருடம் வினைத்திறனுடன் தொழிற்படுகின்றது. பொது சுகாதார பரிசோதகர்கள் அடிக்கடி பாடசாலைக்கு வந்து சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக பொது சுகாதார பரிசோதகர் திரு. அஜந்தனுக்கு நன்றி கூறுகின்றோம். தொழிற்பாட்டுக்குழுவில் 11 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் தொழிற்படுகின்றனர். இவர்கள் உணவு வழங்கல் மேற்பார்வை, மலசலகூடம் என்பவற்றை மேற்பார்வை செய்கின்றார்கள். 12/06/2009 பாடசாலையில் தரம் 1 பெற்றோர்களை அழைத்து வைத்திய கலாநிதி ஸ்ரீ.ராதேயன் தலைமையில் சுகாதாரக் குழுவினரால் சுகாதாரக் கல்வி கருத்தரங்கும் தரம் 1,4,7,10 மாணவர்கள் பூரண பரிசோதனைகளும் உட்படுத்தப்பட்டனர். சுகாதாரக்கழகத்தின் கீழ் பாடசாலையில் மூன்று இடங்களில் முதலுதவிக்கு தயார் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொறுப்பாசிரியராகத் திருமதி. சா. கிருபாகரன் வினைத்திறனுடன் தொழிற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைப்பொருளியல் மன்றம்

கடந்த வருடம் தரம், 10,11,12, மனைப்பொருளியல் அறிவுப் போட்டியில் 1ம், 2ம் இடங்களைப் பெற்றனர். பங்குபற்றிய 7 மாணவர்களும் பரிசில் பெற்றது சிறப்பானது. ஆசிரியர் கற்பித்தல் சாதன ஆக்கப்போட்டியில் தரம் 11 தேர்ச்சி 4ல் எமது ஆசிரியை திருமதி. லோ.சுபேந்திரன் 1ம் இடத்தைப் பெற்று பதக்கத்தை சுவீகரித்தார்.

## உயர்தர மாணவர் மன்றம்

சகல மன்றங்களின் செயற்பாடுகளையும் உள்ளடக்கியது. ஓவ்வொரு புதன்கிழமையும் கடைசி இருபாடவேளைகள் மன்றங்களுக்காக ஒதுக்கப்பட்டு செயற்பாடுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. கல்வி ஆண்டின் முடிவில் அயற்பாடசாலை மாணவர்களை அழைத்து மதிய போசனத்துடன் ஒன்றுகூடல் நிகழ்வை நடத்துவார்கள். இவ்வருடம் யூலை மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார்கள். இந்நிகழ்விற்குத் தலைவராக செல்வன். கஜேந்திரன் தொழிற்படுவார். பொறுப்பாசிரியராக தொழிற்படும் திருமதி. வி. ஆன்பெலிசியாவுக்கு நன்றி.

## சுற்றாடல் பாதுகாப்புக் கழகம்

பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலை இயற்கை அழகுடன் பாதுகாப்பதும் மற்றும் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

இதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் வகையில் பாடசாலையின் முன்புறத்தை அழகுபடுத்துவது, மற்றும் பாடசாலை சுற்றாடலில் பயன்தரு மரங்களை நாட்டுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். இதற்காக பிரான்ஸ் (பாரீஸ்) பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் நடப்பட்ட மரக்கன்றுகள் பராமரித்தல், நிழல் நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட தேக்கு, மலைவேம்பு போன்ற கன்றுகளை நாட்டி பராமரித்தல் போன்றவையும் சமூகக்கல்வி மன்றத்துடன் இணைந்து சிரமதானப்பணியினையும் மற்றும் வகுப்பறைகளில் விழிப்புணர்வு பதாகைகளையும் எழுதுவதற்கு வகை செய்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. சுற்றாடல் பாதுகாப்புக்காக பழைய மாணவர்சங்க அனுசரணையுடன் சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவரை நியமித்திருப்பதுடன் மாதத்திற்கு ஒரு தடவை Kleen well நிறுவனத்தின் உதவியுடன் மலசல கூடங்கள் சுத்திகரிக்கப்படுகின்றன. இதற்குப் பொறுப்பாசிரியராக தொழிற்படும் திரு.வே. ஜீவரூபன் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

## சதுரங்கக் கழகம்

14 வருடங்களாக இயங்கி வரும் இக்கழகத்தில் இவ்வருடம் 205 அங்கத்தவர்கள் உள்ளனர். பாடசாலை மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் எமது மாணவர்கள் முன்னணி வகிக்கின்றனர். வலய மட்டத்தில் 15வயது, 19 வயது பெண்கள் முதலாம் இடத்தினைப் பெற்று வெற்றி வீரர்களாகவும் 15 வயது ஆண்கள் 1ம் இடத்தினையும், 19 வயது ஆண்கள் இரண்டாம் இடத்தினையும், மாவட்ட மட்டத்தில் 15 வயது பெண்கள் முதலாமிடத்தினையும், 15 வயது ஆண்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுத் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். மாகாண மட்டத்திற்குச் செல்லும் 15 வயது பெண்கள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடமும் நூற்றாண்டை நோக்கிய பயணத்தின் ஒரு செயற்பாடாக வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிப் பாசறைகள் வைக்கப்பட இருக்கின்றது. இதற்கு அனுசரணையாளராக மக்கள் வங்கி, சுன்னாகம், விளம்பர அனுசரணை யாளராக தினக்குரல் பத்திரிகையும் தொழிற்பட உள்ளனர். அவர்களுக்கு பாடசாலை நன்றியைத் தெரிவிக்கின்றது. இக்கழகத்திற்கு தலைவராக செல்வன். பா.நீதுஜனும் பொறுப்பாசிரியராக திரு.ம. மணிசேகரனும் தொழிற்படுகின்றனர். இவர்களுக்குப் பாராட்டுக்கள்.

## ஒழுங்காற்றுச் சபை

பாடசாலையின் ஒழுங்கை ஆற்றுப்படுத்தும் இச்சபையில் அதிபருடன் ஆசிரியர்களும் மாணவ முதல்வர்களும் உள்ளனர். மாணவ முதல்வர்களில் 19 ஆண்களும் 23 பெண்களும் இவ்வாண்டு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| சிரேஷ்ட மாணவ தலைவன் | : | செல்வன். க.கோகுலன் |
| சிரேஷ்ட மாணவ தலைவி | : | செல்வி.யோ. கார்த்திகா |
| உதவி சிரேஷ்ட மாணவ தலைவன் | : | செல்வன். கு. சசிதரன் |
| உதவி சிரேஷ்ட மாணவ தலைவி | : | செல்வி. சி. ரோபிதா |

பொறுப்பாசிரியர்களாக திரு. இ. துரைசிங்கம், செல்வி. இ. சம்பந்தர் ஆகியோர் தொழிற்படுகின்றனர்.

இவ்வருடம் சின்னஞ்சூட்டு விழா 18.05.2009ல் நடைபெற்று அன்றைய தினமே அவர்களுக்கான பயிற்சிப்பாசறை நடைபெற்றது. வளவாளர்களாக திருமதி. S.சிவமலர் அதிபர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை அவர்கள் "வன்முறையற்ற தொடர்பாடல்" பற்றிய பயிற்சியையும் தலைமைத்துவத்திற்குத் தேவையான பண்புகள் பற்றியும் குறிப்பிட்டார். வலிகாமம் கல்வி வலய உளவளத்துணையாளர் திரு.S.கிருபானந்தன் (விளையாட்டுக்களின் மூலம்) முகாமைத்துவ தலைமைத்துவத்தின் பண்புகள் பற்றி பயிற்சி வழங்கினார்.

மாணவ தலைவர்கள் பாடசாலைக்கு விசுவாசமாகவும் தம் பதவிக்கு மரியாதை கொடுப்பவர்களாகவும் தொழிற்பட்டு தம் பாடசாலை ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

## நுண்கலை மன்றம்

திணைக்களம் நடாத்தும் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தி அனுப்புவதுடன் தமிழ்த் தினப்போட்டிகளிலிலும் மாணவர்களை பயிற்றுவித்து பரிசில்கள் பெற ஊக்குவித்துள்ளனர். பொறுப்பாசிரியர்களாக திருமதி.பா.கணேசதுரை, திரு.ச. செந்தில்வேல் தொழிற்படுகின்றனர்.

## மகாஜனன் சஞ்சிகை வெளியீடு

ஐயரத்தினம் நினைவு தினம் அன்று (29.10.2008) மகாஜனன் சஞ்சிகை XXXIII வெளியிடப்பட்டது. மலராசிரியராக திருமதி. ரேணுகாதேவி கேசவன் தொழிற்பட்டார். அவருடன் தொழிற்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றிகள். வெளியீட்டுரையைத் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.ச. கைலாசநாதனும் மலர் ஆய்வுரையை திரு.சோ. பத்மநாதன் (ஓய்வு பெற்ற பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர்) செய்தார். முதற்பிரதியை எமது பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் சிரேஷ்ட ஆசிரியை திருமதி. சரஸ்வதி கனகேஸ்வரன் பெற்றுக் கொண்டார். இம்முறை சஞ்சிகைகளின் அச்சுப்பதிப்பு செலவாக 149535/= செலவிடப்பட்டது.

**சாரணியம்**

பாடசாலையில் சாரணியம் மிக வினைத்திறன் வாய்ந்ததாகத் தொழிற்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

- 1st K.K.S முதலாவது துறை மாவட்ட சாரணர், துருப்பு, குருளைச் சாரணிய மந்தைகள் இணைந்து சாரணிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 1936ல் ஆரம்பிக்கப்பட்ட மகாஜனக்கல்லூரிச் சாரணியச் செயற்பாடுகள் 2011ல் பவள விழா காண இருக்கின்றது.
- சாரணியத்தில் சாரண துருப்பில் – 40 சாரணர்கள்
  குருளைக் சாரண மந்தை – 31 குருளைச் சாரணர்கள்
  பெண் குருளைச் சாரண மந்தை – 56 பெண் குருளைச் சாரணர்
  என 127 சாரணர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

**சாரணத் தலைவர்கள்**

| | | |
|---|---|---|
| குருளைச் சாரண தலைவர் - | (G.S.L) | திரு. சிவானந்தம் சிவகரன் |
| சாரணர் தலைவர் | (S.L) | திரு. சற்குணானந்தம் சுரேன் |
| குருளைச் சாரணர் தலைவர் | (C.S.L) | செல்வி. டெய்சி தேவநாயகி போல் |
| பெண் குருளைச் சாரண தலைவர்கள் | (C.S.L) | திருமதி. சிவசக்தி சயந்தன்<br>திருமதி. அமுதா சிவகரன் |
| உதவிச் சாரண தலைவர்கள் | (A.S.L) | – செல்வன் பத்மநாதன் ஜெயசங்கர் |
| உதவி குருளைச் சாரண தலைவர்கள் | (A.C.S.L) – | |

திருமதி. சிவகுமாரி மதிசீலன், திருமதி. ஜெயரஞ்சினி மயில்வாகனம்
செல்வி பகீரதி புஸ்பநாதன், செல்வி. சுபாஷினி வல்லி
செல்வி மேனகா சிவபாலன்

- 29.10.2008 (மகாஜன சிற்பி – முதற் சாரண தலைவர் – அமரர் ஜயரத்தினம் நினைவு நாளில்) பெண் குருளைச் சாரண அணி பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் – 100 – A இலங்கையின் தமிழ் மொழிப் பாடசாலைகளில் பதிவு செய்யப்பட்ட முதலாவது பெண் குருளைச் சாரணிய அணியும் அகில இலங்கை ரீதியில் பதிவு செய்யப்பட்ட அணியும் எமதாகும்.
- 05.02.2009ல் பெண் குருளை மந்தையின் முதலாவது சின்னஞ்சூட்டு வைபவம் இடம் பெற்றது.

**சாரணர் பயிற்சி**

இம்முறை அறுவர் தலைவர் (Sixers – 28 பேர் அணித்தலைவர் (patrol leaders) – 06 சாரணத் தலைவர்கள் (phase I) – 07 பேர்.

**சாரணர் செயற்பாடுகள்**

பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி, கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் மைதான, ஒழுங்கமைப்பு, முதலுதவி, அலுவலக உதவி, பாடசாலை மட்ட நிகழ்வுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் மஹோற்சவ கால சேவை, பொது இடங்களில் சிரமதானப்பணிகளில் ஈடுபடுகின்றனர்.

| **விளையாட்டுப் போட்டி** | **சாரணர்** | **குருளைச் சாரணர்** | **பெண்குருளைச் சாரணர்** |
|---|---|---|---|
| மாவட்டம் | 1ம் இடம் – 2<br>2ம் இடம் – 1<br>குழுநிகழ்வு – 1ம் இடம் (கயிறுழுத்தல்) | 1ம் இடம் – 2<br>2ம் இடம் – 2<br>3ம் இடம் – 2 | |
| மாகாணம் | 1ம் இடம் – 1<br>2ம் இடம் – 1<br>குழுநிகழ்வு – 1ம் இடம் (கயிறுழுத்தல்) | 1ம் இடம் – 1<br>2ம் இடம் – 1 | |
| **பாசறை நிகழ்வு** | | | |
| மாவட்டம் | 1ம் இடம் – 5<br>2ம் இடம் – 1<br>3ம் இடம் – 2<br>All round – 1st | All round – 5th | |
| **B.P. Day** | | | |
| மாவட்டம் | 1ம் இடம் – 2<br>2ம் இடம் – 1<br>குழு நிகழ்வு – 1ம் இடம் | 1ம் இடம் – 1<br>3ம் இடம் – 2 | |
| மாகாணம் | 1ம் இடம் – 2<br>2ம் இடம் – 1<br>குழு நிகழ்வு – 2ம் இடம் | 1ம் இடம் 1 | |
| **குருளைச் சாரணர் ஜம்பொறி** | | | |
| மாகாணம் | | All round – 2nd | 1ம் இடம் – 4<br>2ம் இடம் – 3<br>3ம் இடம் – 2<br>All round (pack I) 1st<br>All round (pack I) 2nd |

- சாரண துருப்புத் தலைவர் – செல்வன். பா.கேகஜன்
- பெண் குருளைச் சாரண அணித்தலைவர் – செல்வி. ம.துஷாரா
  செல்வி. ஜோ. ஜொனிபா

சாரணியத்திற்குப் பொறுப்பாக உள்ள சகல ஆசிரியர்களையும் வினைத்திறனுடன் தொழிற்படும் திரு.சி. சிவகரனையும் பாராட்டுகின்றேன்.

**சிறுதோழியர் அறிக்கை**

சிறுதோழியர்களுக்கான கூட்டம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் நடைபெறுகின்றது. சிறுதோழியர் அமைப்பில் 30 மாணவர்கள் உள்ளனர். இவர்களில் 10 பேர் சின்னஞ் சூட்டப்பட்டவர்களாகவும் 20 பேர் சின்னஞ்சூட்டப்படும் தகுதியிலும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாசிரியராக திருமதி. சிவனேஸ்வரி பரமசிவமும், திருமதி. வனஜா சிவானந்தனும் தொழிற்படுகிறார்கள்.

**வழிகாட்டிகள்**

36 சாரணிகளை அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்வருடத்தில் 20 மாணவிகள் சாரணிகளாகச் சின்னம் சூட்டப்பட்டதுடன் 12 சாரணிகள் இரண்டாம் தரச்சின்னம் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 15 சிரேஷ்ட சாரணிகள் பாடசாலையில் பல்வேறு சேவைகளையும் ஆற்றி வருகின்றனர்.

உலக சாரணியர் தினம் வலய மட்டத்தில் பாடசாலைகளுடன் இணைந்து கொண்டாடப்பட்டது. 31.05.2009ல் பாடசாலையில் சாரணியர் பாசறை வாசம் நடைபெற்றது. 2008ல் தீபாவளியன்று சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்திற்குப் பண உதவி செய்தனர். 14.02.2009 சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வகச் சிறார்களுடன் ஒரு நாளை மகிழ்ச்சியுடன் செலவளித்துள்ளனர்.

வழிகாட்டுநர்களாக திருமதி. சா. கிருபாகரன், செல்வி. செ. இராஜேஸ்வரி, திருமதி. சௌ. பத்மநாதனும் இணைந்து தொழிற்படுகின்றனர்.

**விளையாட்டுத்துறை**

ஒரு பாடசாலையின் வளர்ச்சியினை ஒழுக்கம், கல்வி எந்தளவிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றதோ, அந்தளவிற்குச் சமமாக விளையாட்டுத்துறையும் அளவு கோலாக அமைகின்றது என்பது நிஜம். எமது பாடசாலையில் இரு நாட்களுக்கு விளையாட்டுப் போட்டி நடைபெறும் கனிஷ்ட பிரிவு விளையாட்டுப் போட்டி 06.02.2009ல் பிரதம விருந்தினர்களாக வைத்தியகலாநிதி நா.சிறீஸ்கந்தராஜா (பழைய மாணவன், யாழ். போதனா வைத்தியசாலை), வைத்திய கலாநிதி திருமதி. சிறீஸ்கந்தராஜா, (யாழ் போதனா வைத்தியசாலை) கலந்து கொள்ள நடைபெற்றது.

07.02.2009ல் சிரேஷ்ட பிரிவு இல்ல மெய்வல்லுனர் போட்டி பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதிகள் திரு.K.ராஜசேகரன், (சிரேஷ்ட வைத்திய அதிகாரி யாழ் போதனா வைத்தியசாலை) திருமதி.T.ராஜசேகரன் (பல், யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களையும் கொண்டு நடாத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக திரு.S.கைலாசநாதன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெல்லிப்பழை அவர்களும் துறைசார் விருந்தினராக திரு.முருகர் நடராசா (உதவிக் கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி) கலந்து கொண்டனர்.

**இல்லங்களின் நிலை**

| | |
|---|---|
| 1ம் நிலை | துரையப்பா |
| 2ம் நிலை | சின்னப்பா |
| 3ம் நிலை | ஐயரத்தினம் |
| 4ம் நிலை | சின்னையா |
| 5ம் நிலை | அருளம்பலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல மெய் வல்லுனர் போட்டிக்காக திரு.க.செல்வகுணச்சந்திரன் முன்னாள் ஆசிரியர் லண்டன் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் 25,000/= அன்பளிப்பு செய்தார். 2008ம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் 1ம் இடம் பெற்று 24 மாணவர்கள் நேரடியாக மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர். இவர்களில் செல்வி. செ. கீர்த்திகா 19 வயதுப்பிரிவில் மாகாண மட்டத்தில் வெற்றி வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். செல்வன். மகாராசா பார்த்தீபன் (19 வயது) தட்டெறிதலில் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இம்மாத முற்பகுதியில் Athletic Association of Sri Lanka, Junior National champion ship – 2009 போட்டி சுகததாச உள்ளரங்கில் நடைபெற்றது. இதில் எமது மாணவன் ம. பார்த்தீபன் தட்டெறிதலில் தேசிய ரீதியில் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இப்போட்டியில் மாணவர்கள் அல்லாத வெளி நபர்களும் பங்கு பற்றியிருந்தனர். இவர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் விளையாட்டுத்துறைத் தலைவர் திரு.நா.புனிததயாபரனுக்கும் பாராட்டுக்கள்.

## துடுப்பாட்டம்

2008இல் அரவிந்த டி.சில்வா foundation யாழ்ப்பாணத்தில் நடாத்திய பயிற்சி முகாமிற்கு எமது கல்லூரியிலிருந்து ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர். மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 22 பேரில் எமது கல்லூரியைச் சேர்ந்த வி.கபில்தேவ், க.கபிலன், தி. விக்ஷ்னுகாந், சி.டிலக்சன் நால்வரும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் வி.கபில்தேவ் தேசிய அணிக்கான பயிற்சி முகாமிற்குத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவர்களால் நடாத்தப்பட்ட "இருபது – 20" போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் வி. கபில்தேவ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பயிற்சி முகாமிற்காக இம்மாதம் 26th – 28th வரை கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஒருநாள் சுற்றுப்போட்டியில் எமது பாடசாலையின் 17 வயது அணி யா/ கனகரத்தினம் ம.வி எதிரான (50 பந்துபரிமாற்றம்) ஆட்டத்தில் 411 ஓட்டங்களைக் குவித்து வரலாற்றுச் சாதனை ஒன்றை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரர் க.கபிலன், சிறந்த பந்து வீச்சாளர் சி.டிலக்சன் ஆகிய இரு பரிசில்களை ஒரே பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சுற்றுப்போட்டியில் எமது பாடசாலையின் 15 வயதுப்பிரிவு அணி சிறப்பாக விளையாடி Super six வரை முன்னேறியுள்ளமை சிறப்பம்சமாகும்.

மேற்படி சங்கத்தால் மாவட்ட அணிக்காகத் தெரிவு செய்யப்பட்ட அணிகளில் 13 வயதுப்பிரிவில் ஜெ. மயூரன், சி. கஜந்தன், ஜெ. ஜனந்தன் ஆகியோரும் 15 வயதுப் பிரிவில் கு.மோசிகீரன், இ. மதுசன் ஆகியோரும் 17 வயதுப் பிரிவில் சி.டிக்சன், க.கபிலன், ப. பார்த்தீபன், பு. தயாளன் ஆகியோரும் இடம் பிடித்து இலங்கை துடுப்பாட்ட சங்கத் தலைவர் திரு.D.S De silva அவர்களால் "Best of the North – 2008" என விருது பெற்று கௌரவம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியான துடுப்பாட்ட உபகரணங்களும் அச்சங்கத்தால் எமது கல்லூரிக்குக் கிடைக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட கால இடைவெளிக்குப் பின் எமது கல்லூரி வீரர்கள் நால்வர் – 2008 இற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சதமடித்து சாதனை புரிந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

பு. தயாளன் – 100, ப. பார்த்தீபன் – 112, க.கபிலன் – 126,ச.கோகுலன் – 107 ஆகியோரே சதமடித்த வீரர்கள் ஆவார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்திய முக்கோண "இருபது 20" போட்டியில் இரண்டாம் இடத்தை எமது கல்லூரி அணி பெற்றதுடன் சுற்றுப்போட்டியில் எமது பாடசாலையின் சிறந்த வீரனாக சி.டிலக்சனும் சுற்றுப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக ம.கோகிலதாசும், தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

## பெரு விளையாட்டு, உள்ளக விளையாட்டு – 2008 அணிகளின் விபரம்

| விளையாட்டு | பிரிவு | பொறுப்பாசிரியர் | பயிற்றுனர் | அணித்தலைவர் |
|---|---|---|---|---|
| | 15 G | திருமதி. ச. சயந்தன் | திரு.சி. தயாளபாலன் | செல்வி. பா. புகழரசி |
| கரப்பந்து | 17 G | திருமதி.லோ. சுபேந்திரன் | திரு.சி. கமலமோகன் | செல்வி. மோ. மாதங்கி |
| | 19 G | திருமதி. சௌ. விஸ்வலிங்கம் | திரு.க. கமலமோகன் | செல்வி. சி. லக்சியா |
| | 15 B | திரு. த.தவராஜா | திரு.க.ஜனார்த் | செல்வன். ச.வகுளபூசணன் |
| | 17 B | திரு.சி. தேவகுமாரன் | திரு.க.ஜனார்த் | செல்வன். சி.லஜிதன் |
| | 19 B | திரு. E.K.V. ஜோன்சன் | திரு.க. மயில்வாகனம் | செல்வன். ந. நிஷாந் |
| | | | | |
| மென்பந்து | 19 B | திரு. வ. உமாசுதன் | திரு.க. மயில்வாகனம் | செல்வன். ச.ஜபாகர் |
| | | | | |
| வலைப்பந்து | 15 G | திருமதி. சி. மதிசீலன் | திருமதி. உ. குணநேசன் | செல்வி. அ. சோபிதா |
| | 17 G | திருமதி. உ. குணநேசன் | திருமதி. உ. குணநேசன் | செல்வி. அ. அஜிதா |
| | 19 G | செல்வி. இ. சம்பந்தர் | திருமதி. உ. குணநேசன் | செல்வி.ர. அனுஷா |
| | | | | |
| உதைப்பந்து | 13 B | திரு.இ.நந்தகுமாரன் | திரு.க. வசந்தரூபன் | செல்வன்.கு. ரசிகரன் |
| | 15B | திரு.த. தயானந்தன் | திரு.க. வசந்தரூபன் | செல்வன்.அ. பிரசாந் |
| | 17B | திரு.வ.உமாசுதன் | திரு.தி. புருஷோத்மன் | செல்வன்.ச.லகீசன் |
| | 19B | திரு.இ.தயாகரன் | திரு.க. வசந்தரூபன்<br>செ. ரமணன் | செல்வன். மு. டயர்தன் |
| | | | | |
| சதுரங்கம் | 15 G | செல்வி. ச. ஜெனித்தா | செல்வன்.பா. பாலசஞ்சிதன் | செல்வி. சு. விஜிதா |
| | 19 B | திரு. ம. மணிசேகரன் | திரு. ம. மணிசேகரன் | செல்வி. சி. லக்சிகா |
| | 15 B | திரு. க. வாணிமுகுந்தன் | செல்வன். பா. பாலசஞ்சிதன் | செல்வன். பா. லஜிதரன் |
| | 19 G | செல்வி.கு. அஜிராணி | திரு. ம. மணிசேகரன் | செல்வன். நீதுஜன் |
| | | | | |
| துடுப்பாட்டம் | 13 B | திரு.த. தயானந்தன் | திரு.இ. சிறிதரன் | செல்வன். ஜ.ஜனந்தன் |
| | 15 B | திரு.வ. உமாசுதன் | திரு.இ. சிறிதரன் | செல்வன்.இ. மதுசன் |
| | 17 B | திரு.வ. உமாசுதன் | திரு.இ. சிறிதரன் | செல்வன். பி. புவிதரன் |
| | 19 B | திரு.க. மயில்வாகனம் | திரு.இ. சிறிதரன் | செல்வன். ம.எல்மோ நிக்சன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம், காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் உதைபந்துகள், கரப்பந்துகள், கரப்பந்தாட்ட வலைகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

**எமது பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நடத்தப்படும் சேவைகள்.**

| சேவைகள். | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|
| வங்கிச் சேவை – NSB – சுன்னாகம் | திருமதி. சி. சயந்தன் |
| மக்கள் வங்கி – சுன்னாகம் | திருமதி.சு.சுதாகரன், திரு.ம. மணிசேகரன் |
| இலங்கை வங்கி – சுன்னாகம் | திருமதி. ஜெ. மயில்வாகனம் |
| | திரு.க.வாணிமுகுந்தன் |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு | செல்வி. பு. பகீரதி |
| தேசிய அடையாள அட்டை | திரு.சு. சயந்தன் |
| பாடசாலை அடையாள அட்டை | திருமதி. வ. அமரகுலசிங்கம் |
| அஞ்சல் அடையாள அட்டை | திருமதி. சௌ. விஸ்வலிங்கம் |
| | திரு.த.தயானந்தன் |
| பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் | திருமதி. சௌ. விஸ்வலிங்கம் |
| போக்குவரத்து பருவகால சீட்டு | திரு.க.சுரேஸ் |

இவர்களின் சேவைகளுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**மாணவர் நலன் உதவி**

சீருடை, கற்றல் உபகரணங்கள், சப்பாத்துக்கள், கல்வித் தேவை அனுசரணை தேவைப்படும் மாணவர்கள் இனம் காணப்பட்டோ / பெற்றோர்களினால் வேண்டப்படும் போதோ மேற்படி தேவை நிறைவேற்றப்படுகின்றது. இதற்காக பல பழைய மாணவர்கள் உதவுகிறார்கள். கடந்த வருடம் வெளிவாரி மதிப்பீட்டில் வலயக் கல்வித் திணைக்களம் எமது பாடசாலை மாணவர் நலன் உதவி ஆவணங்களை பார்வையிட்டு “Bench Mark” குறிப்பிட்டது மகிழ்ச்சிக்குரியது. உதவும் நல்ல உள்ளங்களுக்கு நன்றிகள்.

**கட்டாயக் கல்விக் குழு**

பாடசாலைகளில் இடைவிலகல் மாணவர்கள் அடிக்கடி வருகை தராமை தொடர்பாக குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய 2007 July மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவில் அதிபர், பிரதி அதிபர், ஆலயக் குருக்கள், கிராம சேவையாளர் திரு. தவராசா, திரு. சாரங்கன், சமுர்த்தி அலுவலர் திரு. ஈஸ்வரன், நலன் விரும்பி திரு.ச. விநாயகரத்தினம், பழைய மாணவன் திரு. சிறீதரன், ஆசிரியர் திரு.சி. சிவாகரன், பெற்றோர் திரு.ந. துளசிதாசன் ஆகியோர் தொழிற்படுகின்றனர். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் இது தொடர்பாக பாராட்டப்பட்ட பாடசாலை என்ற பெருமை எமக்கு உண்டு. பிரதி அதிபர். திருமதி. சௌ. பத்மநாதன் வினைத்திறனுடன் தொழிற்படுவது பாராட்டுக்குரியது.

**வழிகாட்டல் ஆலோசனை**

எமது பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியர்களாக தொழிற்படும் திரு.சி. சிவாகரன் திரு.இ. நந்தகுமாரன் ஆகியோரால் விசேட கல்வி நிலைய அலகு இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்படுகின்றது. உள வள பகுதி நேர ஆலோசகராக எமது ஆசிரியர் திருமதி. பாகீரதி. கணேசதுரையும் தொழிற்படுகின்றார். மாணவர்களின் உளப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு மகிழ்ச்சியாகக் கற்பதற்கு உதவி செய்யப்படுகிறது. அத்துடன் விசேட தேவையுடைய மாணவர்கள் இனங்காணப்பட்டு வழிகாட்டப்படுகிறார்கள்.

**நூலக சேவை**

எமது நூலகம் தற்போது ஓரளவு மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியளவு நூல்களால் நிரம்பியுள்ளது. பிறந்த நாள் பரிசுத்திட்டத்தின் மூலமும் தர உள்ளீட்டின் மூலமும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவைப்படும் கைந்நூல்கள், பயிற்சி நூல்கள் உடனுக்குடன் வாங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆசிரிய நூலகர் செல்வி. அஜிராணி குகநேசனும் ஆசிரியை செல்வி. ச. ஜனிதாவும் வினைத்திறனாகத் தொழிற்படுகின்றனர்.

**உலக உணவுத்திட்டம்**

இத்திட்டம் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். சமயலறை வசதி இல்லாதிருந்த எமக்கு மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு பழைய மாணவர் சங்கங்களின் நிதியுதவியுடன் விடுதிச்சாலை சமயலறை புனரமைக்கப்பட்டு நல்ல முறையில் பாவனைப் படுத்தப்படுகிறது. இவ்வருடம் உணவு பரிமாறுவதற்கென சாப்பாட்டறை பயன்படுத்தப்படு கின்றது. இதற்காக உலக உணவுத்திட்ட தரவட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இணைப்பாளராக திரு.ம. மணிசேகரன் திரு. அசோக்குமாரனும் மரக்கறி தோட்டம் அமைப்பதில் திரு.த.கனகேஸ்வரனும் தொழிற்படுகின்றனர். அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

**(ESDFP) கல்வித்தர அபிவிருத்தி வடிவமைப்பும் செயற்றிட்டமும்**

மேற்படி திட்டத்தின் கீழ் மாணவர்களின் தரவிருத்தி செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படு கின்றது. இதன் இணைப்பாளராக திரு.ம. மணிசேகரனும், திரு. சிறீஸ்கந்தராசாவும் தொழிற்படு கின்றனர். அவர்களுக்கு நன்றி.

**கணனிக்கற்கை நிலையம்**

தரம் 11ல் 2008ல் மாணவர்கள் தகவல் தொழிநுட்பத்துக்கென பொதுப்பரீட்சையில் தோற்றி 100% பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். இப்போது நிரந்தர ஆசிரியர் உள்ளார். பழைய மாணவன் திரு.இ. செல்வஸ்கந்தனின் அனுசரணையோடு தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களாக செல்வி. பிரவீனா சிவசுப்பிரமணியமும் திரு. குணசிங்கம் புவிந்தனும் தொழிற்படுகின்றனர்.

கணனிக்கற்கை நிலையத்திற்குப் பொறுப்பாக திரு.ம. மணிசேகரன் தொழிற்படுகின்றார். இந்நிலையம் பரீட்சைக்குழுவின் தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய வகையில் சிறப்பாகத் தொழிற்படுகின்றது. பொறுப்பாசிரியர்களுக்கு நன்றி.

கணனிக் கற்கை நிலையம் அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கேற்ப விஸ்தரிக்கப்பட வேண்டியதும் குறைந்தது 40 கணனிகள் கொண்ட நிலையமாக மாற வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது என்பதைக் கல்வி அபிவிருத்தி நிதியம் உணர்ந்து கனடா பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் எமக்கு கணனிக் கற்கை நிலையத்தை உருவாக்குவதற்கு முன்னேற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருகிறார்கள். மேலும் ஆரம்பப்பிரிவிற்கான கணனிக்கற்கை நிலையமும் உருவாக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றது. இத்தேவை நூற்றாண்டிற்கிடையில் பூர்த்தி செய்யப்படும் என நம்புகின்றோம்.

## இன்றறக்ட் கழகம்

கடந்த வருடம் செல்வன் பா. நீதுஜன் தலைமையில் திரு.இ. நந்தகுமார் பொறுப்பாசிரியராகத் தொழிற்பட இக்கழகம் பொது அறிவுப்போட்டிகளிலும் குருதிக் கொடையாளர் தினத்தை அனுஷ்டிப்பதிலும் தொழிற்பட்டது. இவ்வருடம் எமது பாடசாலை யாழ் மாவட்ட றோட்டரிக் கழகத்தின் யாழ் மாவட்ட மாணவ முயற்சியாளர் விருது 2009 திட்டத்தில் ஒரு பாடசாலையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு செல்வன். க. கோகுலன் தலைவராகவும் பொறுப்பாசிரியராக திரு. இ. குகானந்தனும் தொழிற்படுகின்றனர். 315 அங்கத்தவர்கள் உள்ளனர்.

## தகவல் தொழிநுட்ப மன்றம்

2008ம் ஆண்டுக்கான வலிகாமம் கல்வி வலய SEMP அனுசரனையுடன் பாடசாலை மென்பொருளாக்கப்போட்டியில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களைப் பங்கு பற்ற ஊக்குவித்ததுடன் மேலதிக தகவல் பெறவும் மன்றம் உதவியுள்ளது.

மாணவர்களும் ஆசிரியர்களும் தமது கற்றல் தேவையைப் பூர்த்தி செய்ய Internet பாவனையை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் கணித விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான தினத்தில் Front page design போட்டிகள் வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தனால் உயர்தர மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட GIT போட்டியில் செல்வன். க. கோகுலன் மாவட்ட ரீதியல் 24வது இடத்தைப் பெற்று 12.06.2009ல் யாழ் பல்கலைக்கழகத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கு விழாவில் சான்றிதழைப் பெற்றார். இம்மன்றம் தன்னுடைய மேலதிக செயற்பாடாக கணனித் தகவல்கள் அடங்கிய சஞ்சிகையை வெளியிடத் தீர்மானித்துள்ளது. பொறுப்பாசிரியர் செல்வி. சுமதி சுந்தரலிங்கத்திற்கு பாராட்டுக்கள்.

## கட்புல செவிப்புல சாதன அறை

கற்றல் கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. போதிய எண்ணிக்கையான சாதனங்கள் இருந்தும் இடப்பற்றாக்குறைவும் மின்சார வசதி எல்லா இடங்களிலும் இல்லாமையும் பிரச்சினையாக இருந்தாலும் பொறுப்பாசிரியராக திரு. தவராசா வினைத்திறனுடன் சகல ஆசிரியர்களையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் நடாத்துகின்றார். பாராட்டுக்கள்.

## கால்கோள் விழா

தரம் 01 மாணவர்களை வரவேற்கும் இவ்விழா ஜனவரியில் நடைபெற்றது. அன்றைய தினம் மக்கள் வங்கி, சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் சகல மாணவர்களுக்கும் தனித்தனியாக 100/= வைப்பிலிட்டு வழங்கி வரவேற்றார்கள். ஆசிரியர் நலன்புரிச்சங்கமும் பயிற்சிக்கொப்பிகள், எழுதுகருவிகள் வழங்கித் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக இவ்விழாவைக் கொண்டாடிய ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் திரு.சி. தேவகுமாரன் மற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு பாராட்டுக்கள்.

## பான்ட் வாத்தியக்குழு

எம்மிடம் சிரேஷ்ட, கனிஷ்ட பான்ட் வாத்தியக்குழுக்கள் இரண்டு உள்ளன. பொறுப்பாசிரியர்களாக உள்ள திரு. இ. ஞானேஸ்வரன் அவர்களுக்கும் திருமதி.உ.குணனேசன் அவர்களுக்கும் நன்றிகள்.

## ஆசிரியர் கழகம்

ஆசிரியர்களின் நலன்களைப் பேணுவதும் – ஆசிரியர்களின் ஒன்றுபட்ட கூட்டுச் செயற்பாட்டை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஆசிரியர் கழகம் செயற்பட்டு வருகின்றது. வழமை போன்று கல்வி சார், கல்விசாரா உத்தியோகத்தர்களின் மங்கல, அமங்கல நிகழ்வுகளில் பங்கு பற்றி வருகின்றது.

அத்துடன் கல்லூரி விளையாட்டுத்துறை மாணவன் ஒருவரின் குடும்ப மரணச் செலவுக்குப் பங்களிப்பை வழங்கியுள்ளது. முதியோர் இல்லம், கால் இழந்த இளைஞர், கண் சத்திர சிகிச்சை போன்றவற்றுக்கு நிதி வழங்கி சமூகத்துடன் இணைந்துள்ளது. பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவர், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய மாணவர் ஆகியோரின் சத்திரசிகிச்சைக்கும் பங்களிப்புச் செய்துள்ளனர். இடம்பெயர்ந்து அல்லலுறும் எம் உடன் பிறப்புகளுக்கும் தங்களாலான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இம்மன்றத்திற்கு 2008ம் ஆண்டில் தலைவராக திரு.செ. செந்தில்வேல் செயலாளராக திரு.இ.தயாகரன் பொருளாளராக செல்வி.வே. பத்மலோஜினி தொழிற்பட்டனர். 2009ம் ஆண்டில் தலைவராக திரு.த.தவராஜா, செயலாளராக திரு.சி. சிவகரன் பொருளாளராக, திருமதி.தே. வாமதேவன் தொழிற்படுகின்றனர்.

## சுவடுகள் செய்திமடல் வெளியீடு

பாடசாலையின் வளர்ச்சியைப் படிப்படியாக ஆவணப்படுத்தி இன்னும் எப்படி வளரலாம் என்பதையும் வளர்ச்சிக்கு யார், யார் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் எமது “சுவடுகள்” மாதாந்த செய்தி மடலுக்கு (News letter – Suvaduhal) இரண்டு வயது பூர்த்தியாகி 22 மடல்கள் உங்கள் கைகளில் தவழ்ந்திருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். “சுவடுகள்” பெற்றுக் கொள்ளும் நலன்விரும்பிகள் ஆர்வத்திலிருந்து சுவடுகளின் உயர் மதிப்பீடு வெளிப்படுகின்றது. சுவடுகள் இவ்வருடம் தொடக்கம் காலாண்டு செய்தி மடலாக வெளிவர இருக்கின்றது என்பதைத் தெரிவிப்பதோடு இதற்காக மடலாசிரியர் செல்வி. இராஜேஸ்வரி செனகரத்தினமும் ஆலோசகர் என்ற வகையில் நானும் நாற்பது ஐம்பது வருடங்கள் முந்திய ஆவணங்களைப் புரட்டும் போது எமக்கு ஒரு ஆத்மதிருப்தி கிடைக்கின்றது என்றால் மிகையாகாது. பழைய ஆவணங்கள், புகைப்படங்கள், சஞ்சிகைகள் வைத்திருப்பவர்கள் நிச்சயமாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். சுவடுகள் தயாரித்தலில் ஈடுபடும் செல்வி. இராஜேஸ்வரிக்கு நன்றி கூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு**

ஒவ்வொரு தவணை முடிவிலும் மாணவர்களின் விடைத்தாள்களைப் பார்வையிடவும் தேர்ச்சியறிக்கையைப் பெறவும் பெற்றோர் குறிப்பிடப்பட்ட நாட்களில் அழைக்கப்படுகின்றார்கள். இதைவிட அதிபர் அனுமதியுடன் ஆசிரியர்களை வந்து சந்திக்கவும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**ஐயரத்தினம் நினைவு தினம்**

வருடா வருடம் அக்டோபர் மாதம் 29ம் திகதி ஐயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் நடைபெற்று வருகின்றது. பாடசாலையின் தரம் – 1-8 வரையான மாணவர்கள் அன்றைய தினம் கௌரவிக்கப்படுகின்றார்கள். இவ்வருடம் திரு.ம. பிரதீபன் திட்டப்பணிப்பாளர், மாவட்டச் செயலகம், பிரதம விருந்தினராகவும், திரு.ச.கைலாசநாதன் (கோட்டக் கல்விப்பணிப்பாளர்) சிறப்பு விருந்தினராகவும், பழைய மாணவருமான திரு. சிவபாலகணேசன் நினைவுப் பேருரை ஆற்றவும் கலந்து கொண்டனர். விழாச் செலவை கனடா பழைய மாணவர் சங்கமும், தெல்லிப்பழை பழைய மாணவர் தாய்ச்சங்கமும் பொறுப்பேற்கின்றது.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2008**

பொதுக்கூட்டம் – 01, விசேட பொதுக்கூட்டம் – 01, நிர்வாக சபைக்கூட்டம் – 08, விசேட நிர்வாக சபைக்கூட்டம் – 03

2008ம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பல்வேறு செயற்பாடுகளைச் செய்து முடித்திருக்கின்றது.

நிக்கொட் அனுசரணையுடன் பாடசாலைக்கு வழங்கப்பட்ட 2000 கலன் கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி ஒன்று புதிதாக அமைத்துள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்கும் பட்சத்தில் வழங்கப்படலாம் என அறிவுறுத்தப்பட்ட செயற்றிட்டம் 22.04.08இல் எமது அதிபரினால் அடிக்கல் நாட்டப்பட்டு ஒக்ரோபர் 2008இல் முடிக்கப்பட்டுள்ளது. 992,298/75 பெறுமதியான செயற்றிட்டத்தில் குடிநீர் குழாய்களுடன் புதிய நீர்த்தாங்கி மற்றும் ஆண் மாணவர்களின் மலசலகூட திருத்த வேலைகளும் அடங்குகின்றது. இதில் மேலதிகமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தமது செலவில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மலசலகூட திருத்த வேலைகளும் அடங்குகின்றது. இதில் மேலதிகமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தமது செலவில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பகுதியிலும் க.பொ.த உயர்தர மாணவர்களின் வகுப்பறைக் கட்டடத்திற்கு அருகாமையிலுமாக மேலதிகமாக குடிநீர் வசதிகளும் மைதானத்தில் 04 விசிறல் குழாய் நீர் வசதியும் செய்யக்கூடிய வகையில் ஒழுக்கமைக்கப்பட்டுள்ளது. இதற்காக உடனடியாகத் தேவைப்பட்ட ஒரு லட்சம் ரூபாவை முற்பணமாக வழங்கிய எமது பழைய மாணவர் சங்கத்திற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்தர விஞ்ஞான கணித மாணவர்களுக்கான மூன்று அலகு விஞ்ஞான ஆய்வுகூடமும் விரிவுரை மண்டபமும் நிக்கொட் அனுசரணையுடன் கட்டப்பட்டு வருகின்றது. விஞ்ஞான ஆய்வுகூட அடிக்கல் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் 01.09.2008ஆம் திகதி நாட்டப்பட்டது. மேற்குறிப்பிட்ட இரு செயற்றிட்டங்களுக்காக திரு. N.S.சிவரூபன், பிரதி திட்டப்பணிப்பாளர் நிக்கொட், யாழ்ப்பாணம் பணிப்பாளர் திரு.த.இலங்காநேசனுக்கும், மாவட்ட பாடசாலைகள் சேவைகள் பகுதி பொறியியலாளர் திரு. சிவபாலனுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறுவியவர் நினைவுநாள்பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 5000/- அன்பளிப்பு வழங்கப்பட்டது. பாதுகாப்புப் படையினரின் வேண்டுகோளுக்கு இணங்க பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து மின்மாற்றி காப்பரண் செய்யப்பட்டது. இதற்காக 2500/- வழங்கப்பட்டது. தமிழ்த்தினப் போட்டிக்கான செலவில் ரூபா 15000/- பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கொடுத்தது.

ஐயரத்தினம் நினைவு தினத்தில் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் எமது கல்லூரியின் பழைய மாணவனும் முன்னாள் மூத்த ஆசிரியருமான திரு. சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி அவர்களைக் கௌரவித்து நினைவுக் கேடயம் ஒன்றையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கியது. அவர் கௌரவிக்கப்படுகையில் 99 வயது பூர்த்தி செய்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய உருவப்படம் திரு.க.ரவீந்திரா (நிர்வாகசபை உறுப்பினர்) அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ஆசிரியர் தின விழாவில் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து பா.அ.சங்கம் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் செலவைப் பொறுப்பேற்றது.

இவ்வருடத்தில் அமரர்களாகிய திரு.றொகான் இராஜசிங்கம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி அ.நாகம்மா கதிர்காமர், திரு.சிவபாலன், திரு.சி. சிவபாஸ்கரன் ஆகியோருக்குப் பத்திரிகைகளில் அஞ்சலி செலுத்தியது.

உலக உணவுத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு மதிய உணவு கொடுப்பதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவி சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதற்காக உபகுழு அமைக்கப்பட்டு அவர்களது மேற்பார்வையின்கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பாடசாலை மாணவர்களுக்குரிய புத்தகசாலையை நடாத்துவது குறிப்பிடத்தக்கது. தற்போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்பட்ட முற்பணம் மீளச் செலுத்தப்பட்டு இலாபத்தில் 30,000/- பெறுமதியான கற்றல் உபகரணங்கள் புத்தகசாலையில் உள்ளன. மேலும் சிற்றுண்டிச்சாலை மாணவர்களின் தேவைக்கேற்ப பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

மேலும் அவ்வப்போது நலன்விரும்பிகளும், பழைய மாணவர்களும், பழைய மாணவர் சங்கங்களும் மாணவர்களின்நலனுக்காக வழங்கும் நிதியைத் தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்கும் செயற்திட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றது.

2010ம் ஆண்டு பாடசாலை நூற்றாண்டைக் கொண்டாட இருக்கின்றது. இதற்கான முன்னெடுப்புக்காகச் செயற்றிட்டங்கள் சில நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டுள்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள எமது பழைய மாணவர்கள் அதிபருடன் தொடர்புகொண்டு தங்களிடமுள்ள ஆவணங்களை வழங்கி வருவது பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தை உற்சாகப்படுத்துகின்றது. பழைய மாணவன் திரு. இராஜதுரை அவர்கள் நவ மகாஜன சிற்பி திரு.தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் வலது கையாக இருந்த முன்னாள் உப அதிபர் திரு.கிருஷ்ணபிள்ளை அவர்களின் உருவப்படத்தை அன்பளிப்புச் செய்துள்ளார். அவர்களுக்கு எமது நன்றிகள்.

மேலும் பாடசாலை தமிழ் மன்றம், கவின்கலை மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து கலை விழா ஒன்றை நடாத்துவதற்குத் திணைக்களத்திடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான பற்றுச்சீட்டு அடித்தலுக்கான அனுசரணை அளவெட்டி – மல்லாகம் பலநோக்கு கூ.சங்கமும், தெல்லிப்பழை பலநோக்கு கூ.சங்கமும் உதவியுள்ளது.

இறுதியாக எமது பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பாடசாலை அபிவிருத்திக்காக வழங்கும் உதவிகளையும், அனுசரணைகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நன்றியோடு பாராட்டுவதுடன் நூற்றாண்டு விழாவிலும் அதன் பின்னரும் அனைவரதும் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

**பழைய மாணவர் சங்க அறிக்கை**

27.04.2008ம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் 2008/2009 ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. அன்றுமுதல் கல்லூரியின் நிகழ்வுகள், தேவைகள், அபிவிருத்திகள் அனைத்தையும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், ஆசிரியர் கழகம், மாணவர் மன்றங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பழைய மாணவர் சங்கத்தினர் முன்னெடுக்கின்றனர்.

கொழும்பில் வசிக்கும் எமது பழைய மாணவர்களான திரு.வ.சிவரதன், திரு.ச.ரதிகுலன் ஆகியோர் எமது பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 30,000/- பெறுமதியான 12 சோடி உதைபந்தாட்ட காலணிகளை எமது சங்கத்தினூடாக வழங்கி உதவினார்கள். பழைய மாணவர் சங்க நிதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கு பிரான்ஸ் OSA, சிட்னி OSA ஆகியவற்றின் உதவியுடனும் திரு.வி.ஹரிகரன், திரு.K.சுதர்சன் ஆகியோரின் உதவியுடனும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க 2008ம் ஆண்டிலிருந்து தமிழ்த்தினப் போட்டிகளுக்கான செலவுகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

விளையாட்டுக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அணிகளின் சிறந்த வீரர்களுக்கான நினைவுப் பரிசில்களை வழங்குகின்றனர். 2008ம் ஆண்டிற்கான ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தோடு இணைந்து நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளனர்.

2008ம் ஆண்டிற்கான மாகாண, தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகள் மற்றும் மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் தங்கப்பதக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்ற வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர்கள் ஆகியோரை பழைய மாணவர் சங்கம் கௌரவித்தது. தேசியமட்டப் போட்டியில் தட்டெறிதல் 2ம் இடம் பெற்ற செல்வன் ம.பார்த்தீபனுக்கு 25,000/- பணப்பரிசினை வழங்கி ஊக்குவித்தனர். யாழ்.மாவட்டத்தில் வசிக்கும் பழைய மாணவர்களிடம் இருந்து 66,500/- பணம் சேகரிக்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்விற்கு 48,244/- செலவாகியது போக மிகுதிப்பணமாகிய 18,256/- பாடசாலையின் மைதான புல்வெட்டும் இயந்திரம் கொள்வனவு செய்ய வழங்கியுள்ளனர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியுடன் வருடாந்தம் நடைபெறுகின்ற வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டிக்கு 84 O/L Batch பழைய மாணவர்கள் 25,000/-வும், சுவிஸ்லாந்தில் வசிக்கும் திரு. அன்பழகன், நண்பர்களின் போர் துடுப்பாட்டப் போட்டிப் பரிசிற்காக 20,000/- வழங்கி உதவியுள்ளார்கள். விளையாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்காக இச்சங்கம் 45,275/- கடனாக வழங்கி உதவியுள்ளது. வழமைபோல் இம்முறையும் பல்கலைக்கழகத்திற்கு (2007 A/L) தெரிவானோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

### அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி

NECORD நிறுவனத்தின் அனுசரணையில் பா.அ.சங்கத்தினால் தண்ணீர் தாங்கி கட்டிமுடிக்கப்பட்டது. மூன்று அலகு ஆய்வுகூடம் மிக விரைவில் கையளிக்கப்படவுள்ளது. NECORD நிறுவனத்திற்கு நன்றிகள்.

### மகாஜனக் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி நிதியம்

கம்பனி விதிக்குட்பட்ட இந் நிதியம் 10 பணிப்பாளர்களைக் கொண்டதாகவும் தலைவர் திரு.த.இலங்காநேசனையும் கொண்டு தொழிற்படுகின்றது. பழைய மாணவர் சங்கங்களினூடு இவ்வருடமும் கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு மாணவர்கள் புலமைப்பரிசில் பெற இருக்கிறார்கள். இவ்வருடம் முதல் 9A எடுக்கும் மாணவர்களுக்கு மாதம் 2500 ரூபாவும் 5Aயும் அதற்கு மேலும் பிரதான 5 பாடங்களிலும் சித்திபெற்ற முதல் 15 மாணவர்களுக்கு மாதம் 2000 ரூபாவும் மே மாதம் தொடக்கம் 2011 ஏப்ரல் வரை வழங்க இருக்கின்றார்கள். 2008 க.பொ.த. சாதாரணதர பரீட்சை எடுத்த இம் மாணவர்கள் புலமைப்பரிசில் பெறும் ஐந்தாவது அணியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் இணைப்பாளர்களாகத் தொழிற்படும் திரு.த.பூ.முருகையா அவர்களுக்கும் திரு.சி.ஜெயவர்மன் அவர்களுக்கும் நன்றி.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலையின் பௌதீக வளம் குறிப்பாக கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு, பூரணமாக்கப்பட்டு பாடசாலை புதுப்பொலிவுடன் திகழ்கின்றது என்பது கண்கூடு. ஆரம்பப்பிரிவு வகுப்பறைகளுக்கு மேலாக நான்கு மூடப்பட்ட வகுப்பறைகள், GTZ கட்டடத்தின் மேல் மாடியில் மூடப்பட்ட நான்கு வகுப்பறைகள், புதிதாகக் கட்டப்பட்ட விடுதிச்சாலை கட்டடங்கள், நடன கூடம், சித்திர அறை, விசேட கல்வி அறை, சமையல் அறை, சாப்பாடு கூடம் மற்றும் மேற்குப் பக்கமாக 3 வகுப்பறைகள் என்பன கட்டி முடிக்கப்பட்டுள்ளது. புதிதாக தரம் I இரு வகுப்பறைகள், மேற்குப்பக்கமாக எல்லை மதில் என்பன கட்டப்பட்டுள்ளன. இன்னும் கோவில், திறந்தவெளி மேடைக்கு இரு புறங்களிலுமுள்ள 6 வகுப்பறைகள் மிக அவசியமாகச் செப்பனிடப்படவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கூலியில் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு வேலைகள் நடைபெற்று ஏறக்குறைய முடிவடையும் நிலையில் உள்ளது. இதற்கு ஆலோசகராக சகல விதத்திலும் தொழிற்படும் பழையமாணவன் எந்திரி இராமதாசன் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். மேலும் பழைய மாணவர் திரு.இ.சிறிதரன் மேற்பார்வையாளராகவும் இச்செயற்றிட்டத்தில் அதிருபருக்குதவியாக, செயலாளராக திரு.ம.மணிசேகரனும் பொருளாளராக திரு.சு.சயந்தனும் தொழிற்படுகிறார்கள். திரு.இ.செல்வஸ்கந்தன் மாதாந்தம் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்க்கென 12,000/- தந்துதவுகின்றார். அவருக்கு எமது நன்றிகள்.

கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு மாணவர்களின் பாவனைக்கெனக் குறிப்பாக, போட்டிகளுக்குச் செல்வதற்காக திரு.க.செல்வகுணச்சந்திரன் அவர்கள் 29.10.2008 அன்று வான் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றி. அத்துடன் அபிவிருத்தி நிதியம் மாணவர் தேவை கருதி கோலூன்றிப் பாய்தலுக்கான 1 லட்சம் பெறுமதியான கோல் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

**பழைய மாணவர் சங்கக் கிளைகள்**

கொழும்பு பழைய மாணவர் சங்கக் கிளை திரு.மனோசிறிதரன் தலைமையில் இயங்குகின்றது. பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் தொழிற்படுகிறார்கள். 2009 ஜனவரியில் அதிபர் கொழும்பு சென்றபோது அவருடன் கலந்துரையாடி பாடசாலைக்குத் தங்களால் செய்யக்கூடிய சில செயற்றிட்டங்களை வரையறுத்துள்ளார்கள். குறிப்பாக ஆவண கண்காட்சிக்கு அனுசரணை, மாணவர்களுக்குத் தொழிலுக்கு வழிகாட்டல் மற்றும் மகாஜனன் குழந்தைக் கவிதைகள் மீள் வெளியீடு போன்றனவாகும். மேலும் எமது விளையாட்டு வீரர்கள், தமிழ்த்தினப் போட்டியாளர்கள் கொழும்பு சென்றபோது அவர்களுக்கு அனுசரணையாக இருந்தது பாராட்டத்தக்கது.

லண்டன் பழைய மாணவர் சங்கக்கிளை திரு.யு. விமலதாசன் தலைமையில் விளையாட்டுத் துறைக்கு அனுசரணையாளர்களாகத் தொழிற்படுகிறார்கள். 2008இல் மொத்தமாக ரூபா 5,89,668/- வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு பாடசாலை நன்றியைத் தெரிவிக்கிறார்கள். அத்துடன் திரு.க.செல்வகுணச்சந்திரன் மாவிட்டபுரம், கேதீச்சரம் திருவிழாச் செலவுக்காக 65,000/- அனுப்பியுள்ளார்.

பிரான்ஸ் பழைய மாணவர் சங்கக்கிளை திரு.இராதாகிருஷ்ணன் தலைமையில் எமக்கு உதவுகிறது. அவர்களால் நிலையான வைப்பிலிடப்பட்ட 5,00,000/- இருந்து வரும் பணத்திலிருந்து ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. மேலும் இச்சங்கத்தைச் சேர்ந்த திரு.வி.'ரிகரன் பழைய மாணவன் திரு.நா.துஷ்யந்தனூடாக மாதாந்தம் 3000/- ஆசிரியர் சம்பளத்திற்குத் தந்து கொண்டிருக்கிறார்.

அத்துடன் நூற்றாண்டு விழா செயற்றிட்டமாக தளபாட உதவி செய்வதற்கு முன்வந்துள்ளார்கள். உயர்தர, சாதாரண தர மாணவர்களின் நன்மை கருதி 300 சோடி A type கதிரை, மேசைகள் 1834500 ரூபா மெறுமதியானது. ஆசிரியர்களுக்கான 65 லொக்கர்கள் கொண்ட அலுமாரிகள் 145000/- பெறுமதியானது தந்துதவியுள்ளார்கள். இதற்காக இதுவரை அவர்கள் 14,90,451/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் உதவியுள்ளார்கள். இன்னும் ஆசிரியர்களுக்கான மேசைகள், கதிரைகள் தர இருக்கிறார்கள். அவர்களுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் சார்பாக நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அவுஸ்ரேலியா சிட்னி பழைய மாணவர் சங்கத்தினர் திரு.த.பகீரதன் தலைமையில் இயங்குகின்றனர். ஆங்கில ஆசிரியர்களுக்கும் முகாமைத்துவ உதவியாளருக்கும் வேதனம் கொடுத்துதவுகின்றனர். 2008இல் ஒரு லட்சம் ரூபா பணம் அனுப்பியுள்ளனர். பணம் முடிவதற்கிடையில் அதை நிரப்புவதில் மிகுந்த அக்கறையோடு தொழிற்படுவதற்கு மிக்க நன்றி. 2009இற்காக 90,000/- அனுப்பியுள்ளனர்.

கனடா பழைய மாணவர் சங்கம் திரு.ரவீந்திரன் தலைமையில் இயங்குகின்றது. கடந்த வருடம் பரிசளிப்பு விழாவுக்காக 69465/- தந்துதவியுள்ளனர். இவ்வருடம் 75,000/- அனுப்பியுள்ளனர். நிறுவியவர் நினைவுதின விழா அனுசரணையாளராகத் தொழிற்படும் கனடா பழைய மாணவர் சங்கத்தை பாடசாலை நன்றியுடன் நினைவு கூருகின்றது.

மேலும் அவர்களால் வழங்கப்பட்ட கழுத்துப்பட்டிகள் எம்முடைய மாணவர்களின் தேவையை இன்னும் பூர்த்தி செய்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கழுத்துப்பட்டிகளின் விற்பனைப் பணம் கல்வி அபிவிருத்தி நிதியக் கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது என்பதும் இது ஒரு தூரநோக்கான செயற்பாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழைய மாணவர்கள் பலர் தனிப்படவும் தமது பங்களிப்பைச் செய்து வருகிறார்கள். திரு.திருமதி. சண்முகரட்ணம் - முன்னாள் ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் 25,000/- கொழும்பு பழைய மாணவர் சங்கக் கிளையினூடு நூற்றாண்டு விழா அபிவிருத்திக்காக வழங்கியிருந்தனர். இதில் 10,000/- பெண் குருளைச்சாரணர் சீருடைக்காகப் பயன்படுத்தப்பட்டது. (தேவைப்படும் மாணவர்களுக்கு)

திரு.திருமதி.அரவிந்தன் சிவஜெனனி தம்பதிகள் (லண்டன்) வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 3 மாணவர்களுக்கு கல்வி மானியமாகத் தலா 8000/- படி 24000/- அன்பளிப்புச் செய்தனர். திரு.புலேந்திரன் (அயர்லாந்து) மாணவர் நலன் நிதிக்காக 20,000 தந்துள்ளார். இவர்களுக்கும் இவ்வுதவிகளைப் பெற்றுத் தந்த பழைய மாணவன் எந்திரி சி.தயாபரனுக்கும் நன்றிகள். பழைய மாணவன் திரு.K.சுதர்சன் ஆசிரியர்களுக்கான சம்பளமாக இவ்வருடமும் 48,000/- வை திரு.S.ஜசிதரனினூடாகத் தந்துதவியமைக்கு நன்றி.

**மகாஜனன் குழந்தைக் கவிதைகள்**

நூற்றாண்டு விழா செயற்பாடாக நூல்கள் வெளியீட்டில் முதலாவது தொகுதியாக 30.09.2008 அன்று பிரதம விருந்தினர் திரு.ஆறுதிருமுருகன் அவர்கள் (அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) கலந்து கொள்ள நடைபெற்றது. நூல் ஆய்வுரை திரு.ஈ.குமரன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) செய்தார்.

அதிபர் வெளியீட்டுரையையும் திரு.ம.மகாலிங்கசிவம் (நூல் வெளியீட்டாளர் குழு) ஏற்புரையையும் செய்தனர். எமது முன்னாள் ஆசிரியரும் பழைய மாணவனுமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலங்கூடலூர் திரு.பி.நடராசன் அவர்களின் விடாமுயற்சியில் திரு.ம.மகாலிங்கசிவம் எமது ஆசிரியர் திரு.ம.பாலமுரளி வினைத்திறனுடன் தொழிற்பட வெளியிடப்பட்டது. இவர்களுக்குப் பாராட்டுக்கள். இதற்கான பண உதவி ஒரு லட்சம் ரூபா திரு.க.செல்வகுணச்சந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நூலின் விற்பனைப்பணம் 85,000/– அடுத்த தொகுதி நூல் வெளியீட்டிற்கு உதவும் என்பதில் ஐயமில்லை. இன்னும் புத்தகங்கள் விற்பனைக்குண்டு என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

**நன்றி நவிலல்**

வேலைப்பளு மத்தியிலும் எமது அழைப்பை உடனடியாக ஏற்று வருகை தந்து பரிசில்களை வழ்ங்கி விழாவைச் சிறப்பித்தமைக்கு திரு.கதிரவேலு யோகநாதன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நினைவுப்பேருரை ஆற்றவந்த எமது பழைய மாணவி திருமதி.சரோஜினி நாகராசா அவர்களுக்கும் எம் நன்றிகள் உரித்தாகட்டும்.

தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் தகுந்த நேரங்களில் வழங்கி பாடசாலையை வழிநடத்தும் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் சகோதர பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

நினைவுப் பரிசில்கள் வழங்கிய அனைவருக்கும், பாடப் பரிசுகள் வழங்குவதற்குப் பண உதவிகள் செய்த அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகங்கள், மன்றங்கள் அனைத்திற்கும் பொறுப்பாக இருந்து மாணவர்களை வழிநடத்தும் பொறுப்பாசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக கொள்கின்றேன். எமது பாடசாலை சீராக இயங்க போக்குவரத்து சேவையினை வழங்கும் வடபிராந்திய போக்குவரத்து சபை பொது முகாமையாளருக்கும் ஏனைய ஆளணியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாடசாலைச் சுற்றாடலைக் காலத்திற்குக் காலம் துப்புரவு செய்யும் வேலைக்குத் தமது ஊழியர்களைத் தந்துதவும் வலிகாமம் பிரதேசசபை ஆணையாளருக்கும் ஊழியருக்கும் எம் நன்றிகள்.

எமது உலக உணவுத்திட்டம் சிறப்பாக இயங்கத் தேவைபபடும் உணவுப்பொருட்களைத் தந்துதவும் உணவுத்திட்ட நிதியத்திற்கும் தெல்லிப்பழை அளவெட்டி கூட்டுறவுச்சங்க கிளைகளுக்கும் நன்றிகள். பரிசுக்குரிய போட்டிகயையும் பரீட்சைகளையும் நடாத்தி பரிசுப்பட்டியல் தயாரித்து தம் பணியைத் திறமையாகச் செய்த பரிசுக்குழுவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக செல்வி வே.பத்மலோஜினி, திருமதி. த. கணேசானந்தன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. சௌ. விஸ்வலிங்கம், செல்வி. செ.இராஜேஸ்வரி, திருமதி.ஆ.விமலதாசன், திரு.செ.சத்தியநாராயணன், திரு.க.வாணிமுகுந்தன் ஆகியோருக்குப் பாராட்டுக்கள்.

அத்துடன் தேநீர் விருந்து, மதியபோசன விருந்து ஒழுங்குபடுத்தும் ஆசிரியர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பாடசாலை கல்விநிலையை ஒழுங்காகப் பேண உதவும் எமது பாடசாலைப் பணியாளர்கள் திரு.ஆ.நவரத்தினராசா, திரு.த.கனகேஸ்வரன், திரு.அசோக்குமாரன், திரு.அகிலன், திரு. சுரேஷ் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். மற்றும் சுகாதார தொழிலாளி திரு.கா.சின்னராசா எமது காவலாளி திரு.சிவானந்தராசா ஆகியோருக்கும் நன்றி.

**பழையதில் நில்லாதே புதியதைத் தேர்ந்தெடு:**
**பட்ட கல்வி போதாது பாண்டித்தியம் ஆகு**
**செயல்களில் என்றும் புதியதை காட்டு**
**முன்வைத்த காலை முன்னேயே வை**
**இயலாது என்று இருந்து விடாதே**
**நிகழ்வுகளை அவதானித்து நிறைவாகச் செய்**

இறுதியாக இப்பாடசாலை உன்னத இலட்சியத்துடன் உயர்ச்சி அடைய என்னுடன் தோள் கொடுக்கும் பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், தர இணைப்பாளர்கள், வகுப்பாசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவத் தலைவர்கள் எல்லோருக்கும் மேலாக மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் நன்றி கூறி அதிபர் அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

வணக்கம்

அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிப் பதிவுகள்

நிறுவியவர் நினைவுதின விழா வரவேற்பு உரை



விஞ்ஞான தின நிகழ்வு



விஞ்ஞான தின விழா Discovery வெளியீடு



வாணி விழா – 2008



உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு



விஞ்ஞான தினக் கண்காட்சி



மாணவ தலைவர்கள் அணிவகுப்பு



தமிழ்த்தின விழா – 2008 (பிரதம விருந்தினர் உரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 2009

## பிரதம விருந்தினர் ஆற்றிய உரையிலிருந்து....

**(திரு. கதிரவேலு யோகநாதன்,** பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி)

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற பெருமதிப்புக்குரிய அதிபர் அவர்களே, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களே, நினைவுப் பேருரை ஆற்றுவதற்காக வருகை தந்திருக்கின்ற வலிகாமக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சறோஜினிதேவி நாகராசா அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து விழாவினைச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தெல்லிப் பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சற்குணானந்தன் சைலாசநாதன் அவர்களே, மேடையில் வீற்றிருக்கின்ற விருந்தினர்களே, பாடசாலையினுடைய ஆசிரியப் பெருந்தகைகளே, மாணவ தலைவர்களே, அன்பான மாணவர்களே, பெற்றோர்களே, மற்றும் பெரியோர்களே, உங்கள் அனைவருக்கும் எனது இனிமையான காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று இந்த நிறுவுநர் நினைவு தினத்திற்கும் பரிசளிப்பு விழாவிற்கும் என்னைப் பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் எல்லோருக்கும் முதற்கண் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய விழாக்கள் பாடசாலைகளில் நடைபெறுகின்றபோது இப்பாடசாலையினுடைய ஆரம்பகாலம் அதன் வளர்ச்சிக் கட்டங்கள், இடைக்காலத்தில் சந்தித்த பிரச்சினைகள், அப்பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு எவ்வாறு இன்று இந்நிலையை அடைந்தது, இப்பிரதேச மக்களினுடைய கல்வி உயர்வைக் கருதி, இப்பிரதேசத்தில் வாழ்ந்த பெரியார்கள் இப்பாடசாலையை எவ்வாறு நிறுவினார்கள் என்ற இத்தகைய வரலாறுகளை நாம் இந் நேரத்தில் சிந்தித்தால் எங்களுடைய எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும் எங்களுடைய முன்னோர்கள் எவ்வளவு தூரம் பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை நினைவுகூரக்கூடியதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் இப்பாடசாலையை 1910ம் ஆண்டு காலப் பகுதியில் அந்நேரத்தில் வெளிநாட்டவருடைய ஆங்கிலக் கல்வி, அது மட்டுமல்லாமல் இம்மிஷனரிமார்களுடைய தேவாலயங்கள், பாடசாலைகள் அமைக்கப்பட்டு மதமாற்றம் செய்யப்பட்டு, அங்கு கல்வி போதிக்கப்படுகின்றபோது எமது மக்கள் தங்களுடைய மதத்தைக்கூட மறந்து கல்விக்காக இப் பாடசாலைகளில் இணைந்து கொண்டதைக் கண்டு, பொறுக்கமுடியாத எமது சமூகத் தலைவர்கள், பெரியார்கள், இப்பாடசாலையை அமைத்து சைவத்தையும் சமூகத்துக்கான கல்வியையும் வழங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கின்றபோது எவ்வளவு தூரம் எங்களுடைய சமூகத்தை முன்னேற்றுவதற்காக முன்னைய மக்கள் பாடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரியும்.

கல்வி என்பது எமது வடபகுதித் தமிழ் மக்களின் ஒரு முதுசொம். அக்கல்வியை மூலதனமாகக் கொண்டு தான், நாம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கின்றோம். அந்தக் காலத்தில் பல பெரிய பாடசாலைகளுடன் போட்டி போட்டு அப்பாடசாலைகளுக்கு இணையாகக் கல்வியையும், விளையாட்டுக்களையும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளையும் வளர்த்த பெருமை இம்மகாஜனக் கல்லூரிக்குண்டு. பெரிய பாடசாலைகளில் தென்பகுதியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்க வந்த இன்றைய பிரபல்யமான வர்கள் இங்கு அந்த நேரத்தில் வெளிமாவட்டங் களிலிருந்து கல்வி கற்று இன்று சமூகத்தில் பெரியார்களாக பலர் இருக்கிறார்கள். என் னுடைய குரு கொழும்பு பல்கலைக்கழகத்தி னுடைய கல்விப்பீடத் தலைவர் பேராசிரியர் சந்திரசேகரம், விளையாட்டுத் துறையில் பிர பல்யமான வடகிழக்கு மாகாண சபையின் உதவிக் கல்விப் பணிப்பாளராக விளங்குகின்ற சத்தியபாலன், சமகாலத்தில் வாழ்ந்து கொண் டிருக்கின்ற இவர்கள் போன்ற பலரை நாம் இங்கு குறிப்பிடலாம். விளையாட்டுத் துறை யில் ஒரு காலத்தில் தொடர்ச்சியாக 8 ஆண்டு கள் சம்பியனாகத் திகழ்ந்த ஒரே பாடசாலை வெற்றிபெற்றது என்றால் இம் மகாஜனக் கல்லூரியே. அதுமட்டுமன்றி கல்வியில் பெரும் பெரும் தலைவர்களையும் அறிஞர் களையும் உருவாக்கிய பெருமைக்குரியது இம்மகாஜனக் கல்லூரி. இக்கல்லூரி விளை யாட்டிலும் பல வீரர்களை உருவாக்கியி ருக்கின்றது.

நான் சமூகத்தில் சந்தித்த பலர் இக்கல் லூரியில் இருந்து வெளியேறி, இன்று பிர பல்யமாக இருக்கின்றவர்கள். முக்கியமாக பொலிஸ் சேவையில் முன்பு அதிகமானவர் கள் இருந்திருக்கிறார்கள். இக் கல்லூரியில் இருந்துதான் அதிகமானவர்கள் காணப்படு கிறீர்கள் என்று கேட்டபோது, அக்காலத்தில் இங்கிருந்த அதிபர்கள் பலர் விளையாட்டுத் துறையில் மிக ஆர்வமாக சாதனைகளைப் படைக்க ஆக்கமும் ஊக்கமும் காட்டி, அத னால் பரிணமித்த மாணவர்கள் பலர் அவ் வேலையில் இணைந்து இன்றும் கூட பல பொலிஸ் அதிகாரிகளாக இருக்கிறார்கள். இத்தகைய பெருமைமிக்க இப்பாடசாலையில் இன்றைய அதிபர் அவர்கள் பல ஆண்டு களுக்கு முன்பு ஆசிரியராக இருந்து, பிரச் சினைகளால் இடப்பெயர்வினால் பாடசாலை யும் இடம்பெயர்ந்து பலபல பிரச்சினைகளைச் சந்தித்து மீண்டும் இச் சொந்த இடத்திலேயே பாடசாலை வந்து ஆசிரியராக இருந்த திருமதி. சி. அனந்தசயன் அவர்கள் அதிபராக (3 ஆண்டுகள்) பொறுப்பேற்று மீண்டும் முன் னைய நிலைக்குக் கட்டியெழுப்பி, மாணவர் களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து பல சாதனைகளைப் புரிய வைக்கின்றார். இவர் ஒரு ஆளுமை மிக்க அதிபராக இருந்தபடி யால் தான் இத்தகைய சாதனையைச் செய்யக் கூடியதாக இருக்கிறது.

உண்மையில் இன்றைய நாட்டுப் பிரச்சினை, இனப்பிரச்சினை காரணமாக தனது சுகபோ கங்களைக் கருத்திற்கொண்டு நாடுவிட்டு நாடு செல்கின்ற பலர் மத்தியில் இன்றும் சிலர் எமது சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். எமது சமூகம் முன்பிருந்த நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணப்பாங்கில் செய்கின்ற சேவையினால் தான் நாங்கள் இன்றும் இந்தளவுக்குத் தலைநிமிர்ந்து நிற்கக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய ஒருவர்தான் இன்று உங்களுக்குக் கிடைத்திருக்கிற அதிபர். உண்மையில் அவர் நினைத்திருந்தால் பண, பலம் மிக்கவர், கல்விப்பலம் மிக்கவர், வெளி நாட்டுத் தொடர்புகள் மிக்கவர். இவ்வாறான ஒருவர் தான் சுகமாக வாழவேண்டும் என நினைத்திருந்தால் இன்று அவர் நல்ல ஒரு நாட்டில் நல்ல நிலையில் இருக்கமுடியும். தான் பிறந்த இப்பூமியிலே, தான் கற்பித்த இப்பூமி யிலே இக்கல்லூரியை மேலும் உயர்த்த வேண்டுமென்ற பேரெண்ணத்துடன் இன்று சேவை செய்கின்றார். அவருக்கு முதலில் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரி வித்துக் கொள்கின்றேன்.

இன்று இப்பரிசளிப்பு விழாவில் நான் கலந்து பல எண்ணக்கருத்துக்களை உங்களுடன் பரிமாறிக் கொள்ளலாம் என்று நினைத்த நேரத்தில், கல்வியமைச்சர் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்து, கல்விப் பிரச்சினை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொள்ளவேண்டியிருப்பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் நான் உங்களிடம் கொண்டுவந்த செய்தியைக்கூட முழுமையாகத் தரமுடியாது போனமைக்கு முதலில் எனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, இன்றைய கல்விப் புலத்திலே இன்றைய அவையிலே தரம் 10, 11, உயர்தர மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குகின்ற இந்நிகழ்விலே எந்தவொரு மாணவனும் அல்லது எந்தவொரு மனிதனும் இந்த ஊக்குவிப்பைப் பெற்று அதன் மூலம் தன்னுடைய ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள இயலும்.

இந்த ரீதியில் எமது பிரதேசத்தில் மட்டுமல்ல,எமது நாட்டில் மட்டுமல்ல, உலகத்திலேயே மனித இயல்பு அத்தகையது. அதாவது பரிசில்கள், ஊக்குவிப்புகள், புகழ்ச்சிகள் யாவும் ஒருவனுடைய ஆற்றல்களை வளர்ப்பதற்கு ஒரு தூண்டுகோலாக அமைகிறது. அந்த ரீதியில் வகுப்பறையில் தங்களுடைய திறமைகளை, ஆற்றல்களை, ஆக்கங்களை வெளிப்படுத்திய இவ்வகுப்பு மாணவர்களுக்கு இன்று பரிசளித்து கௌரவிப்பது மட்டுமல்ல, இப் பரீட்சையில் அவர்கள் எதிர்காலத்தில் இன்னும் ஊக்கமாகத் தங்களுடைய ஆற்றல்களை வெளிக்காட்டுவதற்கு இது ஒரு களமாக அமையுமென்பது எல்லோருடைய எண்ணமும் கூட.

அவ்வகையில் இந்நிறுவுநர் தின நிகழ்வை பரிசளிப்பு விழாவாகவும் நடாத்துகின்ற இந்நன்நாளில் நான் உயர்கல்வி சம்பந்தமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் உங்கள் முன்வைக்கலாம் என நினைக்கிறேன். இன்றைக்கு எங்களுடைய தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர்களைச் சேர்த்து பயிற்றுவிக்கின்ற இந்நிறுவனத்தில், இன்று பல்கலைக் கழகத்திற்குச் செல்வோரைவிட இந்த ஆசிரியர் பயிற்சியைப் பெறுவதற்கான போட்டி ஆசிரியர் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்குப் பிரதான காரணம் அங்கு பயிற்சி பெற்ற 3 ஆண்டுகளில் அல்லது 2 ஆண்டுகளின் பின் உடனடியாக அரசாங்கத்தினால் நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியர்களாக அமர்த்தப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, 3 ஆண்டு பயிற்சிக் காலத்தில் புனிதமான தொழிலுக்கு அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். எங்களுடைய சமூகத்தில் மதிக்கின்ற இப்புனிதமான ஆசிரியத் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கு சமூகத்தில் இன்றைக்கு பல போட்டிகள் இருக்கின்றன. இந் நிறுவனத்தில் நாங்கள் ஆட்களை உள்வாங்குகின்ற இன்றைய இக்காலகட்டத்தில் அதற்கான போட்டிகள் அதிகரித்துக்கொண்டு செல்வதனால் அதற்காக உள்வாங்கப்படுபவர்களிலும், தகுதிகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சமகாலக் கல்வியில் தரம் 10, 11ஆம் வகுப்புகளில் தெரிகின்றபோது மாணவன் தன்னுடைய எதிர்காலத்தைத் தீர்மானித்து இப்பாடத் தெரிவைத் தெரியவேண்டிய கட்டாயத்துக்கு உட்படுகின்றான். ஏதோ முன்னைய காலங்களில் 10 பாடங்களை, 9 பாடங்களைத் தெரிவு செய்து அதில் சித்தி பெற்று, உயர்வகுப்பில் சென்று கணிதப் பிரிவிலோ, விஞ்ஞானப் பிரிவிலோ, கலைப்பிரிவிலோ, வர்த்தகப் பிரிவிலோ சேர்ந்து அங்கு திறமையான சித்தியைப் பெற்று பின்பு உயர் கல்விக்காகவும் இத்தகைய தொழில்வாண்மை விருத்திக் கூடங்களுக்கும் தெரிவு செய்யப் பட்டகாலம் முன்பிருந்தது. சாதாரண தரத்தில் தெரிவு செய்யப்படுகின்ற பாடங்கள் அங்கு கருத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆனால் "உலகமயமாதல்" என்ற இக்காலத்திலே தகவல் தொழில்நுட்ப யுகமென்று சொல்கின்ற இன்றைய காலத்திலே, சனத்தொகை அதிகளவு பெருகிவிட்ட இக்காலத்திலே சகல தொழில் துறைகளிலும் நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்துகின்ற இந்தக் காலத்திலே கல்வியிலும் உலக நாடுகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தி அந் நாடுகள் இன்று முதன்மையான விருத்தி யடைந்த நாடுகளாக இருக்கின்றன. உண்மையில் 1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் எங்களுடைய நாட்டைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறிய நாடுகளாக இருந்த சிங்கப்பூர், இந்தோனேஷியா, தென்கொரியா போன்ற நாடுகள் இன்று ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு சவால் விடுகின்ற நாடுகளாக, வளர்ந்த நாடுகளாக இருக்கின்றன. இன்று கணிதத் துறையில் அமெரிக்காவைவிட கல்வியில் உயர்ந்த நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது. இத்தகைய சிங்கப்பூர், மலேசியா நாடுகள் 1970 காலப்பகுதியில் எங்களைவிட மிகக் குறைந்த ஒரு வறிய நாடாக இருந்தது. அவர்கள் தங்கள் நாட்டில் கொண்ட பற்று, நாட்டை வளர்க்க வேண்டும் என்ற திடசங்கற்பம், இவற்றுக்கெல்லாம் அடிப்படை கல்வியே ஆகும். இவர்கள் புதிய புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் அந்நாடுகள் வளர்ந்து, நாம் அந்த நேரத்தில் இருந்த நிலையைவிட தாழ்ந்த நிலைக்குப்போக, அவர்கள் இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளைவிட அதிகமாகப் போட்டி போட்டு வளர்ச்சியடைந்து வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் கல்வி. கல்வியில் சமகாலத் தேவைக்கேற்ப அங்கு கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படாவிட்டால், அந்த நாடு, சமூகம் உயர்வடைய முடியாதிருக்கின்றது என்பதற்கு இது பெரும் சான்றாக இருக்கின்றது. எனவே எமது கல்வியில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன்னைய காலங்களில் அரசாங்கங்கள் மாறுகின்றபோது அவர்கள் தங்களுடைய கட்சிகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார்களே தவிர, நாட்டின் நிலைமையை உலகத்தோடு நாங்கள் ஒட்டிப் போகவேண்டும் என்ற நிலைமையை மறந்திருந்தார்கள். சமகாலத்தில் அத்தகைய நிலையில்லாமல் உலக நாடுகளின் விருத்திக்கேற்ப அந்நாடுகளுடன் நாங்களும் சமனாகப் போட்டி போட்டு வளரவேண்டும். இன்றைக்கு வேலையைப் பெற்றுக்கொள்வது எமது நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகள் எல்லாவற்றிலும் வேலையைப் பெற்றுக்கொள்வதற்குத் திறந்து விடப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு, அதற்கான வேலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எமது நாட்டின் கல்வியிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதில் நாம் காலங்கடந்து சிந்தித்த ஒன்றுதான் ஆங்கிலக்கல்வி. ஆங்கிலக் கல்வி சமூகங்களை இணைக்கின்ற ஒரு பாலமாக ஒரு காலத்தில் இருந்தது, சமூகங்களிடையே ஒற்றுமை இருந்தது. சந்தோஷமாக இருந்தோம். இச் சுயகல்வித்திட்டம் கொண்டு வந்ததன் பின்பு எமது மொழி மற்றவர்களுக்குத் தெரியாது. மற்றவர்களின் மொழி எங்களுக்குத் தெரியாது. ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற எங்களுக்குள்ளேயே இத்தகைய ஒரு பூசல் ஏற்பட்டு நாங்கள் அழிவைக்கூடச் சந்தித்தோம். இது காலங்கடந்து சந்தித்த ஒன்று. பல இனங்கள் வாழுகின்ற பல மொழிகள் வாழுகின்ற ஒரு நாட்டில் ஒரு மொழி தான் இருக்கவேண்டும். அது ஆங்கிலம் தான் என்ற உண்மை காலம் தாழ்த்திப் பெறப்பட்டதனால் இந்த 2009ஆம் ஆண்டு ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆங்கிலக் கல்வியும், தகவல் தொழில்நுட்பமும் என்ற தொனிப்பட இந்த ஆண்டை அரசு பிரகடனப்படுத்தியிருக்கின்றது. எனவே பல துறைகளிலும் தகவல் தொழில்நுட்பப் பிரயோகம் நடைபெறுவதனால் கல்வி கற்பதற்கும் அதற்கு அடிப்படையாக இத்தகவல் தொழில்நுட்பம் இருப்பதனாலும் அத்தகவல் தொழில்நுட்பத்தை நாங்கள் பயன்படுத்துவதற்கு ஆங்கிலம் அவசியமாக இருப்பதனாலும், இரண்டையும் தெரிந்து கொள்வதன் மூலம்தான் ஏனைய நாடுகள் விருத்தி கண்டன என்ற உண்மையை நாம் காலம் தாழ்த்தி அறிந்ததனால் இன்று நாங்கள் அவசியமாகவும் அவசரமாகவும் இவ்விரண்டு துறைகளையும் பாடசாலையில் கற்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிப் பதிவுகள்

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2009









நிறுவியவர் நினைவுதின நிகழ்வு - 2009



ஜயரத்தினம் நினைவுதின நிகழ்வு - 2008



தமிழ்த்தின விழா - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுரிமை கொடுத்து சகல வகுப்புகளிலும் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகவும் அதேபோல் ஆங்கிலத்தை முன்னைய காலங்களில் இருந்ததுபோல் பேச்சு மொழி யாகவும் இவ்வாண்டிலிருந்து நடைமுறைப் படுத்த இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்று வகுப்பறையில் அப்பாடத்தின் மூலம் எங்கள் மீது கொண்டுவரக்கூடிய எங்களிடம் மறைந்தி ருக்கின்ற ஆற்றல்களைக் கொண்டுவரக் கூடியவாறு கலைத்திட்டங்களை அமைத்தி ருக்கிறார்கள். க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய வகுப்புகளில் எடுக்கின்ற பாடங் கள் நாம் வேலை செய்யப்போகின்ற, பயிற்சி பெறப்போகின்ற அந்தத் துறைக்குத் தேவை யானதுதானா என்பதை நாம் க.பொ.த சாதாரண தரத்திலே தெரிவு செய்யவேண்டிய வர்களாக இருக்கின்றோம். உதாரணமாக, எமது கல்லூரிக்கு ஒரு விளையாட்டுத் துறைப் பயிற்சியாளராக விடவேண்டுமானால் முன் னைய காலத்தில் அவர் தேசிய மட்டத்தில், மாகாண, மாவட்ட மட்டத்தில் ஏதோ ஒரு விளையாட்டில் தேர்ச்சியுடையவராக இருந் தால் அவருக்கு முன்னுரிமை கொடுத்து அவரை நாங்கள் பயிற்சியாளராகச் சேர்த்து விடு வதுண்டு.

ஆனால் தற்போது அந்நிலை மாற்ற மடைந்து பயிற்சியாளராகச் சேர்த்துக் கொள்வதற்கு மாணவன் க.பொ.த. சாதாரண தரத்தில் உடற்கல்வியை ஒரு பாடமாக எடுத் திருக்கவேண்டும். அது அவருக்கு அடிப் படைத் தகுதியாக இருக்கவேண்டும். அதே போன்று 30இற்கு மேற்பட்ட பல பயிற்சி நெறிகளில் ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர் க.பொ.த. சாதாரண தரத் தில் அவர்களை சேர்த்துக் கொள்கின்ற பயிற்சிநெறியில் அவர் சிறப்புச் சித்தி பெற்ற வராக இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல, அங்கு தகவல் தொழில்நுட்பத்தையும் ஒரு பாடமாகக் கட்டாயம் எடுத்திருக்கவேண்டும். உயர் வகுப்புகளில் ஆங்கிலம் ஏற்கனவே உண்டு. இந்த ஆண்டில் இருந்து தகவல் தொழில்நுட்பத்தையும் கட்டாயம் ஒரு பாட மாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் உயர்தரப் பரீட்சையில் 3 பாடங் கள் பிரதான பாடங்களாகும். அதனை விட ஆங்கிலம், பொது அறிவும் உண்டு. ஆனால் எங்களுடைய உயர்கல்விக்குச் செல்கின்ற போது பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறு வதற்கு அம்மூன்று பாடங்களையும் முதலில் எடுத்து Z-Score கணிக்கப்பட்டு பின்பு அவர் பொது அறிவுப் பரீட்சையிலும் சித்தியடைந்தி ருந்தால் தான் 'Yes' என்ற பல்கலைக்கழகத் திற்குத் தெரிவு செய்வதற்கான அத்தகைமை யைப் பெறுகின்றார். ஆனால் ஆங்கிலத்தினு டைய தரத்தை அங்கு கருத்தில் கொள்கிறார் கள் இல்லை. கருத்தில் கொள்ளாத ஒன்றை ஏன் பரீட்சை வைக்கிறார்கள். ஏனெனில் நாடுகளில் அந்த உயர் கல்வித் தகைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவாகும்.

எங்களுடைய நாட்டின் கல்வித்தரமும் மேம்பாடானது. ஆங்கிலமும் ஒரு பாடமாக உயர் வகுப்புகளில் பரீட்சை வைக்கின்றோம் என்ற ஒரு சான்றுக்காக வைத்திருக்கிறார்கள். ஆனால் இனிவரும் காலங்களில் ஆங்கிலத் திலும் பொது அறிவிலும் தகவல் தொழில்நுட் பத்திலும் சித்தியடைந்தால்தான் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்த்துக்கொள்வதற்கான தகுதியுடையவர் என்ற கணிப்பு செய்யப்பட இருக்கின்றது. ஆகவே எங்களுடைய கல்வி யில் போட்டி காரணமாக இப்போது தகுதி களும் அதிகரிக்கப்பட்டுக்கொண்டே வரு கின்றது. அதேபோல இந்த வகுப்பறையில் இருக் கின்ற இம் மாணவன் அப்படிப் பல பிரச்சினை களை கல்வி ரீதியாக எதிர்கொள்கின்றபோது ஆசிரியரும் தன்னை வளம்படுத்திக்கொள்ள வேண்டியவராகவும் இருக்கின்றார்.

சமகாலத்தில் கற்பித்துக் கொண்டிருக் கின்ற ஆசிரியர்கள், எங்கள் காலத்தில் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை மனனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அதனை உள்வாங்கி பரீட்சையில் அதனை ஒப்புவிப்பவர்களாக நாங்கள் இருந்து, அதில் பயிற்றப்பட்டு வந்தவர்கள் தான் இன்றைய சமகால ஆசிரியராக இருக்கிறார்கள். ஆனால் கல்வி முறையில் நவீன மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது. இப்போது ஆசிரியன் சொல்லிக் கொடுப்பவன் அல்லன். தனக்குத் தெரிந்ததைப் புகுத்துபவன் அல்லன். ஆசிரியன் வழிகாட்டுபவனாக இன்றைய காலத்தில் இருக்க வேண்டியவனாகின்றான். மாணவன் நிறையத் தெரிந்து வைத்திருக்கின்றான். இன்றைய தொழில்நுட்பச் சாதனங்களின் வளர்ச்சியினால், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பாடசாலையில் சென்று தான் அவன் கல்வியைப் பெறவேண்டும் என்ற நிலை மாறிவிட்டது. அவன் வீட்டில் இருந்து கொண்டே பாடசாலையில் பெறுகின்ற கல்வியைவிட மேலான கல்வியைப் பெறக் கூடியதாக இன்று தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துவிட்டது. அதுமட்டுமல்ல, ஆசிரியரிடம் அவன் கேட்டுப் பெறுவதைவிட இத்தகவல் தொழில்நுட்பத்தில் இருந்து பெற்றுக்கொள்கின்ற அறிவு மேலானதாக இருக்கின்றது. அந்த அறிவுத்திறனைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற அம்மாணவன் வகுப்பறைக்கு வருகின்றபோது, நாம் எமக்குத் தெரிந்ததைச் சொல்லிக்கொடுப்பதில் பிரயோசனமில்லை. அவன் அதை உள்வாங்கிக் கொள்ளமாட்டான். அவன் பெற்றிருக்கின்ற தகவல்களை, அறிவைவிட மேலான அறிவைச் சொல்லிக் கொடுப்பவனாக ஆசிரியர் இருக்கவேண்டியவனாகின்றான். அதனால் காலமாற்றத்துக்கேற்ப நாங்களும் தகவல் தொழில்நுட்பத்தில் பரிட்சயமுள்ளவராக எங்களுடைய நேரத்தில் பெரும்பகுதியைக் கற்பதற்காக ஒதுக்கவேண்டியவர்களாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு இருக்கின்றபோதுதான் ஆசிரியனை மாணவன் மதிப்பான்; விரும்பும் மாணவனாக இருப்பான். ஆசிரியரை மாணவர் விரும்பா விட்டால் மாணவரை ஆசிரியர் விரும்பா விட்டால் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதில் அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு அதனைக் கிரகிக்க மறுக்கிறான். எனவே இன்றைய காலத்தில் இவ் இக்கட்டான நிலையில் எமது ஆசிரியர்கள் தம்மை வளம்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இன்று அவர்கள் தங்களை வளம்படுத்திக்கொள்வதற்காக பல்வேறு கருத்தரங்குகளை கல்வியமைச்சு ஒழுங்கமைத்துக்கொடுக்கின்றது. இத்தகவல் தொழில்நுட்பத்தில் சகல ஆசிரியர்களும் கட்டாயம் பயிற்சி பெற்றவராக இருக்கவேண்டும் என்பதற்காக கட்டம் கட்டமாகப் பயிற்சி வழங்கப்படுகிறது. இன்றைக்கு மிகத் தெளிந்த, கூடிய தவல்களைக் கொண்டிருக்கின்ற அந்த மாணவனுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கக்கூடிய தகவல்களைக் கொண்டிருக்கின்ற அந்த மாணவனுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கக் கூடியவனாக நாமும் எமது வாண்மையை விருத்தி செய்து கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம். அதன் மூலம் தான் மாணவனுடைய அறிவை விருத்தி செய்யலாம். அதன் மூலம் சமூகத்துக்குத் தேவையான மாணவனை, நல்ல பிரஜையை உருவாக்கி வெளியேற்றக்கூடியதாக இருக்கும். அப்போதுதான் சமூகம் எங்களையும் மதிக்கும்.

இன்று நாம் எமது நாட்டில் இருக்கின்ற சிறிய தொழில்களை அல்ல, இன்று இன்ரநெற் மூலம் இந்த உலகில் எங்கெங்கு வேலை வாய்ப்புகள் இருக்கின்றனவோ அவ்வேலை வாய்ப்புக்களை எல்லாம் e-mail மூலம் Apply பண்ணிக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றோம். அதன் மூலம் மாணவன் சுயமாகவே கல்வியைக் கற்கின்றபோது அவனுக்கு வழிகாட்டுபவனாக, அறிவுத்திறன் உடையவர்களாக, அந்த உலகத்தின் தேவைக்கேற்ற தொழிலாளர்களை, எமது வாழ்க்கையை நல்வழிப்படுத்தக்கூடிய அம்மாணவனுக்கு நல்ல வாழ்க்கையை உருவாக்க வேண்டியது எங்களுடைய பெற்றோருடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதும் ஆசிரியருடையதும் பெரும் பிரதான கடமையாக இருக்கின்றது.

ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்குமிடையிலே நல்ல நெருக்கமான, சுமுகமான தொடர்புகள் இருக்கின்றபோதுதான் சமூகத்தின் தேவையை ஆசிரியர் அறிகின்றார். அதற்கேற்ப அப்பிரதேசத்தில் இருக்கின்ற பாடசாலையை முன்னேற்றக்கூடியதாக இருக்கும். இன்று சகல நாடுகளிலும் இத்தகைய முத்திறத்தாருக்கும் அந்நாடுகளினுடைய கல்வியில் இம்முன்னேற்றம் காணப்படுகிறது. எனவே நாமும் இதற்கேற்ற நிலையில், எங்களுடைய சொத்து–முதுசொம் கல்வியே என்ற எண்ணம் இருக்கவேண்டும்.

எனவே காலத்தின் மாற்றங்களுக்கேற்ப கலைத்திட்டங்களை மாற்றியமைக்கின்றபோது, ஆசிரியர்களும் அதற்கேற்பத் தங்களைத் தயார்ப்படுத்தி, மாணவர்களுடைய படைப்பாற்றலுக்கு முக்கிய இடம்கொடுத்து, சுயகற்றலையும், குழுவாக இயங்குகின்ற ஆற்றலையும் விருத்தி செய்து அவர்களை ஒரு நல்ல சமூகப் பிரஜையாக உருவாக்குவதற்கு நாம் எல்லோரும் திடசங்கற்பம் எடுக்க வேண்டுமென வேண்டி உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நன்றி

வணக்கம்.

## அ. செ. முருகானந்தன்

இலங்கையில் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவர் அ.செ.முருகானந்தன். இவர் 09.10.1921இல் அளவெட்டியில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை மாவிட்டபுரத்தில் கற்ற இவர், பின்னர் மகாஜனக் கல்லூரியிலும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கற்கும்போது 'ஈழகேசரி மாணவ மலரில்' எழுதத் தொடங்கினார். இவருடைய சிறுகதைகள் நிறைய ஈழகேசரியில் வெளிவந்தன. 'ஸ்ரீராமாநுஜம், வெறுப்பும் வெற்றியும், 'எச்சில் இலை', 'காப்பிரி', பரிசு, மனித மாடு, வண்டியில் சவாரி, கிழவி, விடியுமா? போன்றவற்றைக் குறிப்பிடலாம். 1943இல் இவருடைய 'சுதந்திரக்காரி' எனும் நாடகம் இலங்கை வானொலி நடத்திய நாடகப் போட்டியில் முதல்பரிசு பெற்றது.

இவரின் கதைகளில் ஒன்றான 'காளிமுத்துவின் பிரஜாவுரிமை' மலையக மக்களின் குடியுரிமை பற்றிய கருவைக் கொண்டது. யாழ் கலாசாரப் பேரவை 1986இல் இவர் எழுதிய 'மனித மாடு' எனும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டது.

'புகையில் தெரிந்த முகம்', 'யாத்திரிகன்', ஜீவபூமி, ஜெயந்தி என்பன இவரின் நாவல்களாகும். 1970களில் அம்பனைக் கலைப் பெருமன்றம் 'சிந்தனைச் செல்வர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. பீஷ்மன், யாழ்பாடி, நீலாம்பரி, கதிரவன், காங்கேயன், இளவேனில், மயிற்புறவம், பூராடன், தனுசு, மேகலை, கத்தரிக்குறளி, போர்வீரன், வள்ளி, காந்தன் என்று ஏராளமான பெயர்களில் தன்னை மறைத்துக் கொண்ட அ.செ.மு. அதிகம் விளம்பரமின்றியே வாழ்ந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 24.06.2009 நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அன்றைய தினத்தில் திருமதி. சரோஜினிதேவி நாகராசா பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி வலிகாமம் கல்வி வலயம் அவர்களால் வழங்கப்பட்ட நினைவுப் பேருரை)

## புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பில் ஆசிரியர் வகிபாகமும் மாணவர்களில் ஏற்படுத்த எதிர்பார்க்கும் திறன்களும்

மிக வேகமாக வளர்ச்சியடைந்துவரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவிய லின் தாக்கம் மற்றும் கோளமயமாதல் போன்றவை மனித வாழ்வில் பல்வேறு பரிமாணங்களில் பாரிய மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. அதற்கேற்ப பாடசாலைக் கட்டமைப்பும் அதன் செயற் பாடுகளும் மாற்றமடைவதோடு ஆசிரிய ரின் வகிபங்கும், மாணவர் – ஆசிரியர் களுக்கிடையேயான இடைவினை உறவு நிலைகளும் கூட மாறவேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வாறான அறை கூவலுக்கு வினைத்திறனுடன் செயற்பட ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் தயார்ப்படுத் தப்பட்டுள்ளனர் என்பது நோக்கப்படவேண் டியதொன்றாகின்றது. எனினும் காலத்தின் கட்டாயத்தில் எமது ஆசிரியர்களின் வகிபங்கு மாற்றம் பெறவேண்டியது அவசியம். அதற்கான வழிமுறைகளைத் தேடவேண்டியது முகாமைத்துவத்தின் கட்டாய கடமையாகின்றது.

பரீட்சையில் சித்தியடைவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு பாட சாலையை விட்டு வெளியேறிய பின்னர் செய்வதறியாது சமூகத்தோடு இசைவாக் கப்பாடடையமுடியாத பலரைச் சமூகத்தில் காண்கின்றோம். அசுர வேகத்தில் ஏற் பட்டுவரும் இத்தகைய மாற்ற வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் இருக்க அதாவது வெற்றிகரமாக வாழத் தேவையான பாடத் தேர்ச்சிகளையும் அதனூடாகப் பெறப்பட எதிர்பார்க்கும் பொதுத் தேர்ச்சிகளையும் பாடசாலைக் கல்வியூடாக விருத்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளித்துத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்ட அணுகுமுறை ஒன்றைப் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பு 2007ல் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது.

அறிவினை வளர்த்து அதனூடாக வாழ்க்கையில் நம்பிக்கையினை ஏற் படுத்தி அந் நம்பிக்கைக்கமைவாகச் செயற் படுவதன் மூலம் பல திறன்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் மிக்க மாணவ சமுதா யத்தை எதிர்காலத்தில் உருவாக்குவதன் தேவை உணரப்பட்டு இச்சீரமைப்பு முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆசிரியர் வகிபாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை நாம் "**3T**"யினூடாக விளக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர்களின் வகிபாகம்**

- கடத்தல் வகிபாகம் (Transmission). இது ஆசிரியரையும் கற்பித்தலையும் முன்னிலைப்படுத்தும் ஆசிரியர் வகி பாகம் கடத்தல் வகிபாகம் எனப்படும்.
- கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction) ஆசிரியர் – கற்பித்தல்; மாணவன் – கற்றல் ஆகிய நான்கு விட யங்கள் சுட்டிக்காட்டப்பட்டது கொடுக் கல் வாங்கல் வகிபாகம் ஆகும்.

- நிலைமாற்ற வகிபாகம் (Transforma tion) ஆசிரியருக்குப்பதிலாக மாண வனையும்; கற்பித்தலுக்குப் பதிலாகக் கற்றலையும்; வலியுறுத்துவது நிலை மாற்று வகிபாகமாகும்.

குறிக்கோளுக்குப் பதிலாகத் தேர்ச்சி மட்டங்களாகப் பிரிக்கப்பட்டு தேர்ச்சிகளை அடைவதற்காக ஆசிரியர் செயற்படுதல். அதாவது அறிவைத் தேடிச் செல்லுதற்கு வழிப் படுத்தப்பட்ட மாணவன் தேடலில் ஈடுபடு வார். இதனூடாக ஆசிரியர் பின்வாங்கி, மாணவனை வெளிப்பட வாய்ப்பளிப்பார்.

**நிலைமாற்று வகிபாகம்**

நிலைமாற்று வகிபாகம் என்பது பல் வேறு பாத்திரங்களையேற்று நடித்தல் எனப் பொருள்படும். சமூக வாழ்விலும் இவ்வா றான வகிபாகங்களை ஒவ்வொருவரும் ஏற்கவேண்டிய நிலை உள்ளது. *உதா ரணம் :* இப்பாடசாலையின் அதிபர், முனை வர் என்ற வகிபாகத்தையும், குடும்பத் தலைவி என்ற வகிபாகத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.

நிலைமாற்றுத் தலைவர் என்பவர் பணியாட்களின் செயலாற்றுகையுடன் மாத்திரமல்லாது அவர்களின் முழுமை யான ஆற்றலை விருத்தி செய்வதிலும் கவனம் செலுத்துவார். அவர் தன்னைப் பின் தொடர்வோரைத் தொடர்ச்சியாக ஊக்கப் படுத்துவார். இவர்கள் உயர்வான விழுமியங் களையும், இலட்சியங்களையும் கொண்டி ருப்பதனால் பணியாளர் மீது ஆழமான செல்வாக்கினைச் செலுத்த முடிகின்றது.

நிலைமாற்றத் தலைவர்களின் பண்புக் கூறுகளாக பரன்ஸ் (Parans) பின்வருமாறு கூறுகின்றார்.

- **வசீகரம்** – நிலைமாற்றத் தலைவர் கள் தம்மைப் பின்பற்றுவோருக்கு வகிபங்கு மாதிரியாக (Role Model) அதாவது கதாநாயகன் / கதாநாயகி யாகத் தோன்றுவர்.
- **உயிர்ப்பூட்டும் தாக்கம்** – நிலை மாற்றத் தலைவர்கள் ஒரு தரிசன நோக்கினைக் கொண்டிருப்பதோடு அதனை அடைவதற்காகத் தொடர்ச்சி யாக மக்களை ஊக்கப்படுத்துவதோடு அவர்களது அடைவுமட்டங்களை உய ரிய நிலைக்கு இட்டுச் செல்வர்.
- **அறிவார்ந்த தூண்டல்** – நிலை மாற்றுத்தலைவர் தன்னைப் பின்தொடர் வோர் தாமே புத்தாக்கச் செயற்பாடு களில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்வர். இது சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்த வல்லது.
- **தனியாள் ரீதியான அக்கறை** – நிலைமாற்றுத் தலைவர்கள் தமது மக்களின் பிரச்சினைகளைத் தனித் தனி யாகச் செவிமடுப்பதோடு அவர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள உதவுகின்றனர். ஒட்டுமொத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமாக நோக்காது அவரவரது தேவையை அறிந்து செயற்பட முனைவர். சில ருக்கு ஆதரவு தேவைப்படலாம். சில ருக்கு வழிகாட்டல் தேவைப்படலாம். ஒவ்வொருவர் பற்றியும் தனித்தனியா கக் கவனமெடுத்துத் தேவைகள் பூர்த்திசெய்யத் துணிவர்.

## நிலைமாற்ற வகிபாகம் ஏன் அவசியம்?

மனித சமூகம் இன்றுள்ள நிலைபோல் என்றுமே இவ்வளவு துரித கதியில் மாற் றங்களுக்கு முகங்கொடுக்கவில்லை என லாம். எனவே இவ்வாறான மாற்றங்களால் பாதிப்புறாதவகையில் மாணவர்களை வழி நடத்தவேண்டிய மிகப் பாரிய பொறுப்பு ஆசிரி யர்களின் கையிலேயே தங்கியுள்ளது. ஆசி ரியர்கள் தமது நிலைமாற்று வகிபங்கினைச் சிறப்புற ஆற்றுவதற்குச் சில பண்புக் கூறுகளைக் கொண்டிருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவையாவன –

- ✱ ஆங்கிலக் கல்விக்கான முக்கியத் துவம் பற்றிய உணர்வு.
- ✱ மாணவரிடையே தரிசன நோக்கினை ஏற்படுத்தல். அதனை அடைவதற்கு இடை யறாது ஊக்குவித்து வழிப்படுத்தல்.
- ✱ மாணவர்கள் அடையும் சிறு வெற்றி களைக் கூடப் பாராட்டுவது.
- ✱ மாணவர்கள் மீது நம்பிக்கையும் உண் மைத் தன்மையையும் கொண்டிருப்ப துடன் நேரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல்.
- ✱ முன்மாதிரியான நடத்தையும், நட்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, நெகிழ்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருப்பதுடன் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அவற் றினை வெளிப்படுத்துதல்.
- ✱ பாடசாலை வளர்ச்சிக்குப் பொறுப்பு மிக்க உறுப்பினராகத் தொழிற்படல்.
- ✱ காலத்திற்குக்காலம் ஏற்படும் மாற் றங்களை உள்வாங்கி அவற்றை நடை முறைப்படுத்துவதற்கு மனப்பூர்வமாக ஒத்துழைப்பு வழங்குதல்.
- ✱ பெற்றோர், பாடசாலைச் சமூகம் என்ப வற்றுடன் பயனுள்ள சீரான வகை யில் இடைவினையினை ஏற்படுத்தல்.
- ✱ மாணவர்களின் பூரண வளர்ச்சிக்குப் பொறுப்புடமை மாத்திரமன்றி வகை கூறலையும் மேற்கொள்ளுதல்.
- ✱ தமது வாண்மைத்துவ இயலுமையைத் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்ளு வதற்காகத் தேர்ச்சிகளையும், மனப் பாங்குகளையும் இற்றைப்படுத்திக் கொள்ளல்.

இவ்வாறாக ஆசிரியர்கள் செயற்படின் நாடு வேண்டி நிற்கும் சமூகத்தினை எதிர்காலத்தில் உருவாக்க முடியும் என நம்பப்படுகின்றது.

## மாணவர்களில் ஏற்படுத்த எதிர் பார்க்கும் திறன்கள்

இச் செயற்பாடுகளின் மூலம் மாணவர் களிடம் ஏற்படுத்த எதிர்பார்க்கும் ஒன்றி ணைந்த ஆளுமைத் திறன்கள் பின்வரும் மூன்று வகைக்குள் அடக்கப்பட்டுள்ளது.

1. சிந்தனைத் திறன்.
2. சமூகத்திறன்.
3. சுயதிறன்.

## சிந்தனைத் திறன்

இது தனியாள் திறன் ஆயினும் அதி முக்கியத்துவம் பெறுகின்றது. சிந்திக்கும் ஆற்றல் எனலாம். இச் சிந்திக்கும் ஆற்றலி னால் வாழ்க்கையின் சவால்களை எதிர் கொண்டு வெற்றியீட்டலாம். சிந்தனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடத்தக்க விதங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### ஆக்கச் சிந்தனை

பாடசாலைக் கலைத்திட்டத்தில் அடங்கியுள்ள சகல பாடங்களினூடாகவும் இவ் ஆக்கச் சிந்தனையை வளர்க்கலாம்.

### தீர்க்கமான சிந்தனை

நாம் தினம் தினம் அனுபவிப்பதிலிருந்து ஏதாவது ஓர் அர்த்தத்தை உண்மையை வெளிக்கொணரல் தீர்க்கமான சிந்தனை எனப்படும். *உ-ம் :* அப்பிள் பழம் பூமியில் விழுந்ததை அவதானித்த ஐசாக் நியூட்டன் என்ற விஞ்ஞானி புவியீர்ப்பு மையம் பற்றிய கருத்தை முன்வைத்தார். இத்தீர்க்கமான சிந்தனையை ஒருவரிடத்தே வளர்க்க பிள்ளைப்பருவமே சிறந்தது. முதிர்ச்சியடைந்தபின் இவ்வாற்றலை வளர்த்துக் கொள்வதென்பது கடினமான விடயம். இத் தீர்க்கமான சிந்தனை.

★ பகுப்பாய்வுச் சிந்தனை.

★ தர்க்கச் சிந்தனை என இருவகைப்படும்.

விஞ்ஞானம் போன்ற பாடங்கள் பகுப்பாய்வுச் சிந்தனைக்கு உதவுகின்றன. கணிதம் அளவியல் போன்ற பாடங்கள் தருக்க சிந்தனை விருத்திக்கு உதவுவன.

இத் தருக்கச் சிந்தனையை உய்த்தறி சிந்தனை, தொகுத்தறி சிந்தனை என வகைப்படுத்தலாம்.

### ★ உய்த்தறி சிந்தனை.

பரந்துபட்ட விடயங்களிலிருந்து குறிப்பான தரவுகளை அடைவதற்கு உதவும். இது விரிவிலிருந்து குவிவானவற்றை நோக்கிச் செல்வதால் குவி சிந்தனை எனப்படும்.

### ★ தொகுத்தறி சிந்தனை

தரவுகளைச் சேகரித்து அதிலிருந்து விரிவான கருத்தை அடைவதற்கு உதவும். இது குறிப்பானவற்றிலிருந்து ஆரம்பித்து விரிவை நோக்கிச் செல்வதால் விரிசிந்தனை எனவும் கூறப்படும்.

### ★ தீர்மானம் எடுத்தல்.

நன்கு சிந்தனை செய்யும் ஒருவர் தீர்மானமெடுக்கும் திறனை இயல்பாகவே பெற்றிருப்பர். இன்று வளர்ந்தோரிடையே இது அரிதாவே காணப்படுகின்றது. இவ்வாற்றல் இன்மையால் மேலும் பின்வரும் இரு திறன்களையும் தற்கால மாணவர் இழக்கின்றார்.

### ★ 1) பிரச்சினை தீர்த்தல்.

பிரச்சினையின்றி வாழ்க்கையில்லை. எனவே பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துத் தீர்க்கும் ஆற்றலை மாணவரிடையே ஏற்படுத்தல் அவசியம்.

### 2) முரண்பாட்டு முகாமை.

முரண்பாடுகள் ஏற்படும்போது அதனை முகாமை செய்து முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் வளர்க்கப்படல் வேண்டும். எனவே இவையும் பாடசாலைக் கல்வியூடாக வழங்கப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

### சமூகத்திறன் விருத்தி

தனியாட்கள் ஒன்றுசேரும்போது சமூகம் உருவாகின்றது. எனவே இச் சமூகத்துடன் நல்ல உறவை ஏற்படுத்துவதற்கும், சேர்ந்து வாழுவதற்குமான திறனைச் சிறுவயதிலிருந்தே உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை மையக் கலைத்திட்டத்தில் இது சாத்தியப்படாததொன்று என உணரப்பட்டமையால் பரீட்சை முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத்திறன் விருத்தி செய்வதற்கு மாணவரை வழிப்படுத்த முனைகின்றது.

பெற்றோர் தமது பிள்ளைகளை உரிய வகையில் கற்றலின்பால் வழிப்படுத்தல். அதற்கமைய மாணவர்களின் கற்றலில் கவனத்தைச் செலுத்துதல் ஆகியன சிறப்பாக நடைபெறின் மாத்திரமே அதிபர், ஆசிரியர்கள் சிறப்பாகச் செயற்படலாம். எனவே கல்வியில் அக்கறைகாட்டும் பாடசாலையோடிணைந்து பெற்றோரும் செயற்பட்டால் பயன்மிக்கதாக அமையும்.

## இச் சமூகத்திறன் விருத்தியில்

✱ குழுவாகச் செயற்படல் முக்கியம் பெறுகின்றது. ஒரு மாணவன் தேர்ச்சிமிக்கவனாகக் கருதப்படவேண்டுமானால் அவன் மற்றவர்களுடன் கூட்டாகச் செயற்படும் திறனை விருத்தி செய்திருத்தல் அவசியமாகின்றது. அவ்வாறு மற்றவரோடு இணக்கப்பாடடைய முடியாதவர் தேர்ச்சிமிக்கவராகக் கருதமுடியாது. "நல்ல பிள்ளை" என்பது "புத்தகப் பூச்சி" என்பதால் வரையறுக்க முடியாது. தனிமைப்பட்டு வாழும் ஒருவர் "சுயநலமியாக" இருப்பதற்குச் சாத்தியப்பாடு அதிகம். தொலைக்காட்சி, கணனி என்பவையும் மாணவர்களைத் தனிமைப்படுத்துவனவாகக் காணப்படுகின்றது.

✱ பரிவுடன் செவிமடுத்தல் – மற்றவர்களது கூற்றைப் பொறிமுறையில் செவிமடுக்காது விளங்கிக்கொள்ளல் என்ற வகையில் இத்திறன் வளர்க்கப்படல் வேண்டும். பரிவுடன் செவிமடுத்தல், திறன் அற்றுப்போவதால் குடும்ப நிலையிற்கூட சுயநலமிக்கவராகித் தன்னைப் பற்றிய சிந்தனையிலேயே வாழ்கின்ற ஒரு பரிதாப நிலை உருவாகிவிடும்.

✱ **பகிர்ந்து பரிமாறிக்கொள்ளல்** – பொருட்களைப் பகிர்ந்து கொள்வதற்கு ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்தியுள்ளபோதும் அறிவைப் பகிர்ந்து பரிமாறிக் கொள்வதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை. துரித கதியில் மாற்றத்திற்குள்ளாகும் செயன்முறையில் அறிவைப் பகிர்ந்து பரிமாறிக்கொள்வது அவசியமாகின்றது.

✱ **தொடர்பாடல்திறன்** – இங்கு எழுத்தறிவுத் திறன் மிக முக்கியம் பெறுகின்றது.

1) கவனத்துடன் செவிமடுத்தல்.
2) தெளிவாகப் பேசுதல்.
3) பொருள் விளக்கத்துடன் வாசித்தல்.
4) சரியாக எழுதுதல்.

என்பவற்றால் இத்திறன் வளர்க்கப்படுகின்றது. இத்திறன் விருத்தியின்மையால் அச்சம், ஐயம், சபைக்கூச்சம்போன்றவை ஏற்படுகின்றன. ஆகவே இத்திறன் சமூகத்திறனில் முக்கிய பங்கு வகிப்பதனைக் காணலாம். சமூகத்தில் ஏனையோருடன் பழகுவதற்கும் கருத்துப் பரிமாறுவதற்கும் இத்திறன் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

✱ தலைமைத்துவத் திறன்

1. தலைமைத்துவத் திறன்.
2. தலைமைத்துவத்தைப் பின்பற்றும் திறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிரண்டும் இதிலடங்கும். பாடசாலைக் காலத்தில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடாத மாணவனிடம் இதனை எதிர்பார்க்க முடியாது. தலைவர் என்பவர் ஒரு தொகுதியினரிடம் ஒரு பொதுக் குறிக்கோளை நெறிப்படுத்தும் திறனைக் கொண்டவரென எதிர்பார்க்கின்றோம். தனது திறமை காரணமாகக் குழுக்களின் அங்கீகரிப்பைப் பெற்றுள்ளோர்க்கு இது கடினமாகாது. நியமிக்கப்பட்ட தலைவர்கள் சிலர் சிறப்பார்ந்த தலைமைத்துவத்தை நடைமுறைப்படுத்த முடியாது தமக்குக் கீழ் பணிபுரிவோரை நெறிப்படுத்தத் தவறுகின்றனர். இதனால் குழு அங்கத்தவரின் நன்மதிப்பினை இழந்துவிடுவர்.

எனவே பாடசாலைக் கல்வி ஊடாக வளர்க்கப்படவேண்டிய திறன்களில் மேற்கூறப்பட்ட யாவும் வளர்க்கப்படுவது மாணவனின் வெற்றிக்கு அவசியமாகின்றது.

### சுயதிறன்

சுயதிறன் என்பது ஒருவர் தனது பிறப்புரிமையூடாகப் பெற்றுப் படிப்படியாக வாழ்க்கையூடாக விருத்தி செய்து கொள்வது. மனிதன் சீராக வாழ உடல் நலத்துடன், உளநலமும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எனவே உளநிலையைப் பாதிக்கும் செயல்களை இனங்காண்பதும் அவற்றினை வெற்றி கொள்வதற்கான செயற்பாடுகளை வளர்ப்பதும் முக்கியமாகின்றது.

### மனவெழுச்சிச் சமநிலை

உணர்வுகளை வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நடுநிலைமையாக நோக்கி மனவெழுச்சிகளைக் கையாளும் திறன்களைச் சிறுபராயத்திலிருந்தே வளர்க்க வேண்டும்.

### உளநெருங்கீடு

உளநெருக்கீடு என்பது வளர்ந்தோருக்கு மட்டுமன்றி எப்பிராயத்தினருக்கும் ஏற்படக்கூடியதொன்று. நாள் முழுவதும் படிப்பில் ஈடுபடுத்தல் அல்லது குடும்பப் பிரச்சினை. இவை போன்ற பல காரணிகளால் மாணவர்கள் உளநெருக்கீட்டுக்காளாகின்றனர். இச் சந்தர்ப்பத்தில் இவர்கள் சரியாக வழிநடுத்தப்படாவிடின் நாட்செல்லச் செல்ல மனநிலை பாதிக்கப்பட்டு மற்றவர்களுக்குச் சுமையாகக்கூடிய வாய்ப்புக் கூட ஏற்பட ஏதுவாகும்.

### மாற்றங்களை ஏற்படுத்தும் திறன்

நாம் காணும் பலர் மாற்றங்கள் பற்றிச் சிந்திக்கவோ ஏற்படுத்தவோ ஆற்றலற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் புதிதாக ஒரு வேலையைத் தொடங்கமாட்டார்கள். அவ்வாறு தொடங்குபவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள். மாறிவரும் உலகில் மாற்றம் நிரந்தரம் என்பது உணர்த்தப்படல் வேண்டும்.

### பொறுப்புக்கூறல் வகைகூறல்

நிறுவனத் தலைவர் பொறுப்புக்களைத் தனக்குக் கீழ் உள்ளவர்களுக்கு வழங்கும்போது அப்பொறுப்புக்களுக்கு வகை சொல்லவேண்டிய கடமைப்பாடு கீழ் உள்ளோருக்கு உண்டு. ஆனால் அந்நிலை சீர்குலைந்துள்ளமையைக் காண்கின்றோம். மேலதிகாரிக்கு மட்டுமன்றி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பொறுப்புக் கூற வேண்டிய தேவை உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்திருத்தல் வேண்டும்.

### அர்ப்பணிப்பு.

தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட கடமையில் அர்ப்பணிப்புடன் செற்படுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரையே நாம் காண்கின்றோம். தமது கடமை நேரத்தில் செய்யப்பட வேண்டிய அனைத்து விடயங்களையும் திட்டமிட்டு ஒழுங்கமைப்புடன் தனது நிறுவனத்தின் வினைத்திறனுக்காகச் செயற்படும் அங்கத்தவர் அருகி வருகின்றமையைக் காண லாம். எனவே அர்ப்பணிப்பு வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

## சுய ஒழுக்கம்

தீயவற்றிலிருந்து நல்லவற்றைப் பிரித்தறியத் தவறுவோரை நம் சமுதாயத்தில் காண்கின்றோம். சரியானவற்றைச் செய்வோரைக் கூடத் தடுப்போர் பலர் உளர். இந்நிலை நீடிப்பின் நாட்டிற்குப்பெருந் தீங்கு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சிறு பராயத்திலிருந்தே நல்லவற்றையும், சரியானவற்றையும் பிரித்தறியும் ஆற்றல் வளர்க்கப்பட்டு சுய ஒழுக்கத்தைப் பேணல் வேண்டும்.

## முயற்சியாண்மை :

சுயவிளக்கம், வாய்ப்புகள் மற்றும் சமுதாயத்தின் தேவைகள், மாற்றங்களைச் செய்ய முனைதல். இவை யாவும் முயற்சியாண்மையில் அடங்கும். ஆனால் இவை இன்று மாணவரிடையே எவ்வளவு தூரம் சாத்தியப்படக்கூடிய விடயம் என்பது கேள்விக்குரியதே.

எனவே மேலே காட்டப்பட்ட விடயங்களை அவதானிக்கும்போது நாம் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு செயற்படும் கற்றல் – கற்பித்தல் சாத்தியப்படக் கூடியதொன்றல்ல என்பது புலப்படுகின்றது. ஆனால் இவை மாணவரிடையே ஏற்படுத் தாது விடின் பாரிய இழப்பு சமுதாயத்தில் ஏற் படும் என்பது தெளிவு. மனிதன் மனிதத்துவத்துடன் வாழ இங்கு கூறப்பட்ட அனைத்தும் பாடசாலையில் பாடத்தேர்ச்சிகளினூடாக வளர்க்கப்பட்டு நீடித்து நிலைக்கக் கூடியதாக அமைக்கப்படுதல் அவசியம். எனவே அதற்கான பயணப் பாதையில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் ஒன்றிணைந்து மாணவர்களிடையே ஒன்றிணைந்த திறன்களை ஏற்படுத்தி வெற்றிக்கு வழிசமைப்போமாக.

## உசாத்துணை நூல்கள்


1. ஐ.எஸ். கினிகே "புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலையில் எதிர்பார்க் கப்படும் மாற்றமும்"

2. கல்விச் சீர்திருத்தம் "இலங்கைக் கல்வியின் நவீன போக்கு".

3. தை. தனராஜ் "அகவிழி" நவம்பர், 2008.


அகம்பாவம் என்பது முட்டாள்தனத்தின் வலி தெரியாமல் இருக்கச் செய்யும் மருந்தாகும்"

– நியூட் ரோக்னே

வெற்றியாளராக ஆவதற்கு முயற்சிப்பதைவிட பண்புடையவராக முயற்சியுங்கள்.

– அல்பேர்ட் ஐன்ஸ்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் சாதனையாளர்கள்



மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத்தினால்
புலமைப் பரிசில் பெறுபவர்கள் - 2007 O/L



மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத்தினால்
புலமைப் பரிசில் பெறுபவர்கள் - 2008 O/L



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2009



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 2008



பிரியதர்சினி இராமச்சந்திரன்
3A முகாமைத்துவம்



குகப்பிரியா செல்வராசா
3A கலை



முருகையா தயாபரன்
3A கலை



கிருபாலசிங்கம் ரஜீவன்
3A கலை



திவ்வியா தேவதாஸ்
3A கலை



கவிதா இராசகுமார்
3A கலை



சொர்ணவடிவேல் குருதரன்
அளவையியல் விஞ்ஞானம்



முருகதாஸ் மகிழன்
பௌதீக விஞ்ஞானம்



ஆனந்தசிவம் பிரணவன்
கட்டடக்கலை



நடராசா நிதர்சன்
சித்தமருத்துவம்



சுகாஜினி நவரட்ணம்
சித்தமருத்துவம்



ஜனனி முருகையா
முகாமைத்துவம்



மேரிடினேகா வசந்தசந்திரன்
முகாமைத்துவம்



சிவதையல்நாயகி கனகசூரியன்
முகாமைத்துவம்



ஜானி கமலநாதன்
கலை



நிசாளினி மகேந்திரன்
கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் 2008



துரைசிங்கம் கஜன்
கணனி விஞ்ஞானம்



மேரிடயானா முருகேசு
கலை



சோபிகா கனகரட்ணம்
நுண்கலை



திசாந்திலதா தருமர்
கலை



தருமலிங்கம் மதுரா
கலை



கௌதமி சொக்கலிங்கம்
கலை



செல்வராஜா நிரோஜ்
கலை



இராசலிங்கம் யுதர்சன்
கலை



ஜாமினி திருஞானசம்பந்தர்
கலை



கணிதவதனி மதியாபரணம்
கலை



லசிகா தியாகராசா
கலை



அபிசாரிகா பாலகாந்தன்
நுண்கலை



பேபிகா செட்டி
நுண்கலை



மலர்விழி மன்மதராஜா
கலை



சுரேகா வல்லிபுரம்
நுண்கலை

ஜெயபாலன் கௌசிகன்
பௌதீகவியல்

விசாகப்பெருமாள் விஜயஜங்கரன்
சித்த மருத்துவம்

சுகன்யா தவேந்திரன்
தாதியியல்

இராசலிங்கம் கஜிதரன்
கலை

குகபாலன் தரணிதரன்
கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவுப் பரிசளிப்பு விழாவும், மகாஜனன் நூல் வெளியீட்டு விழாவும் – 2008 அன்றைய தினம் பிரதம விருந்தினர்

**திரு. மருதலிங்கம் பிரதீபன் (திட்டப்பணிப்பாளர், மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலாளர், யாழ்ப்பாணம்) அவர்களால் வழங்கப்பட்ட உரை.**

கல்லூரியின் முதல்வர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களே! இந்நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் ச. கைலாசநாதன் அவர்களே, திருமதி கைலாசநாதன் அவர்களே, நினைவுப் பேருரை ஆற்றிய தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு பெற்ற பிரதிப் பொது முகாமையாளர் திரு. நடராஜா சிவபாலகணேசன் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்து எங்களுக்கெல்லாம் ஆசி வழங்கிச் சென்றுள்ள துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபருமான திருவாளர் ஆறு. திருமுருகன் அவர்களே, இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டிருக்கின்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. வைரமுத்து சிவராஜா அவர்களே, மலர் வெளியீட்டு நிகழ்வில் மலர் முதற் பிரதியைப் பெற்ற பாடசாலையின் முன்னாள் சிரேஷ்ட ஆசிரியை திருமதி. சரஸ்வதி கனகேஸ்வரன் அவர்களே, மகாஜனன் மலருக்கான ஆய்வுரையை வழங்கிய பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வு பெற்ற அதிபர் திரு. சோ. பத்மநாதன் அவர்களே, இப்பாடசாலையினுடைய பழம் பெரும் மாணவனும் இன்று கௌரவிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியர் திரு. சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்களே, மயிலங்கூடலூர் நடராஜன் அவர்களே, அனைவருக்கும் முதற்கண் எனது இந்நேர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய பரிசளிப்பு நிகழ்வானது உண்மையிலே ஒரு அர்த்தபுஷ்டியுள்ள நிகழ்வாக அமைந்துள்ளது என்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. ஏனென்றால் பரிசளிப்பு விழா, அதே நேரம் மகாஜனன் நூல் வெளியீட்டு விழா, அத்துடன் எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மகாஜனக் கல்லூரியினுடைய வளர்ச்சிக்காக அதனைப் பாடுபட்டு வளர்த்தெடுத்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் மகன் மகாஜனா சிற்பி ஜயரத்தினம் அவர்களின் நினைவு விழா ஆகிய இத்தகைய விழாக்கள் ஒருசேர, ஒருங்கே நடைபெறுகின்ற இத்தகைய நேரத்தில் பாடசாலைக்குரிய பேரூந்து கையளிக்கின்ற ஒரு நிகழ்வும் ஒன்று சேர்ந்துள்ளது. உண்மையிலேயே இவை பாடசாலையைப் பொறுத்தவரையில் ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமாக அமைந்துள்ளது.

இன்றைய இந்த கல்வி உலகத்தில் மாற்றங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. அனைவரும் கண்கூடாக அறிந்த விடயம், இங்கு இருக்கின்ற மூத்தவர்கள் கல்வி கற்ற காலத்துக்கும் நான் கல்வி கற்ற காலத்துக்கும், இன்றைய இந்த இளம் சிறார்கள் கல்வி கற்கின்ற காலத்துக்கும் பல்வேறுபட்ட மாற்றங்கள், பல்வேறுபட்ட சீராக்க நிகழ்வுகள் நடந்து கொண்டிருப்பதைக் கண்கூடாகவே கண்டு கொண்டிருக்கின்றோம். கல்வி வளர்ச்சி வேகமும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருப்பதை ஆசிரியர்களும் மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொண்டே இருக்கின்றோம். எங்களுடைய கல்விப் புலத்திலே அபிவிருத்தி என்பது இல்லாமல் போய்விடுமோ என்ற நிலையில் ஆரம்பக்கல்வி பற்றிய அபிவிருத்தி பற்றிய மாவட்டச் செயற்பாடு வரவேற்கத்தக்கதாக அமைகிறது. குழந்தை தனது ஆரம்பப் பருவத்தில் பாடசாலையில் அதிக நேரத்தைக் கழிக்கின்ற தன்மை காணப்படுகிறது. அவர்களை நல்ல நோக்குடன் வழிப்படுத்துகின்ற, நெறிப்படுத்துகின்ற பொறுப்பு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்குரியது. அதனை அவர்கள் செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இந்தப் பரீட்சைப் பெறுபேறுகளும் அவர்களுடைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் நல்ல உதாரணமாக அமைகிறது.

இக்கல்லூரிக்கு வருவதற்கு முன் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் இரண்டு பத்திரிகைகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதில் ஒன்று தினக்குரல் பத்திரிகை, அதில் வெளியான செய்தியில் பாடசாலையின் சிற்பி தெ.து. ஜயரத்தினம் அவர்களைப் பற்றிய ஆக்கம் வெளியிடப்பட்டிருந்தது. அதேவேளை உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியில் இரு மாணவர்களைப் பற்றிய அதாவது செல்வன் டிலக்சன், செல்வன் கபிலன் ஆகிய இரண்டு மாணவர்களும் மாவட்ட நிலையில் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இன்றும் மகாஜனக் கல்லூரி நடத்திய சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் விபரமும் வெளியிடப்பட்டிருந்தது. ஒரே தினசரிப் பத்திரிகையில் ஒரே கல்லூரியைப் பற்றி வெளியிடப்பட்ட செய்திகள் எதனை எடுத்துக் காட்டுகின்றது என்றால் பாடசாலையின் பெருமையைத் தற்போதைய பெருமையை நிலைநாட்டுகின்ற விடயமாகும். இப்பாடசாலையைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் மிக ஒரு உன்னத நிலையில் இருந்த பாடசாலை இன்றும் அப்பாடசாலையை அதே தன்மையுடன் வளர்க்கின்ற பெருமை பாடசாலை அதிபருக்குரியது. உண்மையிலே நல்லாற்றலும் ஆளுமைத்திறனும் உள்ள அதிபரும் அவரின் வழிநடத்தலின் கீழ் உள்ள கல்வியை ஊட்டுகின்ற ஆசிரியர் குழாமும் ஒன்றித்து நிற்பதை நாம் கண்டு கொள்ள முடிகிறது.

இங்கு கல்வி கற்கின்ற மாணவரின் பெற்றோர்கள், குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வந்தாலும் பாடசாலையில் விசுவாசமும் நம்பிக்கையைப் பேணும்முகமாக இப்பாடசாலைக்கே தமது பிள்ளைகளை அனுப்பும் நிலைமை இன்று காணப்படுகிறது. இது மகாஜனன்கள் பெற்றுக் கொண்ட ஒரு பெருமை என்றே கொள்ள முடிகிறது.

இன்றைய சூழ்நிலையைக் காரணம் காட்டி எங்களது வேலைகளையோ, கல்வியையோ புறந்தள்ளி விடமுடியாது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம். தற்போதைய சூழல் உகந்த சூழல் அல்ல என்பதனைக் காரணம் காட்டி நாங்களோ அல்லது நீங்களோ எங்களுடைய செல்வங்களோ, கல்வியிலோ தங்களுடைய செயற்பாட்டிலோ பின் விளைவுக்குத் தள்ளிவிடக்கூடாது. உண்மையிலே தற்போதைய வளத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் தொடர்ந்து பேணப்படவேண்டும் இன்று ஆசிச் செய்தி வழங்கிய ஆறு திருமுருகன் அவர்கள் கூறியது போல யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் தொடர்ந்து பேணப்படவேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியரின் பங்களிப்பு உண்மையிலேயே உன்னதமானது. மாணவனை முழுமையான எழுத்தறிவுள்ளோனாகவும் வாசிப்புத்திறன் உள்ளவனாகவும் வளர்த்தெடுப்பது ஆரம்பக் கல்வி ஆசிரியர்க்கேயுரியது. இது மிகவும் கஷ்டமான பணி. அந்த வகையில் பாடசாலையின் விருது வாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனை நீயறி" என்ற விடயம் மாணவனுக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது.

தன்னை அறிந்தவர் தத்துவஞானி; எனத் திருமந்திரத்தில் திருமூலர் சொல்லியிருக்கின்றார். தன்னை அறிந்தவன் தத்துவஞானி உன்னை நீ அறி என்கின்ற மகுட வாக்கியம் இதனை உணர்த்துகின்றது.

இந்தப் பாடசாலை தொடர்பான நற்பெயர் இற்றைக்கு 100 ஆண்டு அதாவது 98 ஆண்டுகளுக்கு முன்னே பாடசாலை ஸ்தாபித்து 100 ஆண்டு காணுகின்ற இந்த வேளையிலே, இந்தப் பாடசாலை வரலாற்றில் என்றுமே தளராத நிலையில் இன்று இருக்கின்றது. அந்த வகையில் இதனை வளர்க்கப் பாடுபட்ட பாடசாலையின் ஸ்தாபகரும் அதனை வளர்த்தெடுக்கப் பாடுபட்ட அதிபர்களும் ஆசிரியர்களும் உண்மையில் வரவேற்கத்தக்கவர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். இந்த விழாவில் கலந்து கொண்டவர்கள் என்னுடைய தந்தை இந்தப் பாடசாலையில் படித்ததாக நினைவுபடுத்தினர். 1963ம் ஆண்டு இந்தப் பாடசாலையில் கல்வி கற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பட்டதாரியாக வெளியேறினார். அத்தகைய அன்றைய காலகட்டத்திலே வயதானவர்கள் சமூகத்தில் மூத்த பிரஜைகள். அன்றைய காலத்திலிருந்த பொருளாதார நிலைமை அவர்கள் கல்வியைக் கற்பதற்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றே கொள்ளலாம். ஏனெனில் அன்றைய சூழலில் இருந்த அவர்களது பெற்றோருக்கு இருந்த பொருளாதார நிலைமை அவர்களைத் தங்களுடைய நிதி நடவடிக்கையில் சீராகக் கொண்டு செல்லுமோ என்ற ஐயப்பாடு இருந்தும் அதனை வென்றவர்களாக, காலத்தை உணர்ந்தவர்களாகத் தமது கருமங்களை ஆற்றியிருந்தனர். இன்றைய சூழலில் நாங்களோ அல்லது எங்களது பெற்றோர்களோ அந்தத் தாக்கத்தைத் தங்களது சந்ததியினர் தங்களது பிள்ளைகள் உணரக் கூடாது என்பதற்காக உங்களுக்கும் எங்களுக்கும் உடைய பல்வேறு விடயங்கள் தேவைகளை அறிந்து அதாவது என்ன தேவை இருக்கிறது என்பதை உணர்ந்தவராக அவர்களுக்குத் தக்க தருணத்தில் செய்யவேண்டிய உணர்வுள்ளவராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். நாங்களும் நீங்களும் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்முடைய எதிர்காலச் சந்ததி நல்ல ஒரு ஆரோக்கியமான கல்வியறிவு உடைய சந்ததியாக மிளிரும் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

அன்புச் செல்வங்களே! குழந்தைகளே நீங்கள் தான் இந்த எதிர்காலத்தில் பிரதேசத்திற்குரிய நாட்டிற்குரிய பிரஜைகளாக நல்ல இளைஞர்களாக, யுவதிகளாக மிளிரப் போகின்றீர்கள். எனவே இன்றைய நிகழ்வில் உங்களுக்கு அறிவுரைகள், கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைய நினைவுப் பேருரையிலும் சரி அல்லது கௌரவ விருந்தினரின் உரையிலும் சரி உங்களுக்கு வேண்டிய நல்ல விடயங்கள், நல்ல விழுமியக் கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு ஆளுமைத்திறன், ஆற்றலுடைய அதிபர் கிடைத்துள்ளார். அதேவேளை நல்ல வழிகாட்டியான நல்ல ஆசிரியர்கள் கிடைத்துள்ளார். உங்களுடைய தேவை அறிந்து உங்களுடைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துகின்ற ஆசிரியர் குழாம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. உங்களைப்போல நானும் சிறுவனாக இருந்த காலத்தில் பெரிய கல்லூரியில் படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். ஏனெனில் நான் ஆரம்பக் கல்வியைப் படித்தது சிறிய பாடசாலையில் தான். யாழ். புனித மரியாள் வித்தியாசாலை என்று சொல்லப்படும் சிறிய பாடசாலையில் தான் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். இந்தப் பாடசாலைக்கு வந்தபோது உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கல்வியைத் தரக்கூடிய சிறந்த ஒரு பாட சாலை. உங்களுடைய அத்தி வாரத்துக்கு நல்ல ஒரு பாடசாலையாக உள்ளது. இந்தப் பாடசா லையில் காணப்படுகின்ற வளங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் நல்ல பின்னூட்டலை வழங்குவது அதிபரின் உரையாடல் மூலம் அறிந்து கொண்டேன். அத்தகைய வள அமைப்புகள் உங்களுக்கு இருக் கிறது. பாடசாலையினுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இன்று உங்களுக்கு இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. உண்மையில் யாழ்ப்பாண பாடசாலைகளைப் பொறுத்த வரை யில் நல்ல வளமான ஒரு எதிர்காலத்திற்கு அடித்தளமாக உள்ளது. இப்பாடசாலை நூற் றாண்டு விழாவை நோக்கி நடைபோடும் பாட சாலை இன்று நூற்றாண்டுப் பயணத்தை நோக்கிச் செல்கிறது. பல்வேறுபட்ட அபிவிருத் தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது எனப் பாடசாலை அதிபர் குறிப்பிட்டார். உண் மையில் பழைய மாணவர் சங்கத்தின் செயற் பாடு வர வேற்கத்தக்கது, பாராட்டப்படத்தக்கது. இன்று அந்தப் பேருந்து கையளிப்பு நிகழ்வானது பல் வேறுபட்ட போட்டிகளிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் கோட்ட மட்டத் தில், வலய மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் முதன்மை பெற்றிருந்ததனை இன்றைய பரி சளிப்பு தினத்தில் வழங்கப்பட்ட பரிசுகள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. அத்தகைய அதற் குரிய பேருந்துகளை ஒழுங்குபண்ணுவது அதற் குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவது என்பது கடினமான விடயம் என்பதை நான் உணருவேன். அந்த வகையில் பேருந்து கைய ளிக்கும் நிகழ்வானது உண்மையில் மாண வர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். நீங்கள் இப்பாடசாலையின் பழைய மாணவ ராகவும் பெரிய அறிஞர்களாகவும் பேராசிரி யர்களாகவும் திகழப் போகிறீர்கள்.

ஆகவே நீங்கள் எதிர்காலத்தில் உங்கள் பாடசாலைக்கு ஆற்றவேண்டிய பணிகள் பல உள்ளன. அத்துடன் நீங்கள் கல்வி கற்கும் அக் காலத்திலே, பாடசாலைக்கு ஆற்றவேண்டிய பணி உங்களைப் பெற்றெடுத்த பெற்றோ ருக்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் உரியது.

மாணவர்களாகிய நீங்கள் ஆற்றல் உள்ளவராக நல்ல பெறுபேறுகளைப் பெறுபவராக மிளிர வேண்டும். அவற்றைச் செய்யவேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பான சிறுவர்களே! குழந்தைகளே! உங்க ளுடைய நேரம் தற்போது 2.00 மணியாகிக் கொண்டு இருக்கிறது. நீங்கள் மிகுந்த சோத னையின் மத்தியில் இருக்கின்றீர்கள். ஆகவே எனது நீண்ட உரையை ஆற்றுவது, பொருத்த மற்றது எனக் கருதுகிறேன். அந்த வகையில் என்னையும் எனது பாரியாரையும் பிரதம விருந்தினராக அழைத்து, கௌரவப்படுத்திய மைக்கு மகாஜன குழுவினருக்கும், மகாஜனக் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்தி சங்க உறுப் பினர்கள் யாவருக்கும் எனது சிரந்தாழ்த்திய வணக்கத்தைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி

வணக்கம்.

- **அறிவாளியின் வாய் அவனுடைய இதயத்தில் இருக்கிறது. முட்டாளின் இதயமோ அவனுடைய வாயில் இருக்கிறது.**
- **மகிழ்ச்சியானவர்கள் மகிழ்ச்சி நிரம்பிய உலகத்தையும், விசனப் படுகிறவர்கள் விசனப்படுகிற உலகத்தையும் உருவாக்குகிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Glimpses of the Beginnigs of Mahajana & Association

**By : K.S. NADARAJAN, Retired S.L.A.S**

*(First O.S.A., Colombo Secretary)*

I joined Mahajana in the lower forms in 1935 and also participated in all Inter house activities. The climax was my acting in the Drama for Seniors as in Shekspear's "MAL VOLIO" which won in first place in the competitive Inter house Drama competition judged by three teachers in English from three different colleges, The college Atheletic team of which I was also a member participated at the Northern Province Junior Secondary Schools Athletic meet in 1941 at the Jaffna Central College grounds and Mahajana Atheletic team was declared as Champions of the meet.

The Hall of the T.Shaped Building was portioned with wooden mobile screens for classes and Head Master also had his office in a portioned small room at the entrance to the hall. At the western side of the hall three rooms were put up later one for science Laboratory and the other two for classes. Besides there was a large room for teachers. On the western side existed Saraswathie Tamil School with two small halls. End was a cottage for teachers lunch. There was no Canteen and that did not matter as none had pocket money. Source of water supply was from a portioned well with pails. The first teacher for carnatic Music joined in 1943 and her Music classes in the hall initially caused excitement. There were few students at that time.

I was in the first batch of students presented by Mahajana for the English S.S.C. Exam in December 1944 under the teacher for English Mr. T. Jayaratnam B.A. (London) English Literature Mr. K. Krishnapillai B.A. (English) and teacher for Elementary Mathematics and Science from 1943 was Mr. R.S. Sivathasan B.Sc. (London) who also laid the foundation for Athletics and soccer at Mahajana and left in 1944 for his Alma – mater, Manipay Hindu College.

After the demise of Mr.K. Chinnappah in 1945 Mr.T.Jayaratnam who joined in 1943 assumed duties as Principal. With related speed he commenced with new buildings, Science Laboratories, play grounds and a hostel at the end of the play ground for outstation students. Simultaneously he recruited capable teachers from India from 1946 for Mathematics and Science. Supplementad them with suitable teachers from Jaffna for different subjects to ignoring sports. With good examination results students in Jafna and other parts of Ceylon enrollod as students. **Mahajanans** were entering the Ceylon University from 1951.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The inaugural meeting for old Mahajanans was organized by me in Colombo on August 22nd 1953 at the forum hall of Central Y.M.C.A, fort presided by MR. T.T. Jayaratnam who continued as president from 1953 till his retirement. A constitution was adopted at the meeting for the Association. A silver jubilee reception was organized by me to Mr.T.T.Jayaratnam at the main hall of the Central Y.M.C.A and 10th August 1957 presided by Mr.C.Balasingam C.C.S and Mr.S.F.De.Silva, Director Education was the guest speaker who paid glowing tributes and referred him as "Ever Green" till the last.

Mr.M.Karthigesu, staff and myself functioned as Joint Secretaries for the Golden jubilee celebration 1960. With the untiring efforts of staff, students, old students, parents and well wishers the carnival was grand and magnificent. Mr.S. Natesan, Manager of the college extended welcome to Sir Nicholas Attygalle, Vice-chancellor University of Ceylon who opened the Golden Jubliee celebration and also ceremoniously opened the jubilee new upstair block. Senator A.M.A. Azeez C.C.S. was the chief guest speaker to the Golden Jubilee diner Presided by Mr. T.T.Jayaratnam.

A farewell reception to Mr.T.T. Jayaratnam retired Principal was organized at Saraswathy Hall, Presided by Dr.H.W.Thambiah QC and Mr.C.Rengenathan QC as guest speaker.

The old student Association Colombo which was not functioning after 1973 was reorganized on 3rd July 1994 which is now functioning well.

With all best wishes for the centenary celebrations.

***Loyal Senior Old Student.***

***Note :***

தற்செயலாக நடந்ததா அல்லது அமரர் K.S. நடராஜனின் உள்ளுணர்வா தெரியவில்லை. இக் கட்டுரையை கணனி அச்சுப்படுத்தி எனக்கு அவர் தபாலில் அனுப்பியிருந்தார். தபாலில் எனக்குக் கிடைத்த அடுத்தநாள் அவர் காலமானார் என்ற தகவலும் தொலைபேசியில் எனக்குக் கிடைத்தது. Loyal Senior Old Student என்பதன் அர்த்தம் இதுதானா?

**திருமதி சிவமலர் அனந்தசயனன்**

*அதிபர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை நூறை அடைந்திட விரைந்திடும் மகாஜன அன்னையின் பிரதி அதிபர் திருமதி சௌ.பத்மநாதனுடன் செவிக்கினிய ஓர் செவ்வி உங்களுக்காக...

**2009ஆம் ஆண்டு வெளிவரவிருக்கும் "மகாஜனனில்" ஓர் அலகாய் எம்மவரின் படைப்பும் வந்திட வேண்டுமென்ற பிரயத்தன முயற்சி களில் நாம் இருந்தவேளை அதிஷ்டவசமாக எம் பிரதி அதிபரின் சந்திப் புக் கிடைத்தது. அவரது மிடுக்கான தோற்றம், நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, காட்சிக்கெளியவராய், கருத்துக்கினிமை, எந்நேரமும் முகத்தில் பூத்திருக்கும் புன்னகை என்பன எம்மைக் கவர்ந்திருந்தன. அவரிடமிருந்து நாம்பெற்ற அனுபவங்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்திட நினைக்கின்றோம்.**

திகதி : 10.08.2009

இடம் : பிரதி அதிபர் காரியாலயம்

பேட்டி கண்டவர்கள் : சிரேஷ்ட மாணவ தலைவர்கள்

*செல்வன் க. கோகுலன்*

*செல்வி யோ. கார்த்திகா*

***சிரேஷ்ட மாணவ தலைவர்கள் :*** *வணக்கம் பிரதி அதிபர் அவர்களே!*

***பிரதி அதிபர்:*** மாணவ தலைவர்களுக்கு என் அன்பார்ந்த வணக்கம். (இருகரம் குவித்து இளநகை பூக்கின்றார்)

***சி.மா.த*** : *மகாஜனாவின் நூறாவது ஆண்டில் மணிவிழாக் காண இருக்கும் தங்களிடமிருந்து ஒரு சில வார்த்தைகள்.*

***பி.அ.*** : (குறுஞ் சிரிப்புடன்) "மகாஜனன்" மலருக்கு என்னை நேர்காண வந்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நான் சௌபாக்கியகௌரி பத்மநாதன். சைவப்பாரம்பரியம் மிக்க அளவெட்டிக் கிராமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன்.

எனது ஆரம்பக் கல்வியை இந்து ஆரம்பப் பாடசாலை, மற்றும் அளவெட்டி அருணாசல வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியையும், உயர்தரக் கல்வியையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும், தொடர்ந்து எனது விசேட கல்வியை யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடத்திலும் பயின்றேன்.

நான் எனது முதலாவது பட்டப்படிப்பை வெளிவாரியாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், தொடர்ந்து உள்வாரியாக யாழ்ப்பாணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியையும், **M.Phil** (முதுதத்துவமானி) பட்டமும் பெற்றேன். இக் கல்லூரிக்கு 1985 மார்ச் 15ம் திகதி ஆசிரியராக திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்று வந்தேன். தற்போது உலக ஆன்மீகப் (Spiritual University) பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்பதில் ஆனந்தம் அடைகிறேன்.

***சி.மா.த.*** (துணிச்சல் மிக்க அரசியல் தலைவர்கள், ஆசான்கள், பெரியோர்கள் விளைந்திருந்த பூமியல்லவோ இது. இதனால்தான் போலும் எம் பிரதி அதிபரும் இன்று பலரும் வியக்கத்தக்க பாரதியின் புதுமைப் பெண்ணாய் எம்மவர் மத்தியில்....)

*தாங்கள் இப்பூமியில் அவதரித்த இடம், தங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் கூறமுடியுமா? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" அந்த வகையில் உங்கள் அத்தெய்வங்கள் யார்?*

***பி.அ.*** : ஆம்! அவர்களைப் பற்றிக் கூறுகையில் அத்தெய்வங்களுக்கு முதற்கண் நான் எனது மௌன வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தந்தையார் தம்பிப்பிள்ளை விஜயரத்தினம் ஆன்மீக முதிர்ச்சியும் செல்வச் செழிப்பும் மிக்க குடும்பத்தில் ஏகபுத்திரனாக அவதரித்தார். எனது அன்னையும் அதே குடும்பத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் நாகம்மா தம்பதியினரின் புதல்வியாவார். எனது தந்தையார் சுகாதாரப் பரிசோதகராகச் சேவையாற்றி இறுதியாக M.O.H பதவிக்கு உயர்த்தப்பட்டார். மும்மொழி ஆற்றல் மிக்கவரும், பிறர் நலனில் அதிக விருப்புடையவரும், மிக இனிமையான குரல்வளமும் உடைய அவர் தேவார, திருவாசகம், திருப்புகழ் பாடவும் வல்லவர். அவர் தனது ஐம்பதாவது வயதில் சிவபதமடைந்தமை எங்கள் குடும்பத்தவர்க்கும் அளவெட்டி வாழ் சமூகத்திற்கும் மிகப்பெரிய இழப்பாக இருந்தது.

எனது தாயார் புனிதவதியாரின் சைவசமய ஒழுக்க சீலர்களைப் பேணி வந்த ஒரு புனிதமான அம்மையார். எனது தாயாரின் தந்தை சோமசுந்தர ஆசிரியர் St. Patricks, St.Hentris பாடசாலைகளில் கற்பித்தபோது அங்கு சைவ ஆசாரங்களைப் பேணக்கடுமையாக உழைத்து இறுதியில் "Court" வரை செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டது என்பதை எம்மூத்தோர் பெருமையுடன் கூறுவது குறிப்பிடத்தக்கது. இறுதியில் Victoria Collegeல் கற்பிக்கும் பொழுது அங்கு உளவளத்துணையாளராக (Counsellor) ஒழுங்கு, கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பாசிரியராக மிகவும் கண்டிப்புடன் சேவையாற்றினார் என்பதனையும், இலத்தீன், ஆங்கில மொழியை மாணவர்களுக்கு விருப்புடன் கற்பித்தமை மட்டுமன்றி, அவரது இல்லத்தில் தங்கியிருந்து மாணவர்கள் கற்றனர் என்பதை அளவெட்டி வாழ் மக்கள் கூறுவதைக் கேட்டறிந்துள்ளேன்.

"தந்தை எவ்வழி மைந்தரும் அவ்வழி" எனது குடும்பப் பின்னணி பற்றிக்கூறச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி.மா.த.** : *"வளரும் பயிரை முளையில் தெரியும்" என்பார்கள். இதனால் உங்களின் இளமைக்கால கல்விப் பராயம், இளமைக்கால இணைபிரியாத நண்பர்கள் பற்றியும் கூறமுடியுமா?*

**பி.அ.** : இளமைக்கால கல்விப்பயணம் தற்போது போன்று அல்ல. எவ்வித போட்டிக் கற்றலுமின்றி, நண்பர்களுடன் விளையாடி மிக இலகுவாக, எளிமையாகக் கற்றமையே நினைவுக்கு வருகிறது.

இணைபிரியாத இளமைக்கால நண்பர்கள் பலர். என் வகுப்பில் கற்ற அத்தனை மாணவிகளும் தோழிகளே. குறிப்பாகக் கூறின், பெரியார் கைலாசபதி மகள் தோத்திரமலர், கணித நிபுணர்கள் கோணேஸ்வரி, ரதிதேவி, பாடல் அழகிகள் கௌதமி, கௌரிமனோகரி, தொட்டாற் சிணுங்கி சின்னசிறி, தொடர்ந்து கதைபேசும் சவுந்தரராணி, குகஞான சோதி, விளையாட்டு வீராங்கனை சாரதா, சிரித்துக்கதை பேசும் வெடி பலவன் பெரிய சிறி, தமிழ்ப்பேச்சு ஆங்கிலப் பேச்சில் முதற்பரிசினைத் தட்டிக்கொள்ளும் வெள்ளைக்குண்டு இந்திராணி என்றென்றும் மறக்கமுடியாதநண்பர்களே.

**சி.மா.த.** : *"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" இன்றுள்ள தங்களின் அறிவாற்றல் இளமையில் போடப்பட்ட வித்தல்லோ?*

"எழுத்தறிவித்தவன் இறைவன்" எனவே தங்களின் இப்பாரிய கல்வி வளர்ச்சிக்கு விசேடமாக வித்திட்ட ஆசான்களின் பெயர்களைக் குறிப்பிடமுடியுமா? (சிறிது கண்கலங்கி பின் எவர் என்று சொல்ல யாரை என்று சொல்ல எனும் தோரணையில் எம்மைப் பார்த்துவிட்டு)

**பி.அ.** : ஆம்! எனது ஆசிரியர்களின் பாதாரவிந்தங்களுக்கு முதலில் வணக்கம் செலுத்துகிறேன். குலுங்கிக் குலுங்கி "ரங்கூன் தமிழில்" மாணவர் சிரிக் கச் சிரிக்க புவியியல் பாடத்துடன், சேர்த்து நற்பழக்க வழக்கங்களை ஊட்டிய திருமதி. ஜெயபரஞ்சோதி ஆசிரியையும், அன்புடனும் அதட்டலுடனும் ஆங்கில பாடத்தைப் புகட்டிய அமரர் சந்தியாப்பிள்ளை ஆசானும் என்றென்றும் என்மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

**சி.மா.த.** : *தங்கள் பாடசாலை வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஓரிரண்டு கூறமுடியுமா?*

**பி.அ.** : "பிரணவானந்த சரஸ்வதி" போன்ற பல சமயப் பெரியோர்களின் வருகையும், எமது வாழ்வைச் செழுமைப்படுத்திய அவர்களின் சொற் பொழிவுகளும் மறக்கமுடியாதவை. அத்துடன் ஆங்கில ஆசான் சந்தியாப்பிள்ளை யின் கோபக்குரலையும், அரவணைப்பையும் நடித்து இன்புற்ற நாட் களும், தமிழ்ப்பாடம் கற்பித்த பண்டிதர் நாகலிங்க உபாத்தி யாயரின் "இடக்கரடக்கல்" பகிடிகளை உள்வாங்கிப் பின் மீட்டு இரசித்த நாட்களும் இரசாயனம், பௌதீகம் கற்பித்த அமரர் நடராசா ஆசானின் ஏவறையுடன் கூடிய தடித்த குரலில், கண்டனத்துடனும், உத்வேகத்துடனும் கற்பித்த சமன்பாடுகளும் வரைவிலக்கணங்களும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவித்தாவி நடந்து வந்து, உயிரியல் கற்பித்து மகிழ்ந்த பரஞ்சோதி மாஸ்ரரின் வேடிக்கைக் கதைகளும், வித்தைகளும், பராக்குப் பார்க்கும்போதெல்லாம் "டப்" என சுள்ளிட அடிகள் போட்ட "மசுக்குட்டியர்" ஜெகநாதன் கணித ஆசானின் கண்டிப்பும் சிரிப்பும் வாழ்க்கையில் என்றென்றும் மறக்கமுடியாதவை.

***சி.மா.த.*** : *பலகலையும் பெற்றிட உதவும் பல்கலைக்கழகக் கல்வி பற்றிக் கூறமுடியுமா?*

***பி.அ.*** : இவ்வகையில் எனது பல்கலைக்கழகக் கல்விப் பயணத்தின்போது எனது முதலாவது பட்டப்படிப்பில், பேராசிரியர் மௌனகுரு அவர்களிடம் தமிழ்ப் பாடம் கற்கும் வாய்ப்பும் அவரின் கலந்துரையாடல்களும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவின் கற்கைக் காலப்பகுதியில் விசேடமாகக் குறிப் பிடும்படியாக யாழ். பல்கலைக்கழகக் கல்வித் துறைத் தலைவர் பேரா சிரியர் வ. ஆறுமுகம் அவர்களினதும் மற்றும் பேராசிரியர் சபா. ஜெயராஜா அவர்களின் கருத்தாழமான சிந்தனைகளும் விரிவுரைகளும் மேலும் முதுதத்துவமானிக்கான தேர்வுப் பரீட்சையின்போது, பேராசிரியர் சிவத் தம்பி அவர்களின் பெறுமதி மிக்க விரிவுரைகளும், முதுதத்துவமானி மெய்யியற்றுறைக் கல்விப் பயணத்தின்போது யாழ். பல்கலைக்கழக மெய்யியற்துறைத் தலைவர் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜாவினால் வழங்கப்பட்ட மெய்யியல் சார்பான கீழைத்தேய மேலைத்தேசக் கோட்பாடுகளும், விதிகள், தத்துவங்கள் அளப்பரியன பல்கலைக்கழகக் கல்விப் பயணத்தின்போது ஔவைப்பாட்டி கூறிய பாடல்தான் நினைவுக்கு வருகின்றது.

**"இனியது கேட்கின் தனிநெடு வேலோய்**
**இனிது இனிது ஏகாந்தமினிது**
**அதனினு மினிது ஆதியைத் தொழுதல்**
**அதனினு மினிது அறிவினர் சேர்தல்**
**அதனினு மினிது அறிவுள்ளோரைக்**
**கனவிலும் நனவிலும் காண்பது தானே".**

***சி.மா.த.*** : *மகாஜனமாதாவின் கருவாய், சிசுவாய், மகளாய், பிரதி அதிபராய் இருக்கின்ற தங்களின் மன ஓட்டம் பற்றி ஏதேனும்....*

***பி.அ.*** : மகாஜனக் கல்லூரியில் எனது சேவை 25 வருடங்களை அண்மித்துக் கொண்டிருக்கிறது. இவ் ஒவ்வொரு கட்டத்திலும் அளப்பரியன. ஆற்றல் வாய்ந்த சிசுக்களையும், மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும், அவர்களின் சாதனைகளையும் கண்டு களித்ததையிட்டு மகாஜன மாதாவின் பெருமையை எண்ணி மகிழ்கிறேன்.

***சி.மா.த.*** : *எங்கள் கல்லூரியில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமான் தங்கள் குடும்பத்தை மணம்வீசும் பூங்காவனமாய் அமைக்கட்டும். ஆம்! குடும்பம் என்றவுடனே நினைவுக்கு வருகிறது. உங்களின் தற்போதைய குடும்பத்தைப் பற்றிக் கூறுங்களேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பி.அ.** : ஆம்! எனது தற்போதைய குடும்பம் இரண்டு. ஒன்று மகாஜனக் குடும்பம். மற்றையது இல்லறம் எனப்படும் நல்லறமாம் ஓம்பும் குடும்பம் மகாஜனக் குடும்பம் மனதிற்கினியது. மற்றையது, "தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க நாமிருவரும் இல்லற தர்மத்தை ஆற்றி வருகிறோம்.

**சி.மா.த.** : *தங்கள் பாடசாலை வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு தற்போதைய மாணவர்களுக்கு விடுவிக்க விரும்பும் செய்தி என்ன?*

**பி.அ.** : மிகுந்த போட்டியும், அமைதியுமற்ற தற்போதைய சமூகச்சூழலில் கல்வி பயின்றுகொண்டிருக்கும் மாணவர்க்கு உங்கள் கல்விப்பயணம், உங்களுக்கு அமைதியையும் சாந்தத்தையும் வழங்கக்கூடியதாக அமையவேண்டும் என்பதே.

**சி.மா.த.** : *"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானி டிந்து வீழ்கின்றபோதிலும் அச்சமில்லை" என்ற பாரதியின் கூற்றுக் கிணங்க எத்தனை இடர், சவால் சூழ்ந்திட்டபோதும் அவற்றையெல்லாம் துச்சமென நினைக்கும் தங்களின் மகாஜன நிர்வாகம் பற்றி....*
(வெட்கத்துடன் கூடிய புன்னகையுடன்)

**பி.அ.** : தற்போது எமது அதிபர் திருமதி. சிவமலர் அனந்தசயனன் பன்முகப்படுத்தப் பட்ட நிர்வாகம் ஒன்றினை ஆற்றி வருகிறார். அதாவது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றால் மேம்பட்ட ஆசிரியர்களுக்கும் மற்றும் அனுபவத்தால் குறைந்த ஆசிரியர்களுக்கும் அவரவர் திறமைக்கு ஏற்ப பாடசாலையில் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதுடன், "தந்திரோபாய முகாமைத்துவம்" என்ற சிறந்த முகாமைத்துவ முறையினையும் கடைப்பிடித்து வருவது கண்கூடு.

**சி.மா.த.** : *எங்கள் பாடசாலை சாதனைகளுக்குப் பெயர்போனது மட்டுமல்லாமல் மாணவர் சாதனை படைக்க அமைக்கப்பட்ட களம் போன்றது. அந்த வகையில் நடப்பாண்டிற்கான சிறந்த சாதனைகள் என்று எவற்றைக் குறிப்பிட முடியும்?*

**பி.அ.** : மாணவர்கள் ஒவ்வொருவரும் ஆற்றிய சாதனைகள் அத்தனையும் அவ்வவ் துறையில் சிறப்பானவையே. எனவே சாதனையாளர்கள் எல்லோரும் போற்றப்படவேண்டியவர்களே. "சாதனை செய்தவர் சாகார் உலகில்" என்று காதலுடன் சொன்னாரடி கிளியே" என்ற நற்சிந்தனைப்பாடல் மட்டுமே நினைவுக்கு வருகிறது. ஆம்! இவர்கள் அழியாப் புகழுக்குரிய வர்கள் தான் என்பதில் ஐயமில்லை.

**சி.மா.த.** : *இவை மட்டுமல்லாது சாரணியம், விளையாட்டுத்துறை, கலை, கலாசாரம், சதுரங்கம், பான்ட் வாத்தியம், Scrabble ஆகியவை மகாஜன மைந்தரின் பொக்கிசங்களன்றோ! ஆம்! சாரணியம் என்றவுடன் சாரணியத்திற்காகத் தங்களை அர்ப்பணிக்கும் சிறந்த ஓர் தலைவி அல்லவா? தாங்கள் சாரணிய வாழ்க்கை பற்றி....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பி.அ.* : (பெருமிதச் சிரிப்புடன்) எங்கள் பாடசாலையில் 1985ம் ஆண்டு சாரணிய ஆசிரியராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து இற்றைவரை ஏறக்குறைய 750இற்கும் மேற்பட்ட பெண் சாரணியர்கள் எங்கள் பாட சாலையில் சாரணிய சேவை புரிந்து, பாடசாலையின் இறைமையைக் காப்பாற்றி வெளியேறியுள்ளனர்.

சாரணியத்துறையினை நிலைநாட்டும் மகாஜனாவின் சாரணர் கள், வழிகாட்டிகள், சிறுதோழியர், குருளையர் இணைந்து 1987மார்ச் 14, 15, 16ம் திகதிகளில் தமது பொன்விழாவைக் கொண்டாடியமை.

அதேபோன்று 1998 வைரவிழாவை 3 தினங்கள் பாடசாலை இடம்பெயர்ந்த நிலையிலும் மருதனார்மடத்தில் அமைந்த கொட்டகைப் பாடசாலையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டமை, பாடசாலைக் காலத்தில் சாரணியம் பற்றிய மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகளாகும்.

*சி.மா.த.* : *அடுத்த ஆண்டு மகாஜன மாதாவிற்கு அகவை 100. இதனையிட்டு மகாஜன சமுதாயத்திற்கு விடுவிக்க விரும்பும் செய்தி என்ன?*

*பி.அ.* : **மனிதனுக்கோ ஆயுசு நூறு**
**மாட்சிமை பொருந்திய**
**மகாராஜாக்களையும் மகாராணிகளையும் படைத்த**
**மகாஜனனுக்கோ அகவை எண்ணிலடங்கா!**
**மகாஜனர்களே! கல்லுங்கள் கல்லுங்கள்.**
**கருவறையிலிருந்து கல்லறைவரை கல்வி எனும்**
**கல்வியியலாளர் கருத்துக்கிசையக் கல்லுங்கள்.**
**மகாஜன சமூகமே விழித்தெழு!**
**பாவலர் புகழ்பாடி**
**அவர்தந்த முதுசொம்களைக் கையாண்டு**
**பண்பாடான சமுதாயத்தைக் கட்டியெழுப்பு!**

*சி.மா.த.* *2009-2010ம் ஆண்டிற்கான சிரேஷ்ட மாணவர் தலைவர்களாக நாம் இருப்பதால் எம் மாணாக்கர் பேணுகின்ற, பேணப்படவேண்டிய ஒழுக்க விழுமியங்களில் சிறப்பிடம் பெறவேண்டியனவாய் மகாஜன மாதாவின் புகழை எட்டுத்திக்கும் பரப்பிட தாங்கள் கூற விரும்புவது.*

*பி.அ.* : மகாஜனமாதாவின் நூற்றாண்டு விழாக் காலப்பகுதியில் கல்வி பயிலும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்தமையிட்டு மகிழ்வடைகிறேன். இக்காலப்பகுதியில் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த நூற்றாண்டு விழாச்சபை தீர்மானித்துள்ளது.

அவ்வக் காலப்பகுதியில் நீவிர் நல்லொழுக்கம் வழுவாது, சீரிய ஒழுங்கு நடைமுறையுடன் மாசில்லாப் பண்பு பேணி, நும் கடமைகளைத் திறம்பட ஆற்றி, சாதனைகள் பல படைத்து "மகாஜன மாணவ தலைவர்களின் புகழை, மேம்பாடுகளை எட்டுத் திக்கும் பரப்பிட மனதார வாழ்த்துகின்றேன். வாழிய மாணவ தலைவர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சி.மா.த.* : *இறுதியாக, வெற்றியின் படிக்கற்களாக நீங்கள் நினைப்பவை?*

*பி.அ.* : எக்கருமத்தையும் திரிகரண சுத்தியுடன் செய்யும்பொழுது, தானாகவே வெற்றிகள் பல ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. திரிகரண சுத்தியுடன் கூடிய முயற்சியே வெற்றியின் படிக்கற்கள்.

*சி.மா.த.* : நன்றி பிரதி அதிபரவர்களே! நன்றி. "நேரம் பொன்னானது" என்று எப் போதும் வியந்திடும் நீங்கள், தங்களது பொன்னான நேரத்தை எம்முடன் செலவு செய்தமையையிட்டு மீண்டும் மீண்டும் நன்றிகள் பற்பல.

*பி.அ. :* எம்முள் கண்ணெதிரே உள்ள பெரியோர்களைப் பின்பற்றி அவர் வழிச்சென்றால் எம் வாழ்வும் சிறக்கும். எனவேதான் உங்களின் இவ் நடத்தை எம் வளர்ந்து கொண்டிருக்கின்ற ஏன் வளரப்போகும் எம் மகாஜனச் சமுதாயத்திற்கே ஒரு முன்மாதிரியாகத் திகழட்டும்.

இத்தருணத்தில் நாமும் எம் அதிபர்கள் துரையப்பாபிள்ளை, ஐயரத்தினம் அவர்களுடன் எம் பள்ளிக் காலத்திலும் எமக்கோர் இனிய அதிபர்களாயிருந்திட்ட கள்ளமில்லாச் சிறப்புமிக்க அமரர் திரு.க.நாகராஜா அவர்களையும், மகாஜனாவின் மைந்தன் திரு.பொசுந்தரலிங்கம் அதிபரவர்களையும் ஏன்! நமது தற்போதைய அதிபர் திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்களையும் நினைத்துப் பார்க்கையில் உள்ள மெல்லாம் புல்லரிக்கின்றது.

நன்றி! மாணவ தலைவர்களே நன்றி. நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டியது ஒன்றுண்டு. நாங்கள் எல்லோருமே வாழ்க்கையில் பயணம், யாத்திரை செய்தபடி இருக்கிறோம். நாங்கள் யாத்திரிகர்கள். இது புற உலக யாத்திரை. "புற உலகைப் போலவே அக உலகம் ஒன்றும் உள்ளது. அங்கே உன் பார்வையைச் செலுத்து "அகமுகமாகு" "உனை நீ அறி" என்று பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் சொல்வது இதைத்தான். மீண்டும் மகிழ்வுடன் நன்றிகூறி நிறைவு செய்கின்றேன். நன்றி.

---

*"செங்கம்பளத்தில் ஏறி நின்று மகாஜன மாதாவின் புகழைப்பாடுவேன். அண்ட சராசரங்களிலும் உள்ள மகாஜன மைந்தரை வெளி உலகிற்கே காட்டுவேன். அவர்களின் துணையுடன் மாதாவின் அகல்விளக்கை அணைத்திடாமல் காத்திடுவேன்" எனக்கூற நினைத்திடும் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் பெருந்தன்மையால் நாமும் எம்மினிய மகாஜன சகோதரர்களும் எம் பிரதி அதிபரின் வழியைப் பின்பற்றி அவர் சொற்கேட்டு சிறந்த மாணாக்க ராய் மிளிர்ந்திட வேண்டுமென்பதற்காய் இதைப் பிரசுரிக்கின்றோம்.*

*நன்றி*

---

**செல்வி. யோகேந்திரா கார்த்திகா**
**செல்வன் கனகரட்ணம் கோகுலன்**

*A/L 2010 சிரேஷ்ட மாணவ தலைவர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகாஜன மாதாவின் மனம் நிறைந்த மங்கை திருமதி உதயமலர் பக்தவற்சலன்

வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் வடபால், வளம்மிக்க வேளாள தொழிலுக்கு இலக்கணமான வசாவிளான் கிராமத்தில் பொன்னையா நவமணி தம்பதியரின் ஏக புத்திரியாக அவதரித்தவர் உதயமலர் ஆவார். 1950ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ந் திகதி பிறந்த இவருக்குச் சகோதரர் ஒருவர் உள்ளார். ஊர்ப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றுப் புலமைப்பரிசில் தேர்வு பெற்று இடைநிலை, உயர் கல்வியை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும், யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்று வெற்றி கண்டார்.

பின்னர் தொழில் வாய்ப்பின் நிமித்தம் திருநெல்வேலி மகளிர் விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் தேர்ச்சி பெற்றார். அத்துடன் புலமைப்பரிசில் மூலம் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா பட்டமும் பெற்றுக்கொண்டார். இக்காலப் பகுதியில் அகில இலங்கை ரீதியில் விவசாயக் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுத் தனக்கென முத்திரை பதித்துக் கொண்டவர்.

ஆரம்பகால தொழில்வாய்ப்பினை விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொண்ட இவர் கீரிமலை கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழுவின் வசாவிளான் கிளை முகாமையாளர் பதவியினையும், தொடர்ந்து திருநெல்வேலி மகளிர் விவசாய பாடசாலையில் களமேற்பார்வையாளராகவும் கடமையை நிறைவேற்றியவர். அத்துடன் கிளிநொச்சி கரைச்சி மேற்கு (கனகபுரம்) விவசாய விஸ்தரிப்பு சேவை யாளராகவும் பணியாற்றி விவசாயத் திணைக்களத்தின் சேவையை மக்களுக்கும் நாட்டிற்குமாகச் செம்மைப்படுத்தினார்.

ஆசிரியத்துவ சேவையில் தம்மை உட்படுத்திக்கொண்ட இவர் யா/ஏழாலை மகாவித்தியாலயத்தின் ஆசிரியராக 24.05.1982ம் திகதி முதல் கடமையேற்று பின்னர் யா/குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி, யா/பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் என்பவற்றிலும் பணியாற்றி 06.02.1986இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவானார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெறும் காலப்பகுதியில் இவரது வெளிப்பாடுகள் உன்னதமானவை. சிறுகதைப் போட்டிகள், விவாதங்கள், பட்டிமன்றங்கள் ஆகியவற்றில் தம்மை உள்வாங்கி தமக்கும் தம் அணிக்கும் பெருமை சேர்த்து நின்றார். பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த இவரது பணியில் பல பாடசாலைகள் பயன்பெறலாயின.

01.01.1988இல் பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியராக யா/பலாலி அ.த.க.பாடசாலையில் சேவை செய்த காலத்தில் வில்லிசைப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெறுவதற்குத் தம்மை முழுமூச்சாக ஈடுபடுத்திச் செயற்பட்டவர்.

17.02.1993இல் எம் அன்னையாம் மகாஜனக் கல்லூரியில் தமது கடமையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கு



**முன்வரிசையில் இருப்போர் (இடமிருந்து வலமாக)** : செல்வி. இ. சம்பந்தர், திருமதி. தெ. சௌந்தரராஜன், திருமதி. பா
திருமதி. சி. அனந்தசயனன் (அதிபர்), திரு. சு. சயந்தன், திரு. இ.துரைசிங்கம், திரு.ம. மணிசேகரன், திரு.சி. தேவகுமாரன்,

**முதலாம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலகமாக)** : திருமதி.அ.சிவகரன், திருமதி.ஆ.விமலதாசன், திருமதி.கா.
திருமதி.ஜெ.மயில்வாகனம், திருமதி.லோ.சுபேந்திரன், செல்வி.ச. ஜெனித்தா, திருமதி.பு.அகிலலோகநாயகம், திருமதி.வ.
திருமதி.வ. சிவானந்தன், திருமதி.சா.கிருபாகரன், திருமதி.ரே.கேசவன், திருமதி.சி.சயந்தன், திருமதி.சி.பரமசிவம்

**இரண்டாம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)** : திரு.இ.கே.வி.ஜோன்சன், திரு.கு.கந்தரூபன், செல்வி.சி.பிர
திருமதி.ம.முருகமூர்த்தி, திருமதி.த.கணேசானந்தன், செல்வி.வி.பிரியா, செல்வி.வ.சுபாஜினி, திருமதி.அ.குகதாசன், செல்வி
திரு.செ. செந்தில்வேல், திரு.க.வசந்தரூபன்.

**மூன்றாம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)** : திரு. இ.ஞானேஸ்வரன், திரு.சு.முருகமூர்த்தி, திரு.கு.புவிந்
திரு.வை. உமாசுதன், திரு.சி. கமலமோகன், திரு.ந.குமரவேள், திரு.சி.சிவகரன், திரு.இ.திலீபன், திரு.இ.குகானந்தன், திரு.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யர் குழாம்



ராஜன், திருமதி. பா. கணேசதுரை, திருமதி. சௌ. விஸ்வலிங்கம், திருமதி. ப. லோகநாதன், திருமதி. சௌ. பத்மநாதன்,
.சி. தேவகுமாரன், திரு.த. தவராஜா, திரு.செ. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு.நா. புனிததயாபரன்.

ாசன், திருமதி.கா.சிவரூபன், திருமதி.இ.வீரசக்திரூபன், திருமதி.உ.குணநேசன், செல்வி.கு.அஜிராணி, செல்வி.வே.பத்மலோஜினி,
பகம், திருமதி.வ.அமரகுலசிங்கம், திருமதி.நி.செந்தூரன், திருமதி.தே.வாமதேவன், திருமதி.சி. மதிசீலன்,
பரமசிவம்

பன், செல்வி.சி.பிரவீணா, செல்வி.சி.சிவாஜினி, திருமதி.சு.ஜேந்திரன், செல்வி.போ.டெய்சி தேவநாயகி, திருமதி.சி.கிரிதரன்,
.குகதாசன், செல்வி.இ.செனகரத்தினம், செல்வி.சு.அம்பாலிகை, செல்வி.கி.வரதவாணி, செல்வி.மு.பிரகாஷிசி, திருமதி.ப.சிவசிவா,

த்தி, திரு.கு.புவிந்தன், திரு.பா.பாலமுரளி, திரு.சி.சிவாகரன், திரு.க.மயில்வாகனம், திரு.வே.ஜீவரூபன், திரு.க.வாணிமுகுந்தன்,
தகானந்தன், திரு.சோ.கஜேந்தன், திரு.வை. விஜயபாஸ்கரன், திரு.செ. சத்யநாராயணன், திரு.இ.தயாகரன், திரு.த.தயானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்ற ஆசிரியப் பெருந்தகை தனது சேவைக்காலத்தில் தனக்கென சிறப் பான முத்திரையைப் பதித்துக் கொண்ட வர். 1997ல் இடம்பெற்ற ஆசிரியர் தினப் போட்டியில் வில்லிசைப் போட்டிக்கான கதையைத் தாமே தயாரித்தும், நடித்தும், நெறியாள்கை செய்தும் தெல்லிப்பழைக் கோட்டத்தில் முதலாம் இடத்தைப் பாட சாலை பெறவைத்துப் பெருமை சேர்த்தார். தொடர்ந்தும் 1996/1997 பெரும்போக அகில இலங்கை விவசாயப் போட்டியில் கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் முத லாம் இடத்தினைப் பெற்று மாவட்ட மட்டத் தில் தெரிவு செய்யப்பட்டும் தமது சேவை யினை உறுதிப்படுத்தினார். தெரிவுநிலைக் கப்பால் அகில இலங்கை ரீதியில் போட்டி யில் பங்குபெறும் வாய்ப்பு நாட்டுச் சூழ்நிலை யால் தடைப்பட்டமை ஆசிரியரது மனதில் இன்றும் குறையாக நின்று நிலவுகிறது. இக் காலப் பகுதியில் இடம்பெற்ற விவசாய வினாடி வினாப் போட்டியில் அடுத்தடுத்த நிலைகளில் முதலாம் இடம் பெற்று நின்ற இவரது வெளிப்பாடு ஏனைய பாடசாலை கள் போட்டியில் தம்மை இணைத்துக் கொள்வ திலிருந்து விடுபடத் தூண்டின.

இவரது சேவையில் மகாஜனா தனது உயர்வான பெயரை ஏனைய துறைகளு டன் இணைத்துப் பெற்றுக்கொண்டது என் பது மறுக்கமுடியாத உண்மை. புதிய புதிய கல்விச் செயற்பாடுகளுக்கமையத் தன்னை இணைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் பங்காற்றியவர். இவரது காலத்தில் விவசாய பாடத்தைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அவர்களின் அடைவு மட்டங்களும் மிக உயர்வாகவே காணப் பட்டன. இடைக் காலத்தில் 10.01.2007 தொடக்கம் 13.08.2009இல் ஓய்வுபெறும் வரை வசாவிளான் ம.ம.வித்தியாலயத்தில் கடமையாற்றியபொழுதும் 2008, 2009ம் வருட காலப்பகுதியில் பகுதிநேர ஆசிரிய ராக (வாரத்தில் இரண்டு நாட்கள்) எமது கல்லூரியில் தனது கல்விச் சேவையினை நல்கி ஓய்வு பெற்றார்.

மகாஜன அன்னைக்கு கல்விச் செயற் பாடுகளுக்கப்பால், வெற்றிச் செயற்பாடு களுக்கப்பால் ஆசிரியர் கழகத்தின் செய லாளராக, விவசாயபாட இணைப்பாளராக, குழுச் செயற்பாட்டறைப் பொறுப்பாசிரியரா கத் தனித்தும், ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்தும் செயற்பட்டு கல்லூரிச் சமூகத் தின் நன்மதிப்பைப் பெற்றவர். கல்லூரி யில் நடைபெறும் பாராட்டு விழாக்கள், பிரி வுபசார வைபவங்கள் ஆகியவற்றில் தனது சேவைக் காலத்தில் அதிபர்கள், ஆசிரியர் கள், மாணவர்கள் அனைவரையும் கவிதை மழையால் வாழ்த்தி வழங்குபவர்.

சிறப்புக் கலைப்பட்டதாரியான இவரது மகனும் மகாஜனா பெற்றெடுத்த முத்து. அந்த நன் முத்தும் அன்னையைப் போன்று நன்மதிப்புப் பெற்று சேவை நல்கி வரு கின்றமை யாவரும் அறிந்ததே.

இவரது பணியில் சிறப்பு, புகழ் யாவும் பெற்ற மகாஜன அன்னை அவரது நீடு வாழ்விற்கும், சமூகப்பணி மேலும் விரி வடைந்து சமூகமும் நாடும் சிறப்புப் பெற வும் வாழ்த்தி நிற்கின்றது.

**திரு. த. தவராஜா**
தலைவர்,
ஆசிரியர் கழகம்,
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Staff 2009

| | | |
|---|---|---|
| | **Principal** | |
| 1. | Mrs. S. Anandasayanan B.Sc.(Cey)., PGDE (Merit) | SLTS-I |
| | **Deputy Principal** | |
| 2. | Mrs.S.Pathmanathan B.A., PGDE, M.Phill | SLTS-I |
| | **Co-Deputy Principal** | |
| 3. | Mr. S. Sayanthan B.A., PGDE (Dist.) | SLTS-I |
| | **Vice Principal** | |
| 4. | Mr.E. Thuraisingam B.Com, PGDE, M.Ed. | SLTS-I |
| | Assistant Principal | |
| 5. | Mr.M.Maniseharan B.Sc., PGDE | SLTS-I |
| 6. | Mrs. S. Visvalingam Sp.Trained (Maths) | SLTS-I |
| 7. | Mr. S. Thevakumaran B.A. PGDE, M.Ed. | SLTS-2I |
| | **Prefect of games** | |
| 8. | Mr.N.Punithathayaparan B.Sc. PGDE | SLTS-I |
| | **Sectional Heads** | |
| 9. | Mrs. P. Loganathan Sp.Trained (Science) | SLTS-I |
| 10. | Mr. T. Thavarajah Sp. Trained (Maths) | SLTS-I |
| 11. | Mrs. T. Sounthararajan Dip in Music, PGDE | SLTS-I |
| | **Other teachers** | |
| 12. | Mrs. B. Ganesathurai B.A. PGDE | SLTS-I |
| 13. | Miss R. Sambanthar B.A. PGDE | SLTS-I |
| 14. | Mrs. L. Subendren Sp.Trained (Home Sci.) | SLTS-I |
| 15. | Mrs. R. Kesavan B.A. PGDE (Merit) | SLTS-I |
| 16. | Mrs. P. Akilaloganayagam B.A. PGDE | SLTS-I |
| 17. | Mr. E. Gnaneswaran B.A. PGDE | SLTS-I |
| 18. | Mrs. A. Gugathasan B.A. PGDE | SLTS-I |
| 19. | Mrs. S. Murugamoorthy Sp.(Trained) English, Dip.in. English | SLTS 2-I |
| 20. | Miss.P.Daisy Thevanayaki Sp. (Tra. (N. R.C) | SLTS 2-I |
| 21. | Mrs. V. Amarakulasingam Sp.(Trai-Social Stu.), B.A. | SLTS 2-I |
| 22. | Mrs. S. Paramasivam Sp.(Trai-Primary) | SLTS 2-II |
| 23. | Mrs. S. Sayanthan B.A. PGDE (Merit), M.Ed. | SLTS 2-II |
| 24. | Mrs. J.Myilvakanam Sp.(Trai-Primary) | SLTS 2-II |
| 25. | Miss V. Pathmalogini Sp. (Trained – Science) | SLTS 2-II |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 26. Mrs. M. Murugamoorthy B.A. PGDE (Merit) | SLTS I |
| 27. Mr. V. Vijayabaskar B.Com. (Hons) PGDE (Merit) M.Ed. | SLTS 2II |
| 28. Mrs. T. Ganeshananthan Sp. Trained (Science) B.A. PGDE | SLTS 2II |
| 29. Mrs. A. Vimalathasan B.Sc. (Hons) PGDE (Merit) | SLTS 2II |
| 30. Mr. E.K.V. Johnson B.SC. PGDE | SLTS 2II |
| 31. Mrs. P. Sivasiva B.A. PGDE (Dist) | SLTS 2II |
| 32. Mr. T. Thayananthan Dip.in. Teaching (Primary) B.A. | SLTS 2II |
| 33. Mrs. S. Kiritharan B.A. (Hons) | SLTS 2II |
| 34. Mr.S. Sriskantharajah B.A. (Hons) | SLTS 3II |
| 35. Mr. N. Kumaravel Sp. (Train – Dance) | SLTS 2II |
| 36. Mr. S. Senthilvel Sp.(Train – Art) | SLTS 2II |
| 37. Mrs. I. Veerasakthyruban B.F.A Dance | SLTS 2II |
| 38. Mr.G. Kantharupan Dip in teaching (Maths) | SLTS 2II |
| 39. Mrs. U. Gunanesan B.F.A (Dance) PGDE | SLTS 2II |
| 40. Mr.S. Sivakaran Dip.in.Teaching (Sci) | SLTS 2II |
| 41. Mrs.A.Sivakaran Dip.in.Teaching (Prim) | SLTS 3I |
| 42. Mrs.S.Kirubakaran B.Sc (Hons) PGDE | SLTS 2II |
| 43. Mr.V.Umasuthan Sp.(Train – English) | SLTS 2II |
| 44. Mr. R. Thayakaran B.Com PGDE | SLTS 2II |
| 45. Miss R.Senagaratnam B.A.(Hons) PGDE (Merit) | SLTS 2II |
| 46. Mr. Gugaananthan B.Sc. PGDE M.Ed. | SLTS 2II |
| 47. Mr. P. Balamurali B.A. (Hons) PGDE | SLTS 2II |
| 48. Mrs. V. Sivananthan B.B.A (Fin.sp) | SLTS 2II |
| 49. Miss S. Ambalikai Dip.in. Teaching (Maths) | SLTS 3 I |
| 50. Mrs. K. Sivaruban Dip.in. Teaching (Primany) | SLTS 3 I |
| 51. Mr. S. Sathyanarayanan B.Sc. (Hons) | SLTS 3 I |
| 52. Mr. K. Vanimugunthan B.Sc. | SLTS 3 I |
| 53. Mrs. S. Biratheepan B.A. (Hons) | SLTS 3 I |
| 54. Miss. K. Ayranee B.B.A (Hons) | SLTS 3 I |
| 55. Miss T. Varathavani B.A (Hons) | SLTS 3 I |
| 56. Mrs. T. Vamadevan Dip.in.Teaching (Science) | SLTS 3 I |
| 57. Mr. S. Sivaakaran Dip.in.Teaching (Special Ed) | SLTS 3 I |
| 58. Mr. S. Kamalamohan Dip.in.Teaching (P.T.) | SLTS 3 I |
| 59. Miss. S. Sumathy Dip.in.Teaching (ICT) | SLTS 3 I |
| 60. Miss V. Subagini Dip.in.Teaching (English) | SLTS 3 I |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. Mr. Thileepan Dip.in.Teaching (Drama & Theatre) SLTS 3 I
62. Miss. M. Piragasini Dip.in.Teaching (English Med. Maths) SLTS 3 I
63. Miss V. Piriya Dip.in.Teaching (English Med. Maths) SLTS 3 I

**Temporarily Attached Teachers**

64. Mr. V. Geevarupan B.B.A. SLTS 3 I
65. Mr. K. Vasantharupan B.A. (Hons) SLTS 3 I
66. Mrs. N. Senthuran B.F.A. SLTS 3 I
67. Miss. S. Janitha B.Com. (HNDA) SLTS 3 I
68. Mrs. S. Mathyseelan B.F.A. SLTS 3 I

**Teachers Sponsored by**

69. Mr.K. Myilvakanam Sports teacher
70. Miss S. Piraveena Diploma in MSO, DTP.
71. Mr.G.Puveenthan Diploma in Computer Science, MSO, S.E.
72. Miss. S. Sivagini Dip. in.Teaching (Agri)

**Non Academic Staff**

1. Mr. T. Kanakeswaran Office Labourer Grade I
2. Mr. R. Navaratnarajah Office Labourer Grade I
3. Mr. K. Sinnarajah school labourer Grade I
4. Mr. K. Sivanantharajah school labourer Grade III
5. Mr. K. Suresh Lab. Asst. Grade II
6. Mr. K. Akilan (Tem. ATI)

**Sponsored by OSA**

1. Miss. P. Bageerathy - Management Assistant
2. Miss. S. Gowthamy - Clerk

**Sponsored by SDS**

1. Miss. S. Amutha



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்


திருமதி.உஷாதேவி புஷ்பராஜா


திருமதி.சுஜிகலா சுதாகரன்


திரு.இ.நந்தகுமார்

திருமதி.சுதர்ஷினி நிஷாந்தன்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்–2008 / 2009



## பழைய மாணவர் சங்கம் – 2008 / 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காற்றுக் குழு - 2009



கல்விசாரா ஊழியர்கள்



கனிஷ்ட பாண்ட் வாத்தியக் குழுவினர்



சிரேஷ்ட பாண்ட் வாத்தியக் குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
# 2008-2009ற்குரிய ஆண்டறிக்கை

***பொதுக்கூட்டம் - 01***
***விசேட பொதுக்கூட்டம் - 01***
***நிர்வாக சபைக்கூட்டம் - 08***
***விசேட நிர்வாக சபைக்கூட்டம் - 03***
***அங்கத்தவர் எண்ணிக்கை - 451***

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தலைவர் திருமதி. சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நிர்வாகசபை உறுப்பினர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஒத்துழைப்புடன் 2008-2009ம் ஆண்டு காலப் பகுதியில் பல்வேறு செயற்பாடுகளைச் செய்து முடித்திருக்கின்றது.

நிக்கொட் நிதி உதவியுடன் ரூபா 992,298/75 செலவில் 2000கலன் கொள்ளளவு நீர்த்தாங்கி, ஆண் மாணவர்களின் மலசலகூடத் திருத்தவேலைகளைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் செய்து முடித்துள்ளது. ஆரம்பப் பிரிவு, க.பொ.த உ/த வகுப்புக் கட்டடங்களுக்கு அருகில் குடிநீர் வசதியும், மைதானத்திற்கு 04 விசிறல் நீர்க் குழாய் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

நிறுவியவர் நினைவுநாள் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 5000/=உம், மின்மாற்றி காப்பரண் கட்டுவதற்கு ரூபா 2500உம், தமிழ்த்தினப் போட்டிக்கான செலவில் ஒரு பகுதியாக ரூபா 15000/=உம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கொடுத்து உதவியுள்ளது.

ஜயரத்தினம் நினைவு தினத்தில் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் எமது கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் மூத்த ஆசிரியருமான திரு. தி. சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்களைக் கௌரவித்து நினைவுக் கேடயம் ஒன்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கியது.

ஆசிரியர் தின விழாவில் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து எமது சங்கம் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் செலவைப் பொறுப்பேற்றது.

இவ்வருடத்தில் அமரர்களாகிய றோகான் இராஜசிங்கம், சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி. நாகம்மா கதிர்காமர், திரு. சி. சிவபாலன், திரு.சி. சிவபாஸ்கரன் ஆகியோருக்குப் பத்திரிகைகளில் அஞ்சலி செலுத்தியது.

மேலும் எமது மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் சாதனைகளையும், உயர் பரீட்சைப் பெறுபேறுகள் பெறும் மாணவர்களுக்குப் பத்திரிகைகளில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் செலுத்தியுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்குரிய மதிய உணவு கொடுப்பதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவி சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு உபகுழு அமைக்கப்பட்டு அவர்கள் மேற்பார்வையின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மாண வர்களின் நன்மை கருதி புத்தகசாலையையும், ஆசிரியர், மாணவர், கல்விசாரா ஊழியர் களின் தேவைக்கேற்ப சிற்றுண்டிச்சாலை யையும் நடாத்தி வருகின்றது.

2010ம் ஆண்டு பாடசாலை நூற்றாண் டைக் கொண்டாட இருக்கின்றது. இதற்கான செயற்றிட்டத்தில் ஒன்றான கலாசார விழாவை, தமிழ்மன்றம் கவின்கலை மன்றத்துடன் இணைந்து நடாத்துவதற்கும் கல்வித் திணைக்களத்திடம் முன் அனுமதி பெற்று ஆரம்பச் செயற்பாடுகள் முன்னெ டுக்கப்படுகின்றன.

இறுதியாக எமது பெற்றோர்கள், பாட சாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் பாடசாலை அபிவிருத்திக் காக வழங்கும் உதவிகளையும் அனுசரணை களையும் பாடசாலை அபிவிருத்திச் சங் கம் நன்றியோடு பாராட்டுவதுடன், நூற்றாண்டு விழாவிலும் அதன் பின்னரும் அனைவ ரதும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் வேண்டி நிற்கின்றது.

***திருமதி. சிவமலர் அனந்தசயனன்***
தலைவர்.

***வை. சிவராசா***
செயலாளர்.

## மஹாகவி உருத்திரமூர்த்தி

ஈழத்தின் புதுக்கவிதை முன்னோடி களுள் மஹாகவி முதன்மையானவர். இவரது இயற்பெயர் து. உருத்திரமூர்த்தி. தந்தையார் துரைசாமி ஒரு புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான். மஹாகவி 1927ம் ஆண்டு யூன் மாதம் 20ஆம் திகதி பிறந்தார். உயர்கல்வி பெறமுடியாததால், இவர் எழுதுவினைஞராக கொழும்பில் உத்தி யோகம் பார்க்க தான் பிறந்த யாழ். மண்ணின் அளவெட்டியிலிருந்து புறப் பட்டார். இவரது ஐந்து பிள்ளைகளுள் இன்றைய சிறந்த கவிஞரான 'சேரன்' பெருமைக்குரியவர்.

மகாஜனக்கல்லூரியின் மும்மூர்த்தி களில் ஒருவராகப் போற்றப்படும் மஹாகவி தனது பதினோராவது வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். இவரின் முதலாவது புனைபெயர் 'பண்டிதன்' ஆகும். 'புதுக் கம்பன்', 'புதுநாப்புலவர்', 'மாபாடி', 'மகா லெட்சுமி' முதலிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். ஆரம்பகாலத்தில் வேதாந் தம், 'பிரமச்சாரி பரமசிவம்' ஈகை முதலிய சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

இவருடைய தனித்துவச் சிறப்பிற்கு பல காரணங்கள் உள. காவியங்களையும், கவிதைகளையும், இசைப்பாடல்களையும், வானொலிப்பாடல் நாடகங்களையும், மேடைப்பா நாடகங்களையும் இயற்றி வெளியிட்டார். கோடை, குறும்பா, வீடும் வெளியும், கண்மணியாள் காதை, இரண்டு காவியங்கள், வள்ளி, புதியதொரு வீடு என்பன குறிப்பிடத்தக்கவை.

மனித வாழ்வின் மீதான ஆழமான நம்பிக்கையையும், மனிதாபிமானத்தையும் இவர் கவிதைகளில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், தெல்லிப்பழை

# வருடாந்த திரட்டறிக்கை 2008/2009

27.04.2009 திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் 2008/2009 ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. அன்று முதல் கல்லூரியின் நிகழ்வுகள், தேவைகள், அபிவிருத்திகள் அனைத்தையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் கழகம், மாணவர் மன்றங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் முன்னெடுத்து உள்ளோம்.

- லண்டன் பழைய மாணவர் சங்கத்திடம் விளையாட்டுத் துறைக்கான நிதியினைப்பெற்று கல்லூரியின் விளையாட்டுக் குழுவிடம் வழங்கி கல்லூரியின் விளையாட்டுத்துறை சிறக்க உதவி வருகின்றோம்.
- கொழும்பில் வசிக்கும் எமது பழைய மாணவர்களான திரு.வ.சிவரதன், திரு.ச.ரதிகுலன் ஆகியோர் எமது பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 30,000/- பெறுமதியான 12 சோடி உதைபந்தாட்ட காலணிகளை எமது சங்கத்தினூடாக வழங்கி உதவினார்கள்.
- பழைய மாணவர் சங்க நிதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கு பிரான்ஸ் OSA, சிட்னி OSA ஆகியவற்றின் உதவியுடன் திரு. வி.ஹரிகரன், திரு.A.சுதர்சன் ஆகியோரின் உதவியுடன் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க 2008ம் ஆண்டிலிருந்து தமிழ்த்தினப் போட்டிக்கான செலவுகளுக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றோம்.
- பாடசாலை மெய்வல்லுநர் போட்டிக்கு லண்டனில் வசிக்கும் திரு.க. செல்வக்குணச்சந்திரன் அவர்கள் வருடாவருடம் 25,000/- வழங்கி வருகிறார். அத்துடன் கனிஷ்ட பிரிவு விளையாட்டுப் போட்டிக்கான பரிசில்களுக்கு சுன்னாகம் NSB அனுசரணை வழங்குகின்றது.
- விளையாட்டுக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அணிகளின் சிறந்த வீரர்களுக்கான நினைவுப் பரிசில்களை பழைய மாணவர்களிடம் இருந்து பெற்றுக்கொடுத்து உள்ளோம்.
- 2008ம் ஆண்டிற்கான ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தோடு இணைந்து நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளோம்.
- 2008ம் ஆண்டிற்கான மாகாண, தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகள் மற்றும் மாகாணமட்ட கரப்பந்தாட்ட போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர்கள் ஆகியோரைப் பழைய மாணவர் சங்கம் கௌரவித்தது. தேசியமட்ட போட்டியில் தட்டெறிதலில் 2ம் இடம் பெற்ற செல்வன் ம. பார்த்தீபன் அவர்களுக்கு 25,000/- பணப்பரிசினை வழங்கி ஊக்குவித்தோம். யாழ் மாவட்டத்தில் வசிக்கும் பழைய மாணவர்களிடம் இருந்து 66,500/- பணம் சேகரிக்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்விற்கு 48,244/- செலவாகியது. மிகுதிப் பணமாகிய 18,256/- பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதான புல்வெட்டும் இயந்திரம் கொள்வனவு செய்ய வழங்கியுள்ளோம்.

- தெல்லிப்பழைக்கோட்ட மெய்வல்லு நர் போட்டிக்கு எமது பழைய மாண வன் அமரர் றொகான் இராஜசிங்கம் நினைவாக 6 வெற்றிக் கிண்ணங்கள் வழங்கினோம். சாரணர் சீருடைக் காக 35,000/- நிதியினை லண்டன் OSAயைச் சேர்ந்த திரு.S.கணேசலிங் கம் வழங்கி உதவியுள்ளார்.
- சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி யுடன் வருடாந்தம் நடைபெறுகின்ற வீரர் களின் போர் துடுப்பாட்டப் போட்டிக்கு 84 O/L Batch பழைய மாணவர்கள் 30,000/-வும் சுவிஸ்லாந்தில் வசிக்கும் திரு.அன்பழகன் நண்பர்களின் போர் துடுப்பாட்டப் போட்டிப் பரிசிற்காக 20,000:- வழங்கி உதவியுள்ளார்கள்.
- விளையாட்டுச் செலவுகளை ஈடுசெய் வதற்காக எமது சங்கம் 45,275/- கடனாக வழங்கி உதவியுள்ளது.
- கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான திரு. திருமதி. சண்முகரத்தினம் தம்பதி யினர் நூற்றாண்டு விழாவை முன் னிட்டு அபிவிருத்திக்கான நிதியாக ரூபா 25,000/- வழங்கியுள்ளார்.
- பிரான்ஸ் OSA 300 மாணவர்களுக்கான A Type கதிரை மேசைகள் ஆசிரியர்க ளுக்கான Lockerகள் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.
- வழமைபோல் இம்முறையும் பல்கலைக் கழகத்திற்கு (2007 A/L) தெரிவா னோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மைதான புனரமைப்பிற் கான ரூபா 44,99775/- திட்ட முன் மொழிவு ஒன்று தயாரிக்கப்பட்டு கொழும் பில் உள்ள கல்வி அபிவிருத்தி நிதியத் திற்கு அனுப்பி உள்ளோம். எனினும் அத் திட்டத்திற்கான நிதி கிடைக்காமையினால் திட்டம் நிறைவேறவில்லை. பாடசாலை யில் உள்ள ஆலய புனரமைப்பிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் போதிய நிதி கிடைக்காமையால் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மேற்படி செயற்பாடுகள் சிறப்பாகவும் விரைவாகவும் செய்வதற்கு பழைய மாண வர் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் லண்டன், பரிஸ், சிட்னி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்ற எமது மாணவர் சங்கக் கிளைகளின் உதவிகள் மற்றும் எமது பழைய மாணவர்களின் தனிப்பட்ட உதவி கள் கல்லூரிச் செயற்பாடுகளுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. எனினும், போதிய நிதி சங்கத்திற்குக் கிடைக்காமையினால் கல் லூரியின் செயற்பாடுகளுக்கு அவசியமான பல திட்டங்களை எம்மால் முன்னெடுக்க முடியவில்லை. எமது சங்கத்தின் செயற்பாடு களுக்கு சகல பழைய மாணவர்களது ஒத் துழைப்பும் காத்திரமான பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

எமது பழைய மாணவர் சங்கத்தைப் பலப்படுத்துவதன் மூலம் பாடசாலைக்குத் தேவையான அவசியமான நல்ல திட்டங் களை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. கடந்த காலங்களில் கல்லூரி யின் அபிவிருத்திக்கு உதவியவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித் துக் கொள்வதோடு வருங்காலத்திலும் அவர்களின் பங்களிப்பு தொடர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

(திருமதி சி. அனந்தசயனன்)
தலைவர்

(திரு.த.தயானந்தன், திரு.க.அஜந்தன்)
இணைச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியாளர்கள்–2008



செல்வன்.பா.நீதுஜன்
The Royal Society or Chemistry -
அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான இரசாயனவியல் கட்டுரைப் போட்டியில் (தமிழ்மொழி மூலம் வெள்ளிப் பதக்கம் பெற்றவர்)
Provincial Leval Winner
3rd Place
Oratory (Impromptu)



தமிழ்த்தினப் போட்டி - 2008
பேச்சு - பிரிவு II
தேசிய மட்டம்
மூன்றாம் இடம்

செல்வி தரண்யா மணிசேகரன்
ஆங்கிலமொழி மூலம் கணிதப்புதிர்
மாகாணமட்டம் - 2008
முதலாம் இடம்

Qualified Participant for
District Level 2008
Creativewriting



செல்வி தர்ஷனா முருகமூர்த்தி
கட்டுரை வரைதலும்
இலக்கியம் நயத்தலும் பிரிவு IV
மாகாணமட்டம் - 2008
முதலாம் இடம்



செல்வன் கேதீஸ்வரன் கௌசிகன்
உப மாகாணம் கணிதப் புதிர் 2008
முதலாம் இடம்
தமிழ்த்தினப் போட்டி பேச்சு III
இரண்டாம் இடம்(மாவட்டம்)
English Competition
Recitation - 3rd Place
Zonel Level



உப மாகாண மட்டம்
கணிதப் புதிர்-2008
செல்வி. கிருபாகரன் விஷ்ணுகா
இரண்டாம் இடம்



District Leval Winner 2008
Ur-10
Keerthika Gnanagurunathan
Copy Writing
2nd Palce



செல்வன் துரைசிங்கம் கயூரன்
இலக்கணப் போட்டி - பிரிவு IV
மூன்றாம் இடம் (மாவட்டம்)



செல்வி கிருஷ்ணா கந்தசாமி
மாவட்ட மட்டத்திற்குத்
தகுதி பெற்றவர்
பேச்சு - பிரிவு V

## தமிழறிவு வினாவிடைப் போட்டி
## மாவட்டம்–இரண்டாம் இடம்



செல்வி கிருஜா விக்னராஜா



செல்வி
நிலானி மகேந்திரன்



செல்வி ரோபிதா சிவபாதம்



செல்வி
ஸ்ரீவாணி இரத்தினராசா



செல்வி தனுஜா ஐயாத்துரை



வலய மட்டத்தில் வெற்றியீட்டி மாவட்டத்திற்குத்
தகுதிபெற்ற மெய்வல்லுநர் வீரர்கள்



சமூக நாடகம் (எதற்கும் ஓர் காலம் உண்டு)
வலயம்-இரண்டாம் இடம்



சிறுவர் நாடகம்
வலயமட்டம் (தெரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச சிறுவர் சித்திரப் போட்டி – 2009
## தேசிய மட்டம்



தரம் 2A
செல்வன் சுதர்சன் கௌதமன்



தரம் 2B
செல்வி சங்கவி புவனேஸ்வரலிங்கம்

## சைவபரிபாலன சபை– அறிவுப் பரீட்சை 2008 தங்கப்பதக்கம்



தரம் 2B
செல்வி நாகேஸ்வரன் பிரவீணா

## சைவபரிபாலனசபைப் பண்ணிசைப் போட்டி 2008 புண்ணிய நாச்சியம்மையார் நினைவாக நடாத்தப்பட்டது,



தரம் 6
செல்வி சகானா மயில்வாகனம்
தங்கப்பதக்கம்

## வலயமட்டம் – சித்திரப் போட்டி 2008



தரம் 1A
செல்வி லிங்கபாலன் தீபிகா
முதலாம் இடம்



தரம் 2A
செல்வி தெய்வேந்திரம் சோவென்யா
முதலாம் இடம்

## தினக்குரல் நிறுவனம் நடாத்திய சதுரங்கப் போட்டி



தரம் 4A
மாவட்டம் முதலாம் இடம்
செல்வி துஷாரா மணிசேகரன்
(ஆங்கிலம் தனிப்பாடல் வலயம்–இரண்டாம் இடம்)



தரம் 2A
மாவட்டம் முதலாம் இடம்
செல்வன் சதானந்தன் லக்ஷன்

## மனைப் பொருளியல் அறிவுப் போட்டி – 2008



தரம் 12D
செல்வி த.தர்சினி
முதலாம் இடம்

## மனைப் பொருளியல் அறிவுப் போட்டி – 2009



தரம் 10D
செல்வி இ.நிருஜா
வலயம் முதலாம் இடம்

## வலயமட்டம் ஆங்கிலப்பாடல் 2008



தரம்3
மூன்றாம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றங்கள் - கழகங்கள் 2009

## உயர்தர மாணவர் மன்றம்

பொறுப்பாசிரியர்கள் : வை. விஜயபாஸ்கர்
விமலதாசன் ஆன் பெலிசியானா
தலைவர் : வெ. வைஷ்ணவி
உதலைவர் : கா. கஜன்
செயலாளர் : ம. கவியரசி
உபசெயலாளர் : ச. நிரோஜன்
பொருளாளர் : சொ. ஜெயசாந்தன்
பத்திராதிபர் : சி. ரோபிதா

## தமிழ் மன்றம்

பொறுப்பாசிரியர் : செல்வி. இராஜேஸ்வரி செனகரத்தினம்
தலைவர் : த. சுகுணராஜா
உபதலைவர் : தி. ரஞ்சித்குமார்
செயலாளர் : சி. ரோபிதா
உபசெயலாளர் : இ. ஸ்ரீவாணி
பொருளாளர் : இ. கௌதமி
பத்திராதிபர் : நி. சர்மி

## ஆங்கில மன்றம்

பொறுப்பாசிரியர் : திரு. வ. உமாசுதன்
தலைவர் : யோ. கார்த்திகா
உபதலைவர் : கு. அர்ச்சனா
செயலாளர் : ம. கஜானா
உபசெயலாளர் : க. கோகுலன்
பொருளாளர் : K. கஜன்
பத்திராதிபர் : த. கஜனி

## இந்து மன்றம்

பொறுப்பாசிரியர் : திரு. பா. பாலமுரளி
தலைவர் : நி. பாபுதரன்
உபதலைவர் : ஈ. றோகீசன்
செயலாளர் : ம. நிலானி
உபசெயலாளர் : அ. சுதாகரன்
பொருளாளர் : செ. மயூரி
பத்திராதிபர் : த. அஜந்தன்

## கிறிஸ்தவ மன்றம்

பொறுப்பாசிரியர் : செல்வி. டெய்சி தேவநாயகி போல்
தலைவர் : த. சுகுணராஜா
உபதலைவர் : அ. நிக்சன்
செயலாளர் : M. திசபெலா
உபசெயலாளர் : சு. தயாளன்
பொருளாளர் : பி. சுயவதி
பத்திராதிபர் : S.அன்ரன்

## விஞ்ஞான மன்றம்

பொறுப்பாசிரியர் : திரு. E.K.V. ஜோன்சன்
திரு. க. வாணி முகுந்தன்
தலைவர் : கா. கஜன்
உபதலைவர் : ச. நிரோஜன்
செயலாளர் : யோ. கார்த்திகா
உபசெயலாளர் : சி. நிசாந்தினி
பொருளாளர் : வெ. வைஷ்ணவி
பத்திராதிபர் : க. கோகுலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிக மன்றம்

பொறுப்பாசிரியர் : திரு. இ. தயாகரன்
தலைவர் : செ. ஜெயசாந்தன்
உபதலைவர் : சு. தர்மிகா
செயலாளர் : பி. கமலிற்றா சுயவதி
உபசெயலாளர் : த. கஜனி
பொருளாளர் : சே. சஞ்சிகா
பத்திராதிபர் : த. வரகுணன்

## சைவ வளர்ச்சிக் கழகம்

பொறுப்பாசிரியர் : திரு. கு. கந்தரூபன்
திருமதி ஜெ. மயில்வாகனம்
தலைவர் : ம. கோகிலன்
உபதலைவர் : செ. சுவேதா
செயலாளர் : சி. யதீசன்
உபசெயலாளர் : கு. நிஷாஞ்சலி
பொருளாளர் : கு. யுவர்ணன்

## சுகாதார மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி சா. கிருபாகரன்
தலைவர் : க. கோகுலன்
செயலாளர் : கு. சசிதரன்
உபசெயலாளர் : பா. கேகயன்
பொருளாளர் : வெ. வைஷ்ணவி

## சமூகக்கல்வி மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி.வ. அமரகுலசிங்கம்
தலைவர் : யோ. ஆரணி
உபதலைவர் : சோ. இராகுலன்
செயலாளர் : இ. மதுசன்
உபசெயலாளர் : தெ. தனுஷா
பொருளாளர் : சு. நிருஜா
பத்திராதிபர் : ஜெ. ஜெயக்கமலன்

## இன்ரறக்ற் கழகம்

பொறுப்பாசிரியர் : திரு. இ. குகானந்தன்
தலைவர் : க. கோகுலன்
உப தலைவர் : பு. கார்த்திகா
செயலாளர் : P. திருமாறன்
உபசெயலாளர் : ஆ. தர்ஷனா
செயற்பாட்டுத் தலைவர் : P. மோகன்ராஜ்.

## சதுரங்கக் கழகம்

பொறுப்பாசிரியர் : திரு. ம. மணிசேகரன்
பயிற்றுவிப்பாளர் : பா. பாலசஞ்சிதன்
தலைவர் : க. கோகுலன்
உபதலைவர் : இ. பகீரதன்
செயலாளர் : பா. ஜெனித்தா
உபசெயலாளர் : வெ. தர்ஷா
பொருளாளர் : யோ. கார்த்திகா
பத்திராதிபர் : நி. சர்மி

## நூலக மன்றம்

பொறுப்பாசிரியர் : செல்வி. அஜிராணி குகநேசன்
தலைவர் : வே. பிரியங்கா
உபதலைவர் : ஆ. காயத்திரி
செயலாளர் : ஜெ. சாதுரியா
உபசெயலாளர் : ஜீ. கஜீவா
பொருளாளர் : ஜெ. கஜானனி
பத்திராதிபர் : ந. விலாசினி

## மனைப்பொருளியல் மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி லோ. சுபேந்திரன்
தலைவர் : ம. வரதாயினி
உபதலைவர் : ப. பகீரதி
செயலாளர் : த. சாந்தரூபி
உபசெயலாளர் : சு. வசுதா
பொருளாளர் : ச. தமயந்தினி
பத்திராதிபர் : கா. சயானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர் போட்டியில் பதக்கங்கள் பெற்ற வீர வீராங்கனைகள் - 2009 தேசியமட்டம்



21 வயதுப் பிரிவு
மகாராசா பார்த்தீபன்
தட்டெறிதல்
ஏழாம் இடம்
மாகாண மட்டம் முதலிடம்

செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில்
தட்டெறிதல் தேசியமட்டம் இரண்டாம் இடம் (வெள்ளிப்பதக்கம்)
தேசிய இளைஞர் தடகளப்போட்டியில் தட்டெறிதல் - தங்கப்பதக்கம்



21 வயதுப் பிரிவு
கீர்த்திகா செல்வராசா
உயரம் பாய்தல்
ஆறாம் இடம்

மாகாணமட்டம் - தங்கப்பதக்கம்
உயரம் பாய்தல் -தங்கப்பதக்கம்
தட்டெறிதல் -தங்கப்பதக்கம்
குண்டுபோடுதல்-தங்கப்பதக்கம்
வெற்றி வீராங்கனை மாகாணம்



19 வயதுப் பிரிவு
முருகதாஸ் கிருஷ்ணா
உயரம் பாய்தல்
ஆறாம் இடம்
ம. மட்டம் - வெள்ளிப்பதக்கம்



19 வயதுப் பிரிவு
தேவராசா மோகுநாத்
கோலூன்றிப்பாய்தல்
நான்காம் இடம்
ம. மட்டம் - தங்கப்பதக்கம்
(நிறச்சான்றிதழ் பெற்றவர்)



சிவமகராசா சாந்தகுமார்
21 வயதுப் பிரிவு
கோலூன்றிப்பாய்தல் -
வெள்ளிப்பதக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்டத்தில் பதக்கங்கள் பெற்றோர்



செல்வன் மகேஸ்வரன் கோகிலதாஸ்
21 வயது பிரிவு
நீளம் பாய்தல் - தங்கப்பதக்கம்
முப்பாய்ச்சல் - தங்கப்பதக்கம்



செல்வன் முருகையா டயர்தன்
21 வயது பிரிவு
நீளம் பாய்தல் - வெள்ளிப்பதக்கம்



செல்வன் நவரட்ணம் நிசாந்
21 வயது பிரிவு
முப்பாய்ச்சல் - வெண்கலப்பதக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்டத்தில் பதக்கங்கள் பெற்றோர்



செல்வன் சிவமகராசா சாந்தகுமார்
21வயதுப் பிரிவு
கோலூன்றிப் பாய்தல்
வெள்ளிப்பதக்கம்



செல்வி கௌதமி பசுபதி
21வயதுப் பிரிவு
ஈட்டி எறிதல்
வெள்ளிப்பதக்கம்



செல்வி துஷிக்கா சந்திரசேகரம்
21வயதுப் பிரிவு
குண்டு போடுதல்
வெள்ளிப்பதக்கம்



செல்வி சகானா குகதாஸ்
17வயதுப் பிரிவு
தட்டெறிதல்
தங்கப்பதக்கம்



செல்வி சிந்துஜா மனோகரன்
17வயதுப் பிரிவு
200m
வெண்கலப் பதக்கம்



செல்வி அனித்தா ஜெகதீஸ்வரன்
13வயதுப் பிரிவு
நீளம் பாய்தல்
வெண்கலப் பதக்கம்



13வயதுப் பெண்கள் 4X100 அஞ்சல்,
தங்கப் பதக்கம்
இடமிருந்து வலம்
ரேஞ்சனா மோகனப்பிரபன்
லக்சியா ராசன், சிந்துஜா மனோகரன்,
அனித்தா ஜெகதீஸ்வரன்,
கம்சாயினி நித்தியானந்தன்



செல்வி பவதாரணி பிரதீபன்
11வயதுப் பிரிவு
உயரம் பாய்தல்
வெள்ளிப் பதக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் தொழிநுட்ப மன்றம்

பொறுப்பாசிரியர் : செல்வி. சுமதி சுந்தரலிங்கம்
தலைவர் : சௌ. ஸ்ரீகர்சன்
உபதலைவர் : க. கோகுலன்
செயலாளர் : அ. ரதீபனா
உபசெயலாளர் : பு. திவாகரன்
பொருளாளர் : கு. சகானா
பத்திராதிபர் : அ. கரிதாயன்

## சாரணர்

குழுச்சாரணத்
தலைவர் (G.S.L) : திரு.சி. சிவகரன்

1) சாரணர்
சாரணத்
தலைவர்கள் : திரு. ச. சுரேன்
(S.L) : திரு. கா. சுஜீவன்
திரு. க. இதயராஜ்
துருப்புத்
தலைவர் : செல்வன் பா. கேகயன்

2) சாரணர் (பெண்)
சாரணத்
தலைவர்கள் : திருமதி அ. குகதாசன்,
(S.L) : செல்வி. மு. பிரகாசினி
திருமதி தே. வாமதேவன்
துருப்புத்
தலைவி : செல்வி. சி. கதுசியா

3) குருளைச் சாரணர்
குருளைச் சாரணத் தலைவர்கள்
(C.S.L) செல்வி. டெய்சி தேவநாயகிபோல்
திருமதி. சி. மதிசீலன்
திருமதி. ஜெ. மயில்வாகனம்
குருளை மந்தைத்
தலைவர் : செல்வன் சி. ஜெயகரன்

4) குருளைச் சாரணர் (பெண்)
குருளைச்சாரணத்
தலைவர்கள் : திருமதி. சி. சயந்தன்
(C.L.S) திருமதி. அ. சிவகரன்
செல்வி. வ. சுபாசினி
செல்வி. பு. பகீரதி
செல்வி. ச. கௌதமி
குருளை மந்தை
தலைவர் : செல்வி. ம. துஷாரா
செல்வி. ஜோ. ஜொனிபா

## ஆசிரியர் கழகம்

தலைவர் : திரு. த. தவராஜா
உபதலைவர் : திருமதி.வ.அமரகுலசிங்கம்
செயலாளர் : திரு. சி. சிவகரன்
பொருளாளர் : திருமதி. தே. வாமதேவன்
நிர்வாக
உறுப்பினர்கள் : திரு. வை. விஜயபாஸ்கர்
திருமதி. சி. சயந்தன்
திருமதி. த.கணேசானந்தன்
திரு.இ. தயாகரன்
திரு.செ.செந்தில்வேல்.

## Scrabble club

Patron : Mrs. S. Anandasayanan
Vice Patron : Mrs. S. Pathmanathan
Teacher-In-Charge : Mr. V. Umasuthan
President : Mas.R. Janarthanan
Vice President: Mas.K. Kowsikan
Secretary : Mas.S.Sathasivakumaran
Co-Secretary: Miss.T.Methusha
Committee Members
Mas.K.Sinthuan
Mas.S.Jeyarajah
Mas.R.Thuranthan
Mas.I.Kowribanujan
Mas.S.Abiram
Miss.N.Brintha



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவையில் வெள்ளிவிழாக் கண்ட ஆசிரியர்கள்

| ஆசிரியர் விபரம் | சேவை |
|---|---|
| 1) திருமதி பத்மஜா லோகநாதன் – பகுதித்தலைவர்<br>*மகாஜனக் கல்லூரி சேவையில் இவ்வருடம் வெள்ளிவிழாக் கண்டவர்* | 36 |
| 2) திருமதி. சௌபாக்கியகௌரி பத்மநாதன் – பிரதி அதிபர்<br>*மகாஜனக் கல்லூரி சேவையில் அடுத்த வருட நூற்றாண்டு விழாவில் வெள்ளிவிழாக் காண்பவர்.* | 35 |
| 3) திருமதி. சிவமலர் அனந்தசயனன் – அதிபர் | 33 |
| 4) திருமதி. பகீரதி கணேசதுரை | 33 |
| 5) திருமதி. சௌமியாதேவி விசுவலிங்கம் (உதவி அதிபர்) | 31 |
| 5) செல்வி. இரஞ்சிதமலர் சம்பந்தர் | 28 |
| 6) திருமதி. லோகேஸ்வரி சுபேந்திரன் | 28 |
| 7) திருமதி. தெய்வீகசௌந்தரராணி சௌந்தரராஜன் – பகுதித்தலைவர் | 26 |

- ❖ **"Mother"** is the only word that everybody male or female or an animal constantly utters either in joy or sorrow.
- ❖ It is a word of consolation.
- ❖ It is a comforting word.
- ❖ It heals several mental wounds.
- ❖ It is an anodyne.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2008

| | | புள்ளி |
|---|---|---|
| 1. | சிவசுப்பிரமணியம் குணமேகலா | 157 |
| 2. | கேதீஸ்வரன் கவுணியன் | 139 |
| 3. | புவனேந்திரன் கம்ஷத்வனி | 134 |
| 4. | ஜெயகுமார் விதுஷன் | 132 |
| 5. | சொலமன் நிதர்ஷன் | 132 |
| 6. | கதிர்காமநாதன் துளசிகன் | 131 |
| 7. | கதிர்காமலிங்கம் டிதுர்ஷன் | 130 |
| 8. | தவராஜா கோபிகன் | 130 |
| 9. | தவேந்திரநாதன் திலக்ஷன் | 126 |
| 10. | தவபாலகிருஷ்ணன் தர்ஷிகா | 126 |
| 11. | விஜயகுமார் சங்கீத் | 124 |
| 12. | கந்தசாமி கோகுல் | 124 |
| 13. | சிங்கராசா திலக்ஷன் | 124 |
| 14. | லிங்கபாலன் விக்னேஸ் | 122 |
| 15. | பாலச்சந்திரன் கோசலா | 114 |
| 16. | மகேஸ்வரன் சிவகஜன் | 114 |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009

| | | புள்ளி |
|---|---|---|
| 1. | பவளசீலன் சர்மிகன் | 177 |
| 2. | சிவநாதன் ஜெயதரன் | 159 |
| 3. | துளசிதாசன் கேசிகா | 156 |
| 4. | பிரதீபன் பவதாரணி | 154 |
| 5. | அகிலலோகநாயகம் வித்தகி | 153 |
| 6. | சத்தியலோகேஸ்வரன் லிங்கேஸ்வரன் | 152 |
| 7. | தெய்வேந்திரம் கிரியந்தி | 149 |
| 8. | சிறீதரன் சஜீபனா | 146 |
| 9. | தர்மராசா பிரக்ஷனா | 146 |
| 10. | பரராஜசிங்கம் யுவராஜ் | 141 |
| 11. | செல்வகுமார் டிலோஜன் | 141 |
| 12. | சிவநேசன் சங்கவி | 140 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) பரீட்சை 2008
## மிகச் சிறந்த பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| 1. | புனித தயாபரன் திருமாறன் | - 9A |
| 2. | தர்ஷனா முருகமூர்த்தி | - 8A, B |
| 3. | தர்ஷா வெற்றிவேல் | - 8A, C |
| 4. | நடராசா கிரிஷாந் | - 7A, 2B |
| 5. | லாவண்யா நகுலேஸ்வரன் | - 7A, 2B |
| 6. | துரைசிங்கம் கயூரன் | - 7A, B, S |
| 7. | வாசுதேவன் சுவேதாரண்யன் | - 7A, B, S |
| 8. | தாரணா முருகையா | - 7A, C, S |
| 9. | சக்திவேல் யதுகுலன் | - 6A, 2B, C |
| 10. | லக்ஷாயினி குணசீலன் | - 6A, 2B, C |
| 11. | மிதிலானி புண்ணியலிங்கம் | - 6A, 2B, S |
| 12. | ஜெகநாதன் பிறேமன் | - 6A, B, C, W |
| 13. | ஆறுமுகம் கார்த்தீபன் | - 5A, 2B, C, S |
| 14. | கௌரிதரன் கபில்ராம் | - 5A, 2B, C, S |
| 15. | சச்சிதானந்தசிவம் கோகிலன் | - 5A, 3B, W |
| 16. | செந்தர்ராஜன் ஸ்ரீ'ர்சன் | - 5A, 2B, C, S |
| 17. | சேனாதிராசா அஜிதாயினி | - 5A, B, 2C, S |
| 18. | தவேந்திரநாதன் தர்ஷிகா | - 5A, 3B, S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்களுடன் ஒரு பகிர்வு

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் அதிஉயர் திறமைச்சித்தி பெற்ற மாணவனின் உள்ளத்திலிருந்து

# கல்வி எனும் கரையற்ற கடலில் பயணிக்கும்போது....

வாழ்வியல் வசந்தங்கள் யாவும் தியாகங்கள் ஊடாக உதிக்கின்றன. எதிர்கால வசந்த கனவுகள் கனவுளாகவே நிலைத்திடாது நிஜயங்களாக மலர்ந்திட நிகழ்காலத்தில் நிகழும் கருமங்கள் துணையாகின்றன. "மாணவன்" எனும் நிகழ்காலப் பயணத்தில் நடிக்கின்ற நாம் வாழ்க்கை எனும் நாடகத்தின் ஆரம்ப அத்தியாயங்களில் நடிகர்களாகப் பயணிக்கும் இவ்வேளையில் எதிர்காலம் ஒளிமயமாகிட கல்வி எனும் கலங்கரை விளக்கு வழிகாட்டியாக அமையவேண்டும்.

நாம் இலங்கையராகப் பிறந்ததில் ஓர் அதிஷ்டம் இலவசக் கல்விமுறை. திறமைக்காக உருவாக்கப்பட்ட இக்காலத்தில் எம்மை நாம் வளர்த்திட அரும்பாடுபட்டாக வேண்டும். அவ்வகையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பாலர்க்கு ஒரு பாவச்சுமை. சுமைதாங்கிகளாகத் தடைதாண்டி தரம் 6இல் காலடி எடுத்து வைத்தபின் நம் கல்வியைத் தொடர்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் வழங்கப்படுகிறது.

சாதாரணதரப் பரீட்சை அகில இலங்கை மட்டத்தில் நடைபெறுவதால் பரீட்சைக்காக அஞ்சுவதோ எதிர்கொள்ள பின் நிற்பதோ பயனற்ற ஒரு விடயம். தரம் 6 முதல் தரம் 10 வரை எவ்வாறு தவணைப் பரீட்சைகளை முகம்கொடுத்து சித்தியடைந்ததைப்போல் இப்பரீட்சையையும் நோக்குவது பொருத்தமானதே.

ஆனாலும் தரம் 10இல் காலடி எடுத்து வைக்கும்போது பிரதான 6 பாடங்களில் எவை கடினமான பாடப்பரப்புகள் என்பதை ஆசிரியர்கள், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஊடாக இனங்கண்டு அவற்றில் பிரத்தியேக கவனம் எடுத்துக் கற்றல் வேண்டும். தெரிவுப் பாடங்கள் தொடர்பான தீர்மானம் மிக முக்கியமானது. என் தோழன் தெரிவு செய்த பாடத்தை நானும் தெரிவு செய்யவேண்டுமென நினைத்தல் கூடாது. ஆசிரியர்கள், பெற்றோர்களின் வழிகாட்டலில் சுயசிந்தனையுடன் பாடத்தெரிவில் ஈடுபடவேண்டும். இத் தெரிவுப் பாடங்கள் உயர்தரத்தில் சில துறைகளைத் தெரிவு செய்ய அடிப்படையாக அமைவதை மாணவர்கள் கருத்திற்கொள்ள வேண்டும்.

சாதாரணதரப் பரீட்சையில் ஏட்டுக் கல்வி மட்டும் முதன்மையானது அல்ல, சில இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடல், புதிய அனுபவங்களை, அறிவு சார் விடயங்களைப் பெறுவதற்கு வழிவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. நேர் முகாமைத்துவம், சீரான திட்டமிடல் எனும் பண்புகளை விருத்தி செய்தால் கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் என இரண்டையும் சீராக வழிப்படுத்தமுடியும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடு களின்போது எனது பாடசாலை கல்வி நாட்கள் சில பாதிக்கப்பட்டன. சில முன் னோடிப் பரீட்சைகள் தவறவிடப்பட்டன. எனி னும் எம் கல்லூரி ஆசிரியர்கள் இத் தவற விடப்பட்ட கற்றல் செயற்பாடுகளை எமக்கு மீண்டும் ஏற்படுத்தித் தமது வேலைப் பளுமிகு நேரங்களை எமக்காகத் தியாகம் செய்தமை நன்றிக்கண் கொண்டு நோக்க வேண்டிய விடயமாகவும், கல்வி தடைப்படு கிறதே என அஞ்சாது இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடவும் அடிப்படை யாக அமைந்தது.

எம்மில் பலர் பரீட்சை நெருங்கும் வரை பாடப் புத்தகங்கள், கொப்பிகள் என்ப வற்றிற்கு மூடுவிழா வழ்ங்கிவிட்டு இறுதி யில் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு கற்பார்கள். சாதாரணதரப் பரீட்சைக்கு தரம் 10 உடன் சேர்த்து 24 மாதங்கள் வழங் கப்பட்டு அதில் கற்கமுடியாததை பரீட் சைக்கு 24 மணித்தியாலங்களின் முன் கற்பது பொருத்தமானதா? இவ் விடயத் தில் நானும் விதிவிலக்காய் அமைய வில்லை. தரம் 11இல் இரண்டாம் தவணைப் பரீட்சை நடைபெறும்வரை எனது பாடப் புத்தகங்கள் பலவும் திறப்புவிழா காண ஏங்கிக்கொண்டிருந்தன.

எமக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இப் பாடத்திட்டம் பரீட்சை நோக்கில் இருந்து சில விடயங்களில் வேறுபட்டதாக அமைந் தாலும் அவற்றின் அடிப்படையில் வாழ் வியல் சார்ந்த பயிற்சிகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. எனவே பரீட்சை மையக் கல்வி என்பது முற்றுமுழுதாக முக்கியப்படுத்தப் படவில்லை. எனவே எமது சுமைகள் சில கடந்த காலங்களில் இருந்து குறைக் கப்பட்டு அனுபவங்கள், அவதானங்கள் என்பன பரீட்சைக்கு அடிப்படையாக அமைந்ததால் “ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது” எனும் பழமொழி அர்த்தமாக் கப்பட்டுள்ளது.

பரீட்சை நோக்கில் சிந்திக்கும்போது தனியே பாடப் புத்தகங்கள் மட்டும் பரீட் சையை எதிர்கொள்ளப் போதுமானவை அல்ல. குறிப்பாக பயிற்சி வினாக்கள், ஆசிரியர்கள் வழங்கும் மீட்டல் குறிப்புகள் கடந்தகால வினாக்கள் என்பன அவசிய மானவை. மேலும் பாடசாலை வளங்களான விஞ்ஞான ஆய்வுகூடம், மைதானம், நூலகம் என்பன பல மாணவர்களினால் மறக்க அல்லது மறுக்கப்பட்ட இடங்களா கும். இங்கும் பரீட்சை வினாக்கள் பல மறைந்துள்ளன என்பதை மறந்துவிட வேண்டாம்.

பரீட்சையில் எமது வெற்றிக்காக எம் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், எம் கல்லூரி முன்னை நாள் ஆசிரியர்கள் எனப் பலர் அயராது உழைத்தனர். மீட்டற் பரீட்சைகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் என்ப வற்றின் மூலம் நாம் சிறந்த பெறுபேறுகள் பெறுவதற்கு வழிவகை செய்தமை நன்றி யுடன் நோக்கவேண்டிய விடயமாகும்.

இன்று எமது கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல குடாநாட்டு மாணவர் பலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலப் பாடத்தை ஓர் கற்கமுடியாத சுமையாக நோக்குகின்றனர். இதற்குக் காரணம் அது வேற்று"மொழி"ப் பாடம் என்பதாலாகும். ஒரு மொழியைக் கற்றல் செயற்பாடுகளால் மட்டும் விருத்தி செய்ய முடியாது. எனவே ஓய்வுள்ள சந்தர்ப்பத்தில் ஆங்கிலப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் வாசிப்பதன் மூலம் ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ள முடியும்.

சிறந்த தயார்ப்படுத்தல், திட்டமிடல் என்பன சாதாரண தரத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற வழிசெய்யும். ஆனாலும் சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்றால் மட்டும் போதாது. அதேவேளை நல்ல பெறுபேறு கிடைக்கவில்லை என மனம் தளரவும் கூடாது. வாழ்வின் வசந்த நிலையைத் தீர்மானிக்க உயர்தரப் பரீட்சை காத்து நிற்கிறது. எனவே சாதாரண தரத்தில் விசேட சித்தி பெற்றவர்கள் சாதனையாளர்கள் எனக் கருதவும் முடியாது. சிறந்த பெறுபேறுகளைப் பெறத் தவறியவர்கள் வாழ்வில் வெற்றிபெறத் தவறியவர்கள் என சாதாரணதரப் பரீட்சை முடிவைத் வைத்துத் தீர்மானிக்கவும் முடியாது.

எங்கள் வெற்றிக்கும் உயர்விற்கும் உழைத்த எம் கல்லூரிச் சமூகத்திற்கும் எமக்கு கல்வி, ஒழுக்கம் என இரண்டையும் போதித்த ஆசிரியர்களுக்கும், கற்றல் செயற்பாடுகளில் உறுதுணை வகித்த அனைத்து உள்ளங்களிற்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பரீட்சைகள், இணைப்பாடவிதான, கற்றல் செயற்பாடுகள் என அனைத்திலும் மென் மேலும் பெறும் வெற்றிகள் ஊடாக மகாஜன மாதா மனம் மகிழ்வு பெற உழைத்திடுவோம்.

**புனித தயாபாரன் திருமாறன்**
2011 உயிரியல் பிரிவு.

அகம்பாவம் என்பது முட்டாள்தனத்தின் வலி தெரியாமல் இருக்கச் செய்யும் மருந்தாகும்"

**- நியூட் ரோக்னே**

வெற்றியாளராக ஆவதற்கு முயற்சிப்பதைவிட பண்புடையவராக முயற்சியுங்கள்.

**- அல்பெர்ட் ஐன்ஸ்டின்**



**உங்கள் வாழ்க்கையின் எந்தச் சவாலையும் பூரணமாக வெற்றி கொள்ளத் தேவையான அனைத்துத் திறன்களும் உங்களிடம் அமையப் பெற்றுள்ளது. உங்களிற்குத் தேவையானது எல்லாம் அடையவேண்டும் என்ற ஒரு தேவையேயாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகப் பிரிவில் உயர் பெறுபேறு பெற்ற மாணவியின் சிந்தனைத் துளிகள்

பிரியதர்ஷினி இராமச்சந்திரன் ஆகிய நான் 2009 க.பொ.த. (உ/த) வர்த்தகப் பிரிவில் 3A இனைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 19வது இடத்தினைப் பெற்று எனது பாடசாலைக்குப் பெருமை சேர்த்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

யா/மகாஜனக் கல்லூரியில் தரம் ஒன்றில் இருந்து உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்ந்த புள்ளியைப் பெற்றுச் (145) சித்தியடைந்தேன். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த திருமதி அப்பாத்துரை, செல்வி. டெய்சி தேவநாயகி, திருமதி சிவசக்தி சயந்தன் ஆகிய ஆசிரியர்கள் என் மனதில் என்றும் இடம்பிடித்தவர்கள். க.பொ.த சாதாரண தரப்பரீட்சையிலும் திறமை யான சித்தியைப் (8A2B) பெற்றுக் கொண்டேன். குறிப்பாக, தரம் 6இலிருந்து 11 வரை எனக்கு விஞ் ஞான பாடம் கற்பித்த செல்வி. பத்மலோஜினி ஆசிரியரை என்றுமே மறக்கமுடியாது. ஆங்கிலம் கற்பித்த பத்மநாதன் ஆசிரியரும் சிறப்பாக என்னை வழிகாட்டிப் பல ஆங்கிலதினப் போட்டிகளிலும் வெற்றிபெற உழைத்தவர்கள். க.பொ.த சாதா ரண தரத்தில் வர்த்தகத்திற்கு B சித்தியைப் பெற்ற போதும் வர்த்தகத் துறையையே உயர்தரத்தில் தெரிவு செய்தேன். ஆசிரியரும் நண்பர்களும் விஞ்ஞானத் துறையையே தெரிவு செய்யும்படி கூறினர். எனினும் நான் வர்த்தகத் துறையில் உள்ள விருப்பங் காரணமாக அதனையே தெரிவு செய்தேன்.

வணிகம், பொருளியல், கணக்கீடு ஆகிய 3 பாடங்களையும் எனக்குக் கற்பித்த ஆசிரியர் களை என்றுமே மறக்கமுடியாது. மூவரும் திறமையாகவே எனக்குக் கற்பித்தார்கள். எந்த ஒரு சந்தேகத்தையும் ஞானேஸ்வரன் ஆசிரியரை யும், தயாகரன் ஆசிரியரையும் கொண்டு தீர்த் துக் கொள்ள முடியும். மேலும் நான் ஆரம்பத்தில் வணிகக் கல்வியில் குறைவாகப் புள்ளிகள் எடுப்பதால் துரைசிங்கம் ஆசிரியர் எனக்குக் குறை கூறுவதுண்டு. எனினும் இறுதிப் பரீட்சை யில் நான் அவர் கற்பித்த பாடத்தில் கூடிய புள்ளியைப் பெறவேண்டும் என்ற அவாவில் பல பல்தேர்வு வினாக்கள் மற்றும் ஒரு அலகில் உள்ள அனைத்து விடயங்களையும் நுட்பமா கக் கற்றேன்.

பரீட்சையில் என்ன கேள்வி வந்தாலும் விடை எழுதக்கூடிய வல்லமையைப் பெற்றேன். இறுதியில் கூடிய புள்ளியைப் பெற்று எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்குப் பெருமை சேர்த்தேன். மேலும் நான் மாணவ தலைவியாகவும் காணப் பட்டதால் பல பொறுப்புகளுக்குத் தலைமை தாங் கினேன். விளையாட்டுத்துறை, கலைத்துறை என்பவற்றிலும் நான் பங்குபற்றினேன்.

இறுதியாக எனது மனதில் ஆழமாகப் பதிந்த சம்பவம். உயர்தரப் பரீட்சைக்கு ஒரு மாதம் உள்ள அளவில் பாடசாலைக்கு வந்த போது திரு. சயந்தன் ஆசிரியர் அவர்கள் என்னைக் கண்டு கதைத்தபோது "நீர் மாணவ தலைவியாகவும் இருக்கின்றீர் உயர்தரத்தில் 3Aஇனைப் பெற்றால்தான் உமக்குப் பெருமை" எனக் கூறினார். இவரது இக்கூற்று என்னை மேலும் மேலும் கற்கவைத்தது. அவர் கூறியது போன்றே 3A இனைப் பெற்றுக்கொண்டேன்.

இவ்வாறு நான் உயர்ந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு எனக்குதவிய அதிபர் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இவ்வாறான உயர்ந்த பெறு பேறுகள் இனிவருங் காலங்களிலும் தொடர்ச்சி யாக எனது பாடசாலைக்குக்கிடைக்க வேண்டு மென எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டுகின்றேன்.

**பிரியதர்ஷினி இராமச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் வரிசையில் கலைப்பிரிவு மாணவனின் சிந்தனை

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் திரு.திருமதி கிருபாலசிங்கம் – கலாமதிக்கு மகனாகப் பிறந்தேன். ஆரம்பப் பிரிவை யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் யா/அருணோதயக் கல்லூரியிலும், 6–9 வரை யா/பன்னாலை சேர். கனகசபை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் பயின்றேன். இன்று உயர் கல்வியில் உயர் பெறுபேறான 3A எடுப்பதற்கு எனக்கு ஆரம்பக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அடிப்படை வித்துக்கள் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.

தரம் 9இல் இருந்து க.பொ.த. உயர்தரம் வரை பரீட்சை எடுக்கும்வரை நான் மகாஜனக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்றேன். நான் மகாஜனக் கல்லூரிக்கு வந்த காலத்தில் இருந்து எனக்குப் பாடம் கற்பித்த ஆசிரியர்கள் என்னை இனங்கண்டு கொண்டு அவர்கள் என்னைக் கல்வியில் ஆர்வம் ஏற்படும் வகையில் எனக்குத் தட்டிக் கொடுத்தார்கள். அவர்களை மனதார வணங்குகின்றேன்.

க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் அதிவிசேட சித்திகள் பல பெற்றும் நான் கலைப் பிரிவை விருப்பத்துடன் தெரிவு செய்தேன் நான் உச்சப் பெறுபேறைப் பெற்று மிக உயர்ந்த நிலையை அடைவதற்காக புவியியல் அரசறிவியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களைத் தெரிவு செய்தேன். எனது பாடசாலைக் காலத்தில் பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்றதில் பெற்றோரின் பங்கு உண்டு. பாடசாலையில் கல்வி கற்கும்போது ஆர்வத்துடன் ஈடுபடுவேன். ஓய்வு நேரங்களில் கூடக் கற்றலில் ஈடுபட்டேன். அதற்கு என்னுடன் இணைந்து நண்பர்களும் ஈடுபட்டார்கள். அதன் மூலம் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வேன். நான் அன்று கற்கும் விடயங்களை அன்றே கற்று அதில் ஏற்படும் சந்தேகங்களை உடன் ஆசிரியர்களிடம் கேட்பதுண்டு. இதற்கு எனக்கு தனியார் கல்வி நிலையங்களும் உதவின.

ஒவ்வொரு பகுதி கற்று முடிந்தவுடனும் அப் பகுதியில் உள்ள கடந்தகால வினாவிடைகளைப் பயிற்சி செய்து பார்ப்பேன். இது எனக்குப் பரீட்சை மண்டபத்தில் வினாக்களுக்கு விடை எழுத இலகுவாக இருந்தது. அத்துடன் மூன்று பாடங்களுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்து நேர அட்டவணை தயாரித்து அதற்கு இணங்கக் கற்றமையால் 3 பாடங்களிலும் அதியுயர் பெறுபேறு பெறமுடிந்தது. மாணவர்களே நீங்களும் பாடத் தெரிவில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் உங்களது எதிர்கால நோக்கை நிறைவு செய்யக்கூடிய வகையில் பாடத்தைத் தெரிவு செய்யுங்கள். அன்று அன்றே கற்ற பாடத்தை அன்றே படியுங்கள். பாடப் பகுதியின் சில பகுதிகளைப் படிக்காது முழுமையாகப் படியுங்கள். உங்களுக்கு எற்படும் சந்தேகத்தை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளுங்கள். கற்றலுக்கு அதிகளவு நேரத்தை ஒதுக்குங்கள்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சை என்பது போட்டிப் பரீட்சை ஆகும். ஒவ்வொரு புள்ளியும் போட்டி போட்டுச் சேகரிக்கவேண்டிய நிலை உள்ளது. இதைப் பற்றி அனைத்து விடயங்களும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். உச்சப் பெறுபேற்றை விட உயர் புள்ளியைப் பெறவேண்டியுள்ளது. உயர் பெறுபேறு பெறக் காரணமாய் இருந்த எனது பெற்றோர்களையும் சகோதரர்களையும் என்றும் மனதில் இருத்திக் கொள்வேன். இத்தகைய உயர் பெறுபேற்றைப் பெறக் காரணமாய் அமைந்த மகாஜன மாதாவை என்றும் நான் போற்றி வணங்குவேன். மற்றும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

**கிருபாலசிங்கம் ரஜீவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பிரிவில் உயர்பெறுபேறு பெற்ற மாணவியின் உள்ளத்தில் உதிர்ந்தவை

ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பது நல்லதொரு பெறுபேறு தான். எனக்கு 3A என்றவுடன் படித்ததற்கேற்ற பலனைப் பெற்றுவிட்டோம் என்ற எண்ணம் என்மனதில் தோன்றியது. எத்தனையோ கல்லூரிகள் என்னை வளப்படுத்தியிருந்தாலும் என்னை உலகறிய உயர்த்தியது மகாஜன மாதா என்பதைப் பெருமையுடன் நினைத்துக் கொள்கின்றேன்.

நான் எனது ஆரம்பக் கல்வியை யா/கந்த ரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆரம்பித்து தரம் 7இலிருந்து உயர்தரம் வரை மகாஜனா அன்னையிடம் கற்றுக்கொண்டேன். முதன் முதலாக மகாஜனவிற்குள் நுழையும் போது என்னையறியாமலே என்னுள் ஒருவித உற்சாகம் தோன்றியது. நான் பாடசாலைக்குச் சேர்ந்த காலம் திரு.பொ. சுந்தரலிங்கம் அவர்கள் அதிபராக இருந்த காலம். அவர் என்னை $7^{B}$க்கு அனுமதித்து அடுத்த தவணை கூடிய புள்ளிகள் பெற்று 'A' டிவிசனிற்கு செல்ல வேண்டும் என்று கூறினார். அதுபோல நானும் படித்து A வகுப்பிற்குச் சென்றுவிட்டேன். அன்றிலிருந்து O/L வரை எமது வகுப்பாசிரியராக இருந்தவர் செல்வி பத்மலோஜினி ஆசிரியர் அவர்கள். க.பொ.த. சா/த பரீட்சையில் மாணவர்கள் நல்ல பெறுபேற்றினைப் பெறவேண்டும் என்பதற்காக எங்களை ஊக்குவித்தார். 5Aஇற்கு மேலே எடுத்தால் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அடிக்கடி கூறி எங்களை வழிப்படுத்தினார். நானும் ஆர்வத்துடன் படித்தேன். ஆனால் 4A, 2B, 4C என்ற பெறுபேறுதான் கிடைத்தது. மிகவும் வருத்தப் பட்டேன். அன்றிலிருந்து நினைத்தேன் உயர்தரத்தில் நல்லதொரு பெறுபேறு பெற்று மகாஜன சாதனையாளர்களின் வரிசையில் நானும் ஒருவராக மிளிரவேண்டும் என்று. உயர்தரத்தில் கலைத்துறையினைத் தெரிவு செய்து தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன்.

நான் இப் பாடத் தெரிவினை மேற்கொண்ட போது இப்பாடங்கள் எடுத்தால் நல்ல "Z" புள்ளி பெறமுடியாது என எண்ணினேன். ஆனால் நான் ஆசிரியர்களைக் கேட்டபோது அவர்கள் நல்ல புள்ளிகள் பெற்றால் நல்ல Z புள்ளி பெறமுடியும் என்று கூறினார்கள். எனக்கு 1.7327 என்ற "Z" புள்ளி கிடைத்தது.

**"போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் உன்வழி எதுவோ அவ்வழி நீ செல்"** என்று எமது ஆசிரியை அடிக்கடி கூறுவார். அதுபோலவே யார் என்ன குறை சொன்னாலும் அதனைப் பொருட்படுத்தாது படித்தேன். எனக்கு இப்பெறுபேறு கிடைப்பதற்கு எனது ஆசிரியர்கள் முக்கியமானவர்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். உயர்தரத்தில் எனது தமிழ்ப்பாட ஆசிரியரும், வகுப்பாசிரியரும் செல்வி. இராஜேஸ்வரி செனகரத்தினம் ஆவார். அவர் எங்களைச் சகல போட்டிகளிலும் பங்குபற்றும்படி கூறுவார். வெற்றி பெறாவிட்டாலும் சரி; பங்குபற்ற வேண்டும் என்று கூறுவார். தமிழறிவுப் போட்டியில் எங்களில் 5 பேரைத் தெரிவு செய்து ஊக்குவித்து தேசிய மட்டத்தில் 1ம் இடம் பெறுமளவிற்கு ஊன்றுகோலாக விளங்கியவர். என்றுமே மாணவர்களின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணிப்பவர்.

அளவையியல் ஆசிரியர் திரு. சு. சயந்தன் அவர்கள். அவரைக் கண்டாலே எங்களுக்கு ஒரு பயம் தோன்றும். அவரது பாடநேரத்தில் ஒரு குண்டூசி விழுந்தாலே சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதியாக இருக்கும். மாணவர்களின் முன்னேற்றத்திற்குத் தன்னை அர்ப்பணிப்பவராகக் காணப்படுவார். பாடசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபடுபவர். நாடக ஆசிரியை திருமதி. பகீரதி கணேசதுரை மகாஜன மாதாவே வேற்றுருவம் தாங்கி வந்ததோ என ஐயுறும் அளவிற்குச் சாந்தகுணம் படைத்தவர். மாணவர்கள் பாடசாலையில் மட்டுமல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலும் நற்பிரஜைகளாக வரவேண்டும் என்று கூறி நல்வழிப்படுத்துவார்.

விளையாட்டுக்களில் ஈடுபட்டால் படிக்க முடியாது என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் அவ்வாறு இல்லை என நிரூபிப்பவர்கள் செல்வி. இ. சம்பந்தர் ஆசிரியையும் திருமதி. உதயா ஆசிரியையும் எனக்கு விளையாட்டுத் துறையிலும் ஓரளவு ஆர்வம் இருந்தது. வலைப் பந்தாட்டத்தில் கோட்டம், வலயம் வரை சென்று 2ம், 3ம் இடங்களைப் பெறுவோம்; எனக்கு இப்பெறுபேறு என்றதுமே இவ்விரு ஆசிரியர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

எனக்கு இப்பெறுபேறு கிடைப்பதற்கு எனது நண்பர்களும் காரணிகளாவர். உனது நண்பன் யார் என்று கூறு நான் உன்னைப் பற்றிக் கூறுவேன்" என்று ஆன்றோர்கள் கூறுவார்கள். எனது நண்பர்கள் கிடைத்தற்கரியவர்கள். எனக்கு வேண்டிய புத்தகங்கள், குறிப்புக்கள் எல்லாம் தந்துதவுபவர்கள். அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது பெறுபேற்றில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனது பெற்றோர், சகோதரிகள் அனைவருமே முக்கியமானவர்கள் எனக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

வெல்லுக மகாஜன மாதா!

**செல்வராசா குகப்பிரியா**

## 2008ம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் மூன்றாமிடம் பெற்ற பேச்சு (பிரிவு II)

## சூழற் கல்வியின் அவசியம்

உலகைப் படைத்த இறைவன் உலகில் வாழும் உயிர்கள் நல்லபடி வாழவும் வழி அமைத்துக் கொடுத்துள்ளான் என்பது பெரும் பேருண்மையாகும். வாழ்க்கைக்கு இறைவன் காட்டிய வழிகளில் இயற்கை வளங்கள் மிக மிக முக்கியமானவை என்பதை மறுப்பார் யார்? பூமித்தாய் தனது அகத்திலும் புறத்திலும் இயற்கை வளங்களைச் சுமந்து நிற்கிறாள். பூமியைப் பிளந்து நாம் பெறும் இயற்கை வளங்கள் பெறுமதிமிக்கவை. இன்று உலக மக்களை ஆட்டிப் படைக்கும் எண்ணெய் வளங்கள், நிலக்கரி, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்னும் பஞ்சலோகங்கள் நிலத்தாயின் அறக்கொடைகளே. இவை நிலத்தாய் எமக்காகத் தன் வயிற்றில் அடக்கி வைத்திருக்கும் அன்புக் காணிக்கையே. பூமித்தாயின் புறத்திலிருந்து நாம் பெறும் இயற்கை வளங்கள் மனிதன் உண்ணவும் உடுக்கவும், சமைக்கவும் பயன்படுவதை அறியாதாரும் உண்டோ?

உலகில் உயர்ந்த பிறப்பாகக் கருதப்படுவது மனிதகுலம்! இயற்கை வளங்கள் தனக்காகப் படைக்கப்பட்டுள்ளது என்பதை நோக்காது அவற்றைப் பெறும் வழிகளையும் அறியாது வறுமையால் வாடிச் சோம்பித் திரிகின்றார்கள் என்றால் அது இயற்கையின் பிழையா? மனிதனின் பிழையா? என்பதை நாம் கண்டறிய வேண்டும்.

உலகப் பேரறிஞராகிய திருவள்ளுவர் வறுமையால் வாடி, பசியால் உருக்குலைந்து நிற்கும் மக்களுக்குத் தந்த போதனையை இங்கு தருவது பொருத்தமுடையது.

"இலமென்றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்பது வள்ளுவர் தந்த அருமையான குறளாகும். நாம் ஏதும் இல்லோம் என்று தமக்குத் தாமே வறுமைப்பட்டம் சூட்டிக்கொண்டு சோம்பலால் வாடி இருக்கும் மனிதர்களைக் கண்டால் நிலம் என்று சொல்லப்படும் பூமித்தாய் சிரிப்பாள் என்பது இக்குறளின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமென்னும் நல்லாள் தன்னுடைய அகன்று விரிந்து பரந்த வயிற்றில் விதம் விதமான உணவுப் பொருட்களைப் பெறும் வழியறிந்து பெற முயல்வார்க்கு கொடுக்கக் காத்திருக்கிறாள். நில நங்கையின் வயிற்றை உழுதும், கொத்தியும், கிண்டியும், கிளறியும் பெறுவார்க்கு அவள் நெல்லையும், கோதுமை யையும், சிறுதானியங்களையும், கிழங்கு வகை களையும், காய்கறி வர்க்கங்களையும் கொடுக் கக் காத்திருக்கிறாள். அவள் கொடுக்கக் காத்திருக்கும்போது அவற்றைப் பெறும் வழியறிந்தும் சோம்பலால் பெறமுடியாமல் தவிக்கும் மனிதர்களைப் பார்த்து அவள் நகைப்பதில் தவறேதுமில்லை.

மனிதன் தனது செய்கைகளால் இயற் கையை மாசுபடுத்துகின்றான். நல்ல நீரை உவர் நீராக்குகின்றான். நல்ல காற்றை நச்சுக் காற்றாக்குகின்றான். காடுகளை வெட்டி மழைவீழ்ச்சியைக் குறைக்கின்றான். இதனால் வளி, நீர், நிலம் என்பன விவசாயம் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளினால் மாசுபடத் தொடங்கின. இதன் காரணமாக குடிநீரில் பற்றாக்குறை, அமிலமழை, ஓசோன் படைத் துவாரம், பாலை வனங்களின் தோற்றம், பூமி வெப்பமாதல், உயிர்ப் பல்வகைமையழிவு போன்ற பல பிரச்சினைகள் தோற்றம்பெற மனி தனே காரணமாயினான். மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் மழை பொழியும் மாதம் மும்மாரி கிட்டும். இறையாமலே வயல் விளையும். இந்த உண்மையையறிந்தால் எமது வாழ்வு சிறக்கு மென்பதில் ஐயமெதுவும் இல்லை.

பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியில் இயற்கைச் சூழலில் உயிரினங்கள் தொடர்ச்சி யாக வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டின் சூழலின் தரம் குன்றாது. சூழற் சம நிலை குழம்பாது இருக்கக்கூடிய வகையில் சூழலை முகாமைத்துவம் செய்யக்கூடிய சூழற் கல்விமுறை மிக அவசியமானதொன்றாக அமைகிறது. இன்றைய தேவையை நாம் நிறைவேற்றிக்கொள்ளும் அதேநேரம் எதிர்கால சந்ததியையும் கருத்திற்கொண்டு இயற்கை வளங்களை இனங்கண்டு அவற்றைப் பொருத்தமுறக் கையாள்வதும் அனுபவ ரீதி யாகக் கற்பதற்கும் வழி செய்வதே இக்கல்வி முறையின் பொறுப்பாக அமைகின்றது.

இயற்கை தான் தரும் வளங்களைப் பயன்படுத்தி மனிதன் சுவையான உணவுகளை உண்ணவும் ஆடம்பரமான உடைகளை அணிய வும் ஆபரணாதிகளால் தம்மை அலங்கரிக் கவும் விரும்புகின்றான். நவரத்தினங்கள் இயற்கை தந்த செல்வமே. அவற்றைப் பயன்படுத்தி உயர்ந்த வாழ்வு வாழ வேண்டும் என்பதே இயற்கையின் விருப்பம் போலும்.

சூழற் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் காரணிகளை அகற்றி இயற்கையை யும் நண்பர்களாக்கும் வகையில் நம் செயற் பாட்டை அமைப்போமாயின் நோயற்ற வாழ் வும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் வண்ணம் பெருஞ்செல்வராய் வாழவும், பிறருக்கு உதவுவோராகவும் இந்திரபோகமும் பெற்று வாழலாம் என்பதில் ஐயமும் உண்டோ?

"தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற கூற்றிற்கமைய சூழற்கல்வி மூலம் முயற்சி என்ற ஆயுதத்தையேந்தி சூழற் சமநிலையுள்ள புதியதோர் உலகம் செய்ய எல்லோரும் முன்வருவீர்களாக.

நமக்குப் பயன்தரும் இயற்கை வளங்களை நாமே அழிப்பது எவ்வளவு பெரிய பாவம் என் பதையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எனவே நாம் இயற்கையைப் பாதுகாக்க எமக்கு இறை வன் தந்த வழி சூழற் கல்வியாகும். சூழற் கல்வி யினால் நாம் இவ்வுலகைப் பாதுகாக்க முடி யும். இதன் மூலம் இயற்கையைப் பாதுகாக்க முயற்சிப்போம்; இயற்கை வளங்களையும் பெருக்குவோம்.

**மணிசேகரன் தரண்யா**
தரம் 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வீரனின் பதிவுகள்...

எனது பெயர் மகாராசா பார்த்தீபன். எனது ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர்.கனகசபை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், யா/இணுவில் மத்திய கல்லூரியிலும் பயின்றேன். நான் தரம் 6இல் இருந்து இப்பாடசாலையில் கல்வி கற்கிறேன். எனக்கு சிறுவயதில் இருந்தே விளையாட்டுத் துறையில் அதிக ஆர்வம். நான் பாடசாலையில் சேர்ந்தது தொடக்கம் விளையாட்டுக்களில் ஈடுபடுவது உண்டு. நான் ஆரம்பத்தில் ஓட்டப் போட்டிகளையே எனது விளையாட்டாகக் கொண்டிருந்தேன். பிறகு எனது பயிற்றுனர் க.மயிர்வாகனம் ஆசிரியர் அவர்கள் என்னை எறிதல் துறைக்குக் கொண்டு வந்தார். எனக்கு அவர் தட்டு எறிதலையே அதிகம் பயிற்றுவித்தார். அவரது இலட்சியமாக இருந்தது என்னை தேசிய மட்டம் அடிக்க வைப்பது. என்னை அவர் 2002ம் ஆண்டிலிருந்து பயிற்றுவித்து வருகின்றார். நான் ஆர்வத்தோடு பயின்று 2005ம் ஆண்டு நடந்த மாகாண மட்டப்போட்டியில் தட்டு எறிதல் நிகழ்ச்சியில் 1ம் இடத்தைப் பெற்றேன். பின் தொடர்ச்சியாக 1ம் இடத்தைப் பெறுகிறேன். 2006ம், 2007ம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் நான் 8ம் இடத்தையே பெறமுடிந்தது. அவ்வேளையில் எனக்கு சற்று விளையாட்டுத் துறையில் இருந்த ஆர்வம் குறைந்தது. ஆனால் எனது பயிற்றுனரதும், பெற்றோரினதும் ஊக்கமும் அவர்களினது ஆலோசனையும் தான் நான் மீண்டும் கூடியளவு பயிற்சியை மேற்கொள்ளுவதற்குக் காரணமாக இருந்தது. நான் தொடர்ந்தும் சலிக்காது கூடியளவு பயிற்சி எடுத்தேன். எனக்கு ஓர் ஆசை ஏற்பட்டது நான் பாடசாலை விட்டு வெளியேறும் முன் தேசிய மட்டத்தில் இடத்தைப் பெறவேண்டும் என்பதேயாகும். எனது முயற்சியின் காரணமாகவும், எனது பயிற்றுனரின் காரணமாகவும் எனது ஆசை புரட்டாதி மாதம் 29ம் திகதி நிறைவேறியது. நான் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனது இவ் வெற்றியானது எனது பாட சாலைக்கும் எனக்குப் பெரிய புகழைத் தேடித் தந்தது. அத்துடன் எனது பயிற்றுனரான க.மயில்வாகனம் ஆசிரியரது இலட்சியமும் நிறைவேறியது. எனக்குப் பல பாராட்டுக்கள் வந்தன. நண்பர்கள், பழைய மாண கள், அதிபர், ஆசிரியர்கள் என்று பலராலும் நான் பாராட்டப்பட்டேன். நான் கொழும்பில் இருந்து வீடு திரும்பும்போது என்னை வரவேற்க எனது பெற்றோர்கள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், நண்பர்கள் பலர் வந்து என்னை வரவேற்றனர். அச் செயல்கள் அனைத்தும் என்னை வியக்க வைத்தன. இதைக் கண்டு நான் திகைத்து நின்றேன். எனக்கு இவற்றைப் பார்த்ததும், இது போன்ற சாதனைகளைப் பெறவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. எனது இவ் வெற்றியானது எனது உழைப்பு மட்டுமல்ல பலரது முயற்சியால் நிறைவேறியது எனலாம். அதாவது எனது பயிற்றுனர் மழை, வெயில் என்று பாராது என்னை அழைத்து பயிற்றுவித்தார். நான் வராமல் விட்டால் என் வீடு தேடி வந்து என்னை அழைத்துச் சென்று பயிற்சி தருவார். இதேபோல் எனது

பெற்றோரும் விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வமுள்ளவர்கள். என்னை அதிகாலை எழுப்பி ஒழுங்காகப் பயிற்சிக்கு அனுப்புவார்கள். அவ்வளவும் நான் விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கவேண்டும் என்று ஆசையும் ஆர்வமும் உள்ளவர்கள். நான் தேசிய மட்டப் போட்டிக்கு இரு நாட்களுக்கு முன் பயிற்சியில் ஈடுபடும்போது தோள்மூட்டில் "நோ" ஏற்பட்டது. இதை எனது தந்தையிடம் கூறியபோது அவர் கை கழன்றாலும் பரவாயில்லை நீ ஒழுங்காகச் செய் என்று கூறி என்னை உற்சாகப்படுத்தினார். அவ்வாறு ஆக்கமும் ஊக்கமும் பெற்ற பெற்றோர்கள் கிடைத்தது வரப்பிரசாதம் ஆகும்.

இதேபோல் எனது பாடசாலை அதிபர் திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்கள் நான் பயிற்சியில் ஈடுபடுவதற்குத் தேவையான உபகரணங்களைத் தந்தும் என்னை உற்சாகப்படுத்தினார். இதேபோல் எமது பாடசாலை விளையாட்டுத் துறைத் தலைவர் புனித தயாபரன் ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் கமலமோகன் போன்றோர் எனக்கு இறுவட்டு மற்றும் புத்தகங்கள் போன்றவற்றைக் கொண்டு விளக்கமளித்தனர். இதைவிட எனது பாடசாலை ஆசிரியர்கள் பலர் என்னை உற்சாகப்படுத்தினர். இவ்வாறு எனது நண்பர்களும் நான் பயிற்சியில் ஈடுபடும் போது என்கூடவே நின்று எனக்கு உற்சாகமும் ஊக்கமும் தருவார்கள். இவ்வாறு எனது வெற்றிக்குப் பலர் உதவினர். அவர்கள் எல்லோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

**மகாராஜா பார்த்தீபன்**



- **பின்னால் வருபவர் மேலும் சிறப்பாகப் பணிபுரிந்தால் அதனால் பாராட்டப்படவேண்டியவர், அவருக்கு முன்னால் பதவி வகித்தவரே.**
  Beginner deserves the merit, should his successor even better.
  ***- Burrows.***

- **தூரத்தில் இருப்பதை விரும்புவதன் மூலம் அருகில் இருப்பதைக் கோட்டைவிட்டு விடாதீர்கள்.**
  Slight not what is near through aiming at what is far.
  ***- Eurifides.***

*In point of fact you should feel sorry for yourself that you have lost several days in your life in vain.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best of the North - 2008 விருது பெற்றோர்

## 17 வயது



கருணானந்தன் கபிலன்

மாவட்டத்தின்
சிறந்த துடுப்பாட்ட
வீரன்-2008



சிறீதரன் டிலக்ஷன்

மாவட்டத்தின்
சிறந்த பந்து வீச்சாளர்
2008



புவனேஸ்வரராஜா தயாளன்

மாவட்டமட்ட சுற்றுப்போட்டியில்
சதமடித்த வீரன்



பரமசிவம் பார்த்தீபன்

மாவட்டமட்ட சுற்றுப்போட்டியில்
சதமடித்த வீரன்

## 15 வயது



இரவீந்திரன் மதுசன்

மாவட்டமட்ட சுற்றுப் போட்டியில்
இரண்டு தடவைகள்
5 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்



குகதாஸ் மோசிகீரன்

மாவட்டமட்ட சுற்றுப்போட்டியில்
இரண்டு தடவைகள்
அரைச் சதத்திற்கு மேல் பெற்றவர்

## 13 வயது



சிறீதரன் கஜந்தன்

மாவட்டமட்ட சுற்றுப் போட்டியில்
மூன்று தடவைகள்
5 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்



ஜெயபாலசிங்கம் ஜனந்தன்

மாவட்டமட்ட சுற்றுப்போட்டியில்
இரண்டு தடவைகள்
அரைச் சதத்திற்கு மேல் பெற்றவர்



ஜெகநாதன் மயூரன்

மாவட்டமட்ட போட்டியில்
இரண்டு தடவைகள்
அரைச் சதத்தை எய்தியவர்



விஜயசிங்க கபில்தேவ்

அரவிந்த டி.சில்வா Cricket Foundation
யாழ்ப்பாணத்தில் நடாத்திய பயிற்சி
முகாமில் தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பந்து 19 வயதுப் பிரிவு மாகாணம் மூன்றாம் இடம்
தேசியம் கால் இறுதி



கரப்பந்தாட்டம் 17 வயதுப் பிரிவு (பெண்) மாகாணம்
முதலாம் இடம்



கரப்பந்தாட்டம் 19 வயதின் கீழ் (பெண்)
மாகாணம் முதலாம் இடம்



சதுரங்கம் 15 வயதின்கீழ் பெண்கள்
மாகாணம் முதலாம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரங்கம் 15 வயதின் கீழ் ஆண்
வலயம் முதலாம் இடம்



சதுரங்கம் 19 வயதின் கீழ் ஆண்
வலயம் முதலாம் இடம்



சதுரங்கம் 19 வயதின் கீழ் பெண்
வலயம் முதலாம் இடம்



உதைபந்து 13 வயதின் கீழ் ஆண்
வலயம் இரண்டாம் இடம்



சதுரங்கம் 15 வயதுப் பிரிவு ஆண்கள்
மாவட்டம் இரண்டாம் இடம்



வலயமட்டம் மனையியல், தமிழ்,
கணித, விஞ்ஞானப் போட்டிகளில்
2ம், 3ம் இடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலை விருந்து

## தரம் 1 - 5

பக்கம்


- My Mother 85
- Myself 85
- My Pet 85
- My Pet 85
- My Favourite Pet 85
- My Favourite Pet 86
- Myself 86
- My Pet 86
- Myself 86
- எனது அன்னை 87
- எனது கல்லூரி 87
- நாய் 88
- பசுவின் கண்ணீர் 88
- யானை 88
- எனது அம்மா 89
- கல்வி 89
- உலகில் மிகப் பெரியவை 89
- எமது பாடசாலை 90
- சீருடை 90
- சுகாதாரப் பழமொழிகள் 91
- பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை 91
- எங்கள் கல்லூரியின் நிறுவுநர் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை 92


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Mother

- My mother's name is Kamalavalli.
- My mother is a house wife.
- She is very kind.
- She is very fair.
- She has long hair.
- She is very tall.
- She is forty five years old.

**Shankavi Puvaneswaralingam**
**Grade 2[B]**

# Myself

- My name is U.Sharugan.
- I'm a boy.
- I am in grade two.
- I live at Alaveddy.
- I am studying at Mahajana College.
- My father's name is Mr. Vinthan.
- My mother's name is Roja.
- My friend's name is Kajan.

**Uruththiravinthan Sarugaan**
**Grade 2[A]**

# My Pet

- ➢ My pet is a cow.
- ➢ Her name is Selvi.
- ➢ Its colour is brown and white.
- ➢ It is very beautiful.
- ➢ Selvi likes to eat grass.
- ➢ It is a very useful animal.
- ➢ It helps us in many ways.
- ➢ It is very helpful in agriculture.
- ➢ It gives me milk which is very nutritious.

**Koshika Sugumar**
**Grade 3[A]**

# My Pet

- ➢ My pet is Sellah.
- ➢ It is a beautiful parrot.
- ➢ I call my pet Sellah.
- ➢ It also calls me sellah.
- ➢ It calls my Grand father Papa Papa.
- ➢ My parrot lives in a beautiful cage.
- ➢ I bought my pet in Colombo.
- ➢ It's colour is green with yellow Stripes.
- ➢ It has a beautiful dark-read beak.
- ➢ It eats vegetables and fruits.
- ➢ It likes carrot, chillies and papaw.
- ➢ When my friends comes it calls me Sellah, Sellah.
- ➢ I am teaching my pet to call me luxion.
- ➢ I will succeed very soon.
- ➢ I am spending my free time with my pet.

**Sathananthan Luxsan**
**Grade 3[A]**

# My Favourite Pet

- My pet is a puppy.
- His name is Rover.
- He is brown in colour.
- I have two bowls for him.
- One is for food.
- The other is for water.
- He likes to eat fish and bones.
- He sleeps in a basket.
- I give him bath every Sunday.
- He is very active and playful.
- He likes a lot of exercise.
- He can run very fast.
- When I come from home from school, he barks and wags his tail to welcome me.
- He is a very good watch dog.
- He guards our house at night.

**Kunthavi Keteeswaran**
**Grade ......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Favourite Pet

- My Favourite pet is a dog.
- Dog is an animal.
- It is domestic animal.
- My dog's name is Puppy.
- It is brown and white in colour.
- It is two years old.
- Puppy can run.
- It is a beautiful dog.
- It eats rice and curry.
- I play with him.
- Its enemy is cat.
- It has two beautiful eyes.
- It is very active.
- It is a friendly - looked one.

**Kabila Sritharan**
**Grade 3A**

# My Pet

- Puppy is my pet.
- Tiger is his name.
- It has a lovely white fur with brown dots.
- It likes to drink milk.
- It eats rice and Meat.
- I like to play with him at all time.
- It barks when anybody enters our compound.
- It sits besides me when I work or study.
- Tiger is faithful one.
- Wherever I go, it comes behind me.
- It sleeps in a chair at night.
- It is a watcher to our house.
- I love him and he loves me too.

**K. Theebika**
**Grade**

# Myself

- I am K. Adshayan.
- I am a little boy.
- I am six years old.
- I come to Mahajana College.
- I love my dad.
- I love my mum.
- My pet is a puppy.
- I am always happy.

**Kesavan Adshayan**
**Grade 1B**

# Myself

- My name is J.Reka.
- My father's name is Jajaindren.
- My mother's name is Suba.
- I have one brother.
- I am a Student.
- I am Seven years old.
- My pet is a parrot.
- My school name is Mahajana College.
- I like cake.
- I don't like fish.

**Reka Jeyendran**
**Grade 2A**

*Inhumanity did not begin yesterday. Man is always man.*
*What is lacking in some men is inhumanity.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்னை

1. எனது அன்னையின் பெயர் திருமதி. சந்திரகலா நித்தியானந்தராசா.
2. எனது அன்னை எனக்குச் சுவையான உணவுகளைச் சமைத்து அன்புடன் தருவார்.
3. இவரே பாடங்களையும் சொல்லித் தருவார்.
4. எனது அன்னையில் எனக்கு மிகுந்த பாசமும் அன்பும் உண்டு.
5. தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை.

**கிருத்திகா நித்தியானந்தம்**

தரம் 1B

# எனது கல்லூரி

1. எனது பாடசாலை மகாஜனக் கல்லூரி எனக் கூறுவதில் நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.
2. மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழையில் அம்பனை எனும் அழகிய இயற்கைப் பசுமை நிறைந்த சூழலில் அமைந்துள்ளது.
3. இக்கல்லூரி அமரர் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்களால் 1910ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 14ந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.
4. தமிழ், சைவம், ஆங்கிலம் இவற்றுடன் அறுபத்து நான்கு கலைகளும் சிறந்தோங்கும் விதத்தில் வளர்ந்து வருகின்றது.
5. எனது கல்லூரி அன்றிலிருந்து இன்றுவரை பல்துறை நிபுணர்களை உருவாக்கி வருகின்றது.
6. எனது கல்லூரி சுயஒழுக்கமும் ஒழுங்கும் நிறைந்த மகாஜனன்களை உருவாக்கி வருகின்றது.
7. எனது கல்லூரியின் மகுடவாசகம் "உனை நீ அறி" என்பதாகும்.
8. மகாஜன மாதாவின் குழந்தைகளை அரவணைத்து அறிவுபுகட்டி, ஒழுக்க சீலர்களாக்க அதிபர், ஆசிரியர்கள் அயராது உழைத்து வருகின்றார்கள்.
9. தற்போது எனது கல்லூரியில் 1300 மாணவர்கள் தரம் 1 தொடக்கம் 13 வரை சிறப்பாகக் கல்வி பயின்று வருகின்றனர்.
10. கல்வியில் மட்டுமல்ல இணைந்த செயற்பாடுகளிலும் பங்குபற்றி தேசிய மட்டத்திலும் பரிசு பெற்று கல்லூரிக்குப் புகழ் சேர்த்திருக்கின்றார்கள்.
11. எனது பாடசாலையில் பல மாடிக் கட்டடங்கள் உண்டு.
12. எனது பாடசாலையில் 15வது அதிபராக திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் கடமை புரிகின்றார்.
13. எனது பாடசாலையில் நூலகம் உண்டு.
14. எனது பாடசாலையில் எல்லாம்வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமான் அருள்பாலிக்கின்றார்.
15. எனது பாடசாலை 2010ம் ஆண்டில் நூற்றாண்டு விழாவைக் காண உள்ளது.

**சதானந்தன் லக்ஷன்**

தரம் 3A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்

வள் வள என்று குரைத்திடுமாம்
வாலை வாலை ஆட்டிடுமாம்.

இறைச்சியை விரும்பி உண்டிடுமாம்
இனிதாய் காவல் காத்திடுமாம்

நன்றி உள்ள மிருகமதாம்
நாலு காலில் நடந்திடுமாம்

அந்த மிருகம் என்னவென்று
அறிந்தே நீயும் சொல் தம்பி

செல்லமாக நாம் வளர்க்கும்
செல்லப் பிராணி நாய் தானே!

**கணேசானந்தன் வித்தகன்**
தரம் 2

## பசுவின் கண்ணீர்

எனது தம்பியின் செல்லப்பிராணி பசு. அதன் பெயர் ஆச்சி. தம்பி உணவு உண்ணும் போதெல்லாம் செல்லமாக மழலை பேசி வரும்.

ஒருநாள் அவனது செல்ல ஆச்சிக்கு சூழலின் வெப்பம் தாங்கமுடியாமல் கண் களில் நீர் வடிந்தது. அதை அறியாது அவன் அழுதேவிட்டான். அந்த வேளையில் அவ் விடத்திலிருந்து கூட்டி வந்து விட்டோம்.

ஒருநாள் தம்பி விளையாடிக் கொண்டி ருக்கும்போது தவறுதலாக விழுந்து விட் டான். அவனது முகத்தில் இரத்தம் வடிந்தது. ஓடிச்சென்று ஆச்சியிடம் சொல்லி அழுான். ஆச்சியின் கண்களில் கண்ணீர் வடிந்தது. ஆனால் அன்று வடிந்ததோ நீர். ஆனால் இன்று வடிந்ததோ அன்புக் கண்ணீர்.

சிந்தித்தால் அழுகை வரும்.
அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்.

**ஜெ. ரேகா**
தரம் 2A

## யானை

1. யானை காட்டில் வாழும் மிகப்பெரிய மிருகமாகும்.
2. யானையின் முகத்தில் நீண்ட தும்பிக்கை ஒன்று உண்டு.
3. யானையின் கண்கள் சிறியன.
4. யானைகள் காதுகள் சுளகு போன்றது.
5. இதன் கால்கள் உரல் போன்றது.
6. யானை அசைந்து அசைந்து விரை வாக நடக்கும்.
7. இது மிகப் பலசாலியானது.
8. இது இலை குழைகளை உணவாக உட்கொள்ளும்.
9. இதை மனிதர்கள் பாரம் தூக்கப் பாவிப்பார்கள்.
10. இதன் மேனி கரிய நிறமுடையதாகும்.

**ஜெ. லாவண்யா**
தரம் 2B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அம்மா

1. எனது அம்மாவின் பெயர் ரேணுகாதேவி.
2. எனது அம்மா இனிமையாகப் பேசுவார்.
3. எனது அம்மா என்மேல் அன்பு உள்ளவர்.
4. எனது அம்மா நல்லவர்.
5. எனது அம்மாவை நான் நேசிக்கின்றேன்.

**கேசவன் அட்ஷயன்**

தரம் 1B

# கல்வி

செல்வங்களில் அழியாத செல்வம் கல்வி ஆகும். இது ஒரு ஆயிரம் காலத்துப் பயிர் ஆகும். சிறுவயதில் இருந்தே கல்வியை குற்றமறக் கற்கவேண்டும். கல்வி கற்பது எங்களுக்காகவே என்றும் எமது நன்மைக்கும், எதிர்கால வாழ்வுக்கும் எனப் புரிந்துகொண்டு கல்வி கற்கவேண்டும். அதிக அக்கறையுடனும் கவனத்துடனும் பாடங்களைப் படிக்க வேண்டும்.

மாணவர்கள் கல்வி அறிவைப் பெற்றுக்கொள்ளும் வழிகளில் ஒன்று பரஸ்பரம் உறவாடுதல் ஆகும். மாணவர்கள் புத்தகங்கள், கதைகள், பாட்டுக்கள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம் மொழித்திறனை வளர்க்க உதவும். கற்கும் ஆற்றலையும் வளர்ச்சியுறச் செய்கிறது. மாணவரின் கல்வி முன்னேற ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தன்நம்பிக்கை வேண்டும்.

எனவே கல்வியைக் கண்ணும் கருத்துமாகக் குற்றமறக் கற்றால் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களாக விளங்கலாம்.

***கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக.***

**பு. சங்கவி**

தரம் 2B

# உலகில் மிகப் பெரியவை

1. மிகப் பெரிய கண்டம் எது?
   ஆசியாக்கண்டம்.
2. மிகப்பெரிய பாலைவனம் எது?
   சஹாரா பாலைவனம்.
3. மிகப்பெரிய தேசம் எது?
   பிறேசில்.
4. மிகப்பெரிய சமுத்திரம் எது?
   பசுபிக் சமுத்திரம்.
5. மிகப்பெரிய நகரம் எது?
   லண்டன்.
6. மிகப்பெரிய கிரகம் எது?
   வியாழன்.
7. மிகப்பெரிய நீர்வீழ்ச்சி எது?
   வெனிசுவெலா.
8. மிகப்பெரிய அரண்மனை எது?
   வத்திக்கான்.
9. மிகப்பெரிய புகையிரதப்பாதை எது?
   பஷ்யா.
10. மிகப்பெரிய நதி எது?
    அமேசன் நதி.

*தொகுப்பு :*

**இசைப்பிரியா**

தரம் 2B

# எமது பாடசாலை

1. எமது பாடசாலையின் பெயர் யா/மகாஜனக் கல்லூரி.
2. எமது பாடசாலை அம்பனை தெல்லிப் பழை என்னும் கிராமத்தில் அமைந் துள்ளது.
3. இப்பாடசாலையை ஆரம்பித்தவர் பாவலர் துரையப்பாபிள்ளை ஆவார்.
4. இப்பாடசாலை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பத்தாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
5. எமது பாடசாலை அதிபர் பெயர் திருமதி.சிவமலர் அனந்தசயனன்.
6. எமது பாடசாலை முகப்பில் துரையப்பா பிள்ளையின் உருவச்சிலையும் துரை யப்பாபிள்ளை மண்டபமும் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.
7. இங்கு சைவ வளர்ச்சிக்கழகம், விளை யாட்டுக் கழகம், பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச்சங்கம் போன்றவை திறம் படச் செயற்படுகின்றன.
8. இங்கு அருள்மிகு சிவகாமி சமேத ஆனந்த நடராஜர் ஆலயம் உண்டு.
9. இங்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு வருடப் பூர்த்தி விழாவாக பவளவிழா கொண்டா டப்பட்டது.
10. யாழ்.மண்ணில் சைவப்பாரம்பரியத் தையும் கல்விப் பாரம்பரியத்தையும் பேணி வருகிறது எமது பாடசாலை.
11. தமிழ்மன்றச் செயற்பாட்டில் தமிழ்த் தினப் போட்டிகளும் தமிழ்த்தின விழாவும், மன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.
12. இங்கு மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகளும் நடைபெறுகின்றன.
13. இங்கு நிறுவியவர் நினைவு நாளும் பெற் றோர் தின விழாவும் நடைபெறுகின்றன.
14. இங்கு உதைபந்தாட்டம், வலைப்பந் தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன.
15. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மட்டு மன்றி, பிஞ்சு உள்ளங்களை நற்பிரஜை யாக உருவாக்குவதில் எமது பாடசாலை பெருமை பெறுகின்றது.

**சங்கவி புவனேஸ்வரலிங்கம்**

தரம் 2

# சீருடை

பள்ளிச் சிறுவர் சிறுமியர்
பெருமையோடு அணிவது
அள்ளும் அழகுச் சீருடை
அதற்கு ஈடு இல்லையே!

பட்டு ஆடை அணிகளும்
பார்ப்பதற்கு அழகு தான்!
இஷ்டமுடனே சிறுவர்கள்
இதனை அணிவார் ஆயினும்

ஏழை எளியர் என்கின்ற
ஏற்றத் தாழ்வைப் போக்கியே
எம்மதமும் சம்மதம்
என்று பறை சாற்றிடும்

திங்கள் தொடங்கி வெள்ளிவரை
தினமும் நாங்கள் அணிவது
எங்கள் பள்ளிச் சீருடை
என்னை மிகவும் கவர்ந்தது.

**நி. தனிஷிகா**

தரம் 3A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பழமொழிகள்

1. சுத்தக் காற்றை நித்தமும் சுவாசி.
2. தேகமோடாடையைத் தினமும் சுத்தஞ் செய்.
3. காலைக் குளிப்பே சாலச் சிறப்பு.
4. பரிசுத்த நீரே பருகுதல் வேண்டும்.
5. பசித்தாலன்றி புசித்தலாகா.
6. மட்டான போசனம் மனதிற்கு மகிழ்ச்சி.
7. ஊண் எப்படி உடம்பும் அப்படி.
8. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
9. தேகப்பயிற்சி தினமும் புரி.
10. இரவில் தூக்கம் எண்மணி நேரம்.
11. உறங்குவது இராவொழிய பகலுறக்கம் செய்யேல்.
12. பாலோடாயினும் காலமறிந்துண்.
13. ஈ மொய் பண்டம் எதனையும் விரும்பேல்.
14. ஊணற்றபோதே உடலற்றுப்போம்.
15. உண்டதும் படுக்கை கொண்டில் தீது.
16. உண்டபின் நூறடி உலாவுதல் நன்று.
17. காலை வெயிலைக்காலனென்றெண்ணு.
18. மாலை வெயிலை மருந்தென்றெண்ணு.
19. கொதித்தாறிய நீர் குடிப்பதற்கேற்றது.
20. வேகா எவையும் ஆகா உணவே.

**சி. கபிலா**

தரம் 3A

# பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை



1. இவர் யாழ்ப்பாணத்திலே தெல்லிப்பழை எனும் ஊரிலே பிறந்தார்.
2. இவர் 1872ம் ஆண்டு பிறந்தார்.
3. இவருடைய தந்தையின் பெயர் தெ.அருளம்பலம்.
4. இவருடைய தாயின் பெயர் அ. தங்கம்மா.
5. இவருடைய மனைவியின் பெயர் து.தையல்நாயகம்.
6. இவர் இலங்கை கல்வித்துறை சமூகத்தினரின் முன்னேற்றத்திக்காகப் பாடுபட்டார்.
7. இவர் கீதரசமஞ்சரி என்ற செந்தமிழ்ப் பாமாலையை எழுதி 1901ஆண்டு வெளியிட்டார்.
8. இவர் சிந்தனைச்சோலை என்ற தொகுப்பில் பாடல்களையும் நாடகங்களையும் வெளியிட்டார்.
9. இவர் சிறந்த பத்திரிகையாளன் ஆவார்.
10. இவர் 1901இல் உதயதாரகையின் ஆசிரியராகவும் கடமையாற்றினர்.
11. இந்து சாதனத்தின் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.
12. இவர் பல பாடசாலைகலளில் ஆசிரியராகவும் முகாமையாளராகவும் கடமையாற்றினார்.
13. இவர் 1889ம் ஆண்டு செல்லப்பா பாடசாலை என அழைக்கப்பட்ட ஆங்கில உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
14. அப்பாடசாலை அதிபராக பதவி உயர்வு பெற்றார்.
15. இந்துக்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்.
16. 1922இல் தெல்லிப்பழையில் கூட்டுறவுக் கடன் சங்கத்தை நிறுவி அதன் செயலாளராகவும் கடமையாற்றினார்.
17. மதுவிலக்கு பிரசாரங்களில் ஈடுபட்டு மதுவிலக்கு பாடல்கள் பலவற்றையும் எழுதினார்.
18. இவர் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் உருவாகுவதற்கு முக்கிய பங்காற்றினார்.
19. 1910ம் ஆண்டு மகாஜன ஆங்கில உயர்நிலைப் பள்ளியை நிறுவினார்.
20. அவர் பல பாடல்களையும் பல கவிதைகளையும் இயற்றினார்.

**சிவனேஸ்வரன் சர்மிலன்**

தரம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கல்லூரியின் நிறுவுநர்
# பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை



1. இலங்கையில் தெல்லிப்பழை என்னும் ஊரில் 1872ஆம் ஆண்டு இவர் பிறந்தார்.
2. இவரின் தந்தையார் பெயர் அருளம்பலம் என்பதாகும்.
3. இவர் சிறந்த பத்திரிகையாளராவார்.
4. 1889ஆம் ஆண்டில் செல்லப்பா பாடசாலை என அழைக்கப்பட்ட ஆங்கில உயர்தரப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
5. 1901ஆம் ஆண்டு அப்பாடசாலையில் பதவி உயர்வு பெற்றார்.
6. அப்பாடசாலையில் ஏற்பட்ட பிணக்கினால் அங்கிருந்து 1910ம் ஆண்டு விலகி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை ஆங்கில உயர்தரப்பாடசாலையாக உருவாக்கினார்.
7. 1922ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தில் ஆரம்ப மாகாணசபை உறுப்பினராகக் கடமையாற்றினார்.
8. இவர் கீதரச மஞ்சரி என்ற செந்தமிழ்ப் பாமாலையை எழுதி 1901ஆம் ஆண்டு வெளியிட்டார்.
9. இவர் சிந்தனைச் சோலை என்ற தொகுப்பில் பாடல்களையும் நாடகத்தையும் வெளியிட்டார்.
10. இவர் இலங்கையின் கல்வித்துறை, சமூகத்துறை போன்றவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.
11. இவர் இந்துக்களின் கல்வி வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து தெல்லிப்பழை வாழ் மக்களின் சமய வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக வித்திட்டவர்.
12. மதுவரிக் கட்டணச் சட்டத்திற்கு எதிராக மதுவிலக்குப் பாடல்களையும் எழுதினார்.
13. ஆங்கிலேயர் நம் நாட்டைவிட்டு வெளியேறும்போது தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.
14. இவர் 1929ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 27ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.
15. எனவே அவர் நாமம் வாழ்க.

**திலக்சனா சுப்பிரமணியம்**
தரம் 5



## What is a sin?

- Sin is of several kinds.
- To profane the God is a sin.
- When you give a word your failing to keep it is a sin.
- When you backbite a person what you get is nothing but sin.
- When you fail to speak the truth the sin that you commit is beyond expiation.
- When you misjudge somebody's affection by your wrong notion it is the worst sin that you can never commit.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவடி நடனம் (குழுநிகழ்வு) மாகாணமட்டம் 1ம் இடம்
(பேடன் பவல் தினம் 2008)



தாளலயம் (குழுநிகழ்வு) மாகாணமட்டம் 1ம் இடம்
(பேடன் பவல் தினம் 2008)



க. இதயராஜ்
பேச்சு மாவட்டமட்டம் 2ம் இடம்
(பேடன் பவல் தினம் 2008)



இ. கஜீபன்
புதிர்ப்போட்டி மாவட்டமட்டம் 1ம் இடம்
(பேடன் பவல் தினம் 2008)



பா. கேகஜன்
பேச்சு மாவட்டமட்டம் 3ம் இடம்
(பேடன் பவல் தினம் 2008)



சி. மயூரன்
குண்டுபோடுதல் மாகாணமட்டம் 1ம் இடம்
100அ ஓட்டம் மாவட்டமட்டம் 3ம் இடம்
(சாரணர் பெருவிளையாட்டுவிழா 2008)



ஈ. றோகீசன்
நீளம் பாய்தல் மாகாணமட்டம் 2ம் இடம்
நடை ஓட்டம் மாவட்டமட்டம் 1ம் இடம்
(சாரணர் பெருவிளையாட்டுவிழா 2008)



கயிறு இழுத்தல் (குழுநிகழ்வு)
மாகாணமட்டம் 1ம் இடம்
(சாரணர் பெருவிளையாட்டுவிழா 2008)



வருடாந்த பாசறை நிகழ்வு
மாவட்டமட்டம் 1ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருளைச்சாரணர் மந்தை I (ஆண்)



குருளைச்சாரணர் மந்தை II (பெண்)



குருளைச்சாரணர் மந்தை III (பெண்)



சாரணர் துருப்பு I (ஆண்)



சாரணர் துருப்பு II (பெண்)



சிறு தோழியர்



வழிகாட்டல்



இன்ரறட் கழக நிர்வாக உறுப்பினர் - 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பகுதி

## தரம் 6 - 13


| | பக்கம் |
|---|---|
| ❖ Noble Heart | 93 |
| ❖ Positive thoughts for daily life the sayings | 95 |
| ❖ கவரிக்காட்டு இதிகாசம் | 96 |
| ❖ முதுமை | 104 |
| ❖ வலுவிழந்தோரை எம்முடன் அரவணைப்போம் | 106 |
| ❖ நட்புக்காக | 107 |
| ❖ பாதை மாறிய சுவடுகள் | 109 |
| ❖ உலகில் பெரியவை | 111 |
| ❖ நோயற்ற வாழ்வு | 112 |
| ❖ வொலிபோல் வரலாறு | 114 |
| ❖ முதியோர் எமது கண்கள் | 116 |
| ❖ கடைசி நிமிட கண்ணீர் துளிகள் | 119 |
| ❖ நுண் போசாக்கு | 120 |
| ❖ கணபதி அருள் | 121 |
| ❖ நூற்றாண்டு விழா காண வாரீர் | 121 |
| ❖ ஏ...கோழையே... | 122 |
| ❖ இயற்கையே...... | 122 |
| ❖ இறைவன் தந்த பரிசு! முதுமை! | 123 |
| ❖ ஏழ்மைச் சிந்தனைகள் வாடிய புஷ்பங்களாகின்றன | 124 |
| ❖ முதுமையை மதித்திடுவோம் . | 125 |
| ❖ வேண்டாமே! இனியும் ஒரு ஜனனம்.... | 126 |
| ❖ அறிவமுதை ஊட்டிய என் அன்னைக்கு | 127 |
| ❖ மகாஜன அன்னை | 128 |
| ❖ குருட்டு வெளிச்சம் | 128 |
| ❖ நலிந்திருக்கும் நம் நாடு. | 129 |
| ❖ சுத்தம் | 129 |
| ❖ பூமித்தாய் | 130 |
| ❖ மகாஜன மாதா | 130 |
| ❖ சிறுவர்களை மதிப்போம் அவர் உலகை மகிழ்விப்போம் | 131 |
| ❖ நான் கண்ட இன்பம் | 132 |
| ❖ ஏற்றம் பெற வைத்த ஆசான்கள் | 133 |
| ❖ முயற்சி திருவினையாக்கும் | 134 |
| ❖ கடவுள் எங்கே? | 136 |
| ❖ இளமையில் கல்வி சிலையில் எழுத்து. | 139 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Noble Heart

If the Shepherd were to feast the flock, then there would be an absolute tragedy. Such an era was in England in mid seventeenth century. When Charles I was on the throne of England. He believed in the "Divine Right of Kings" and despised the idea of Parliament and thought it was simply for there to vote the money the King's extravagance.

This indeed he did craftily. In need of money he was prepared to give any promise that parliament asked for, and he always broke that word of honour.

Time and again he was trusted and time and again he betrayed that trust. People realized the promise of the king gave was of any valued. Some of the members of the commons opposed him. The king wild in rage and tried to teach them a lesson.

One day Charles I entered the house of commons itself with the intention of arresting the five men who were the leaders of the party that opposed him people realized that it was high time to resist him and no other choice to keep freedom, truth and justice alive.

Then the civil war broke out in 1642 between the king and the parliamentarians. As the majority of the country land owners and the wealthy men who had been trained in arms and had weapons and horses, supported the king Charles. He had two skillful leaders and the host of lords were with them. They belonged to the noble families and well educated and good mannered.

At first in the civil war the Royalists had won many battles and the parliamentarians were badly defeated. The parliamentarians are simple and plain form of people. They are not rich as the Royalists, In order to win a battle courage and religious faith alone are not enough. Leadership and proper training are necessary too. At this juncture Oliver Cromwell appeared in the scene on the side of parliamentarians.

He was a country gentleman, a farmer with no desire to be known in the world. He had wanted to leave England and find a new home in America, where he would be free to live as he wished, but the king had forbidden him to leave England. He had been in parliament, a rough and unskillful as a speaker but known for his strength of character, deep sincerity and religious faith. Cromwell had determined to win the king's men.

He went to the eastern countries and gathered soldiers there man specially picked up for their courage, strength, horsemanship and religious faith. He said "A few honest men are better than numbers". He trained his men in complete obedience, desire to fight for freedom, parliament and religion, with the famous motto "Trust in God and keep your powder dry". Cromwell was the leader of the whole parliamentary forces, the king's army scattered and the king himself gave him up and was imprisoned. He was brought to trial for having made war on his people and for being enemy of his country. He was sentenced to death.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cromwell became ruler of England, He never accepted the crown. He ruled as "The Lord protector of England". He loved mercy though he had a rough out ward appearance. There was kindness in his heart. To show his kindness, there is a story still in the hearts of every one. Basil Underwood was a young man arrested for treason, during Oliver Cromwell's regime. He was found guilty. The judge sentenced him to death. His faithful wife Bessy was at the court when the sentence was pronounced. The sentence ran thus "At the ringing of the curfew bell, Basil Underwood must die". Curfew never means the curfew of today. It is the evening bell at the church to ask the people to put out or cover the fires at the sunset in medieval time in England.

When Bessy heard the sentence on her husband, she turn pale, her lips became white. She knew Oliver Cromwell alone could grant her husband clemency, but he would only come to village after the sunset.

Bessy had determined to sale her husband. She thought that if the curfew bell was not rung, her husband would be safe. The evening sun had already gone behind the hills turning red. It made the scene red as the blood of Basil Underwood had been spilt every where.

Bessy ran to the church. The sexton was walking slowly towards the bell to ring it. Bessy fell at the feet of the sexton and begged him not to ring the bell at least Oliver Cromwell came. "I have been in the habit of ringing the bell", Sexton said "Now I am old, I still I must do it, I must ring the curfew to night" Bessay seemed helpless.

A strange idea flashed in her heart. She ran towards the bell fry. She saw the ladder that led to the heavy bell. For more than hundred years none may have climbed the ladder. It was rusty, dusty and fearful to look upon. Bessy climbed the ladder. Her hands and feet were bruised and torn blood came out of her soft feet and hands, but she had determined. At last, she reached the bell. At the same time the sexton pulled the bell rope. Bessy clasped the heavy tongue of the bell. The sexton was fortunately deaf. The great bell swang, but no sound was heard. The curfew bell did not ring that day. All the people wondered. The hangman was eagerly mainting for the bell, to hang Basil Underwood, Sexton returned Bessy quickly climbed down, She saw Oliver Cromwell coming towards the village. She ran to him and told her sad story showing her bruised and torn hands and feet. Cromwell's heart melted. "Go young lady! Your hunband lives" said he is kindness his unshakable honesty and his sincere religion made Oliver Cromwell respected as one of the greatest Englishman with a noble heart.

**M. Daranya**
Grade 7[A]
(English Medium)

Take each man's censure
But few thy words.
*- Shakespeare.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Positive Thoughts for Daily life
# The Sayings

- Joy and sorrow only exist in the Mind.
- Never act against conscience out of fear of authority.
- Look on praise and blame alike.
- Knowledge gained from the company of great soul is superior to book - Knowledge
- The ornaments of the Soul are justice, integrity, courage and truth.
- Bad men obey out of fear. Good men obey out of love.
- You cannot get rid of evil simply by exposing it. if you try to be good, loving and honest, evil will disappear.
- He who has no patience cannot be a man of justice.
- Learning means removing the void of ignorance.
- One who does good to others does good to himself.
- You cannot improve others or the world. Improve yourself.
- He who has strength of mind will not be agitated if you are agitated you cannot know the truth.

**Sauntharrajun Sriharshan**
2011 Arts ($A_1$)

***A man is born to service. Serving the humanity is a pleasure. If a person is confined to eating and sleeping without sharing with his fellow creatures in their joys and sorrows apparently there is no difference between him and a beast. He who serves those more unfortunate than he in his own inimitable style is ever remembered with a greatest affection by the people or is ever fondly remembered by the people even after his depature from the earth.***



*Gossipping is extremely distasteful. It is a meaningless talk - a talk barren of substance. Those who gossip kill not only their time but even the time of those who gossip with them.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவரிக்காட்டு இதிகாசம்

தலைமுடி என்பது நம்தலையை மறைத்து வைக்க உதவும் ஒரு புதர். தலையாகப்பட்டது ஒல்லியா, சல்லியா, விசித்திர மேடுபள்ளங்கள் உடையதா, ஆடுகளுக்கு கஞ்சி வைக்கும் பாத்திரத்தைக் கவிழ்த்து வைத்தது போன்ற தோற்றமுடையதா போன்ற பல உபயோக மற்ற விஷயங்களை மற்றோர் அறியாது மூடி வைக்க உதவுவது. அடுத்ததாக அது ஒரு அலங்காரம், தலையிலிருந்து வழிந்து தலை முடிக்கும் தாடிக்கும் உறவுப்பாலம் அமைக் கும் பகுதியில் சமாந்தரமாகவோ ஒன்றுக் கொன்று செங்குத்தாகவோ கோடுகளை உழுதுவிட்டபடியோ, உச்சந்தலையில் மடிப்பு மலைபோன்றதொரு மேட்டுப்பகுதியை உரு வாக்கி, அப்பகுதிக்கு மட்டும் சிவப்போ, மஞ் சளோ கரைத்து ஊற்றியபடியோ உலவும் பல இளைஞர்களை நீங்கள் யாழ்ப்பாண வீதி களில் (மட்டும்) கண்டிருக்கலாம். கண்டு "மாடு சூப்பிய பனம் பழம் எப்படி இருக்குமென்று கேட்டாயே, இதோ! இப்படித்தான்" என்று உங் கள் குழந்தைகளுக்கோ, தம்பி தங்கைக்கோ, விபரித்தும் இருக்கலாம். தலைமுடியின் மற் றொரு முக்கிய உபயோகம், கடவுளை ஏமாற் றுவது. வேண்டிய காரியம் நிறைவேறினால் காணிக்கை தருவதாக வாக்களிக்க, ஏமாந்த கடவுளும் நிறைவேற்ற, தலைமுடியை காணிக்கையாய்க் கொடுப்பது. மயிரை இழப்பதில் நமக்கொரு நட்டமுமில்லை, பெறுவதால் கடவுளுக்கொரு லாபமுமில்லை. (ஆடாக இருந்தால் தலையை வெட்டுவீர்கள், ஆளாக இருந்தால் தலைமயிரை வெட்டு வீர்கள். யாரை ஏமாற்றுகிறீர்கள்?) இன்னும். நம்மிலும் பலமும் உயரமும் குறைந்தவன் அகப்பட்டால் முடியை கற்றையாக பற்றி, சின்ன விஷயத்துக்கெல்லாம் சிலுப்பி எடுக்க லாம். குழப்பங்களின்போது பிய்த்துக்கொள் ளலாம் என்பதான் பல பரவலான முக்கிய பயன் பாடுகளுடன் மூளையைப் பாதுகாத்தல், தலை யின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற சிறியசில பயன்பாடுகளும் உடையதுதான் நம் மயிர். இத்தனை ஏன், இரண்டாவது மனை வியை ஒளித்து வைக்க, பாம்புகளுக்கு பாது காப்பு வழங்க, மதுரை கழுவ, விபரீதத்தினை உருவாக்க என்று பல நானாவித தேவை களுக்கு ஆனானப்பட்ட நமது சிவபெரு மானே மயிரைத்தானே பிடித்தார்? ஆதனால் பாவம், எந்நேரமும் கங்கையில் ஷவர்பாத் எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு அவர் ஆளா னதையும் நாம் மறக்கக்கூடாது.

இத்தனை பயன்வாய்ந்த முடியை காவு கொடுப்பதென்பது ஒவ்வொரு ஆணுக்குமே மரண வேதனைதான். அவரவர் வளர்ச்சி வேகத்துக்கேற்ப வேதனையானது மாதமொரு முறையிலிருந்து வருடத்துக்கொருமுறை வரை வரலாம். இந்த விஷயத்தில் ஆண்கள் பாவப்பட்ட பாலினம் என்பது என் தனிப்பட்ட அபிப்பிராயம். ஒவ்வொரு முறையும் வெட்ட, அதுவே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து விரைவிலேயே தலையின் பெருமளவு பகுதியை சல்வீனியா போல ஆக்கிரமித்துவிடும். ஒரு கட்டத் துக்குமேல் வீட்டிலும் வெளியிலும் விமர்ச னங்கள் கிளம்பத்தொடங்க, ("ஏனடா காகங் களுக்கு இரக்கப்பட்டு கூட்டை கலைக்காமல் வைத்திருக்கிறாயா?", "டேய், என் கணிதக் கொப் பியை காணவில்லை. எல்லா இடத்திலும் தேடி விட்டேன். எதற்கும் உனது தலையிலும் ஒரு முறை தேடிவிடேன்?") நாமும் மயிர்வெட்ட அரைமனதாய் திருவுளங்கொள்வோம். இன் றைக்கு நாளைக்கென்று இழுத்து நமக்கே தலை சீவி வெறுத்துப்போகும் நிலைவர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொலைந்து போகட்டும் சனியன்' என்று சலூனுக்குப் போனால் அன்றைக்கென்று நிரம்பி வழியும் திருவிழாக் கூட்டம்.

இரண்டு பேருக்கு வெட்டப்பட்டுக் கொண்டிருக்க ஏழுபேர் போனமாத உதயனின் சூடான செய்திகளை ஆறியபின் பார்த்தவாறே காத்திருப்பார்கள். நாமும் கூட்டத்துடன் இரண்டறக் கலந்து காத்திருக்க, காலையில் போன நாம் மதியம் கடந்தபின் தான் பலி பீடத்துக்கு அழைக்கப்படுவோம். அந்தா இந்தாவெனச் சகல சடங்குகளையும் முடித்துக்கொண்டு வீடு திரும்பினால், அவரவர் வயதுக்குகேற்ப அம்மாவோ, மனைவியோ "இன்னும் கொஞ்சம் குறைந்திருக்கலாம் "என்று நாம் மொட்டையே போட்டுவிட்டு வழுக்கையை தடவிய படியே வந்தாலும் கூட.... விமர்சிப்பார்கள். அதைப் புறக்கணித்து, ஏதோ பண்ணைக் கடலுக்குள் இறங்கியவன்போல் உச்சிமுதல் பாதம்வரை குளித்து முழுகி இடுப்பிலிருந்து விரலில் வரை அணிந்திருந்த சகலதையும் கழுவிய பின்னர் தான் வீட்டினுள் அனுமதிக்கப்படுவோம். தலையைத் துவட்டியபடி கண்ணாடி முன் நிற்க, ஒரு பெரிய பாரத்தை இறக்கிய திருப்தி ஏற்படும். சில்லறைகளை எண்ணிய படியே அடுத்த திருவிழாவுக்கு காத்திருக்கும் நல்லூர் பிச்சைக்காரியின் ஆர்வத்துடன் அடுத்த களையெடுப்பு நாளை எதிர்பார்த்தி ருக்கத் தொடங்குவோம்.

..............................................................

ஆயிரம் தலைகண்ட அபூர்வ சிந்தாமணி, சிகையலங்கார சிரோண்மணி சுருளிகேசன் தான் எனது ஆஸ்தான சிகையலங்காரன். சுந்தரகேசவன் என்பதுதான் அவ னது உண்மையான பெயரென்பதை கடவுளே கூட வந்து சொன்னால் கூட அவனேகூட நம்ப மாட்டான். தோழில் பக்திமிளிர அவனது அப்பா, "அழகிய மயிரை உடையவன்" எனும் பொருள்பட பெயர் வைத்திருந்தாலும், அட்வானி டரீகாவினதை ஒத்திருந்த அவனது சுருட்டைமுடி அவனுக்கு இப்பட்டப் பெயரை பெற்றுத்தந்தது. அதுவே காலமுள்ளளவுமாய் நிலைத்தும் விட்டது. பாடசாலை நாட்களிலிருந்தே நானும் அவனும் ஈர்தலை ஓர் மயிராக சினேகித்திருப்பதால் என்னதான் அவன் கண்காணி இல்லாதபோது கவ்வாத்து பண்ணுவதுபோல மயிர் வெட்டினாலும், நான் அவனிடமே எனது தலையை ஒப்படைத்து வந்தேன். அதனால் நானொன்றும் நட்டப்பட்டு விடவில்லை. எனது தலை எனது முதலாவது கழுத்து முள்ளென்பில் கொழுவப்பட்டவாறே இன்றுவரை இருந்து வருகிறது. முக்கியமாக எனது காதுகள் இருக்கவேண்டிய இடத்திலேயே உள்ளன.

சுருளின் பல் 'கேசியக்' கம்பனியான "டானியல் முடி திருத்தகம்" என்பதன் பதப்பிரயோகம் இன்றுவரை எனக்கு விளங்கியபாடில்லை. முடியில் என்னத்தைத்தான் திருத்துவீர்களோ? திருத்துவதற்கு அது என்ன காபரேற்றரா, கல்லுமெஷினா? எது எவ்வாறாயினும் அவனது தகப்பனுக்குப் பிறகு அவன்தான் ஹெயிர் (வாரிசு) ஒப் ஹெயர் என்பதால் அவன் கைக்கு கடை வந்ததிலிருந்து ஒருவித பக்தி சிரத்தையுடன்தான் தொழில் செய்துவருகிறான். அவனது தொழில் பக்தியை பள்ளிக் காலத்திலேயே பலவிடங்களில் நான் கண்டுள்ளேன். சில உன்னத கணங்களில் நாங்களெல்லாம் புல்லரிக்கும் போது அவன்மட்டும் மயிர் கூச் செறிவான். பொன்மணி வைரமுத்து சங்கத்தமிழில் புதுக்கவிதை தேடியதைவிட இவன் முடிக்கவிதை தேடியதுதான் அதிகம். "கார்குழல்" என்றால் ஏதோ காரின் பின்னாலுள்ள சைலென்ஸர் குழல் என நம்பிவந்த எனக்கு, அது கரிய கூந்தல் எனக்கூறி எனது அறியாமை இருளை அகற்றியதும் அவன் தானே? அப்படிப்பட்ட அவன் ஒருநாள் என்னிடம் வந்து "டேய் நீள்சடை, (நீள்சடை என்பது அவன் எனக்கு வைத்த பட்டப்பெயர் – அதிலும்கூட நீங்கள் அவனின் தொ.ப. ஐக் கவனிக்கலாம்) முன்னாளில் கூட தமிழரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையே முடிவெட்டும் வழக்கம் நிலவி வந்த தாக நம்ப இடமுள்ளதடா!" எனக்கூறி கலித் தொகையில் 32ம் பாடலை பாடத் தொடங்கி னான்.

"எஃகு இடைதொட்ட, கார்க்கவின் பெற்ற ஐம்பால்". அதாவது எஃகிலான கத்தரிக்கோலால் இடையே வெட்டப்பட்ட, கருமுகிலின் அழகை பெற்ற, ஐந்து பகுதியாக பிரித்து பின்னப்பட்ட" என்று சீர்பிரித்து பொழிப்புரையை பின்னத் தொடங்கினான் பாருங்கள், நான் எனது தலையை பிய்த்துக்கொள்ள முயன்றேன். நல்லவேளை எண்ணை வைத்திருந்தால் கை வழுக்கி விட்டது.

(இதுவரையான உதாரணங்களிலேயே நொந்துபோனவர்கள் அடுத்த உதாரணத்தை படிக்காது தாண்டிச் செல்வதே இருசாரா ருக்கும் பாதுகாப்பானது)

அப்புறம் உங்கள் இஷ்டம், மேற்கூறிய வற்றுக்கெல்லாம் 'முடி' வைக்கும் விதமாக ஒருமுறை ஒரு விழாவுக்கு நான் தலைமை யுரை எழுதும்போது அவன் தலையிட்டு, அதை இப்படி எழுது, இதை அப்படி எழுது" என்று உரையையே மசாஜ் பண்ணிவிட்டுப் போன பிறகு நான் அதை வாசித்துப் பார்த்தேன்.

"தலைசீவி முடிதலைப்போல் சீராய், தலை முறையின் தலையெழுத்தை சீப்பாய் வாரு வோர், முடியில் தம்தலையை அடியில் இழந் தேனும் நாளைத் தலைவர்கள் தலைக்கு முடிகிடைக்கத் தலைப்படுவோர் – தலை மையை, தலையை, மெய்யை – பிறந்தலை, வளர்தலை – தலைமுடி வளர்தலை – காதலை – சாதலை, முடிதலை – தலைமுடி முடிதலை கற்பித்தலை செய்து ஆடற் தலைவன் தலைக் கூந்தலைப்போல் மாந்தரை உயர்த்துவோர் – மயிரளவும், மாணவர் தறுதலை ஆதலை, கழிசடையாய் போதலை, தலைமுடி வெளுத் தலை 'டை' தடுத்தலைப் போல் தடுப்போர் – கூந்தலை மாதம்தோறும் கத்தரியால் குறைத் தலைப்போல் மாணவர் குறைகளை அன்பால் குறைப்போர், பின்னால் இருக்கும் பின்னலை முன்னால் எடுத்துவிடும் பெண்ணால் எப்படி பின்னலை முன்னாலே பார்க்க முடியுமோ, அதுபோல் பின்னாலே நடப்பதை முன்னாலே உணர்ந்து அதற்கொப்ப நடப்போர் என கற்பித்தல் பணி செய்தலை, சமூகப் பாலையின் தலை பனி பெய்தலைப்போல் செய்யும் ஆசிரியர்களை, அவர்கள் மதலைகள், குழ லால் – மழலைகள் குரலால் –வாழ்த்தி, அவர் தம் மயிர் கூச்செறிய வைக்கும் இவ்விழாவை தலைத்தலை சிறப்பிக்க, தலை நன்றாய் வெளுக்க, தலை வெளுப்பை மறைக்க, தலை யில் மை தடவியோர்க்கே தலைமை என் றில்லாமல், சிவனின் சடாமுடியை சிறுபயல் போய் சீவுதல் போல் மூன்று இலையே முளை யாத எனக்கு தலைமை தந்தாரே – எனினும் எனக்கு தலைமை–தலைமேல் தண் தாரே!

மெஷினை கண்டுபிடித்த தலையை குனிய வைத்துவிட்டு, மெஷின்தானே தலை யையே மேய்ந்து தள்ளுகிறது? அதனால், தலையில் முடி இல்லாதோரையும், இரவல் முடி வாங்கியேனும் பிய்த்துக்கொள்ள வைக்கும் எனது தலைமையுரை" என்றி ருந்தது. என்தலை காய்ந்துபோனது. நல்ல வேளை, தலைமையுரையையும் முடிவுரை யையும் சேர்த்து "தலைமுடியுரையாக" கொடுத்து விட்டாய் என்று யாரும் கடிக்க வில்லை. அதற்காய் ஆறுதலை சீ, ஆறுதல் பட்டேன்.

.............................................................

என்னதான் மயிர்மாணிக்கம் கொடி களால் அலங்கரித்திருந்தாலும் அவனது சலூ னில் கேசம் சேர்ந்தளவு காசு சேரவில்லை. அவன் துண்டை உதறும் போதே "அடுத்த முறை வெட்டும்போது சேர்த்துத் தருகிறேன்" என்ற படியே ஓடுவோர்தான் அதிகம். சுருளியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடன் அன்பை முறிக்கும், மயிரை உதிர்க்கும்" என்றெல்லாம் எழுதி வைத்துப் பார்த்தான். ஒரு பயனுமில்லை. எல்லாக் கடைகளிலும் பொருளை கொடுப்பவனுக்குத்தான் காசு கொடுப்பார்கள். இங்குமட்டும் நாமே மயிரையும் கொடுத்து நாமே காசையும் கொடுப்பதா என எண்ணினார்கள் போலும்.

அது அவ்வாறேயிருக்க அன்றொருநாள் முடிவெட்டும் முடிவோடு அவனது சலூனுக்குள் நான் நுளைந்தபோது, ஏதோ குலுக்கல் தினத்தன்று ஒரு பெரிய வாளிக்குள் எல்லா லொத்தர் ரிக்கட்டுக்களையும் போட்டுக் குலுக்குவதுபோல கதிரையிலிருந்த ஒரு மனிதரின் தோள்களை பற்றி உலுப்போ உலுப்பென்று உலுப்பிக் கொண்டிருந்தான் சுருளி. அந்த மனிதரோ, கண்களை மூடிக்கொண்டு ஏதேதோ ஊறிக் கொண்டிருந்தார். அவரது தலையோ, அறையின் வெளிச்சத்தை வாங்கி, அதை மூன்று மடங்காக்கி பிரதிபலிக்கக்கூடிய வகையில் மிகப் பளபளப்பாயிருந்தது. ஒரு வேளை சுருளி உலுப்பிய உலுப்பில் மயிர் முழுவதும் கொட்டிவிட்டதா?

"என்ன – சுருளி, புதுவகை மசாஜா?" என்றபடி அணுகினேன். "அதை ஏன் கேட்கிறாய்? வந்து இருந்தான். நானும் எதார்த்தமாய் – மயிர் வெட்டிவிட்டேன். பிறகு மசாஜ் பண்ணிவிடச் சொன்னான். நானும் பண்ணித் தொலைத்தேன். திடீரென்று "இன்னும் கொஞ்சம் வெட்டிவிடு"என்று சொன்னான். போனால் போகிறதென்று வெட்டினேன். திரும்பவும், "இன்னும் வெட்டு" என்றான். ஒரு கட்டத்தில் கத்தரிக்கோலுக்கு அகப்படமுடியாதளவு மயிர் சின்னதாகிப் போனபிறகும்கூட "வெட்டு" என்றான். நான் பொறுமையிழந்து பிளேடை எடுத்து மொட்டை அடித்துத் தள்ளிவிட்டுப் பார்க்கிறேன், இன்னும் கொஞ்சம் வெட்டு" என்கிறான். அப்போதுதான்டா முகத்தை கவனித்தேன் – ஆள் இவ்வளவு நேரமும் நித்திரையில் கண்டபாட்டுக்கு ஏதோ கனவு கண்டு, அதில்தான்" இன்னும் வெட்டு" என்று வசனம் பேசிக் கொண்டிருக்கிறான், அப்போதிலிருந்து முக்கால் மணிநேரமாக உலுப்பிக் கொண்டிருக்கிறேன். ஆள் எழுந்தபாடில்லை. என்றுவிட்டு ஜக்பொட் பரிசு வெறும் அதிர்ஷ்டசாலியை தெரிவுசெய்யும் குலுக்கல் என்பது போல் ஒரு குலுக்கல் குலுக்கவும், அந்த அதிர்ச்சியில் மனிதர் உயிர்த்தெழுந்தார். எழுந்தவர் நித்திரை வெறியோடு கண்ணாடியை பார்த்துவிட்டு "ஆ! செத்துப்போன என் அப்பா!" என்று கத்தினார். வெகுவிரைவில், தெரிந்தது ஒளி வட்டமல்ல, 'வழி'வட்டம், என்று அறிந்து, அதிர்ச்சியுடன் தன் தலையை – மொட்டையை தடவிப் பார்த்தவாறே சுருளியிடம் சீறினார்.

"யாரைக் கேட்டடா மொட்டை போட்டாய்?"

"நீங்கதாங்...."

சுருளி இழுக்க, அவனை, அவனது முன் மூன்று தலைமுறையை, அவனது பின் மூன்று சந்ததிகளை (மொத்தம் 7 தலைமுறை) என்று சுருளியின் அப்பாவின் நினைவு மலரின் வம்சாவழி விருட்சத்தி லிருந்த சகலரையும் திட்டித் தீர்த்துவிட்டு (நான்மட்டும் இல்லாவிட்டால் சுருளியின் வலதுகாதை கடித்து நறுச் நறுச்சென்று மென்று துப்பவும் அவர் தயாராயிருந்தார் )

"பாருங்கள் தம்பி, இந்தத் தலையுடன் எப்படி நான் நடமாடுவது?" என்றவாறே என் முகத்துக்கு மிக அருகில் தன் தலையை நுளைத்தார். அதிலே எனது முகமே பூதாகரமாய் தெரிந்தது வேடிக்கையாயிருந்தாலும் பிரகாசம் கண்ணைப் பாதிக்கும் என்பதால் நான் முகத்தை அப்புறப்படுத்த,

"என்ன சலூன் ஈதோ, கூர்பிளேடும் உனதோ,

உன்னை அறிந்தோ மயிரை வளர்த்தேன் – என்னை

விரைந்தேற்றுக் கொள்ளாத சலூனுன்டோ உண்டே

நரையேற்றுக் கொள்ளாத "டை"யும்"

என்று பாடாத குறையாக,

"இனிமேல் தலையே போனாலும் உன் கடைக்கு வரமாட்டேன்" என்றபடி அவர் அப்புறப்பட, "க்கும்.... இவர் பெரிய கவரிமான், மயிர் இல்லாமல் உயிர்வாழமாட்டார்..." என்ற சுருளி, பிறகு விட்டதற்குப் பெயர் பெருமூச்சு.

"இவன்கூட கடன்காரன்தான். இன்றையானும் சேர்த்து 450 ரூபாய் தருமதி, அதுவும் மொட்டைதான்...."என்று அலுத்துக் கொண்டான்.

இப்படியே எல்லோரும் காசுதராமல் போனால் இவன் நயினாதீவுக்கு போய் நேர்த்தி மொட்டைகள் வழிக்கவேண்டியது தான் என வருந்திய நானும், தாடி இருந்த இடத்தை தடவியவாறே யோசித்தேன். நீண்ட நேரத்துக்கு சலூனில் மயிர் விழுந்தாலும் ஒலி கேட்குமளவு அமைதி. திடீரென்று என் மண்டையில் ஒளிப்பிரகாசம் உதறி எறிய, "டேய் இப்படி செய்தால் என்ன? வரும் எல்லோருக்கும் மயிர்வெட்டி முடிந்ததும் இலவசமாய் மசாஜ் பண்ணு, வந்தவன் நித்திரையாய் போய் விடுவான் பிறகு நீயே அவனவன் பேர்சை எடுத்து வேண்டிய காசை எடுத்துக் கொள்"

"சீச்சீ, அது களவு! என்றவனுக்கு நான் நன்மை தீமைகளையும், தீமை நன்மைகளையும் எடுத்துக்கூற, அவனும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, எனது திட்டமசோதாவைச் சட்டமாக்கினான்.

அடுத்தமுறை ஒரு சினேகபூர்வ விஜயமாக அவனது சலூனுக்குப் போனபோது எனது ஐடியாவால் சகல கடன்காரரிடமும் காசு கறப்பதைச் சொன்னான். அதுகூடப் பரவாயில்லை, ஒரு கிழவர் காசில்லாத பேர்ஸ் வைத்திருக்க கடுப்பான இவன் அவரது வெள்ளிச் சங்கிலியை கழற்றி எடுத்துவிட்டான். (அந்தச் சங்கிலி கழுத்தில் இருக்காமல் கொஞ்சம் கீழே இடுப்பிலிருந்ததைப் பற்றி உங்களுக்கென்ன?) எனது ஐடியாவுக்கு நன்றிசொல்லும் வகையில் அன்று இலவசமாக ஷேவ் பண்ணிவிட்டான். மாசாஜ்ம் பண்ணிவிடவா என்று அவன் கேட்கவே, நான் அவசரமாக மறுத்து, வியர்வையைத் துடைத்தவாறே வெளியேறினேன்.

..................................................................

காலம் கலண்டர்களை கசக்கி எறிந்ததில் நான் திருகோணமலையில் போய் விழுந்தேன். சுருளி இல்லாத நான்கு வருடங்களில் எத்தனையோ பேரிடம் தலைவணங்கியிருக்கிறேன். அவர்களால் என் மயிரை கவர முடிந்ததே தவிர, மனதை கவர முடியவில்லை. அன்றும் அப்படித்தான்–குத்துமதிப்பாக ஒரு சலூனுக்குப் போனேன்.

அந்த சலூனுக்குள் நுளைந்ததுமே ஒரு இனம்புரியாத பயம் என்னை ஆட்கொண்டது. சலூனே ஆளரவமற்று வெளிச்சோடிக்கிடந்தது. உச்சி வேளைவேறு, துணிச்சலை வரவழைத்து உள்ளே நுழைந்தேன். தனிமை என்னை உற்சாகப்படுத்த எனது அழகை (?) நான் கண்ணாடியில் பலகோணங்களில் பார்த்தேன். "விஷயம் தெரியாமல் ஒரு கொழுத்த வெள்ளாட்டு கசாப்புக் கடையில் நின்று கதகளி ஆடிச்சுதாம்". என்ற வசனம் ஞாபகம் வர, ஓடி வந்து வரிசையாய் அடுக்கியிருந்த கதிரைகளில் ஒன்றில் அமர்ந்து அருகிலிருந்த கதிரையை நகர்த்தி சபதம் செய்தேன். உடனே சலூனின் பின்பக்க கதவு வழியாக ஒரு தலைமட்டும் வெளியே வந்து, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்." என்றுவிட்டு என் சம்மதத்துக்கு முன்பே பட்டென்று உள்ளே போய்விட்டது. அந்தத் தலை பதின்மூன்று "ஒரு நிமிஷம்" கழித்து, தன் உடலோடு வெளியே வந்தது.

வந்தவன் சின்னப் பையனாயிருந்தான். வாய்திறவாமல் போய் சிம்மாசனத்தில் –மன்னிக்கவும் சிகையாசனத்தில் வீற்றேன். அவன், ஒரு காலத்தில் வெள்ளைத்துணியாயிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை எடுத்துவந்து அதற்குள் என் கழுத்துக் குக் கீழான சில பல பகுதிகளைப் பதுக்கினான். சலூனிலேயே நான் வெறுப்பது அந்தத் துணி யைத்தான். உடம்போடு சேர்த்து கைகளையும் அது கட்டிப்போடுவதால் கேவலம் மூக்குக்கு கீழே விழும் ஒரு மயிர் எம்மை தும்மலுக்கு திருநிலைப்படுத்துவதைக்கூட நம்மால் தடுக்க முடியாது போய்விடுகிறது. இப்படித்தான் ஒரு முறை எனது சித்தப்பா சின்னப்பா (சித்தப்பா என்பது உறவு, சின்னப்பா என்பது பெயர்) பொறுக்க முடியாது தும்மிவிட, அவ்வேளை யில் அவரது காதைச்சுற்றிய பகுதிகளில் தலை முடியின் எல்லைப்பிரச்சனையை கையாண்டு கொண்டிருந்த சவரக்கத்தி, காதைச்சுற்றி ஒரு அரைவட்டத்தில் கிழித்துவிட்டது. பலவரு டங்கள் கழித்து சித்தப்பாவை எங்கோ பார்த்த ஏ.ஆர். முருகதாஸ், அந்த அரைவட்ட ஐடி யாவை ***கஜினி***யில் பயன்படுத்தியிருக்கலாம்.

நான் ஆர்வத்துடன் கருதறுப்புக்குத் தயா ராக, அவனோ போய் தன்பாட்டுக்கு சலூனை கூட்டத் தொடங்கிவிட்டான். பிறகு மின்விசிறியை ஒரு சுற்று வேகப்படுத்தினான். பின் இரண்டு சுற்று குறைத்தான், லாச்சியை இழுத்து விட்டு மூடினான். மூடிவிட்டு இழுத்தான். தொழிலை ஆரம்பிக்க நல்ல நேரம் பார்க்கிறானா? தலையைமட்டும் தொடுகிறானில்லை.

ஒருவழியாய் சீப்பை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்து எனது தாடையை தனது இடது கையால் பற்றி அப்படியும் இப்படியும் ஆட்டி, ஏதோ வியாபாரி குதிரையின் தாடையை பிடித்து பரிசோதிப்பதுபோல் பார்த்துவிட்டு சீப்பை எனது தலைமுடிக்குள் புதைத்து அவன் இழுக்க, அது வரவில்லை. மறுபடியும் இழுத் தான். சிக்கிவிட்டது போலும், வரவில்லை. அவன் சற்றும் அசரவில்லை. இரண்டு கையா லும் சீப்பை பிடித்து வலதுகாலை கதிரையில் ஊன்றி, ஏதோ பலாப்பழம் பிளப்பவன் போல் இழுத்தான். எனக்கோ மயிரை இழுக்க வலி யில் உயிரே போனது.

"ஸ்...ஆ..ய்.. பார்த்து...! மெதுவாய் இழு...!" கத்தியே விட்டேன். அவன் பதறாமல் கடைசி யாக ஒரு இழுப்பு இழுக்க சீப்பு விடுதலையா யிற்று. இது வேலைக்காகாது என உணர்ந்த அவன் தண்ணீர் நிரப்பி வைத்திருந்த ஸ்பிறே யரை எடுத்து, லொறிக்கு வோட்டர்சேவிஸ் போடுவதுபோல் கண்டமேனிக்கு அடித்தான். தண்ணீர் கன்னங்கள் வழியே வழியத் தொடங் கியது. அவன் மீண்டும் சீப்பை எடுத்தான்.

வலது பக்கம் உச்சி பிரிப்பதே எனது வழமை. அவனும் அதை அவ்வாறே சீவினான். பிறகு பெரும்பான்மை இடதுபக்க முடியிலிருந்து கொஞ்சம் வலதுபக்கத்துக்கு பகிர்ந்தளித்தான். கொடுத்தது போதாது என எண்ணி மென் மேலும் வலதுபக்கத்துக்கு கொடுக்கவே, எனது உச்சி சூரியன்போலே மேலேமேலே ஏறிக் கொண்டிருந்தது. உச்சி, என் தலையுச் சியை அடைந்ததும் ஒரு விளம்பர இடைவேளை விட்டான், கண்ணாடியில் என் முகத்தை பார்த்தேன், வேடிக்கையாயிருந்தது. *டைட்டா னிக்* நாயகன் லியானடோ டி கப்ரியோ மாதிரி கொஞ்சம் அழகாய்க் கூட உணர்ந்தேன். இப்படியே விட்டுவிடலாமா என நான் யோசிப் பதற்குள் மீண்டும் பங்கீட்டை துவங்கிய அவன், எனது உச்சியை இடது பக்கத்தில் அஸ்தமிக்க வைத்துவிட்டான்.

"தம்பி, வலதுபக்கம் இருந்த இடத்தி லேயே உச்சியை வை".

அவனும் அவ்வாறாக செய்ய, என் பழைய முகத்துக்கு மீண்டேன். கூடுவிட்டுக் கூடுதாவிய அனுபவம் கிடைத்தது.

அதற்குப் பிறகுதானையா எடுத்தான் அந்தக் துருப்பிடித்த கத்தரிக்கோலை, நிச்சய மாக இரண்டாம் செகராஜசேகரனுக்கு முடி வெட்டியது போன்ற ஒரு பெருமை மிகு வர லாற்றுப் பின்னணி அதற்கு இருந்திருக்கும்.

"என்னமாதிரி ஐயா வெட்ட?"

"நோமலுக்கு கொண்டுவந்துவிடு, போதும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோ எடுத்த கத்தரிக்கோலை வைத்து விட்டு லாச்சியை திறந்தான். அங்கே சிவனே என்று படுத்திருந்தது "மெஷின்" என்னும் "கட்டர்" என்னும் "மெஷின் கட்டர்" அதை ஏதோ குருவிக்குஞ்சை தூக்குவதுமாதிரி தூக்கி, "பிளக்"கினான். பின் அதிலிருந்த பல்செட்டைக் கழற்றிவிட்டு வேறு ஒரு பல்செட் போட்டான். என் பிடரியை அழுத்தி, கீழே குனிய வைத்தான். அதற்குப் பிறகு ஏதோ "ர்...ர்..." என்று சத்தம் போட்டும் தான் கேட்டதே தவிர என்ன நடந்தது என்று. எனக்குத் தெரியாது. நிமிர்ந்தபிறகு தான் பின் கண்ணாடியில் தெரிந்தது, சணல் காட்டை உழுவதுமாதிரி உழுது தள்ளியிருக்கிறான் என்று. பின்னிணைப்பாக காதைச் சுற்றியும் மேய்த்துவிட்டு அந்த மெஷினை உள்ளே தள்ளிய பிறகுதான் நான் எனது கையில் இறுகப் பிடித்து வைத்திருந்த உயிரை விடுவித்து உடலின் பலபாகங்களுக்கும் பகிர்ந்தளித்தேன்.

பழையபடி அந்தப் பழைய கத்தரிக்கோலை எடுத்தவன், எனது "டொப்"புக்கு விரைந்தான். ஆடு குழைதழைகளை மேய்வது மாதிரி அகப்பட்ட சகலதையும் குதறித் தள்ளினான். கத்தரிக்கோல் இடுக்கில் சிக்கி வரமறுத்த மயிர்களை பிடுங்கி எடுத்தான். (அந்தத் தலை மயிருக்குக் கீழே ஒரு மனிதன் இருப்பதை மறந்து விட்டானா?) ஒரு வழியாய் வெட்டுக் குத்துகளை முடித்துக் கொண்டு சவரக்கத்தியை எடுத்தான். காதைச்சுற்றி சிரமதானம் செய்து விட்டு "கட்பண்ணவா' என்று கேட்டான். ஒருகணம் திடுக்கிட்ட நான், அவன் கேட்டது கழுத்தை அல்ல, காதுக்கு அருகிலுள்ள, "கிருதாவை" என்று புரிந்து கொண்டு "ம்" என்றேன். ஏதோ நிலமட்டம் பார்க்கும் மேசன் மாதிரி கிடந்து, படுத்தெல்லாம் மட்டம் பார்த்து. சவரக் கத்தியில் அளவுகுறித்து இருபுறமும் கட் பண்ணினாலும் ஒருபக்கம் சற்று நீண்டே நின்றது. வெறுத்துப் போன அவன் அதை குறைக்க, அது மற்றையதிலும் குறைந்து விட்டது. ஏதேது, இப்படியே போனால் குரங்கு அப்பம் பிரித்ததுபோல் வெட்டி வெட்டி, கடைசியில் இரண்டு கிருதாவையும் உச்சியில் சந்திக்க வைத்துவிடுவானோ என்று பயந்தேன்.

ஒரு வழியாக ஆயுதப் பிரயோகங்களெல்லாம் முடிந்து விட்டன. ஒரு பழைய பஞ்சில், அதிலும் பழைய பவுடரை கொட்டி, முகம் முழுக்க வெள்ளையடித்தான். பிறகு ஒரு பழைய துண்டால் அதை துடைத்துவிட்டு என் உடம்பை நல்லடக்கியிருந்த வெள்ளைத்துண்டையும் உதறி எடுத்தான். சம்பிரதாயங்கள் முடிந்துவிட்டதுதானே என எண்ணி எழ முயன்ற என்னை தோள்களை பிடித்து அழுத்தி இருத்தி, ஏதோ ஒரு எண்ணையை தலையில் ஊற்றி, ரொட்டிக்கு மாக்குழைப்பதுபோல் தலையை பிசையத் தொடங்கினான். தேய்த்து, அமுக்கி, குத்தி, சுரண்டி, பிசைந்து, தலையை இடமும் வலமும் ஆட்டி, கழுத்தில் ஏதோ எலும்பு முறியும் சப்தம் கேட்டதும், திருப்திப்பட்டு... எனக்கோ ஒருவித போதை தலைக்கேறியது.

..............................

"அண்ணை, எல்லாம் முடிந்தது. எழும்புங்கோ".

எப்போது நித்திரையானேன் என்று தெரியவில்லை. வழமையைவிட இம்முறை அதிக பாரம் குறைந்ததாய் உணர்ந்தேன். எழுந்து சட்டைப்பையில் வைத்திருந்த நூறு ரூபாயை எடுத்து நீட்ட, பயபக்தியுடன் வாங்கியவன், லாச்சியை கிளறி, ஒரு இருபது ரூபாயை எடுத்து தந்தான். நான் வேண்டாம் என மறுத்தும், தந்துவிட்டான். "வேலை மட்டுமட்டு என்றாலும் நல்ல பையன்" என எண்ணியபடி இருபது ரூபாவைச் சட்டைப் பையில் எடுத்துப் போட்டுக் கொண்டு, எனது மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தேன். (இந்த இடத்திலேயே "கட்டுரை" முடிந்ததாகக் கருதி நீங்கள் ஒதுங்கி விடலாம். மேலே தேவையில்லை. நன்றி, வணக்கம்)

அட, வாசிக்க வேண்டாம் என்றேன், வாசிக்கிறீர்களே, சரி போகிறது. 'கதைமாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையே, நீது இதை எப்படி கதையாக்கப் போகிறான்' என்று யோசித்தபடியே மோட்டார் சைக்கிளில் திறப்பை நுழைத்தேன். அப்போது தான் அந்தப் பையனை இதற்குமுன் எங்கோ பார்த்த ஞாபகம் வந்தது. வலிந்து முயன்றும் எங்கே பார்த்தேன் என்பது ஞாபகம் வராததால், திரும்பி சலூனுள் சென்று

"தம்பி, இந்த முகத்தை இதற்குமுதல் எங்கேயோ பார்த்திருக்கிறேனே....?"

"இல்லை இந்த முகம் இருபது வருடமாக எனது உடம்பில் தான் உள்ளது வேறு எங்கும் கொடுக்கவில்லையே...."

"நீ...நீ.. சுருளியிடம் அப்பெரன்டிஸாய்..."

"ஓம் அவரிடம் நான்கு வருடத்துக்குமுன் அப்பெரசண்டியாய் இருந்தேன். எனக்கு தொழிலின் ***சகல நுணுக்கங்களையும்*** கற்றுத் தந்தவர் அவர்தான்..."

நேரமாகிவிட்டதால் மேலும் கதைக்காமல் மீண்டும் மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தேன். இனிமேல் இவனிடம் தான் வர வேண்டும். நானும் அவனும் "ஒன்டுக்கை ஒன்டு"என்று ஆகிவிட்டதே! (இந்த இடத்தில் கூட "கட்டுரை" முடிந்ததாக கருதி கட்டுரையை விட்டு விலகிவிடலாம், இனிமேல் "கதை" ஆகிவிடும்.)

"தொழிலின் சகல நுணுக்கங்களும்" என்று சொல்லும்போது ஏன் அத்தனை அழுத்தம் கொடுத்தான்... அவசரமாக ஜீன்ஸ் பொக்கற்றுள் கையை விட்டுப் பார்த்தேன்.

அங்கே...

அங்கே...

பேர்ஸைக் காணவில்லை.

**பாலசுப்பிரமணியம் நீதுஜன்**
2009 கணிதம்

## Who is a genuine friend ?

***In the present day world it is difficult to say who it is. For everybody knows how to talk glibly, how to dissemble one's insidious enmity in an affable smile and a pleasing appearance. Only when a misfortune befalls somebody one is able to know who is a genuine friend and who is not. A friend in deed is a friend indeed.***

"Too many cooks spoil the soup" is a proverb.
What is the hang of this apothegm ?
Before entrusting a work to a person a responsible person ought to find out whether the person in question is capable of executing it or not.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முதுமை"

உலகின் பரிமானத்தில் பரிணாமத்தால் வருகை தந்த மனிதனின் தோன்றல் ஒரு புனித மான படைப்பு. இந்தப் படைப்பு இந்தப் பரி ணாமத்தால் உருவான பரிமாணம் ஒவ்வொன் றும் அனுபவிக்கும் ஒரு பகுதிதான் முதுமை. மூன்று கட்டத்தில் முதுமைக் கட்டத்தை அனுபவிக்கும் பாக்கியம் சில உயிர்களிற்கு கிடைப்பதில்லை. சில உயிர்கள் இப்பாக்கியம் கிடைத்தும் அதை அனுபவிப்பதில்லை.

மரணத்தின் வாசற்படிதான் முதுமை எனினும் முதுமையின் பணி அளப்பரியது. தாயின் மடியில் குழந்தையாய் தவழ்ந்தவன் மரணத்தின் மடியில் மடியும் காலத்தில் அனுபவ வெள்ளத்தை அள்ளிக்கொட்டும் அரிய காலமது. எனினும் முதுமையை நோக்கிப் பயணிக்கும் பலருக்கும் முதுமையின் பயன், பணி தெரிவதில்லை –புரிவதில்லை; அனுபவ வெள்ளத்தால் ஒரு பூரண உன்னதமான மனி தனை உருவாக்கும் சக்தி முதுமைக்கு மட்டுமே உண்டு. இருக்கும் வளங்களைச் சரியாகப் பயன் படுத்த வேண்டும் என்று குரலெழுப்பும் உலகம் முதுமை எனும் வளத்தை முழுமையாக பயன்படுத்துகிறதா?

அறியாத வயதில் தவழ்ந்தது முதல் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அடி பட்டு அனுபவ மழையில் நனைந்து அறிவாளி களாக இல்லாவிடினும் அனுபவ சாலிகளாக வளர்ந்து நிற்கும் முதியவர்கள் இறைவன் கொடுத்த இலவச வரம். இலவசப் பொருளிற்கு மதிப்பில்லை என்பது போல முதியவர்களை இயலாதவர்களாக நினைக்கும் மனப்பாங்கு கொண்ட இளைஞர் சமுதாயம் இறைவன் கொடுத்த கொடூர சாபம். இளமை, அழகு, அணிகலன்கள், ஆடம்பரங்கள், நிலையானது என எண்ணி தமது முதுமையை தூரநோக் கில் எண்ணிப்பார்க்காது முதியவர்கள் கொடு மைப்படுத்தும் மனப்பாங்கு கொண்ட இளை ஞர் சமூகம் எங்கு நோக்கிப் போகிறது.....

உலகின் புனிதமான சின்னங்களில் ஒன் றான முதுமையை மனதளவிலும் உடலள விலும் துன்புறுத்தி அவர்களின் எண்ணங் களையும் ஏக்கங்களையும் அடைத்து வைக்கும் பிள்ளைகள் எத்தனை பேர்? அவமானச் சின்னமாயினும் அவசியமானதொன்றாக வளர்ந்து வரும் முதியோர் காப்பகங்கள் எத் தனை எத்தனை? காப்பகங்களில் ஒதுங்கி வாழ முதியவர்கள் என்ன ஒதுக்கப்பட்ட வர்களா அல்லது பழிக்கப்பட்டவர்களா? அவர்கள் வாழ்க்கைப்பாதையில் அடிபட்டு களைத்து அமைதியாகவும் மனச்சந்தோஷத் துடனும் தம்பிள்ளைகளுடன் வாழ நினைக் கும் அந்த அரிய காலத்தில் அவர்களை அநா தைகளாக விடுவதோ அல்லது அடக்கி வைப் பதோ நாகரிகமான செயலாகுமா?

நாகரிக மோகத்தில் மூழ்கியுள்ள சமு தாயம் அநாகரிகமாக நினைக்கும் முதுமை வழங்கும் அரிய பாடங்கள் எத்தனை? புத்தகக் கல்வியால் நிலையில் நீ உயரலாம் எனினும் அனுபவக்கல்வியாலேயே நீ மனிதனாகலாம். பிறந்த குழந்தையை குளிப்பாட்டி குழந்தை யாய் நீ இருக்கையில் பாராட்டி சீராட்டி உனை வளர்த்து உன்நலம் காப்பதற்காய் தன்னலம் மறந்த உன்தாய், நீ இளைஞனாய் மலர்கை யில் தோளோடு தோள் கொடுத்து தோழனாய் மாறி உன்னை வாழ்க்கையில் ஏற்றிவிட ஏணி யாய் நிற்கும் உன்தந்தை இவ்வாறு உன்னை வாழ்க்கையில் மனிதனாய் உயர்த்தி விட்ட தெய்வங்கள் இறுதிக் காலத்தில் உன் தயவில் வாழ்வது உனக்குத்தானே பெருமை. அவர்கள் உன் அன்பையும் பாசத்தையும் எதிர்பார்ப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன தவறா? அவர்களிற்கு நீ கொடுக்கும் பரிசுதான் என்ன?

ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்வதிலும் ஆலய தெய்வத்திற்கு அபிஷேகம் செய்வதிலும் உன்னை பெற்ற தாய் தந்தையர்க்கு இறுதிக்காலத்தில் மனநிம்மதியை கொடுப்பதே பெரிய புண்ணியச் செயலாகும். பெற்றவர் மனம் கோணாது நடக்கும் எந்த பிள்ளையும் கெட்டது என்று சரித்திரம் இல்லை. எந்த ஒரு மனிதனும் பணம், பொருள் போன்றவை தொடர்பாகக் கடனாளிகளாக இருக்க விரும்புவதில்லை. ஆனால் பெரும்பாலான மனிதர்கள் கடமை என்ற பகுதியில் கடனாளிகள் ஆகிவிடுகின்றார்கள். உலகில் உயிர்களாய் பிறந்த, மனிதன் தவிர்ந்த எந்த உயிரும் பெற்றெடுத்த தாயில் குழந்தையாகத் தங்கி வாழும் எனினும் தாய் இறுதியில் பிள்ளையில் தங்கி வாழ்வதில்லை. எனினும் மனிதனோ அவ்வாறில்லை. குழந்தையாய் பெற்றோரில் தங்கி வாழும் கடனை அடைக்கப் பெற்றோர் முதியவர்களாகும் போது ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. எனினும் பலர் இவ்வாய்ப்பைப் பயன்படுத்துவதில்லை.

மறுக்கப்பட்ட ஆசைகளும் ஒதுக்கப்பட்ட இனங்களுமே உலகில் கலவரங்களிற்கும் கிளர்ச்சிகளுக்கும் காரணமாய் அமைகின்றன. இந்த வகையில் இறுதிக்கால ஆசைகள் நிறைவேற்றப்படாத முதியவர்கள் கிளர்ச்சிகளில் இறங்கினால் உலகம் உருப்படுமா? எனினும் அவர்கள் அவ்வாறு நினைப்பதில்லை. தம் பிள்ளைகளின் வாழ்வில் அக்கறைகாட்டி உங்களை உத்தமர்களாக்க வேண்டுமென்றே நினைக்கிறார்கள். தங்கள் ஆசைகளை அடக்கி உங்கள் சந்தோசத்தை உங்களுக்கு கொடுக்கிறார்கள். இவ்வாறு தங்களின் உயிர்தவிர அனைத்தையும் உங்களிற்காக அர்ப்பணிக்கும் முதியோருக்கு நீங்கள் செய்யும் நன்றிக்கடன் என்ன?

முதியவர்களின் ஆசைகளை நிராசைகளாக்கி வக்கிர மனத்துடன் வாழும் பிள்ளைகள் உலகின் முதல் கொடுமை, அதனிலும் கொடுமை அவ்வாறானவர்களில் பலர் முதியவர்கள் இறந்த பின்னர் அவர்களின் இறந்த வீட்டை வெகு சிறப்பாகக் கொண்டாடி ஊரிற்கு நல்லவர்களாக நடிப்பது. உனக்கு நீ உண்மையானவனாக இல்லாத போது ஏன் ஊரிற்கு நல்லவனாக நடிக்கிறாய்? உயிருடன் இருக்கும் போது ஊருக்கு தெரியாவிடினும் உன் பெற்றோர் அறிய அவர்களிற்கு நன்மை செய்தால் நீ முதியவனாகும் போது உன்பிள்ளையும் உன்னை மதிப்பான். உன்பிள்ளை வளரும்போது நீ முதியவனாக இருப்பதாக எண்ணிப்பார். உன்மனம் அதன்பிறகு முதியவர்களை கொடுமைப்படுத்தாது. கல்லிலும் மரத்திலும் கடவுளைக் காணும் நீ உன் பெற்றோரில் கடவுளைக் காண். அதுவே உன் உயர்விற்கு வழி வகுக்கும்.

இயலாமை என்ற ஒன்று இல்லை. இளைஞனாய் இருக்கையில் உடலளவில் செயற்படும் எவனும் முதியவனாகையில் மனதளவில் செயற்படவல்லவன். எனவே முதியவர்களை இயலாதவர்கள் என ஒரு மூலையில் முடக்கிவிடாது இயலுமானவர்கள் என இல்லத்தில் இருக்க விடு. உன் இல்லம் சிறந்து விளங்கும். முதுமையை இயலாமையாய் நினைக்கும் இளைஞர்களும் தம் மனத்தை மாற்றினால் பலம் வாய்ந்த ஒரு உலகத்தை கட்டியெழுப்பலாம். முதுமைக்கு துன்பம் சேர்க்கும் துன்பத்தை முழுமையாக ஒழிப்போம்.

"உடல் சோர்ந்து மடியும் வேளையிலும்
உளம் சோர்ந்து மடியோம்"

**கனகரட்ணம் கோகுலன்**
2010 A/L Maths



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோரை எம்முடன் அரவணைப்போம்

வலுவிழந்தோர் எனப்படுபவர்கள் உட லால் மட்டுமே ஊனமடைந்தவர்களாவார்கள். அவர்களிடத்தே உள்ளார்ந்த திறன்கள் ஏரா ளமானவை காணப்படுகின்றன. இதனாலேயே அவர்கள் இன்றும் உயர்வாகக் கருதப்படுகின் றனர். இவர்களது தூய்மையான உள்ளத்திலே தோன்றும் அன்பு பரந்து விரிந்து செல்லும்போது தான் அதன் உண்மையான பண்பு வெளிப்படு கிறது. இவர்கள் வாழ்க்கையில் வேதனைகள் இருந்த போதிலும் இவர்களது விடா முயற்சி யும் தன்னம்பிக்கையும் இவர்களை உலகின் பார்வைக்கு எடுத்துச் சென்றது.

இன்று உலகில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழிநுட்ப வசதி காரணமாக வலுவிழந் தோர்கள் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, கலைத்துறை ஆகிய பல துறைகளிலும் நன்கு முன்னேறியுள்ளனர். இன்று வலுவிழந்தோரை ஆதரித்து அன்பு காட்டி, அவர்களது வாழ்க் கையை உயர்த்துவதற்காக பல தரப்பட்ட தொண்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றிலே வலது குறைந்தோரான பார்வை யிழந்தோர்கள், வாய்பேச முடியாதவர்கள், செவிப்புலன் அற்றவர்கள் என்போரை பரா மரிப்பதற்காக “நவில்ஸ்” பாடசாலை இயங்கி வருகிறது.

அன்றைய நாட்களில் வாழ்ந்த ஔவைப் பிராட்டியார் கூட வலுவிழந்தோரை ஒரு குறை யுள்ளவர்களாகக் கருதி தமது பாடலடிகளில் “அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதிலும் கூன் குருடு செவிடு நீக்கிப் பிறத்தல் அரிது” என தாழ்த்திக் கூறியுள்ளார். எனவே பண்டைய காலங்களில் வலுவிழந்தோர் நாட் டின் சுமை எனக் கருதியதனால் போல் இவர் களை மூலை முடுக்குகளில் ஒதுக்கிவிட்டனர். இதனால் இவர்களது சுதந்திரம் மட்டுமல்ல, தன்னம்பிக்கை, முயற்சி, துணிவு, சிறு புன் னகை என்பனவெல்லாம் முடங்கிக் கிடந்தன. ஆனால் இன்றைய காலத்தில் அனைவரும் சமத்துவம் என்ற நிலைப்பாட்டில் தொழில் நிறுவனங்களிலும், பெரிய கல்லூரிகளிலும் கலைத் துறைகளிலும் தமது உயரிய திறன் களை வெளிக்காட்டி வருகின்றனர்.

வலுவிழந்தோருக்காக அரச, தனியார் நிறுவனங்கள் பல இயங்கி வருகின்றன. இவர் கள் பார்வை இழந்தோருக்காக “பிறேயில்” முறைக் கல்வியும் இவர்களுக்கு “வெள்ளைப் பிரம்பு” என்ற ஒன்றும் 1969இல் கண்டுபிடிக்கப் பட்டது. இதேபோல் ஒவ்வொருவிதத்தினால் தமது உடல் வலுவை இழந்தோருக்காக பொது வான முறையில் ஊனமுற்றோர் தினம் கொண் டாடப்படுகிறது. இத் தினத்திலே இவர்களது கலை நிகழ்வுகள், கருத்தரங்கு, விழிப்புணர்வு யாத்திரைகள் நடைபெறுகின்றன.

எனவே உடல் ஊனமுற்றவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு பல சாதனங்கள் பலரால் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அவர்களுக்கு நாம் மகிழ்ச்சியாக வாழ உதவிட வேண்டும். எவ்வகையிலும் அவர்கள் மனம் புண்பட நடந்து கொள்ளக் கூடாது. எவ்வித குறைபாடு இல்லாத எமக்கும் ஏதாவது குறைபாடு ஏற்படலாம் என மனதில் கொண்டு எம்மில் ஒருவராக வாழ வலுவிழந் தோருக்குக் கைகொடுப்போம்.

நன்றி.

**மயில்வாகனம் இனியாள்**
தரம் 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புக்காக...

குமார் என்பவன் அன்றொரு நாள் தனது அறையிலுள்ள கட்டிலில் புரண்டு புரண்டு படுத்திருந்தான். ஏனெனில் அவனது மனதில் ஏதோவொரு சிந்தனையின் பிரகாரம் நித்திரை வராமல் வீட்டு முகட்டைப் பார்த்த வண்ணம் அவனது மனம் அங்கும் இங்கும் அலைபாயச் சென்று விட்டது. அதாவது அவனது உடல் மட்டும் படுக்கை அறையிலும் அவனது நெஞ்சம் தனது முன்னைய உறவின் நட்பின் தன்மையில் மிதந்து கொண்டிருந்தது. அவன் தனது உறவின் நட்பை எண்ணிய வண்ணமே இருந்ததோடு தனது முன்னைய கால வாழ்வின் உறவுகளோடு கூடிய எண்ணத்தை மீண்டும் எண்ணித் தனது இளமைக்கால நினைவுக்குச் சென்றான்.

குமாரின் குடும்பம் ஒரு அழகான சிறிய வண்ணமயமான குடும்பமாகும். அவன் தனது குடும்பத்தோடு முல்லைத்தீவில் வசித்து வந்தான். அவனுக்கு அம்மா, அப்பா, அவர்களோடு ஆசைக்கு அண்ணாவும், அன்புக்கு அக்காவும் இருந்தனர். செல்லமாக வாழ்ந்தான் குமார். குமார் மீது அவர்களது குடும்பத்தினர் மிகவும் நட்புள்ளங்களாகப் பழகினார்கள். அவனின் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் நண்பர்கள். எவ்வாறு தமது நட்பைக் கையில் வைத்திருப்பார்களோ அதே போன்று அவர்களும் அதாவது குமார் குடும்பமும் நண்பர்களாகவே காணப்பட்டனர். அவர்களது குடும்பத்தின் மீது அவர்களது உறவுகள் மிகவும் துடிதுடிப்பாகவும் மிகவும் வர்ணிக்கக்கூடிய அளவிலும் அவனது குடும்பம் வாழ்ந்து வந்தது.

குமாரின் உறவுகளில் இவனே ஒரு சிறிய பையனாகக் காணப்பட்டான். இதனால் அவனது குடும்பத்திலிருந்து அவர்களது உறவுகள் வரை பந்து உருண்டு அங்கும் இங்கும் விளையாடும் போது தத்தளிப்பது போல அவர்களது நட்பின் பிரகாரம் குமார் தத்தளித்தான். அவனது உள்ளம் பிஞ்சு உள்ளம். ஆகையால் அவனுக்கு நிகழ்காலம் மட்டும் தான் நிரந்தரம், எதிர்காலம் ஒன்று இருக்கிறதா? என்ற வினாவுடன் வாழ்ந்தான். அவனுக்கு எதிர்காலம் என்றால் என்ன என்ற ஒரு மையவினாவொன்றும் அவனது இளம் பிராயத்தில் இடையிடையே வந்து செல்லும். ஆனால் அவன் அதைப் பொருட்படுத்துவதில்லை. குமாரின் அண்ணனுக்கு அவனது தாய், தந்தையினர் அதாவது குமாரின் அப்பா, அம்மா, அவனது ஆசைத் தமையனுக்குத் திருமணம் பேச ஆரம்பித்தார்கள். இதன் போது அவனது மனம் துடித்தது. ஏனெனில் நட்பு எனும் அண்ணன் உறவு எதிர் காலம் என்ற பெயரில் துண்டிக்கப்படப்போகிறது என ஏங்கினாான்.

ஆயினும் குமார் பாடசாலைக்குச் செல்லும் வேளையில் அவன் உறவுகள் செய்யும் குறும்புத்தனத்தில் மிதந்து உலாவியவனுக்கு எங்கெங்கு எதைச் செய்ய வேண்டும் என்ற விவஸ்தையில்லாமல் செயற்படத் தொடங்கினான். ஏனெனில் சிறுவயதில் ஏற்பட்ட நட்பின் உறவு சகிதம் என்பதாகும். அதாவது பாடசாலைப் பருவத்தில் தனது உறவின் ஒரு பையன் மீது கல்லால் எறிந்து மண்டையை உடைத்து விட்டான். இதனால் அவனது உறவுகள் குமார் குடும்பத்தை ஒதுக்கி விட்டார்கள். ஏனெனில் இவன் செய்தது சிறிய வேலை தான். ஆனால் அவர்களது உறவை இவ்வாறு பாதித்து விட்டது. இதனால் குமாருக்கு உறவு எனும் நட்பு சங்கிலிபோல் காணப்பட்டதும் இடையில் இவனது செயற்பாட்டின் மூலம் அறுந்து விட்டது. இதனால் குமாரின் குடும்பம் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைக்கிடமாக்கப்பட்டனர். இதனால் குமாரின் குடும்ப உறவுகள் அவனைப் பார்த்துத் தமது உறவு பிரிந்தமைக்கு இவன்தான் காரணம் என்று கூறி ஆசைக்கு அண்ணா, அன்புடைய அக்கா ஆகியோர் குமாரை உதாசீனப்படுத்திய வண்ணம் இருந்தனர். இதனால் அவனது அம்மாவும் மற்றும் அப்பாவும் இவனைச் சொல்லால் குத்தியவண்ணமே காணப்பட்டனர்.

இதனால் அவன் தனது உறவுகளின் நட்புக்காக ஏங்கிய வண்ணம் தனிமையிலே ஒரே யோசித்த வண்ணமே இருப்பான். அப்போதைய காலகட்டத்திலேயே அவனது அண்ணனுக்குத் திருமணமானது முற்றாகி விட்டது. திருமணமும் இனிதே நிறைவேறியது. இதனால் அவனது மனம் சிறிது சந்தோஷமாகக் காணப்பட்டது. ஏனெனின் இனி நான் ஒரு பிழையும் செய்யமாட்டேன் எனத் தனது மனத்திலே ஒரு உறுதியான அத்திவாரத்தை இட்டுவிட்டு அண்ணியின் நட்பு உறவு இருக்கும் என எண்ணினான். ஆனால் அவனது மலைக்கோட்டைகளெல்லாம் மணகோட்டைகளாக அண்ணியின் ஒரு வார்த்தையின் மூலமே அவனது எண்ணம் மாறிவிட்டது.

இதனால் அவனது அவ்உறவில் தனக்கான நட்பு மீண்டும் வளரும் என எண்ணினான். ஆனால் அவனையே அங்கு ஒரு காவல் நாயாகக் கூட மதிக்கவில்லை என்ற விடயம் அவனுக்குப் புலனாகியது. இதனால் அவன் தனது குடும்ப உறவை விட்டுத் தனிமையிலே செல்லலாயினான். இதனால் அவன் அவ்விடத்தைவிட்டுக் கொழும்புக்குச் சென்றான். குடும்பத்தையும், உறவையும், பிரிந்த குமார் கொழும்பிலுள்ள கடையில் வேலை செய்து தனது அன்றாட நாளைப் போக்கிக் கொண்டிருந்தான். இவ்வாறாக இறந்த காலத்திலிருந்து நிகழ்கால வாழ்வினை எண்ணியே கட்டிலில் படுத்த வண்ணம் இருகண்களால் நதிகள் ஓடுவது போல் கண்ணீர் மல்க ஏங்கிய வண்ணம் படுத்திருந்தான். ஏனெனில் எனது பிரிந்த குடும்பம் மற்றும் உறவுகளின் நட்பு இனியாவது தொடரமாட்டாதா என ஏங்கிய வண்ணம் தூங்கினான்.

**பரமேஸ்வரன் ரேணுகா**
A/L 2010 கலை ($A_1$)

He is a chatter - box.
Don't give ear to what he says.
Not that he talks tosh;
But that there is no substance in what he talks.

Inhumanity did not begin yesterday.
Man is always man.
What is lacking in some men is inhumanity.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை மாறிய சுவடுகள்

"அப்பா குமார் அண்ணை கடையைப் பூட்டி விட்டார் நாங்களும் பூட்டிப்போட்டுப் போவமே. அம்மா கோயிலால் வந்திருப்பா" முத்துவின் மகன் ரமணனின் குரலே அது. சூரியன் தனது கதிர்களைச் சுருக்கிக் கொண்டிருந்தான். பூமியிலிருந்து சூரியன் விடைபெறும் அவ்வேளை முத்துவும் வியாபாரத்திலிருந்து விடைபெற ஆரம்பித்தான். அது ஒரு கிராமமுமல்ல. நகர முமல்ல. இடைப்பட்ட ஊர். அங்கு முத்துவின் கடை ராஜா போல் தனிராஜ்ஜியம் ஆண்டு கொண்டிருந்தது. சக ஊழியர்களை அவன் வைத்திருப்பதில்லை. ஏனெனில் சிக்கனம் அவசியமென்பான். ஆனால் சிக்கனப் போர்வையில் அவன் கஞ்சத்தனம் செய்து கொண்டிருப்பது அவனைத் தவிர மற்றெல்லோருக்கும் தெரியும். கடையை பூட்டிவிட்டு தனது சைக்கிளில் ரமணனையும் ஏற்றிக் கொண்டு ஓடத்தொடங்கினான். "அப்பா எனக்கு நாளைக்குப் பள்ளிக் கூடத்தில் பிக்நிக் கூட்டிக் கொண்டு போகப் போரா ரீச்சர். எனக்கு ஒரு நூறுரூபாய் தரு வீங்களா" "சத்தம் போடாம இரு. அப்பா இருக்கிற கஷ்டத்திற்கு உனக்கு பிக்நிக் வேணுமோ"? என்ற கரத்த முத்துவின் குரல் கேட்டு ரமணன் அடங்கிப் போனான். இப்படித் தான் முத்துவின் வாழ்க்கை. கடையில் பெரிய வியாபாரம் செய்தாலும் கஞ்சத்தனம் செய்தாள். மனைவி, ரமணனின் ஆசையை நிறை வேற்றுவதில்லை. இன்றுகூட கோயிலுக்குப் போக ரமணன் காசு கேட்டு அடம்பிடிப்பானே என்பதற்காக மட்டுமே அவனைத் தனது கடைக்கு அழைத்து வந்திருந்தான். அவனுக்கு உறவினரென்று சொல்லிக் கொள்ள யாருமில்லை. காரில் பயணம் செய்யக் கூடியளவு பணம் இருந்தாலும் அவன் கஞ்சத்தனம் செய்தான். அவன் ஏன் அப்படிச் செய்கிறான்? எங்கே பணத்தைச் சேர்க்கின்றான்? இது அவனது மனதின் ஆழத்தில் புதைந்துள்ள ஞாபகங்கள் தான் பதில் சொல்லும். நேரம் 6.30 ஆகிவிட்டது. தேர்போலப் பயணித்துக் கொண்டிருந்த முத்துவின் சைக்கிள் திடீரென ஒரு பாழடைந்த எம்மனித அடையாளமுமற்ற ஒரு வீட்டின் முன் நின்றது.

.....................................

"டேய் முத்து உன்ர அப்பா கட்டின இந்த வீட்டை அப்பா சாமியிடம் போய்விட்டாலும் நீதான் பார்த்துக் கொள்ளவேணுமடா" என்று அவனது தந்தை அவனுக்கு 5வயதில் சொன்ன வார்த்தைகள் முத்துவின் மனத்திரையில் கேட்டது. அது "முத்துவின் இல்லம்" எனப் பெயரிடப்பட்ட மாளிகை. இந்த ஊரிலேயே முத்துவின் தந்தையே பெரியவர். நவரத்தினம் என்பது அவரது பெயர். அவனது தாய் இலட்சுமி அவனுக்கு அன்பு பாசம் ஊட்டி வளர்த்தார். அவனுக்குத் தந்தை தாயின் மீது அதிக பாசம். அதற்கு அடுத்த படியாக அந்த வீட்டின் மேல் அதிகபாசம். முத்து இல்லமென அவனது பெயர் அதில் இருப்பதனாலோ தெரியாது ஏனோ அளவு கடந்த பற்றை அவன் தந்தை கட்டிய அந்த வீட்டின் மேல் வைத்திருந்தான். "முத்து நாளை உன்ர பிறந்த நாளடா" எனத் தாயார் கூறினார். "அம்மா, அப்பா, என்ர பிறந்த நாளுக்கு எனக்கு என்ன வேண்டி வைச்சிருக்கிறார்" என, முதல் நாள் தந்தை ஏதோ வேண்டிவந்திருந்ததைப் பார்த்தவுடன் தாயிடம் கேட்டான் முத்து, "நாளைக்குத் தருவார் தானே" எனத் தாய் அவனைத் தேற்றினார். முத்துவின் தந்தையார் இன்று லொறியுடன் மோதி ஸ்தலத்திலேயே இறந்து விட்டார் என அவனது மாமா பதற்றத்துடன் வந்து சொன்னார். வீடே இருளாகியது. தகவலறிந்த முத்துவின் தாயார் பிரமை பிடித்தது போல முத்து அதிர்ச்சியடைந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாக ஓடிச்சென்று தந்தை மறுநாள் பிறந்தநாள் பரிசாக வைத்திருந்த பொதியைப் பிரித்தான். முத்துவின் வீட்டைப் போன்ற ஒரு வடிவமுடைய உண்டியலொன்று இருந்தது. இன்றும் கூட அந்த உண்டியலிலேயே பணம் சேர்த்துக் கொண்டிருக்கின்றான். 1995 இடப் பெயர்வில் ஹெலியிலிருந்து வந்த சூடுபட்டு முத்துவின் தாய் இறந்திருந்தார். ஆனால் இன்னும் அவனது கஞ்சத்தனத்திற்குக் காரணம் முத்து இல்லத்தை திருத்தும் நோக்கமாகும்.

"அப்பா ஏன் சைக்கிளை நிப்பாட்டினீங்கள்" என ரமணன் கேட்டான். முத்து அவ் இல்லத்தை ஒருமுறை ஏக்கத்துடன் பார்த்து விட்டுச் சைக்கிளை ஓட ஆரம்பித்தான். இன்னும் 1km தான் இருக்கும் முத்து வீட்டை அடை வதால் முத்துவின் வீட்டை நெருங்க நெருங்க ஏதோ அவனது மனது திக்திக் என வேகமாக அடித்துக்கொண்டது. ஊரில் ஏதோ கலவரம் நடைபெற்றது போல காட்சியளித்தது. மனைவி கோயிலால் வந்து காத்திருப்பான் என எண் ணிக்கொண்டே செல்கையில் கணேசன் எதிர்ப்பட்டான். கணேசனின் முகத்தில் ஏதோ பதற்றம் காணப்பட்டது. கணேசனிடம் "ஏன் கணேசா இவ்வளவு பதற்றத்தோட ஓடி வாறாய்" என முத்து கேட்டான். கணேசன் "ஐயா முத்தண்ண இண்டைக்கு ஊரர் கோயில் திருவிழாவில் நின்ற வேளை கள்ளர் கூட்ட மொன்று ஊருக்குள்ள புகுந்துட்டுதாம். எல்லாற்ர வீட்டிலையும் களவு போயிட்டாம்' என கணேசன் கூறினான். இதனைக் கேட்ட முத்து சைக்கிளை வேகமாக மிதித்தான். வீட்டின் முன்னே சைக்கிள் நின்றது. ரமணனை இறக்கி விட்டு ஓடோடி உள்ளே சென்றான். அவனது மனைவி கவலையுடன் மகனைக் கட்டியணைத்தாள். உள்ளே சென்ற முத்து எல்லா பொருட்களையும் விழுத்திய படியே ஏதோ தேடினான். வீட்டின் ஓடுகள் கழற்றப்பட்டிருந்தன. மீண்டும் மீண்டும் வீடு முழுவதும் தேடினான். இறுதியில் இரும்புப் பெட்டியொன்று திறந்திருந்ததைக் கண்டான். அவன் தேடும் பொருள் இவ்இரும்புப் பெட்டியுள்ளேயே இருந்திருக்க வேண்டும். வெளியே வந்தான் அவன் தேடியபொருள் களவாடப்பட்டுவிட்டது என அவனது முகம் தெளிவாகக் காட்டியது. கண்ணீர்த் துளிகளால் அவனது கண்கள் நிரம்பின. பெரியவர்களிடம் தன்னை மன்னிக்குமாறு சிறுவர்கள் பார்க்கும் பார்வையின் இயல்பு முத்து அவனது மனைவியைப் பார்த்த பார்வையில் தெரிந்தது.

தன்னையறியாமலே சட்டைப் பையினுள் கைவிட்டு அதிலிருந்த நூறுரூபாயை எடுத்து ரமணனின் கையில் வைத்தான்.

காலநதியின் கரையோரம் பலரது சுவடுகள் வேண்டியும் வேண்டாமலும் பாதை மாறிக் கொண்டிருக்கின்றன. நல்வழியிலிருந்து தீய வழிக்கும் தீய வழியிலிருந்து நல்ல வழிக்கும் மாறிக் கொண்டிருக்கின்றன. இதில் முத்துவின் சுவடுகள்?

**ஜெயநாதன் ஜெயக்கமலன்**
தரம் 11A

Human passions shall be within a bound. Such a bound of morality and decency shall not be transgressed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பெரியவை

உலகில் தன்னை, தன் படைப்புக்களை விஞ்சிய எதுவும் இருக்கக்கூடாது என நினைக்கும் மனிதர்கள் ஏராளம். அவ்வாறான மனிதர்களால் உருவாக்கப்படும் படைப்புக்கள் உலகப் புகழ் பெறுகின்றன. ஆனால் இந்தப் புகழ் நிலையானதல்ல. இன்று சிறப்பு மிக்கதெனக் கருதப்படும் ஒரு பொருள், நாளை அதை விடச் சிறப்பாக இன்னொன்று தோன்றும் பட்சத்தில் பின்தள்ளப்பட்டு விடுகிறது. அதிலும் விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவு வெகுவாக உயர்ந்துள்ள இக்கால கட்டத்தில் ஒன்றை யொன்று விஞ்சும் படைப்புக்கள் தினம் தினம் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் இன்றைய உலகில் மிகப் பெரியவையாக அடையாளம் காணப்பட்ட சில விடயங்களை இங்கு பார்போம்.

## மிகப் பெரிய பயணிகள் விமானம்

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் எயார்பஸ் A380 ஆகும். இதில் ஒரே சமயத்தில் சுமார் 555 பயணிகள் செல்ல முடியும். இது பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமானது. இதை விட அளவில் பெரிய விமானங்கள் சில இருந்தாலும் இதுவே பெரிய பயணிகள் விமானம் என்ற ரீதியில் முதலிடம் பெறுகிறது.

## மிகப்பெரிய பயணிகள் கப்பல்

உலகில் மிகப்பெரிய பயணிகள் கப்பல் Msfreedom of the seas என்பதாகும். இதில் ஒரே சமயத்தில் 4300 பயணிகள் செல்ல முடியும். 5 தளங்களைக் கொண்ட இந்தக் கப்பல் விடுதிகள், விளையாட்டு அரங்குகள், நீச்சல் தடாகம் எனப் பல வசதிகளை உள்ளடக்கியது.

## மிக அகலமான பாலம்

உலகின் மிக அகலமான பாலம் அவுஸ்ரேலியாவின் சிட்னி ஹார்பர் பாலமாகும். இதன் அகலம் 49 மீற்றர்களாகும். இது பார ஊர்திகள், வாகனங்கள், சைக்கிள்கள் செல்ல எனத் தனித்தனிப் பாதைகள் தனியான நடைபாதை என சமாந்தரமாகப் பல பிரிவுகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

## மிகப்பெரிய அலுவலகக் கட்டடம்

உலகின் மிகப்பெரிய அலுவலகக் கட்டடம் எது தெரியுமா? அமெரிக்காவின் சிக்காகோ நகரில் அமைந்துள்ள எட்மொன்டன் கட்டடமாகும். சுமார் 5 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

## உலகின் மிகப்பெரிய பஸ்

உலகின் மிகப்பெரிய பஸ் சீனாவில் சாங்காய் மாநிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. பெய்ஜிங் மற்றும் ஹாங்கூ நகருக்கிடையில் சேவையில் ஈடுபடும் இந்த பஸ் 300 இருக்கைகளைக் கொண்டது.25மீற்றர் நீளம் கொண்ட இந்த பஸ் 5 கதவுகளைக் கொண்டது. இந்த பஸ் உலகின் மிகப்பெரியது என்றாலும் சேவையில் ஈடுபடும் உலகின் மிகப்பெரிய பயணிகள் பஸ் என்ற அந்தஸ்தை நியோபிளான் ஜம்போ குருஹர் என்ற பஸ்தான் பெறுகிறது. இது சுமார் 175 இருக்கைகளைக் கொண்டது.

**ஜெயநாதன் ஜெயவர்மன்**
தரம் 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வு

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் பல்வேறு இலட்சியங்களைக் கொண்டுள்ளனர். ஆனால் ஒரு சிலரைத்தவிர, வேறு ஒருவராலும் தமது இலட்சியங்களை நிறைவேற்ற முடிவதில்லை. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்ற முன்னோரின் பழமொழிக்கேற்ப ஆராய்ந்து பார்க்கப்போனால் உலகில் ஒருவரைத் தவிர எவரும் சிறப்பான உடல் ஆரோக்கியத்துடன் காணப்படுவதில்லையாகையால், அவர்களால் வாழ்வில் வெற்றியீட்ட முடிவதில்லை. உலகில் பலருக்கும் வெவ்வேறு வகையான கஷ்டங்கள் உள்ளன. கஷ்டங்களாலேயே பிணிகள் தோன்றுவதால் நாம் வாழ்வில் கஷ்டங்களையும் பிணிகளையும் அணுகவிடாது விரட்டியடித்தல் மிகவும் அவசியம்.

நாம் கட்டும் வீட்டுக்கு அத்திவாரம் எந்தளவுக்கு அவசியமோ, அதுபோலவே வாழ்வைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள பிள்ளைப் பருவம் மிகவும் முக்கியமானது. பிள்ளைப்பருவத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் தாய்ப்பால் அவசியமானது. சிறு வயதில் உடல்வளர்ச்சிக்காக புரதம் அடங்கிய அவரை வகை உணவுகளை நாம் உண்ணுதல் வேண்டும். மேலும் எமது வாழ்வில் 95% மூளை வளர்ச்சி ஐந்து வயதுக்குள்ளே நடைபெறுவதாகவே அறிவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவே சிறார்களுக்கு விற்றமின்களும், கனியுப்புக்களும் அடங்கிய உணவுகளைக் கொடுக்க வேண்டும்.

மேலும் நாம் உடற்பருமனைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், தொப்பை குறையவும் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்து வருவதோடு, யோகாசனமும் செய்யத் தகுந்த குருவிடம் பயிற்சி பெற வேண்டும். கொழுப்புச்சத்துள்ள உணவுகளையும், காபோவைதரேற்றும், வெல்லமும் அதிகளவில் அடங்கிய உணவுகளைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இன்று உலகில் ஏற்படும் உயிரிழப்புகளில் 20% வரை நீரிழிவு, இருதய நோய் ஆகியவை தாக்கம் செலுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் எமது உடல், ஆரோக்கியத்தை மட்டுமன்றி உள ஆரோக்கியத்திலும் சிரத்தை எடுக்க வேண்டும். (ஏனெனில் இன்று உலகில் 500 பேருக்கு ஒருவன் என்ற ரீதியில் சித்தம் கலங்கியோராக உள்ளனர். இதனால் நாம் ஏனையோருடன் அன்பாகப் பழகி, தேவையற்ற கோபத்தைத் தவிர்க்க வேண்டும்.

இன்றைய உலகில் எமன் மனிதனைக் காலன் நோய் வடிவில் வந்து வதைக்கிறான். வீடு வரை வந்த காலனை வீட்டுப் படலைக்கு வெளியே விரட்டியடிக்க வேண்டும். எனவே ஒவ்வொரு நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க வழிவகை செய்து தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். சுத்தமான உணவுகளை உண்ண வேண்டும். குப்பை கூழங்களை அகற்றி புல் பூண்டுகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மனதைத் திடம்படுத்த வேண்டும்.

நோயற்று வாழ்வதால் எமக்கு பல்வேறு பயன்கள் கிட்டும். நாம் பொருளாதார சிக்கலில் விடுபட்டு வாழலாம். தற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது உலகில் பெருமளவில் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் எயிட்ஸ், சார்ஸ், பறவைக்காய்ச்சல், ஸ்வைன் புளூ எனப்படும் பன்றிக் காய்ச்சல் ஆகிய நோய்களாலேயே அமெரிக்காவிலும், சீனாவிலும் சிறிதளவில் பொருளாதாரம் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக "உலக நாணய நிதியம்" தனது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. நோய் வந்த பின் அழுது ஆர்ப்பாட்டம் செய்து, கலவரமடைந்து நூறு மில்லியன் அமெரிக்க டொலர் வரை செலவழிப்பதை விட "வெள்ளம் வரமுன் அணைகட்ட வேண்டும்" எனும் பழமொழியை உணர்த்த நோய் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னரேயே மேற்கொண்டு பத்து மில்லியன் அமெரிக்க டொலரோடு அந்நோய்க்கு எமனாக மாறுவதே சாலச்சிறந்தது.

கள்ளங்கபடமும், சூதுவாதும் நிறைந்த இப்பூமியிலே அவற்றையெல்லாம் சமாளித்து, அதோடு எமது காலைப் பிடித்திழுக்கும் நோய் வடிவில் வந்த எமனையும் சமாளிக்கப் பழகவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது மனவுறுதியைத் தவறவிடாது நம்பிக்கையைப் பேண வேண்டும். நம்பிக்கை பேணி வாழ்வில் வெற்றி காண்போம்.

**சுத்தம் சுகம் தரும்**
**கந்தையானாலும் கசக்கிக் கட்டு**
**கூழானாலும் குளித்துக் குடி**
**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

**கேதீஸ்வரன் கௌசிகன்**
தரம் 9A



Learning is a process where listening is the first stage grasping is the second stage assimilating is the third stage.

*******************************************************************

Of all the vices under the Sun the worst is the craze for power with selfishness.

*******************************************************************

What cannot be achieved by a sword can be achieved by a pen is a proven fact.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வொலிபோல் வரலாறு

வொலிபோல் விளையாட்டானது முழு உலகிற்கும் சர்வதேச வொலிபோல் சம்மேளத்தினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. சர்வதேச வொலிபோல் சம்மேளனம் (FIVA) 1947ம் ஆண்டு 14 தேசங்களை உள்ளடக்கி திரு. போல் லிபாவுட் அவர்களை முதற் தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1895ல் அமெரிக்காவின் ஹோலியோர்க் நகரிலுள்ள மெசசூசெஸடைச் சேர்ந்த திரு. வில்லியம் G.மோர்கன் என்பவரால் புதிய தொரு விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு "மின்ட்டோநெட்" எனப் பெயர் சூட்டப் பட்டது. 1895ல் இவ்விளையாட்டுக்கு விதி முறைத் தொகுதி வில்லியம் G.மோர்கனால் எழுதப்பட்டது. அந்த வகையில் வலையில் உயரம் 6அடி 6அங்குலம், ஆடுகளம் 25அடி X30 அடி ஆகவும், பந்தின் நிறை 21 அவுன்ஸ் ஆக வும், சுற்றளவு 25-27 அங்குலம் உடையதாக வும், எதிரணி நோக்கி பந்தை அனுப்புவதற்கு முன்னர் எத்தனை தொடுகைகளையும் மேற் கொள்ள முடியும் நிலை இருந்தது.

1896ல் அமெரிக்காவில் ஸ்பீரிங்பீல்ட் வித்தியாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ இளைஞர் சங்கங்களின் உடற்கல்வி பணிப்பா ளர்களுக்கிடையேயான கூட்டத்தில் G.மோர் கன் என்பவர் "மின்டோநெட்" விளையாட்டுப் பற்றி விளக்கிக் கூறினார். அணிக்கு ஐவர் கொண்ட கண்காட்சிப் போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டது. இப்போட்டியை அதற்கு "வொலிபோல்" எனப் பிரேரித்ததுடன் அன்று தொடக்கம் இவ்விளையாட்டு வொலிபோல் என அழைக்கப்பட்டது.

1900ம் ஆண்டில் W.E.டே என்பவரினால் விதிமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு கிறிஸ்தவ இளைஞர் கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. வலையின் உயரம் 7அடி 6 அங்குலம் ஆக உயர்த்தப்பட்டதுடன் 21 புள்ளிகளுக்கும் நீடிக்கப்பட்டது. 1913ம் ஆண்டு சர்வதேச விளையாட்டுப் போட்டி ஒன்றில் வொலிபோ லானது சேர்க்கப்பட்டது. மணிலா நகரில் இடம்பெற்ற தூரகிழக்கு நாடுகளில் விளையாட் டுப் போட்டிகளில் சேர்க்கப்பட்டது. அணி ஒன்றில் 16 வீரர்கள் உள்ளடக்கப்பட்டனர்.

1918ல் அணி ஒன்றுக்கு 6 வீரர்களாக மட்டுப்படுத்தப்பட்டு யப்பானில் உயர் பாட சாலைகளுக்கிடையிலான செம்பியன்ஸிப் போட்டிகள் விளையாடப்பட்டன. சீனாவில் விதிமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு அணி ஒன்றில் உள்ளடக்கப்பட்ட வீரர்களின் எண் ணிக்கை 12ஆகவும் சுற்றொன்றின் புள்ளிகள் 15 எனவும் தீர்மானிக்கப்பட்டன. 1920ல் ஆடு களத்தின் அளவு 20அடி X60 அடி ஆகக் குறைக் கப்பட்டது. ஒருவரின் இடையின் மேலுள்ள எப்பகுதியாலும் பந்தானது விளையாடலாம் எனவும் பந்து வலைக்கு மேல் அனுப்ப முன்னர் ஒருமுறை மாத்திரம் தொட முடியும் என புதுமை விதிமுறை சேர்க்கப்பட்டது.

இக்காலத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டவர் களால் தாக்குதல் அதாவது அறைதலின் முதல் வகை அறிமுகப்படுத்தப்பட்டது. 1921ல் ஆடு களத்தில் மத்திய இரேகை அறிமுகம் செய்யப் பட்டது. 1922ல் பின்வரிசை வீரர்களின் அறைதல் செயற்பாடு தடுக்கப்பட்டது. 3வது விதிமுறை யானது 14க்கு 14 சமநிலையில் ஏற்படும் தறு வாயில் 2புள்ளிகள் முன்னிலை வெற்றி பெறு வதற்குப் பெறுதல் வேண்டும் எனத் தீர்மானிக் கப்பட்டது. அணி ஒன்றின் மிகக் கூடுதலான தொடுகை 3ஆக மட்டுப்படுத்தப்பட்டது.

வொலிபோலைப் பொறுத்த வரையில் முதலாவது தேசிய சம்மேளனம் செக்கோஸ் லாவாக்கியாவிலும் அதனைத் தொடர்ந்து பல்கேரியாவிலும் ஸ்தாபிக்கப்பட்டது. 1வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய செம்பியன்ஸ் போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்றதுடன் அதில் கிறிஸ்தவ இளைஞர் கழக அணிகள் மாத்திரம் பங்கேற்றன. 1923ம் ஆண்டில் வீரர்களின் எண்ணிக்கை 6எனவும் உத்தியோகபூர்வ உதிரி வீரர்களின் எண்ணிக்கை 12 எனவும் ஒவ்வொரு வீரரும் இலக்கமிடப்பட்ட மேலங்கி அணிதல் நடைமுறைக்கு வந்தது. பணித்தலை மேற்கொள்ளவுள்ள அணி வலஞ்சுழியாக சுழல்வதும் வீரர் ஒருவர் எதிரணி ஆடுகளத் தினைத் தொடுவார் எனில் தவறு எனவும் தீர்மானிக்கப்பட்டது.

1924ம் ஆண்டு பாரிஸ் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா விளை யாட்டுக்கள் எனும் தலைப்பின் கீழ் வொலி போலானது செய்து காட்டப்பட்டது. 1930ம் ஆண்டில் கடற்கரை வொலிபோல் கலிபோர்னி யாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1932ம் ஆண்டு குறுநேர இடைவேளைகள் நிமிடமாக எல்லைப்படுத்தப்பட்டன. 1933ம் ஆண்டு சோவி யத் ஒன்றியத்தில் 1வது தேசிய செம்பியன்ஸ் போட்டிகள் நடாத்தப்பட்டன. 1946 ஆகஸ்ட் 26லக் மற்றும் பிரான்ஸ் அணிகளுக்கிடையே சிநேகபூர்வ போட்டி விளையாடப்பட்டது.

சர்வதேச வொலிபோல் சம்மேளனத்தை பாரிஸில் ஆரம்பித்தனர். இதன் 1வது தலைவ ராக பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த போல்லி யாவுட் நியமிக்கப்பட்டார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய விதிமுறைகள் இணைத்துச் செய் யப்பட்டன. ஆடுகளம் 9m x 18m ஆண்களுக் கான வலையின் உயரம் 2.24m எனவும் ஏற் றுக் கொள்ளப்பட்டது. 1948ம் ஆண்டில் 1வது ஐரோப்பிய செம்பியன்ஸ் போட்டி இடம்பெற் றது. அதில் செக்கோஸ்லாவாக்கியா செம்பி யன் ஆகியது.

1949ம் ஆண்டுகளுக்கான 1வது செம்பியன் போட்டிகள் பரகுவேயில் இடம்பெற்றதில் சோவித் ஒன்றியமும் 1952ல் பெண்களுக் கான அகில உலக சம்பியன்ஸ் போட்டி மொஸ்கோவில் இடம்பெற்றதில் சோவியத் ஒன்றியமும் பட்டத்தை வென்றது. 1954ம் ஆண்டு ஆசிய வொலிபோல் சங்கம் மணிலா வில்ஸ்தாபிக்கப்பட்டது. 1வது ஆசிய வொலிபோல் செம்பியன்ஸிப் போட்டிகள் டோக்கியோவில் இடம்பெற்றன. 1962ல் உலக செம்பியன்ஸிப் போட்டி மொஸ்கோவில் இடம்பெற்றது.

இவ்வாறாக இவ்விளையாட்டை இலங் கையில் நோக்கும்போது 1916ல் ரொபட் வெஸ்டர் கமக் Y.M.C.A பணிப்பாளரினால் முதன் முதலில் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. பின்னர் கொழும்பிலுள்ள ஆசிரியர் பயிற்சி கலாசாலை, விளையாட்டு கழகங்கள், கொழும்பைச் சுற்றியுள்ள பாட சாலைகளிலும் அறிமுகம் செய்யப்பட்டது. பாடசாலைகளில் 15,17,19 வயது மட்டங்களில் போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும் நடைபெற்றது. 1922ல் கொழும்பில் மட்டும் 25 வொலிபோல் சங்கம் உருவாக்கப்பட்டது. 1951ல் அனைத்து சங்கங்களும் சேர்ந்து இலங்கை வொலிபோல் சம்மேளனத்திற்கு பதிலாக வொலிபோல் கட்டுப்பாட்டுச்சபை அமைக்கப்பட்டு மீண்டும் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. சர்வதேச வொலிபோல் சம்மேளனம் 1947ல் உருவாகியது. இதனை FIVA எனவும் அழைப்பர்.

இவ்விளையாட்டானது பலராலும் விரும் பப்படுவதோடு ஆண், பெண் என்ற வேறு பாடின்றி எந்த வயதினரும் விளையாடக் கூடிய தாக விளங்குகின்றதுடன் ஓய்வு வயதினரும் விளையாடக் கூடியதாக விளங்குகின்றதுடன் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் பயன் படுத்தவும் உடல் ஆரோக்கியம் பேணவும் இவ்விளையாட்டு பயன்படுகிறது. எனவே தான் எல்லோரும் விரும்பும், இவ்விளை யாட்டை 1991ல் இலங்கை தேசிய விளை யாட்டாக பிரகடனம் செய்யப்பட்டது.

ஆக்கம் :
**2009 பெண்கள் கரபந்தாட்ட அணியினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் எமது கண்கள்

ஓர் நல்ல ஆரோக்கியமான சமுதாயத்தில் மூதாதையர் பங்களிப்பு மிகமுக்கியமானதாகும். இவர்கள் இளந்தலை முறையினரை உருவாக்க மிகவும் முனைவுடன் செயற்படுகின்றனர். முதியோர் ஒரு வகையில் குழந்தைகளை ஒத்தவர்கள் நம்மை ஈன்றெடுத்தவர்கள் முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் கருவிலே அன்போடு ஈன்றெடுத்துத் தாலாட்டிச் சீராட்டித் தன் உதிரத்தையே உணவாகத் தந்தவள் தாய். "தந்தை தாய் பேண்" என்ற கோட்பாட்டு விழுமியங்களை ஏன் புறக்கணிக்க வேண்டும். இவர்களைப் பாதுகாக்க வேண்டியது இளைஞர்களின் தலையாய கடன் ஆகும். எத் துன்பம் நமக்கு வந்த போதும் அதை வென்று தீர்ப்பவர்களே நம் முதியோர். இவர்களின் முதிய பருவத்தில் இவர்களை நாம் கைவிடலாமோ? அன்றேல் அவர்களை முதியோர் இல்லங்களில் அனுமதிக்கலாமா? இது நாம் எமது பெற்ற தாய் தந்தைக்குச் செய்யும் மாபெரும் குற்றம் ஆகும். கனம் பண்ணுதலின் சிறப்பு எமது தமிழர் பண்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது ஒன்றாகும்.

முதியோர் என்பவர் முற்றும் அறிந்தவர்கள் அவர்களிடம் இருந்து அன்பு, கருணை, பாசம் என்ற உணர்வுகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான அரிய பண்புகளையும், குணங்களையும் கொண்ட முதியவர்களிற்கு நாம் அன்பு, கருணை என்பவற்றை வழங்குதல் முக்கியமானது. வாழ்க்கை குழந்தைப்பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம், என்ற மூன்று பெரும் பருவத்தைக் கொண்டது. வாழ்வினிலே முதலாவது இனிமையான பருவம் குழந்தைப்பருவம் அடுத்ததாக எமது உடல், உள, செயற்பாடுகளை மேற்கொள்ள எடுத்த பருவம் வாலிபப் பருவம். அதனை அடுத்து முதுமைப்பருவம். பல்வேறு அறிஞர்களால் கூறப்படும் கருத்து வாழ்வின் இரண்டாவது குழந்தைப்பருவம், முதுமைப்பருவம் ஆகும். குழந்தைக்கு எவ்வாறு பணிவிடை செய்கிறோமோ? அவ்வாறு முதியவர்களுக்குப் பணிவிடை செய்வது சிறந்தது ஆகும்.

"ஈரைந்து மாதம் கருவோடு தாங்கி, பக்கமெல்லாம் துணையிருந்து உன்னுடனே உனக்காகவே வாழந்த உன் பெற்றோர்கள் உன்னெதிரில் தகுதி அற்றவர்களா? என்ற கேள்வியை உனக்குள் நீ கேட்டுப் பார். ஏன் வீட்டு மூலைக்குள் முடங்குகின்றாய்.? அவர்கள் என்ன காப்பாளர்களா? வீட்டின் மூலையில் கூட அவர்கள் இருப்பது பாவமா? ஏன் இன்று முதியோர் இல்லங்கள் புற்றெடுக்கின்றன? நாட்டிற்கு உன்னைத் தந்து ஆளாக்கியவர்கள் அவர்கள். எனவே வீட்டினில் வாழ இடங் கொடுங்கள். முதியோர் இல்லங்கள் அமைதியாக இருக்கட்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கண்ணை இமை காப்பது போல் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். ஆனால் பிள்ளைகள் பெற்றோரை மதிப்பதில்லை. பேணுவதும் இல்லை. தமக்குப் பணம், பதவி, அந்தஸ்து என்ற பகட்டான வாழ்வை எண்ணித் தமது பெற்றோரை மதிப்பதை மறந்து விடுகின்றனர். சொகுசு வாழ்வை எண்ணித் தமது பெற்றோர் வாழ்வை அழிப்பது போல் தம் வாழ்வை அழித்துக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொகுசு வாழ்வு வெளிநாட்டுப் பயணம் என்பவற்றை எண்ணித் தமது பெற்றோரை முதியோர் இல்லங்கள் என்ற அவலக் கிணற்றில் தள்ளி விடுகின்றனர். தமது வாழ்வை எண்ணி மரணம் என்ற நோயினைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே அவர்களை எமது இரு கண்களாகப் பாதுகாக்க வேண்டும்.

முதுமைக் காலத்தில் அவர்கள் விரும்பியவற்றைச் செய்து கொடாது வாளாவெட்டியாய் இருந்து விட்டு அவர்கள் இறந்த பின்பு சொந்த பந்தம், உலகிற்குச் செய்தி அனுப்பி முத்துப் பாடையில் உயிரற்ற உடலை மூடர்கள் தாம் சுமந்து செல்கின்றனர். போலியான வாழ்வு தேவையில்லை. தேவையற்ற சேவையை செய்யத் துடிக்கும் மானிடர்க்குத் தேவை எது என்று புரியவில்லை. நல்லவை எவை தீயவை எவை எனப் பகுத்தறிந்து அவற்றை உலகில் செயற்பட வைத்தவர்கள் முதியோர்கள், குறித்த வரையறையைத் தாண்டிய பின் முதுமை என்ற ஒன்றை அணைத்துக் கொள்கின்றனர். சில மனிதர்கள் அவர்களைப் புறந்தள்ளி விடுகின்றனர். ஒரு உலகத்தில் மாறுபட்ட இரு இன மக்கள் மனித வர்க்கம் உண்டு என்பதை எண்ணுகின்ற போது மிகவும் வேதனையாக உள்ளது. பகுத்தறிவு உடையவர்கள் இவ்வாறு நடந்தார்களேயானால் மழலைகளும் இவ்வாறே செய்பவர் என்பது ஐயமில்லை. ஒரு மனிதனது சம்பிரதாயங்கள், சடங்குகள் என்பனவற்றையும் கலை கலாசாரங்களையும் எமக்குப் பேண வழி சமைத்தவர்கள் முதியோர்கள் ஆவார்.

“காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்” இந்தத் தவறைத் தம் பிள்ளைகளும் நமக்குச் செய்பவர். எம்மை அன்போடு வளர்த்தமைக்குக் கைம்மாறு செய்தல் அவசியம். எம்மை ஈன்றெடுத்தோரைப் பராமரிக்க வேண்டியது எமது தலையாய கடனும் கலாசாரமும் கூட. முதியோரைத் தனிமைப்படுத்தல் நியாயமற்றது ஆகும். தளர்ச்சியுற்ற காலத்தில் பிள்ளைகளின் அன்பு, அரவணைப்பு, ஆதரவு அவசியம் ஆகும். பல்வேறு கவிஞர்கள் முதியோர்களைப் பேணுங்கள் என்று முழக்கங்கள் பலவற்றைத் தமது கவிதையிலே வடித்துள்ளனர்.

ஓர் உற்பத்திப் பொருள் ஒன்றில் ஒரு முடிவுப் பொருள் ஒன்று உண்டு. தன்னுடைய உற்பத்திக்கு மூலப்பொருள் தாயே! அதாவது முதியோரே! நம் மூதாதைகளாகிய மூலப்பொருட்கள் நேற்றைய உலகை அழகுறச் செய்ய ஓடியாடி உழைத்தவர்கள் ஆனால் என்ன செய்வது ஆண்டொன்று போனால் வயதொன்று போகும். எனவே தான் முதியவர்கள் முதுமை என்ற பட்டத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். உறங்காத உள்ளங்கள் செல்களால் அரிக்கப்படுகின்றன. என்னதான் இருந்தாலும் நம் மூத்தோரின் உள்ளம் உறங்கவில்லை. அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதிலும் முதுமை என்ற ஒரு வரத்தை அடைவது சிறந்ததாகும்.

முதியோர் எமது கண்கள், அவர்கள் தெய்வத்திற்குச் சமனானவர்கள் என்றும் அவர்களைப் பேணிப் பாதுகாப்பது சிறந்தது. உயிர்களில் அன்பு காட்டும் மனிதன் தன்னை இவ் உலகில் படைத்தவர்கள் மேல் ஏன் அன்பு காட்டுகின்றான் இல்லை? நம்மை வளர்த்த பெரியோரை ஏன் மதிக்கின்றான் இல்லை என்ற காரணங்களை வினவும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகட்டான வாழ்விற்கு அனைத்தையும் இழக் கின்றனர் என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது. ஒரு நல்ல மனிதன் எண்ணங்களையும் செய்கைகளையும் சரிவரச் செய்வான். ஒரு போலியானவன் தனது எண்ணத்தையும் செயலையும் மறந்து செய்வான். உணர்வுகளைத் தட்டி யெழுப்பி புதிய உலகினை உருவாக்க முனைய வேண்டும்.

முதியவர்களது தேவைகளை நன்க றிந்த அரசாங்கம் அரச தொழில் புரிந்த இளைப்பாறியோரிற்கு ஓய்வூதியம், சேமலாபநிதி, நம்பிக்கை ஊதியம் வழங்கி வசதியான வாழ்வளிக்கின்றது. பிள்ளை கள் தமது பெற்றோர்களை உதறி எறிந்து செல்வது பெற்றோர்களும் தமது பிள்ளை கள் வேண்டாம் என உதறி எறிந்து விட்டுச் செல்வாராயின் பிள்ளைகளின் மனம் எவ் வாறு ரணமாக எரிந்து கொண்டிருக்கும். அதே போல் பெற்றவர்களின் மனத்தைத் தன் பிள்ளைகள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை, ஏன் அவர்களைச் சரிவரப் பணி விடை செய்வதில்லை. இன்று மனித மாக்க ளால் மதிக்கப்படாத பெற்றோர்கள் தமது இறுதிக் காலத்தைக் கழிப்பதற்காக முதி யோர் இல்லங்களை நாடி நிற்கின்றனர்.

அன்புக்கரம் நீட்டி அவர்களை அன் போடும் பண்போடும் பரிவாகக் கவனித்துக் கொள்கின்றனர். இவ்வாறு முதியவர்கள் வீட்டைவிட்டு வெளியேறினால் வீட்டுக்கு வீடு முதியோர் இல்லங்கள் தோன்றிவிடும். அவற்றைத் தோன்றவிடாது தடுக்க முதி யோரின் இறுதிக் காலம் வரை அவர் களைப் பேணினால் எந்தவித இடையூறும் வராது. இவர்கள் தமது வாழ்வில் பல்வேறு சுகதுக்கங்களையும் நன்மை தீமைகளை யும் அறிந்து அவற்றை உணர்வுகளால் அனுபவித்தவர்கள் ஆவார்கள். எனவே அவர்கள் வழி நின்று நடந்தால் எம் வாழ்வு சிறக்கும்.

எந்தவித பயனையும் எதிர்பாராது செய்கின்ற மனிதனுக்கு நன்மையே விளையும். எப்பொழுதும் உதவியை நாடி நிற்பவர்களுக்குத் தீமையே விளையும். எனவே அவர்களுக்கு இடையூறு வழங்கு வதைத் தவிர்ப்பது நல்லது. அனுபவம் வாய்ந்தவர்கள் துணையுடன் இருந்தால் எந்தக் காரியத்தையும் சரிவரச் செய்ய முடியும். எமது குடும்பத்தின் நிலையும் வாழ்வின் முதன்மையும் அனைவரும் வியக் கும் வகையில் முன்னேறச் செய்பவர்கள் முதுமை வாய்ந்த பெரியோர்களே. அவர் கள் இளைஞர்களின் வாழ்க்கைப்' பாதை யில் கலங்கரை விளக்குகள். எந்தத் தேவை யும் கருதாது அவர்களைப் பேண வேண்டும். நம் ஆன்றோர் இனிய மணம் பரப்பும் மங்களம் நிறைந்த மலர்கள். என்றும் எமக்குப் பயனையே தருவார்கள். எனவே எமது கண்களைப் பாதுகாப்பதுபோல் எமது தாய் தந்தையரையும் எமது இரு கண் களில் வைத்துக் கண்ணும் கருத்துமாய்ப் பேணி வாழ்வில் உயர்வு அடைய முடியும். எனவே முதியோர்கள் எமது இரு கண்கள் போன்றவர்கள். இவர்களைப் பேணிப் பாதுகாப்போமாக.

**யஸுஷனா கந்தசாமி**
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் நடாத்திய "விவாதத் தமிழ் அரங்குப் போட்டியில் 3ம் இடம் (வெண்கலப் பதக்கம்) பெற்ற கவிதை.

# கடைசி நிமிட கண்ணீர்த்துளிகள்

காலதேவதையின் அகோரத்தால்
அழிந்தது தேசம்!
வைகறையின் ராகங்களாக
எங்கும் மரண ஓலம்!
மண்ணுக்குள் மாய்ந்துபோன
மனிதம் கண்ணீர் வடிக்கின்றது!

கனவுகள் சூழ்ந்த அப்பாவிக்குழந்தைகளின்
கரங்கள் ஒடிக்கப்பட்டுவிட்டன!
பத்துமாதம் சுமந்த வயிறு
பற்றி எரிகிறது!
சமாதானப் புறாவின் சிறகுகளும்
சாம்பலாகிவிட்டனவே!

உதயத்தைத் தேடும் எமது நம்பிக்கைகளும்
அஸ்தமித்துப் போனனவே!
இனியும் விடிவு கிடைக்குமா? என்ற
ஏக்கப் பெருமூச்சுக்கள் எங்கே?
உயிர் ஊசலாடும் வேளையிலே
கடைசி நிமிட இரத்தக் கண்ணீராய்.....

**இ. கௌதமி**
உயர்தரம் 2010 கலை ($A_1$).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷாக்கு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மேற்பிரிவு கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கவிதை.

# நுண் போசாக்கு

மனித உடலென்னும் இயந்திரம் – அதன்
மகிமைகள் பல என்று அறிந்தோம்
தொகுதிகள் பலவுண்டு இயங்கிட – அவை
ஆரோக்கியமாய் தோன்றியது அற்புதமே.

பிரதான போஷணைகள் ஆறுண்டு – அதில்
நீர்ப் போஷணை சேராவிட்டால் அழிவுண்டே
நுண்ணுயிரால் ஊசலாடும் எம் ஆத்மா
நுண் போஷணை சேராவிடில் உயிரிழக்கும்.

அயடீன் பொஸ்பரஸ் இரும்புமே கூட
விற்றமின்கள் பலவும் தேவையுறுமே
நன்றான சமிபாட்டுக்கு நாளும் நாளும்
உண்டிட வேண்டும் நார்ப்பொருளை.

வன்கூட்டுத் தொகுதியது தேவையுறும் – அன்றில்
வாழைபோல் எம் உடல் நலிந்து விடுமே
வன்கூட்டுத் தொகுதி ஆக்கும் என்புகட்கு – என்றும்
கல்சியம் பொஸ்பரஸ் அவசியமே.

விற்றமின்கள் ஏ முதல் கே வரை – எமது
உடலிற்கு அவசியமே உயிர்த்திடவே
ஊனை காக்க என்றுமே நாம்
உண்ண வேண்டும் விற்றமின் உணவுகளை

மனிதனின் வாழ்வின் வளர்ச்சிக்கு
பெற்றிடும் அயடீன் தேக்கரண்டியளவாம்
தைரொட்சைட் சுரப்பி வீக்கத்தை – நாம்
அயடீனை சேர்த்திட்டே தடுத்திடுவோம்.

சோர்வற்ற உடலைப்பெற உடற்பயிற்சியை
காலை வேளையில் செய்திடுவோம்
கனிவுடன் ஒளிரும் காலை வெயில்
விற்றமின் டி ஐ கொடுத்திடுமே.

காயங்களில் பெருகிடும் குருதிப்பெருக்கை
கட்டுப்படுத்திடும் விற்றமின் கே ஐ
கனிவாய் உணவில் சேர்த்திடுவோம்
கவலை இன்றி வாழ்ந்திடுவோம்.

மலட்டுத் தன்மையை எம்மில் நீக்கி
மகிழ்வான சந்ததி விற்றமின் ஈ தருமே
இனிய பழங்களை என்றுமே
ஈற்றுணவாய் உண்டிடுவோம்.

மாலையில் வந்திடும் கண் நோயினை
தடுத்திட தேவையாம் விற்றமின் ஏ
பெரிபெரி பெலகரா நோய்களை
விரட்டிட தேவையாம் விற்றமின் சீ

நுண்ணிய உயிரின் நீண்டகால நிலைத்தலுக்கு
நுண்ணிய போஷணையை உண்டிடுவோம்
நூதனவாழ்வின் நிலைத்தலுக்கு – ஆரோக்கியமாய்
நூறு ஆண்டுகள் வாழ்ந்திடுவோம்.

**ஜெ. ஜெயக்கமலன்**
தரம் 11A





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி அருள்

வணக்கத்திற்குரிய முதல்வனே
வரம் தரும் நாயகனே
சிவனின் முதல்வனே
சிங்கார அழகனே

அடியாருக்கு அருள் புரிபவனே
அப்ப முப்பளம் விரும்பி உண்பவனே
எலி வாகனனே
எட்டுத் திக்கும் இருப்பவனே

வேள முகத்தினால்
வேண்டும் வரம் தருபவனே
தும்பிக்கையால் துன்ப
வினைகள் தீர்ப்பவனே

பானை வயிறால்
பாரை ஆள்பவனே
தந்தத்தினால்
கருமம் எழுதுபவனே

இவனைத் தொழ
நாம் என்ன தவம் செய்தோமே
அவன் தாள் பணிந்து
அவன் அருள் பெறுவோம்.

**ர. சிவானுஜா**
கலைப்பிரிவு, 2011.

# நூற்றாண்டு விழா காண வாரீர்

நூறு ஆண்டில் கால் பதிக்கும்
மகாஜன அன்னை
பாவலர் துரையப்பா வைத்த அடிக்கல்
நிலைத்த கற்றூண்களை
சிப்பி வளர்த்த பள்ளி
வளர்ந்து நிற்கக் கண்டீர்!

வானளாவ உயர்ந்த கட்டடங்களும்
கல்வியைப் புகட்டும் ஆசான்களும்
எண்ணிலடங்கா மாணவர்களும்
கற்றுத் துலங்கும் பாடசாலை
நூற்றாண்டு விழாக் காண வாரீர்!

பார்வதி போல விளங்கிடும்
மகாஜன தலைவர்
பாரதி கண்ட புதுமைப்பெண்
எதிர்நோக்கும் துணிச்சலுடன்
பேர், புகழ், வீரத்துடன்
நூற்றாண்டு விழாக் காண வாரீர்!

சொந்த மண்ணில் மண்ணின் மைந்தர்கள்
காட்டிடும் புதுமைகள் பற்பல
வாகையைச் சூடும் மைந்தர்கள்
துளிர்விடும் பள்ளிதனில்
ஆனந்த நடராஜனின் அருளுடன்
நூற்றாண்டு விழாக் காண வாரீர்!

**கல்யாணி விமலகாந்தன்**
கலைப்பிரிவு, 2011.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையே....

அன்றைய உலகில் உன்னை வணங்கினார்கள்
அன்று நீ சாந்தமாய் இருந்ததனால்...
இன்று உன்னை மிதிக்கிறார்கள்
இன்றைய உனது சீற்றத்தின் கொடுமையால்...
உன் அழகினை ரசித்தார்கள் அன்று
உனது அழகு எனும் அன்பினால்...
மானிடன் உன்னை நேசித்தான் அன்று
மானிடன் உன் அழகில் மயங்கியதால்...
அலையே நீ பாசமுடன் அணைக்கிறாய்
அன்புக் கடலாய் இருப்பதனால்....
பாரினிலே நீ எம்மைத் துரத்துகிறாய்
பாவியாக நாம் உள்ளதனால்....
கண்ணீரில் நாம் மூழ்குகிறோம்
கல்மனம் படைத்த உன்னால்....
காரணமில்லாமல் கோபப்படுகிறாய்
காலத்திற்கு நாம் செய்த கொடுமையால்....
இயற்கையே உம்மை நாம் அழித்தாலும்
இன்பமாக நாம் வாழ்வது எம்மை நீ காப்பதனால்....
காலம் காலமாக தொழுகிறோம்
காலத்திற்கு நீ செய்த கடமையால்....

**சி. மகிழினி**
கலைப்பிரிவு, 2011

# ஏ.... கோழையே....

கோழையே.........!
விண்ணை முட்டும் கட்டடங்களை
கண் இமைக்கும் பொழுதுகளில்
தரை மட்டம் செய்கின்றாயே
சரிந்து விழுந்த மாடிகளை
ஒரே நொடிக்குள் உன்னால்
கட்டிவிட முடியுமா?

எண்ணில் அடங்கா உயிர்களை
விரல் சொடுக்கும் வேளைக்குள்
சிதறடிக்கிறாயே.....
ஓய்ந்து நின்ற இதயத்தை
ஒரே ஒரு முறை
இயக்கிட முடியுமா?
உன்னால்.....

கண்ணாய் இமையாய்
விரல் நகமாய்....
கலந்திட்ட மக்களை மத வெறியால்
பிரிக்கிறாயே....
விரிசல் விழுந்த நேசத்தை
ஒரே கண்ணாடியாய் சேர்த்திட முடியுமா
உன்னால்.....

செய் இத்தனையும் செய்
சரிந்த மடியிடம்
விரிசல் விழுந்த நேசத்திடம்
ஓய்ந்த இதயத்திடம் உன்
வீரத்தைக் காட்டு.....

தீவிர வாதி என்று
ஒப்புக் கொள்கிறேன்.

V. **கிறிஸ்டினா**
கலைப்பிரிவு, 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் தந்த பரிசு! முதுமை!

இறைவா! உன் படைப்பில் –
எத்தனை! எத்தனை மகிமைகள்
எம் வாழ்வின் நன்கொடையாய்
முதுமை எனும் பரிசு தந்தாய்!
இவ் உலகில் எத்தனையோ
இன்பங்கள், துன்பங்கள்!

சிசுவாய் கருவறைக்குள்
அடைப்பட்டிருந்த மன்னுயிர்களாம்!
விழித்தெழுந்தது ஓர்
உதயப் பொழுதினிலே!
ஆயினும் – முதுமை என்ற
இன்பம் காண்போம்! இறுதியிலே

சுழல் சக்கரமாகிய – எம்
வாழ்க்கையின் இறுதிச் சுழற்சி!
ஓய்வில்லாத இப் பாரினிலே
ஒர் ஓய்வுக் காலமிது!
"முதுமை எனும் பொக்கிஷம்
எம் வாழ்விலே அழியாச்சுவடு!

பூமியிலே கால்பதித்ததும்
நடையில் தளர்வில்லை – ஆனால்....
நிலையில்லா இப்பாரினிலே
நிலையா? இந்த யாக்கை
முதுமை எனும் இன்பச் சிறைக்குள்
கைதியாகும் எம் இளமை.....

சுமைதாங்கியான நம்வாழ்வு....
சுமைகள் இறக்கும் காலமிது!
இன்பமான உல்லாசம்!
இந்த இறைவன் தந்த பரிசால்!
உலகங்கள் சுற்றிடும்
இந்த வாழ்க்கை வட்டத்திலே!

நான்கு சுவருக்குள் முடங்கிடுமா?
இந்த முதுமைக் காலமும்!
உண்மைகள் மௌனிக்க....
முதுமைதான் மரணிக்குமோ?
ஓ! மானிடா – உன்
இளமை மட்டும் வாடாதோ?

அள்ளி அள்ளி அணைத்திட
அன்பு கொண்ட நெஞ்சங்கள்
பாசம் எனும் அன்புக் கடலில்
நீந்தித் திரியும் மீன்களாய்....
உறவுகள் பல ஒரு
கூட்டுக்குள் சுதந்திரமாய்!

இறைவா! நீ மட்டும் – ஒரு
பரிசு தராவிட்டால்!
இந்த முதுமையிலும் – ஓர்
இனிமை மரணப்படுக்கையிலும் கூட......
உயிர் ஊசலாடும் வேளையில் கூட....
ஒர் ஆனந்தக் கண்ணீர்............!

**இ. கௌதமி**
கலைப்பிரிவு, 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழ்மைச் சிந்தனைகள் வாடிய புஸ்பங்களாகின்றன....

எண்ணங்களின் பாதையில்
நான் போகும்
மௌன ஊர்வலங்கள்
தனிமையின்
சுயரூபங்களைக்
காட்டி நிற்கின்றன
ஏன் அந்தத் தனிமை
என் உள்ளத்தைக்
கிழிக்கவில்லை?
மாறாக நசுக்குகிறது.
எனக்கென்று
ஒரு ஜீவன்
கண்ணீர் விடவேண்டும்
என நான் அழைக்கவில்லை.
எனக்கும் ஒரு
ஜீவன் உண்டு – என
யாரும் புரிந்து கொள்ளவில்லை
என்று.....
என் கண்கள் பனிக்கவில்லை
நெஞ்சம் வெடிக்கிறது.

நான்கு சுவருக்குள்
அடைக்கப்பட்ட
என் ஊமைக் கீதங்கள்
தொண்டைக்குள்
சமாதியாகின்றன
அந்த சமாதியில் வளரும்
காட்டுப் பூக்கள் தானும்
என் ஏக்கத்தைப்
புரிந்துகொள்ளும் என
அற்ப ஆசையில்
எண்ணங்கள் நட்சத்திரங்கள் வரை
ஆனால்.....
கைகளோ
சன்னல் கம்பிவரை
கனவுகளை ஊடறுத்து
நினைவுப் பாலம்
நிஜங்களைத் தேடுகின்றது
ஆனால் நான் நம்பிய
நிஜங்களே
நிர்மூலமான பின்னர்
காய்ந்த
என் உள்ளம் விடும்
ஈர மூச்சு
எதைத் தான்
குளிரவைக்கப் போகிறது.

என் உள்ளக் குமுறல்கள்
சொல்லக்கூடாதவை அல்ல
சொல்லிக்கேட்கப்படாதவைகள்
சொல்ல முடியாதவை அல்ல
சொல்ல அனுமதிக்கப் படாதவைகள்
என்னை அறியாமலேயே
தணிக்கைகள் என்
வார்த்தைகளைச் சொல்லுகின்றன.

கற்பனை வானில்
ஏழ்மைச் சிந்தனைகள்
வாடிய புஸ்பங்கள் ஆகின்றன.

**சிவபாதம் ரோபிதா**
கலைப்பிரிவு, 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையை மதித்திடுவோம்

இளமையைத் தொடர்ந்து வரும் முதுமை
அதைப் பரிந்து நிற்கும் எப்போதும் புதுமை....!
முதுமையை விரும்பியோ? நம் இளமை!
முதுமையை மதிக்க வேணடும் அது நம் கடமை....!

முதுமையிடம் உண்டு பல திறமை
அதை உணராமல் இருப்பது எம் மடமை!
நாம் கடக்கும் ஒவ்வொரு கணமும் முதுமை
முதுமையை மதிக்க வேண்டும் அது நம் கடமை!

முதுமை என்று பழமை அல்ல!
அது நம் உலகிலுள்ள வழமை
கட்டிளமை வந்துவிட்டால் துள்ளும் இளமை
கட்டிளமை கடந்துவிட்டால் தவழும் முதுமை!

மனிதா, உன்னைத் தீண்டிடும் முதுமை
அது உன்னைத் தொடர்ந்து வரும் வறுமை!
இளமைக் காலத்தே இனிமை
முதுமை முளைத்ததுமே தனிமை....!

பிரபஞ்சத்தில் உள்ளது பல பொய்மை,
வாழ்வும் பொய்ம்மையே அது என்றும் உண்மை!
உண்மையான வாழ்வென்றால் அது ஆன்மீகத்தன்மை
ஆன்மீகம் வரும்காலம் முதுமை

முதுமையிலே கிடைக்கும் வீடுபேறு உண்மை
அது தணித்திடும் உன் வாழ்க்கை வெம்மை!
வெம்மையைத் தணித்திடும் தண்மை
அது உன் வாழ்வில் முதுமை....!

பழமையை மதிக்கும் புதுமை...!
வெம்மையைத் தணிக்கும் தண்மை
தீமையை மறைக்கும் நன்மை...!
என்றும் முதுமையை மதிக்க வேண்டும் இளமை!

பாலிலிருந்து நீரை வேறாக்கும் திறமை
எப்போதும் அன்னத்திற்கிருப்பது புதுமை....!
முதியவரின் அறிவு என்றும் கூர்மை
அதை அறியாது இருப்பது எம் அறியாமை....!

முதுமையும் ஒருநாளில் இளமை
இளமையும் ஒருநாளில் முதுமை!
தினம் மாறிடும் உலக வழமை
சிந்தித்து செயற்படுவது எம் திறமை....!

இளமையிலே வாழ்ந்திருந்தது பன்மை
இன்று தனிமையில் வாழ்வது ஒருமை....!
இளமையின் எண்ணங்கள் எப்போதும் வெண்மை!
முதுமையின் தவிப்புக்கள் எப்போதும் கருமை!

வாழ்வில் உண்டெனின் மறுமை?
மாறிடாதோ? இவ்வுலக வழமை!
முதுமையை மதிக்கின்ற இளமை
தோன்றும் காலத்தில் உண்டு புதுமை!

மனிதா! "நீ என்றும் மதிக்கும் இளமை"
ஒரு நாளில், உனை மிதிப்பது உண்மை!
ஆகவே மொழிகின்றேன் ஓர் உண்மை
முதுமையை மதிக்கவேண்டும் அது உன் கடமை....!

**பொ. கஜவதனி**
கலைப்பிரிவு, 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேண்டாமே! இனியும் ஒரு ஜனனம்...."

"அன்னை" இச்சொல்லைச் சொல்லி
என் இதயம் மரத்துப் போனது.
என் மன ஏட்டில் உன்னை
மாட்டி வைத்துத் தினமும் ஜாசிக்கிறேன்.
உன் வசமிழந்து வாசமிழந்துபோன எனக்கு
வறட்சி மட்டும் சொந்தமானது....

பத்துத் திங்கள் மட்டுமே உன்
கருவறையைக் காணிக்கையாய்த் தந்தாய்
உன் மடிப்பஞ்சணையில் எனக்கு
நீ தந்த இடம் நீடிக்கவில்லை.
உன் நெஞ்சுப் பிரதேசத்து
வெண்ணிற அமுதை நான் அருந்தியதுமில்லை.
வாழ்க்கைப் பாதையிலே நீ பெற்ற யான்
கயவனாகிப் போக அநாதை எனும் நாமம்
என்னை அணிந்து கொண்டது.

நீங்கள் நடத்திய நாடகமதில்
அந்தப் போலி விழா வெற்றி காண
நீ தோல்வியை வாங்கிக்கொள்ள
தொடர்கதையாய் நாடோடியாய்
நானாகிப் போனேன்
தவறு உங்களில் தண்டனையால் நானிங்கு
நெருப்பில் குளிக்கும் கொடூரம்.
முன்பே தெரிந்திருந்தால்
"கருவினின்று" நானே கழன்றிருப்பேன்
உயிர் இருந்தும் "அம்மா" என்று
அழைக்க முடியாத அவலம்
ஐயோ! வேண்டாமே இனியும்
இது போன்ற ஜனனம்.

இப்படியெல்லாம் நடக்குமென்று
முதலிலே தெரிந்திருந்தால்
இப்பூமியில் பிறந்த நொடியிலே
நான் இறந்திருக்கலாம்.
உன்னை வருடங்கள் பலவாய்க்
காணாமல் என் கண்கள் இரண்டும்
மரித்துப் போகுமுன்பே அன்னையே!
மறுபடி என்னிடம் வந்துவிட...

எனது விழிகள் உன்னைத் தேடுகின்றன!
எதற்காக அழுகின்றன? என்பது
என் இதயத்திற்கு மட்டுமே தெரியும்
அமைதியற்ற என் வாழ்வில்
அர்த்தமற்று வாழ்கின்றேன்...
பகட்டான வாயின் சிரிப்புக்கள்
சிறந்த மகிழ்வின் வெளிப்பாடல்ல – மாறாக
இதயத்தில் ஏற்பட்ட பிரிவின் வலி
அன்னையே இது இன்னும் புரியவில்லையா?

தூக்கத்திலும் உன் பிரிவை நினைத்து
துக்கித்து சில நொடிகள்
துடிப்பின்றி நிற்கின்றது என் இதயம்
முற்றத்து ரோஜாவாய் அன்னையே நீ
மலரும்போது முட்களாய் உன் நினைவுகள்
மனதைக் காயப்படுத்துகின்றன – என்
இறப்பினில் என்றாலும் என்
இதயத்தைப் புரிந்து கொள்வாயானால்
இன்பமுடன் விடைபெறும் என் உயிர்
இல்லையேல் வேண்டாம் இனியும்
இது போன்ற ஓர் ஜனனம்!

குட்டித்தம்பி லதாஜினி
2010, கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறிவமுதை ஊட்டிய என் அன்னைக்கு...."

தெல்லிப்பழை எனனும்
பசுமை மிகு சோலையிலே
அறிவுச் செடியாக நீயும்
வாசம் வீசும் மலர்களாக ஆசான்களும்
வரப்பிரசாதமாக உனையேற்று
தேனீக்களாம் எங்களுக்கு
அறிவுத் தேனை ஊட்ட – வழி
காட்டியாக நீயிருந்து – இன்று
நூறாவது அகவை கண்டு
இப்பூமியில் பெருமை றெ
வாழத்திடுவோம் நீ வளர்த்த
மாணவர் நாம் வாழிய நீ!

நூறு வருடங்களாக – உன்
மாணவச் செல்வங்களை
தாலாட்டி வளர்த்துவிட்ட தாயே
நாவொன்று போதவில்லை
உன் நற்புகழைச் சாற்றிடவே!

உன் மழலைகளின் வதனங்கள்
என்றுமில்லாதவாறு உவகை பூத்து
மிளிர்கிறது.

தெல்லிப்பழை என்னும்
தெவிட்டாத சிற்றூரின்
கள்ளமில்லா மாணவர் நாம்
அள்ளி கல்வி கற்கவென
பள்ளி வந்து சேர்ந்திடவே!

துள்ளிச் சென்று கற்றிட்டோம் – இன்று
நூற்றாண்டு விழாதனிலே
வீறுநடை போடுகின்ற – என்
பள்ளித் தாயே
பல்லாண்டு காலம் – நீ
பார் போற்ற வாழியவே!
மஞ்சு வரை புகழேந்தி
கொஞ்சும் தமிழைச் சீராட்டி
வஞ்சமதை வதைத்து நின்று
பஞ்சம் தீர வழி நல்கி – இன்று
நூற்றாண்டு விழாவில்
வெற்றி வாகை சூடும் தாயே – உன்
பணிவான மழலையிவளின்
கவிவரிகள் அர்ப்பணம் உந்தனுக்கே!
ஏன் தெரியுமா?
தாயே! உன் ஜனனத் திருநாளில்
எமக்காக நீ சுமந்த வேதனைகள் ஏராளம்!

அன்னையே உனக்கு
பெருமை சேர்க்கும்
புனிதப் பணியதனில்
உன் சேய்களின்
பயணம் தொடரும்...
காத்திரு தாயே – உன்
புகழ்மாலை
வளர்ந்து வானம் வரை
ஓங்கி ஒலிக்கும் நாள்
வெகு தொலைவிலில்லை!

**சந்திரதாசன் கௌசிகா**
கலைப்பிரிவு, 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜன அன்னை

மகாஜன மண்ணில் எத்தனை மணிகள்
அத்தனையும் தரம் குறையாப் பொன் மணிகள்.

சிறுசுகளாக வந்த எங்களை – மகாஜன
அன்னை வளர்த்தெடுத்தாள் பெரிசுகளாய்.

உனை நீ அறியென்ற மகாவாக்கியத்தினால்
நம்மை ஒரு மாணாக்கராக வளர்த்தெடுத்தாள்.

உள்ளத்தில் உதித்து நின்று
உலகெங்கும் புகழ் பெறச் செய்தாள்.

கல்வியை எமக்கு அளித்து – எம்
கலங்கத்தைத் துடைத்தெறிந்தாள்.

ஒழுக்கத்தை சிறுவயதிலேயே ஊட்டி
ஒழுக்க சீலர்களாக உருவாக்கினாள்.

விளையாட்டிலும் கல்வியிலும் மகாஜன அன்னை
முன்னிலையில் திகழ்ந்தாள்.

மகாஜன அன்னை பல பல சாதனை படைத்து
உலகெங்கிலும் புகழ்பெற்றுத் திகழ்ந்தாள்.

மகாஜன அன்னை அன்றும் இன்றும் என்றும்
உலகில் நிலைத்து நிற்க வாழ்த்துக்கள்!

**துரைசிங்கம் தர்சனா**
கலைப்பிரிவு, 2011.

## குருட்டு வெளிச்சம்

கனவுகள் எனக்கு – முன்னே
இறந்து போனதால்
மனசு வெள்ளைப் புடைவை
கட்டி இருக்கிறது....?

சலனமில்லாமல்
என்னிடம் – யார்
சஞ்சலத்தை
தத்துக் கொடுத்தீர்கள்....?

பொய்ச் சூழலுக்குள் தான்
இதுவரை என்
இலட்சியக் குழந்தை
கர்ப்பம் தரித்திருக்கிறது....?

எலும்புகளாய் எஞ்சி இருந்த
என் எதிர்காலம் – இப்போது
சாம்பலாகி காற்றோடு போகிறது.

விரக்தியின் தாவணியால்
என் தேகம் மூடிய பிறகும்
அதன் பீத்தல்கள் – என்னைத்
திரும்பிப்பார்க்க வைக்கிறது....?

நாளுக்கு நாள் – நாகரிக
நட்சத்திரங்கள் முளைத்து விடுகின்றன – ஆனால்
என் நிழல் நிலவோடு – துணை
போகக்கூட யாருமே இல்லையே....?

**ம. சிந்துஜா**
உயர்தரம் 2011,
கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலிந்திருக்கும் நம் நாடு

நலிந்திருக்கும் நம் நாடு
நலமாயிருந்த கதை கேளு
புதைந்திருக்கும் நம் தேசம்
புகழ் பெற்றோங்க வழி கூறு
இந்துக் கடலன்னை ஏந்தி
நின்ற நம் தேசம்
சிந்தும் எழில் தன்னைச்
சிறை எடுத்துச் சென்றவர் யார்?

சொர்க்க பூமி எம் நாடு - அன்று
சுதந்திரத்தின் தாய் நாடு
இயற்கை எழில் இல்லா
ஒரு தேசம் இங்கேது? - கவின்
மொழி பேசும் நீர்வீழ்ச்சி
கண் குளிரும் அருங்காட்சி - எனப்
புதுச்சாரல் நின்றததுவே
மலைச்சாரல் மணி மகுடம்.

சொர்க்க பூமி இன்று சுடுகாடாய்
மாறி நிற்க - சுதந்திரத்தின்
தாய் நாடு சிறைக் கைதி ஆனதனால்
இன்பங்கள் மறைந்தோடி துன்பங்கள்
-மீண்டதுவே
ஒரு அன்னை எம் நாடு
ஒரு தேசம் நம் தாய் நாடு - என
இருகரம் தனைச் சேர்த்து
உலகதிரக் கூறிடுவோம்.

வீதியெங்கும் சடலங்கள்
வெள்ளத்தில் இரத்தங்கள்
போதையில் மனிதர்கள்
போட்டி போடும் மானிடர்கள் - எனப்
பேதையாய் ஆனது எம் இலங்கை
என்னும் திரு நாடு
இந்நிலை மாறிடவே தன்னிலை மறந்து
ஒன்று கூடி வாழ்ந்திடுவோம் - எம்
எழில் பொங்கும் திருநாட்டை - நம்
கரம் கொண்டு ஏந்தி நிற்போம்.

**பாரதி ஜெகநாதன்**
கலைப்பிரிவு, 2010.

# சுத்தம்

மனித குலத்தின் உயிர்நாடி
சுத்தமாம் நீயும் அறிந்திடுவாய்
சுத்தம் பேணி வாழ்வோரே
நிலையான சுகம் காண்பார்.

கூழையே நீ குடித்தாலும்
குளித்துவிட்டுக் குடியப்பா
ஏழையாய் நீ இருந்தாலும்
சுத்தமாக வாழ்ந்திடப்பா

கந்தையே நீ உடுத்தாலும்
தோய்த்து உலர்த்தி உடுத்திடப்பா
சுத்தமாய் நீ வாழ்ந்தால் தான்
சுகமும் உன்னைத் தேடிவரும்.

**S. பரணிதா**
தரம் 8A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமித்தாய்

பொறுமைக்கு நீயொரு
எடுத்துக்காட்டு
சுமைகள் சுமப்பதில் நீயொரு
சுமைதாங்கி
கோபங் கொண்டால் நீயொரு
இராட்சகி
உயிர்கள் வாழ்வதற்கு – நீ
வேண்டுமடி – பூமாதேவி
அழகெல்லாம் சரணடையும்
உன் பாதப்படியினிலே
உயிர்கள் உறங்கிட
வேண்டுமடி உன்மடியில்
தாகம் தீர்த்திட – நீ
தந்தாய் – தண்ணீரை
செல்வங்கள் பெற்றிட
அள்ளித்தந்தாய் இரத்தினத்தை
கண்குளிர நீ தந்தாய்
மலர்த் தோட்டம்!
இதமாகத் தழுவிவிட – நீ
தந்தாய் தென்றல் காற்றை
அதிசயமாய் படைத்து விட்டாய்
மலைகள் பல
சலசலக்கும் இதமான
ஓசை கேட்க
அழகாகப் பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சிகள்
இரு விளக்கைத் தந்து வைத்தாய்
காலம் பார்க்க
இத்தனையும் தந்த உனை
நாசமாக்கி – நோகடித்து
அழகான நதிகள் பல
ஓடுகின்ற உன் மடியில்.

**S. கஜானா**
கலைப்பிரிவு, 2011

## மகாஜன மாதா

பலர் கண்டனராம் கனவு
அது அன்றே நனவாகியது
பெற்றெடுக்கும் அன்னையோ
பத்து மாதங்கள் தான் சுமப்பாள்
ஆனால் மகாஜன அன்னை - எம்மை
பதின்மூன்று வருடங்கள் சுமக்கிறாள்

அன்னை தன் குழந்தைக்கு
அள்ளி அள்ளி அன்பை
ஊட்டிடுவாள்
மகாஜன மாதா தன் மாணாக்கர்களுக்கு
அள்ளி அள்ளி அறிவை
ஊட்டிடுவாள்

உலகெங்கும் மகாஜன அன்னை
சுமந்த செல்வங்கள்
மகாஜன அன்னையின் பெருமையை
பறைசாற்றி நிற்க
மறந்துவிடவில்லை.

கம்பீரமாகக் கட்டப்பட்ட கட்டடங்கள்
மன உறுதிப்பாட்டையும்
ஒழுங்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள்
ஒழுக்கத்தையும்
தூய்மையாகக் கட்டப்பட்ட கட்டடங்கள்
அகப்புறத் தூய்மையையும் பேணிக்
கல்வியமுது ஊட்டுகின்றாள்
மகாஜன மாதா.

**நகுலேஸ்வரன் உமையாள்**
கலைப்பிரிவு, 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை மதிப்போம்
# அவர் உலகை மகிழ்விப்போம்

நந்தவனத்தை வட்டமிடும் சிட்டுக் குருவிகள்
சிந்தையெல்லாம் சிறந்த கனவேந்தி
இந்த விந்தைமிகு உலகை - நாளை
நிந்தனையின்றி ஆளப் பிறந்த தலைவர்கள்

மலரத் துடிக்கும் இம் மொட்டுக்கள்
அலரும் முன்னே கருக்கப்படுவதேன்
வளமான உலகை வழிப்படுத்த விரும்பாது - அவர்
உளம் சுருங்கிச் சோர்ந்து போவதேன்

பள்ளி செல்ல துடிப்பிருந்தும் - என்றும்
துள்ளி ஆடப் பிடிப்பிருந்தும்
கிள்ளி எறியப்படுகிறது இவர் கனவு - ஏன்
அள்ளி அணைக்கப் பெற்றோராலே

வீட்டினில் கொடிய பஞ்சம் - இதனால்
வீதிகளில் விழிகள் கெஞ்சும்
கரையாத கல்லினையும் உருக்கும்
எமை அறியாமல் கண்ணில் நீர் சுரக்கும்

வேலைத் தளத்தில் வியர்வை துளிர்க்கும்
வீணான கற்பனை வந்து குதிக்கும்
கேடான எண்ணங்கள் நெஞ்சில் நிறையும்
தேனான சிறுவர் வாழ்வு பொசுங்கி எரியும்.

நேற்றோடு முடியவில்லை மனித வாழ்வு - அது
பகுத்தறிவுள்ள மானிடருக்கேன் இன்னும் புரியவில்லை
தெம்போடு சிறுவர்கள் வாழ்ந்திட
தெளிவாக கேட்டறிவோம் அவர் கருத்துக்களை

பசுமையான இதயங்களில் பதிப்போம்
நற் கருத்துக்களை என்றும்
அழியா கல்வி பெற வழிகாட்டுவோம் - அவர்
உணர்வுகளை நாளும் பகிர்ந்திடுவோம்

ஆசைகளை அறிவோம் - அவர்
அறியாமையை தூர எறிவோம்
அன்பெனும் நீர் ஊற்றுவோம் என்றும்
அழியாக் கல்விபெற வழிகாட்டுவோம்

பிஞ்சுகளின் குரலிற்கு செவி சாய்ப்போம்
பிரச்சினைகளைக் களைந்து செம்மைப்படுத்துவோம்
பிறழாத நன்னெறியைக் காட்டிடுவோம் - இந்தப்
பிள்ளைகளின் வாழ்வைச் செம்மையாக்கிடுவோம்.

**க. கபிரா**
கலைப்பிரிவு, 2011.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட இன்பம்

சொட்டும் மழைத்துளி
சொர்க்கத்தை நனைக்க
பட்டுப்போல் விரிந்த
புல்வெளி சிரிக்கும்
உச்ச அழகுதனைக் கண்டேன்
மெச்சும் இன்பந்தனைக் கொண்டேன்.

சிட்டுக்குருவி
எட்டுத் திக்கும் பறக்க
முத்துப்போல் மழைத்துளி
முத்தத்தில் நனையும்
கட்டுக் கடங்கா ஆண்மயில்கள்
இன்பக் களிப்புடன் ஆடும்
இயற்கை அழகுதனைக் கண்டேன்
எல்லையற்ற இன்பந்தனைக் கொண்டேன்.

செக்கச் சிவந்த வானம்
தினம் சொக்க வைக்கும் எம் நெஞ்சை
திக்குத் திசை எங்கும்
இயற்கை எழில் எம்மை
வியக்க வைக்கும்
நான் கண்ட இன்பம் எந்தன்
இயற்கை அன்னை மடிதனிலே.

ர. பிருந்தா
கலைப்பிரிவு, 2011.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றம் பெறவைத்த ஆசான்கள்

எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்து
ஏட்டைப் படிக்க வைத்த எம் ஆசான்களே - வாழ்வில்
ஏற்றம் பெற வைத்த நீங்கள் என்றும்
ஏற்றம் பெற மனமாற வாழ்த்துகின்றோம்.

எழுத்துக்களை அறிவிக்கும் சமுதாய ஏணி
எவரையும் கரை சேர்க்கின்ற உபகாரத் தோணி
அழுத்தமாகப் பதிப்பவனாம் அவனே அச்சாணி
ஆனந்த வாழ்வு தரும் சமூக விஞ்ஞானி

அள்ள அள்ள ஊறிவரும் ஆனந்தக் கேணி
ஆளுமையாய் மாணவனை வளர்க்கின்ற ஞானி
மெல்ல மெல்லக் கற்பவர்களுக்கும் உதவுகின்ற பாணி
மேலான பணியென்று தாள் பணிவோம் நாம்

ஔவையாரை மெய்யாக நமக்கு என்றுங்காட்டி
ஆத்திசூடிக் கதைகளைச் சுவையோடு ஊட்டி
செவ்வையாகத் திருக்குறளைத் தித்திக்க ஊட்டி
ஷேத்திரங்கள் தரிசனமே வாழ்வு என்று நாட்டி

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் நம்மை வளர்த்து
கல்விக்காவே தம்முயிர் மாணவர்க்காய் அமைத்து
மடமை தனை மனதினிலே மிச்சமில்லாதொழித்து
மானசீக வாழ்வுக்காய் தமைத்தந்து நிறுத்தி

அழகியல், உலகியல் கணித்திடும் கணணிகளும்
அணுவோடு பழகிடும் விஞ்ஞான ஆய்வுகளுமே
நலவியல், பொருளியல், மனையியல் அருளுரைகளுமே
நானிலத்தில் ஓங்கிடவே பங்கு தந்த ரிஷிகள்

வாழ்க வாழ்க வாழிய ஆசிரியர்
வாழ்க வாழ்க வாழிய ஆசிரியம்
வாழ்க வாழ்க வாழிய குருசேவை
வாழ்கவே பல்லாண்டு வாழ்க என்று போற்றிடுவோம்.

**லட்சிகா கதிரித்தம்பி**
கலைப்பிரிவு, 201.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினையாக்கும்

மனித வாழ்வில் முயற்சியைப் போல முன்னேற்றம் தருவது வேறொன்றுமில்லை. முயற்சியுள்ளவன் செல்வந்தனாக வாழ்வதை எங்கும் காண்கின்றோம். முயற்சியின் வலிமையும் அது தரும் ஆக்கத்தையும் அறிஞர் பலரும் பாராட்டிப் பேசியுள்ளார்கள். விதியின் வலி பற்றிப் பேசி விதியின் துணையின்றி எவரும் முன்னேற முடியாதென்று கூறிய திருவள்ளுவரே விதியென்னும் சொல்லானது ஒருவனுக்குப் பாதகமாக அமைந்திருந்தாலும் முயற்சி அவனைப் பாதுகாக்கும் என்கின்றார்.

"ஊழிற் பெருவலி யாவும் மற்றொன்று
சூழினுந்த தான்முந் துறும்"

என்று கூறி ஊழை எவ்வாற்றானும் வெல்ல முடியாதென்பதை ஆணித்தரமாக வற்புறத்துகிறார். ஊழைப் போல வலியடைந்தது வேறொன்றுமில்லையென்று கூறுவதோடு விட்டுவிடாது அதனை வெல்ல யாரேனும் முயற்சித்தால் அது முயற்சியையுந் தாண்டி முன்னால் வந்து அவர் செயலின் வலிமையைக் கெடுத்து விடும் என்று கூறிய வள்ளுவரே.

"தெய்வத்தாலாக தெனினும் முயற்சி தன்
மெய் வருந்தக் கூலி தரும்" என்கிறார்.

தெய்வம் என்பது இங்கே விதியெனவும் ஊழ் எனவும் படும். அந்த ஊழே ஒருவனுக்குப் புகையாக இருந்தாலும் அவனுடைய முயற்சி காரணமாகத் தன்னுடம்பை வருத்தும் போது அவனுக்கு அம்மெய் வருத்தம் அதற்குரிய கூலியைக் கொடுக்கும் என்கிறார். எனக்கு இப்போது காலம் சரியில்லை இப்போது என் முயற்சியெல்லாம் எப்பலனையும் அடைய முடியாதென்றும் சிலர் சோம்பியிருப்பதை நாம் பலரிடமும் காண்கின்றோம். இது தவறான முடிவு என்பதை வள்ளுவப் பெருந்தகையே அழகாகக் கூறுகிறார். விதி சாதகமாக இல்லாத போதும் ஒருவன் தன்னுடம்பை வருத்தித் தக்க முயற்சி செய்வானாயின் அவன் கூலி பெறுவதை அந்த விதியே தடுக்கும் வல்லமையற்றது என்பதை வள்ளுவர் கூற்றால் உணர்கின்றோம்.

"ஊழையும் உட்பக்கம் காண்பர் உலை
-யின்றித்
தாழா துஞற்று பவர்"

என்ற குறட்பாவின் முயற்சியால் ஊழையும் வெல்ல முடியும் என்பதை அறிகிறோம். எதற்கும் ஊழ், ஊழ் என்று சொல்லிக் கொண்டு முயற்சியைக் கைவிட்டுச் சோம்பேறிகளாய் இருப்போர்க்கு வள்ளுவர் சொல்லும் புத்திமதி ஆணித்தரமானது. முயற்சியில்லாதவன் எதையும் சாதிக்க மாட்டான் என்பது வள்ளுவரின் உபதேசங்களால் நன்கு புலப்படும். சிலர் எம்மால் எதையுஞ் சாதிக்க முடியாது நாம் இப்போது சும்மாயிருந்து சோதிடர்களைக் கேட்டு நல்ல காலம் வரும் போது முயலுவோமென்றிருக்கிறார்கள். அத்தகைய மூடர்களுக்கு வள்ளுவர் செய்த உபதேசமே முயற்சி திருவினையாக்கும் என்பது.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதும் மனித குலத்துக்கு விடப்பட்ட ஒரு உன்னத பணிப்புரையாகும். முயற்சி திருவினையாக்கும் என்பது மாத்திரமல்லாது அவர் மற்றையோரால் இகழ்ச்சிக்குள்ளாகவும் மாட்டார். என்பதையும் ஞாபகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகிறது. முயற்சி செய்தும் பலன் குன்று மாயின் அது அவன் பிழையல்ல. விதியின் பிழையேயென்று அறிஞருலகம் அவனை இகழமாட்டாது. ஆனால் முயற்சி இல்லா மலிருப்பதை உலகம் எப்போதும் இகழும். அவன் எவராலும் எள்ளப்படுவான்.

நிலமென்னும் நல்லாள் சோம்பேறி களைப் பார்த்துப் சிரிப்பாள் என்றும் வள்ளுவர் கூறுகிறார். நிலத் தாயானவள் தன்னுடைய வயிற்றில் மனிதனுக்கு வேண் டிய எத்தனையோ தானியங்கள், காய்கறி கள் முதலிய பல பண்டங்களையும் வைத்திருக்கின்றாள். அவள் வயிற்றைக் கீறியும், கிளறியும், கொத்தியும் அவன் வயிற்றிலிருந்து பல்வேறு பண்டங்களை யும் முயற்சியுடையவன் பெற்றுக் கொள்கி றான். அப்படி முயற்சி செய்த சோம்பேறி தன் முயற்சியின்மையால் எதையும் பெற முடியாது. தரித்திரத்தையே தனக்கு ஆபரணமாகப் பூண்டு கொள்கிறான்.

முயற்சி திருவினையாக்கும் முயற்சி யின்மை புகுத்தி விடும் என்ற வள்ளுவர் வாய்மொழியைப் பின்பற்றி முயற்சிக்கே முன்னுரிமை கொடுத்து வாழ்பவனே வாழத் தெரிந்தவன் அல்லாதவன் வாழ அறியாத வன் அவன் நிலத்துக்கே சுமையாக அமை பவன். அவன் முன்னேற மார்க்கமே இல்லை. முயற்சியாளர்களே இவ்வுலகில் இருப்பார்களானால் இவ்வுலகமே சுவர்க்க மாகிவிடும் என்பதில் ஐயமுண்டோ?

**சிவாஜினி தங்கராஜா**
2010, கலைப்பிரிவு.

## What is conscience?

**Conscience is the law –**
**the Supreme law of the Supreme Being.**
**- *Gandhi.***

சுதந்திரம் என்பது மிகவும் அருமையான பொருள் அதை என்ன விலை கொடுத்து வாங்கினாலும் வாங்கலாம். ஒரு மனிதன் தன் உடம்பைத் தவிர வேறெந்த உடம்பி லும் புகுந்து வசிக்க விரும்பமாட்டான். அதேபோல் ஒரு தேசம் மற்றொரு தேசத்தின்கீழ் அடிமைப்பட்டு வாழ மனப்பூர்வமாக விரும்பாது. சுதந்திர உணர்வு என்து எந்த ஒரு ஜீவராசிக்கும் இயல்பாக எழுகிற ஓர் உணர்வாகும். இது கடவுளின் அருளாகும். அடிமை நிலை கடவுளின் கட்டளைக்கு நேர் விரோதமான ஒரு நிலையாகும்.

*– மகாத்மா காந்தி –*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கே......?

மானுடம் உலகின் எல்லைவரை இன்று எங்கும் பரவியுள்ளது. பிரபஞ்சத்தின் தோற்றம் முதற்கொண்டு இன்றைய இணையற்ற விருத்திவரை அனைத்தும் அதிசயமே. மனிதன் உலகில் இருக்கின்றான். காண்கின்றோம். அவன் வாழ்கின்றான். அதனால் வாழ்க்கை உண்மை. ஏனைய உயிர்கள் வாழ்கின்றன. சடப்பொருட்கள் இருக்கின்றன. இவற்றை நாம் ஏற்கின்றோம். ஆனால் மனிதன் எவ்வாறு உலகிற்கு வந்தான்? ஏனைய உயிர்கள், உயிரற்றவைகள் எப்படிவந்தன?

"உலகம் சிவனின் தஞ்சம், அவனின்றி அணுவும் அசையாது"

"கிறிஸ்து ஒருவரே உலகின் இரட்சகர், பிதாவினின்று அனுப்பப்பட்டவர்"

"அல்லாவோ அக்பர்..."

"புத்தம் சரணம் கச்சாமி...."

இவற்றிற்கு ஒரு கும்பிடு,

* * *

மனித வாழ்க்கை இன்று விருத்திகளின் உச்சத்தை எய்தி விட்டது. விஞ்ஞானத்தால் மனிதன் மென்மேலும் உயர்ந்து கொண்டு செல்கின்றான். இதனால் அவனது சிந்தனைகள் பலதிசைகளையும் நோக்குகின்றன. இருந்தும், இன்றும் மூட நம்பிக்கைகள் பல மனிதனை விட்டு விலகாமல் இருக்கத்தான் செய்கின்றன. இன்று பல மதங்களும் தத்தம் கடவுளர்களே இப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு ஆதாரம் என்று மதக் கொள்கையைப் பரப்பி நிற்கின்றன. இதில் எதை நம்புவது? எதை ஏற்பது? எது உண்மை? என்று மனிதன் பலவாறு குழம்பிக் கொண்டிருக்கின்றான். கிணற்றினுள்ளே விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கின்றான். கிணற்றினுள்ளே விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவனை, அதன் மேற்பகுதியில் நின்று கொண்டு, "ஆண்டவரே இந்த மனிதனைக் காப்பாற்றும்" என்றோ "சொற்றுணை வேதியன்" என்று சேவித்துக் கொண்டிருப்பதாலோ கடவுள் அந்த உயிரைக்காப்பாற்றுவார் என்று நினைக்கிறது ஒரு கூட்டம். அந்த இடத்தில் ஒரு இளைஞன் கிணற்றுள் குதித்து அவனைக் காப்பாற்றுகின்றார். அப்போ அந்தநேரம் கடவுள் எங்கே? யார் கடவுள்? சாதாரண மானிடரிடம் இல்லாத சக்திகளைத் தன்னகத்தில் கொண்டிருந்தால் தான் அவர் கடவுளா? அப்படியானால் அந்த உயிரைக்காப்பாற்றுகின்ற சக்தி அந்த இடத்தில் அந்த இளைஞனிடம் மட்டுமே இருந்ததால் அவன் கடவுளா? ஆனால் உயிர் பிழைத்தவனுக்கு அந்நேரம் அவன் கடவுள்தான். பின்னும் கூறுவது என்ன? சிவனே இளைஞன் ரூபத்தில் வந்து அவனைக் காப்பாற்றினார். இது ஒருபகுதி, இல்லை இயேசுவே மனிதரூபனானார் என்கிறது மற்றொருபகுதி. இருக்கலாம், இதனுள் ஏதாவது ஒன்று உண்மை அல்லது இரண்டுமே ஒன்றாகக் கூட இருக்கலாம். ஆனால் இதன் உண்மை வீதம் 100 என்றே கூறலாமா?

தமிழுக்குப், பெரியார் என்று ஓர் அறிஞர்மட்டும் தோன்றியிராவிட்டால், மூட நம்பிக்கை எனும் விஷக்களை தமிழுலகம் முழுவதும் பரந்து நின்றிருக்கும். மனித உடல்களும், உயிர்களும், அதற்கு இரையாகியிருக்கும். இவருடைய கருத்துக்கள் தான் மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிய இன்றும் வழிகாட்டியாக அமைகின்றன. "உலகின் சகல செயற்பாடுகளுமே கடவுள் உலகினை ஆட்சி செய்கின்றான். அவனில்லாமல் எதுவும் தோன்றவோ, அழியவோ முடியாது. அப்படியானால் கொலை, களவு, இப்படியான ஈனச் செயல்களைச் செய்விப்பதும் கடவுளா? இது பெரியாருடைய வினா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பக்தி என்ற பெயரினால் உடலின் பல பாகங்களிலும் அலகுகளைக் குற்றிக் கொள்வது அல்லது தலையிலே தேங்காய்களை அடித்து உடைப்பது. தீமிதிப்பது அல்லது போனால் உடலங்கத்தின் பகுதி வெட்டப்படுவது. இவ்வாறான செயல்கள் இன்று தெய்வீகச்சடங்காக நம்மிடையே புகுந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்தால்தான் ஆண்டவன் அருள் கிடைக்குமா? அல்லது கொலை, களவு, கற்பழிப்பு இவற்றையெல்லாம் செய்து விட்டுப் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டால் போதுமானதா? இவ்வாறு இன்னும் பல வினாக்கள் வாழுகின்ற மனிதர்களால் இன்றும் முடிவின்றி விடைதேடப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. கடவுள் நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றார்? இப்படியான மூடநம்பிக்கைகளையா? எந்த ஒரு தாயும் தன்னைப் புகழ்ந்து போற்றினால்தான் குழந்தைக்குப் பால் கொடுப்பேன் என்று கூறுவது கிடையாது. கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது நாங்கள் கடவுளாக வாழவேண்டும் என்பதையே! பிற உயிர்களுக்குத் துன்பம் விளைக்காது இருந்தால் நாமும் கடவுள்தான்.

இன்னோர் நோக்கில் மனிதனுடைய சிந்தனை விருத்திகூட அந்தக் கடவுளினால் தீர்மானிக்கப்படுகிறதா? அதனால் மனித சிந்தனைகள் யாவும் மாயையானவையா? அவ்வாறானால் மனிதன் பெற்ற சிந்தனை அறிவால் ஆராய்கின்ற இவ்விடயங்களும் பொய்யானவையா? அனைத்தும் கடவுள் செயலென்று ஆகி விட்டால் மனிதனின் எண்ணங்கள் முழுவதும் அந்தக் கடவுளினால் தீர்மானிக்கப்படுவதாகத்தானே இருக்க வேண்டும். அப்போது பகுத்தறிவாளன், ஆத்மிகவாதி இவர்களுக்கும், நாத்திக வாதிகளுக்கும் கூட சிந்தனையைக் கொடுப்பது கடவுளா?

## நாத்திகவழி கடவுள் செயலா?

சமயம் எதையும் ஆதார பூர்வமாகக் கூறுவதில்லை. ஏதோ ஒன்றினைக்கூறி அதை நம்பு! என்றே வலியுறுத்துகின்றது. ஆனால் அறிவியல் ஒவ்வொன்றையும் ஆதார பூர்வமாக எடுத்துக் கூறுகின்றது. குறிப்பிட்ட ஒரு கருத்து அறிவியலினால் நிரூபிக்கப் படும் வரையில் அங்கு மூடநம்பிக்கை செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆனால் அறிவியல் அதனை நிரூபித்ததன் பிற்பாடு அதன் செல்வாக்கு மெதுமெதுவாகக்குறைந்து போகின்றது. உதாரணமாக அம்மை என்கின்ற நோயை "அம்மன்" என்கின்ற கடவுளின் சீற்றத்தினால் உண்டாகின்ற நோய் என்று ஒரு மூடநம்பிக்கை காணப்பட்டது. இன்று அதற்குரிய தடுப்பு மருந்துகள் கண்டு பிடிக்கப் பட்டதன் பின் அது தொடர்பான கருத்துக்கள் மெதுவாகத் தணிந்துவிட்டன.

* * *

எமது தமிழ் முன்னோர்களின் அளப்பரிய கண்டுபிடிப்புக்களை இன்று மூட நம்பிக்கைகளுக்குக் கருவியாக பயன்படுத்தும் நிலை கவலைக்குரியது. "அரசினை நம்பி புருஷனைக் கைவிடுவது...." என்ற கூற்றே மூட நம்பிக்கைகளுக்கு எதிரானது. ஆனால் அது இன்று மூடக்கருத்திற்குரியதாகப் பயன்படுத்தப்படுகின்றது. "அரசு" என்கின்ற மரத்தினைச் சுற்றி வணங்குவதால். பிள்ளைப்பாக்கியம் கிட்டும் என்பது அறிவியல் கூற்று. இன்று அது மன்னனை நம்பி சொந்தக் கணவனை விட்டு விடுவது என்ற பொருளாகி நிற்கின்றது. தமிழுலகின் பல கண்டுபிடிப்புக்கள் இன்று இந்நிலையில்தான் காணப்படுகின்றன.

* * *

நாம் பெரும்பாலும் மதத்தைப் பின்பற்றுகின்ற உலகில் அபிவிருத்தியடைந்த பண்பாட்டுக் குழுக்களைப் பார்த்தால் அதில் ஏதாவது ஒன்று மூடநம்பிக்கைகளைப் பின்பற்றியிருக்கின்றதா? மதங்களை ஏற்பது தவறில்லை. ஆனால் மதத்துவேசம், மூடநம்பிக்கை இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தவறானவை. உலகில் எந்தமதமுமே இம்சைக்கு வழிநடத்தியதில்லை. எந்த மத வாதியும் அஹிம்சையைப் பின்பற்றுவ தில்லை. எவனாலும் முடியாதென்பது அவ நம்பிக்கை, அவனால்தான் முடியும் என்பது மூடநம்பிக்கை. என்னாலும் முடியும் என்பது நன்னம்பிக்கை. தன்னம்பிக்கை உள்ள ஒருவ னில் மூடநம்பிக்கை பாதிப்புச் செலுத்தாது.

அறிவியலில் வேக வளர்ச்சியில் உலகம் விந்தைகளைப் பரப்பிக்கொண்டிருக்கும் வேளையில் மனித வளர்ச்சியின் தடைக் கற்களாக இன்னும் இந்த மூடநம்பிக்கை களைப் போட்டு வைக்கப்போகின்றோமா? அல்லது கற்களைத் தகர்த்தெறியப்போகின் றோமா? கிணற்றுள் விழுந்தவனை அந்த நேரம் தன்னுயிர் என்று பாராது காப்பாற்றிய அந்த இளைஞன் கடவுள், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவனைக் காக்கும் மருத்துவன் கடவுள். அங்கு எந்தக் கடவுள் காப்பாற்றினார் என்ற கேள்விகள் தேவையற்றவை. எந்த மதங்களும் உடலை வருத்து என்று போதிப்பதில்லை. அப்படி போதிக்குமென்றால் அதனால் உனக்குப் பயனில்லை. மதங்கள் கூறும் எதுவும் ஆதார பூர்வமானவை இல்லை. ஆனாலும் அவை மனிதனைத் தவறான திசைக்கு இட்டுச் செல் வன அல்ல. தவறான திசைக்கு இட்டுச் செல் வது அங்கும் நம்மவர்கள் கண்டுவைத்தி ருக்கும் மூடநம்பிக்கைகளே.

*　　*　　*

உலகம் இயங்குகின்றது என்பது உண்மை. அதன் இயக்கம் தெளிவானது என்பது உண்மை. சாதாரண ஒரு தையல் இயந்திரத்தை இயக்குவதற்குக் கூட, சிறந்த அறிவியல் திறனுடைய மனிதன் தேவை. ஆனால் அவனையே இயக்குவதற்கு ஏதோ ஒன்று தேவை. அந்த வகையில் அளப்பரிய சக்தி ஒன்று உலகை ஆட்சி செய்கின்றது என்பதும் உண்மை. இதனை விஞ்ஞான மும் ஏற்றுக் கொள்ளுகின்றது. ஆனால் அந்த அளப்பரிய சக்தியினை, இதுதான், இவ் வாறு தான், எனத் திடமாக உருக்கொடுத்து வரையறுக்கமுடியாது. அது அணுவிலும் சிறியதாயோ, அல்லது பிரபஞ்சத்தின் எல்லைவரை அகன்றதாயோகூடக் காணப் படலாம். எதற்கும் ஆதாரம் இல்லை. எம் மதங்களும், அறத்தையும், அன்பையும், கருவி யாகக் கொண்டே நகர்கின்றன. மனிதன் தனக்கேற்ற நம்பிக்கையுடன், தான் விரும்பும், சமயத்துடன், இணைந்து செல்லுகின்றான். அவனது வழிப்படுத்தியாக, ஆறுதற்படுத்தி யாக அச்சமயங்கள் செயற்படட்டும். ஆனால் அர்த்தமற்ற மூடநம்பிக்கைகள் களையப்பட வேண்டியவை என்பது எனது கருத்து. இதற் குப் பின்னும் அவை தேவையானவையா? என்பது உங்கள் தெரிவு.

மண்ணிற்கு ஏதோ ஒரு சக்தியினால் மனிதராகப் போகின்றோமா? விண்ணிற்குச் செல்லும்போது மனிதராகப் போகின் றோமா? இது ஒவ்வொருவரும் தனக்குள் கேட்கவேண்டியது. அனைவரோடும் அன் பாயிரு. அடுத்தவன் துயரத்தில் அக்கறை கொள். ஜாதிகள் மதங்களைக் கடந்து பாசத்தோடு பழகு, பணிவாயிரு, பாதகம் செய்யாதே, நம்பிக்கையில் துரோகம் விளைக்காதே, அகந்தையின்றி அடுத்தவன் திறனைத் தட்டிக்கொடு, இவற்றை எமக்குக் கிடைத்த கட்டளையாக ஏற்றுச் செயற்பட் டால், எம்மில் அந்தச் சக்தி தெரியும். பிரச் சினை மதங்கள் அல்ல! மனிதர் கொண்டி ருக்கும் மதங்களே. இதை அறுத்தால் எது வும் ஒன்றாகத் தெரியும். எதையும் தாண்டி அளப்பரிய ஒளியான அந்தச் சக்தி எங்கும் பிரகாசிக்கும் மனங்களைத் தூய்மை செய்! மதங்களில் திளைக்காதே!

**ந. விஜயரூபன்**
2009, கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையில் கல்வி சிலையில் எழுத்து

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது நம் நாட்டுப் பழமொழிகளில் ஒன்று. நீரில் எழுதும் எழுத்து உடனே அழிந்து போய்விடும். ஆனால் சிலையில் எழுதப் பட்ட எழுத்து சிலை அழியும் காலம் வரை அழியாது நிலைத்து நிற்கும் என்பது உண்மையாகும். தமது பிள்ளைகள் கல்வி மான்களாகவும், கல்வியில் பெரும் சாத னையாளர்களாகவும் ஆக வேண்டும் என நினைப்பவர்கள் இளமையில் இருந்தே கல்வியைப் புகட்ட வேண்டும். இளமையில் கல்வியில் ஈடுபடாது இளமை கழிந்த பின் கற்போம் என இருப்பது பெரும் மடமை யாகும். இளமையில் கல்வியை நாம் விதைத்த பெரும் அறிஞர்களாகிய சான் றோர்கள் பல நூல்களிலும் இதனை வலி யுறுத்தியுள்ளனர். ஆதலால் இளமையில் கற்போம் அக்கல்வியை சிலையில் எழுத் துப் போல அழியாது பேணுவோம் என்ப தனை கல்வியில் ஆர்வமுடைய அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

அழுக்குப் பிடித்த சீலையில் சாயம் படிவதில்லை. அழுக்குப் படியாத சீலையில் நன்கு சாயம் படியும். அதுபோல உலக விடயங்களில் சிக்கி ஞாபக சக்தியைப் பல இடங்களில் திருப்பிவிட்ட பின் கல்வியைக் கற்பதில் பெரும் பயனை அடைய முடி யாது. கல்வியை இளமையில் படித்தாலும் முதுமையிலும் படிக்க வேண்டும் என்பதில் நம் முன்னோர்கள் ஆர்வமாக இருந்தனர். “பாடை ஏறினும் ஏட்டைக் கைவிடேல்” என்ற பழமொழி இதனை வலியுறுத்திப் பேசுகின்றது. இளமையில் கற்கும் கல்வி நிலைத்திருப்பது போல முதுமையில் கற்கும் கல்வி நிலைத்திருக்காது என்பது பேரறிஞர்களின் அனுபவம் வாய்ந்த கூற்றாகும். இளமையில் கல்வி நிலைத்து நிற்கும் என்பதில் ஐயம் உண்டோ?

எந்த நூல்களையும் கற்றல் என்பது பொருத்தப்பாடானது அல்ல. கற்கும் போது கற்கவேண்டிய அறிவும் முக்கியமானதா கும். உலகில் வெளிவரும் எல்லா நூல்களும் படிக்க உகந்ததா என்பது கேள்விக்குரிய விடயமே. “பால் எல்லாம் நல் ஆவின் பால் ஆகாது” என்பது போல நூல்கள் எல்லாம் நூல்களாக இருப்பதில்லை. நூல்களைக் கற்கும் விடயத்தில் குருவின் அல்லது உபாத்தியாரின் வழிகாட்டுதலிலேயே இளமையில் கற்க வேண்டிய நூல்களை அறிந்து கற்க வேண்டும். “பால் எல்லாம் நல் ஆவின் பால் ஆகாது” என்பது போல சில நூல்கள் கற்கத் தகுதி அற்றவையாகும். பாலில் கள்ளிப்பால் என்னும் வகை உள்ளது அது தொட்ட இடத்தைப் புண்ணாக்கி விடும். அது போல கற்கத் தகாத நூல்கள் இளை ஞர்களின் மனதைப் பாழ்படுத்தி விடும். அத் துடன் அவர்களது வாழ்வையும் பாழ்படுத்தி விடும். ஆதலால் இளைஞர்கள் படிப்பது மாத் திரமன்றி தீயவற்றைத் தொட்டுமே பார்த்தல் கூடாது. ஆகவே கல்வியை இளமையில் இருந்து கற்று உலகில் பல சாதனைகளைச் செய்வோமாக.

**பத்மநாதன் கௌதமன்**

தரம் 8A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The Development of Education cum Higher Level Educational Activities.

*Mr. S. Sathyanaraayanan, Pedagogue, J/ Mahajana College presents some important facts in the form of an article which won a prize in "The Teachers' Day competition – 2009" organized by the Valikamam Zonal Education Office.*

The Tamils have a hoary tradition well – entrenched by Education. Education is the sweetest honey the Tamils have enjoyed and continue to enjoy tasting from the time immemorial. The literary heritage of the Tamils is imperishable through ages. It is a unique treasure preserved and protected by the savants and the sages. Even before the advent of the foreigners the Tamils were the most educated lot with a profound knowledge of their Grammar and Literature.



In those days the students who learnt under a teacher stayed with him in his own house washed his clothes prepared his meals watered his flower-beds and the flower garden before he started learning under him. Their GURU was not only their teacher but also their mentor, guide and philosopher. All the students were awed by him into obedience to him with a readiness to carry out all his instructions and behests. Their loyalty to the teacher was always very unswerving.



This system and pattern of Education underwent a radical change with the advent of the British invaders. The British invaders soon after they had established themselves very securely on the seat of power completely transformed the national outlook of the country by propagating the Christian faith and introducing English as the medium of instruction in all schools. All subjects were taught in English when Tamil also was taught as a subject. They established schools in several parts of the country appointed teachers detailling their duties and responsibilities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Education Departments were set up headed by a Director of Education with whom Circuit Education Officers functioned their duties being periodical visits to schools to supervise the work of the teachers by individually examining the students to know their capacity and knowledge of the subjects they learnt.

Now the system also has changed. Several areas divided into zones, for each zone a Director of Education is appointed under whom several Education Officers function in various capacities. The teaching method also has undergone a novel change. In schools the teachers are advised to use Over Head Projector and Multimedia Projector to impart instructions in their subjects. Assessment tests are held. The assessment marks play a vital role in gauging the ability of a student to cope with the subjects taught at various matters of topical and current interest.



As the success of the students in both public examinations and provincial level examinations is the avowed objective towards which the teachers direct their efforts to produce the desired success. The subjects based teaching and explications of every lesson necessary for the students to provide the correct answers to all the questions in the public examination assume great importance according to which all the works are systematically done.

The assessment includes the following: Assignment, Project, Exploration, Investigation, Observation, Exhibition, Field trips, Written examination, Structural essays, Open book examination, Constructive activities, Listening test, Practical test, Speech test, Self-made composition, Group activity, Concept map, Double entry, Wall display, Quiz competition, Book of questions and answers, Debate, Discussions, Seminar, Extempore speech, Participatory role and Others.



The teaching is effectively done through the process of Engagement, Exploration, Explanation, Elaboration and Evaluation. The students are divided into groups and a group leader is selected and certain functions are deligated to him / her.

This system is undoubtedly expected to make an appreciable contribution to the learning process of the students whose ability to think, understand and create is significantly developed.

With the universalization of the elementary Education the importance of Education is keenly felt by each and every student. The consciousness of the students



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

about the fruits of learning produce a healthy effect the result being that nowadays there are no drop-outs and that every student is keen to learn.



The Information Technology and the Computer Technology stupendously contribute to the development of Education which is now a significant phenomenon. Equipped with the computer knowledge of information and computer technology many students prove their eligibility for their choice of the jobs.

There is no gainsaying the fact that over the past ten years the Educational Development has undergone a tremendous change perhaps a remarkable change to such an extent that the Post graduate aspirants have the freedom to choose the computer network management as the subject for the Master's Degree Programme as the scope for an exhaustive research is not a constricted one.

The "Jaica" project is said to be of great advantage to the students as well as to the Development of Education which is the cornerstone of the civilization of the people all over the world.



The students are properly guided and groomed for a better academic career which is the desired target of all the students whose legitimate aspiration is a bright and rosy professional career strongly built up on the firmest foundation of a successful academic career.

***The school creates a peaceful atmosphere for the students to map out their future career. The students should turn to their advantages the opportunity available. Else their future will be doomed to despair or in other words the future will be sombre or dismal. As a student he / she ought to have some virtues which bespeak his / her gentle upbringing. Disciplined conduct is the immediate benefit that occrues from education. Rowdysm should not be allowed to taint this atmosphere. The advancement in learning should be the target of each and every student male or female.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பகுதி

*Page No.*

☞ The Development of Education cum Higher Level Educational Activities 140

☞ நாளை நமதே 143

☞ Via to the wilderness 144

☞ கணித பாடம் என்ற கனி இனிக்குமா?..... கசக்குமா?..... 145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளை நமதே

**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயத்தால் நடாத்தப்பெற்ற கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கவிதை**

கல்வி கலைகளில் சாதனை படைக்கக்
கதிரவன் போல நீயும் எழுவாய்
வல்லமை பெற்று வாழ நினைத்தால்
வானம்கூட நாளை நமதே.

நம்பிக்கை கொண்டு செயலாற்ற வேண்டும்
நாணயம் என்பதையும் ஏற்றிட வேண்டும்
வெம்பி வருந்தும் வாழ்வை மறந்திடு
வெளிச்ச உலகம் நாளை நமதே.

விண்ணை முட்டும் கனவுகள் காண்பாய்
விரைந்து நீயும் செயற்பட வருவாய்
கண்ணைப்போல கடமையை மதித்தால்
கடவுளும் கூட நாளை நமதே.

ஏழை வாழ்வை உயர்த்த நினைப்பாய்
ஏதும் கொடுத்து வாழ வைப்பாய்
காலை எழுந்து கடவுளைத் தொழுவாய்
கருணை உலகம் நாளை நமதே.

ஒற்றுமையோடு சேர்ந்து வாழ்ந்தால்
ஒரு கோடி நன்மை சேர்ந்து வரும்
ஒற்றுமை என்பதை உயிராகக் கொண்டால்
உயரும் உலகம் நாளை நமதே.

புன்மைகள் நீக்கி உலகினை உயர்த்தவே
புதிய மனிதனாய் எழுந்திடல் வேண்டும்
நன்மைகள் ஓங்கிட நல்லறம் செய்தால்
நல்ல உலகம் நாளை நமதே.

பண்புடன் வாழ்ந்து பலரும் போற்றப்
பாங்குடன் நீயும் உலகில் வாழ்ந்தால்
அன்புடன் உன்னை அனைவரும் விரும்புவர்
அகிலமும் உன்னிடம் நாளை நமதே.

அஞ்சி வாழும் வாழ்வை நீக்கு
அடிமை என்ற சொல்லைப் போக்கு
பஞ்சி என்ற சோர்வை நீக்கு
பரந்த உலகம் நாளை நமதே.

காதல் கொண்டு உயிர்களை நேசித்தால்
சாதல் என்பது உலகினில் இல்லை
ஈதல் ஒன்றே நன்றெனக் கொண்டால்
இனிமை உலகம் நாளை நமதே.

மதங்கள் எல்லாம் ஒன்று என்பாய்
மானிடம் உயர்ந்திட வழிகள் சமைப்பாய்
விதங்கள் அற்ற சமூகம் காண்பாய்
விரும்பிய உலகம் நாளை நமதே.

**பா. பாலமுரளி**
ஆசிரியர்,
யா / மகாஜனக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Via to the wilderness

I my self was on my way
It may be the highway with gay
But without any may.

Oh, the age of self-importance
with bit of selfishness too.
obstacles of tolerable were (who)

my friends, enemies, teachers and my all
under my interesting steps

Edge of eternity
Had to a humble hesitation
my head off completely.
but a shot at soul
for the sake of God.

I was there-after a
Narrow-escape
Yes, you are thinking
what make me escape
Nothing just three words
'Know thy self'.

# அமானுஸ்யத்தின் வழியாய்

அன்று நான் என் வழியில்
நிச்சயமற்ற நிழல் பொழுதுகளின்
நகர்வில் – மகிழ்வாய்
நெகிழ்வாய்
ஏதுமறியா நிலையில்

சுய கர்வம் சுண்டி நின்ற
சுட்டிக்காலக் கடக்கைகளும் தான்.
அன்புச் சிறையின் கம்பிகள் எண்ணும்
இன்பக் கைதியாய்
சுவாரஸ்யமான காலடியில் சுகமான
இடர்வுகள் அவை –
நண்பனாய், ஆசானாய், எதிரியாய்
எல்லாமுமாய்.

முடிவின் விளிம்பில் எனக்கோர்
வேண்டப்பட்ட விசனம்.
தயக்கமின்றி வந்த தயக்கத்தின்
தூண்டலில்
பிள்ளையின் பிடரியில் தாயின்
தட்டல்போல்
மயிரிமை தப்பலில் மாட்டிக்
கொண்டேன்.
மீட்டுக் கொண்டேன் என்னை நானே.

நீங்கள் கேட்கிறீர்கள் அது தான் எது?
வேறில்லை, வெற்று மூன்று சொல்
'உனை நீ அறி'

**V. Subashini**
(Teacher)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித பாடம் என்ற கனி இனிக்குமா?.... கசக்குமா?....

"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்ற முதுமொழிக்கு இணங்க எங்கள் ஒவ்வொருவருடைய இரு கண்களாகக் கணிதமும் தமிழும் விளங்குகின்றது. எமது முன்னோர்கள் அனைவரும் கணித பாடத்திலும் தமிழிலும் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் சிறந்த தலைவர்களாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும், கணித மேதைகளாகவும், விஞ்ஞானிகளாகவும் திகழ்ந்தார்கள்.

ஆனால் தற்போது மாணவர்கள் சிலரிடம் கணிதபாடம் என்பது கஷ்டமான பாடம் என்ற கருத்து நிலவி வருகின்றது. இவ்வாறான கருத்து, மனப்பாங்கு ஏற்படக்காரணம் யாது? இதற்கு உரிய காரணம் யாது? இவ்வாறான மனப்பாங்கு ஏற்படக் காரணமானவர்கள் யார்? இவர்களின் மனப்பாங்கினை எவ்வாறு மாற்றலாம் என்ற பல வினாக்கள் எல்லோர் மனதிலும் எழக்கூடும். இவ்வினாக்களின் விடைகளுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் எம்மவர்களே.

மாணவர்களின் சிறு பராயம் தொடக்கம் வீட்டில் கூடியளவு நேரம் தமது பிள்ளைகளுடன் செலவிடுபவர்கள் பெற்றோர்களே. இப்பெற்றோர்கள், மாணவர்கள் குழந்தையாக இருந்த காலம் தொட்டு ஆரம்பக் கல்விக்கு உட்செல்லும் வரை கூடியளவு அக்கறையுடன் கல்வி கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக் காலத்தில் அல்லும் பகலும் தமது பிள்ளைகளுக்காக அயராது கல்வி கற்பிப்பதில் அக்கறையாக இருக்கின்றனர். ஆனால் தரம் 11 பரீட்சைக்காக எதிர்நோக்கிக் காத்திருக்கும் தமது பிள்ளைகளின் கல்வியில் ஒரு சில பெற்றோர்கள் ஏன் அக்கறை எடுக்கத் தவறுகிறார்கள்? இவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இருந்த அக்கறையும் ஆர்வமும் ஏன் தரம் 11ல் க.பொ.த சாதாரணதர பரீட்சையின் மீது இல்லாமல் போகிறது. இதற்குக் காரணமாக இருப்பவர்களும் பெற்றோர்களே ஆவர். இவர்கள் தமது பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள் என எண்ணித் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை எடுக்கப் பின் நிற்கின்றனர். அதுமட்டுமன்றி தரம் 11இல் கற்கும் தமது பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவதில் இடர்ப்படுகின்றனர். ஏனெனில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இடைநிலைக் கல்வி பயிலும் காலத்தில் கண்டிப்புடன் வளர்க்க மறந்துவிடுகின்றனர். இதனால் இம்மாண வர்கள் தரம் 11இல் கல்வி பயிலும் காலத்தில் தமது பெற்றோர் கூறும் அறிவுரைகளை உதாசீனம் செய்கின்றனர். இப்படிப்பட்ட மாணவர்கள் தமது "கல்வி" எனும் பாதையிலிருந்து தடம்புரண்டு வேறு திசையில் செல்கின்றனர். க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளை உரியவாறு பெறமுடியாமல் தவிக்கின்றனர். இப்படியான பிள்ளைகளைக் கண்டிப்புடனும் பயபக்தியுடனும் வளர்த்திருப்பார்களேயானால் மாணவர்கள் நல்ல ஒளிமயமான பாதையில் சென்றிருப்பார்கள் என்பது உண்மை.

இப்பெற்றோர்கள் விடும் அடுத்த பிழை யாது எனில் தமது பிள்ளைகளுக்கு விஞ்ஞான அறிவு வளரும் என்று கூறிக்கொண்டு கையடக்கத் தொலைபேசியை வாங்கிக் கொடுக்கின்றனர். இக்கையடக்கத் தொலைபேசியினால் விஞ்ஞான அறிவு வளர்கிறதோ இல்லையோ, தமது பிள்ளையை ஒரு பாதாளச் சாக்கடைக்குள் இட்டுச் செல்லும் என்பதனை ஒவ்வொரு பெற்றோரும் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். அதுமட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றித் தற்போது யாழ்ப்பாணத்தில் வெளி நாட்டு நாணயங்கள் கரைபுரண்டு திரிகின்ற காலம். வெளிநாட்டு உறவினர்கள் அனுப்பும் பணத்தினைக் கொண்டு நவீன ரக மோட்டார் சைக்கிள்களில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பவனி வருவது தற்போதைய நாகரிகம் ஆகிவிட்டது. இப்படியாகச் செல வழிக்கும் பணத்தினை ஒரு மாணவன் கல்விக்காகச் செலவழிப்பானாயின் இக்கல்வி யானது அவனது வருங்காலத்தை வழிப் படுத்தும் என்பது கண்கூடு.

மற்றும் பெற்றோர்களில் சிலர் தமது பிள்ளைகளின் கல்வி நிலையை அறிவதில் அக்கறை அற்றவர்களாகக் காணப்படுகின் றனர். தங்கள் பிள்ளைகளைப் பற்றித் தமது பாடசாலை ஆசிரியருடன் நேரடித் தொடர்பு களை ஏற்படுத்திக் கொள்வதில் பின்நிற்கின் றனர். இதனால் பாதிக்கப்படுபவர்கள் தங்கள் பிள்ளைகள் என்பதனை எண்ணிப் பார்ப்ப தில்லை. எனவே தங்கள் பிள்ளைகள் கல் வியை ஒழுங்காகக் கற்கிறார்களா, அவர்களின் கல்வி நிலையை ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்ளல் மிக முக்கியமானது. இவ்வாறாக ஆசிரியருடன் தொடர்பினை ஏற்படுத்தி வைப்பதனால் தமது பிள்ளைகள் எப்பாடத்தில் அடைவுமட்டம் குறைவாக உள்ளனர் என்பது பற்றி அறியமுடிவதுடன் தமது பிள்ளைகளின் கல்வித் தரத்தினை உச்சநிலைக்கு உயர்த்த முடியும் என்பது நிஜம்.

பெற்றோர்கள் முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் தங்கள் பிள்ளைகளைக் கண்டிப்புடனும் பயபக்தி யுடனும் வளர்க்கவேண்டும். அதுமட்டுமன்றித் தமது பிள்ளைகளுக்கு அன்பை மட்டுமன்றி அறிவையும் சிறுபராயம் தொடக்கம் புகுத்த வேண்டும். மற்றும் தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலை மட்டத்தினை அறிந்து உரிய வகை யில் கல்வி பயில வழிப்படுத்தவேண்டும். அது மட்டுமன்றித் தற்போதைய கல்வியில் ஏற்பட்டி ருக்கும் மாற்றங்கள் பற்றி அறிவதற்காகத் தொடர்ந்து பாடசாலைச் சமூகத்துடன் தொடர் பினை ஏற்படுத்தவேண்டும். வீட்டில் தங்கள் பிள்ளைகள் கல்வி பயில உரிய வகையில் வசதி களை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

கணிதபாட அடைவுமட்ட வீழ்ச்சிக்கு அடுத்து பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கணிதபாட ஆசிரியர்களே. அதாவது தமது வகுப்பில் கற்கின்ற மாணவர்களின் கணிதபாட அடைவு மட்டம் எவ்வாறு உள்ளது என்பதனை ஒவ்வொரு மாணவன் சார்பாகவும் அறிந்தி ருத்தல் வேண்டும். இவ்வாறு அறிந்திருந்தால் மட்டுமே அதற்கேற்ப தமது கற்பித்தலைத் திட்டமிடமுடிவதுடன் கற்பித்தல் செய்கையைத் திறம்பட மேற்கொள்ளவும் முடியும். அதுமட்டு மன்றிக் கணிதபாட அலகுகளை பூர்த்தி செய் தால் மட்டும் போதும் என்ற நிலையை விடுத்து ஒவ்வொரு அலகில் உள்ள விடயங்களில் எத் தனை சதவீதமான கணிதபாட அறிவு மாண வர்களிடம் உட்சென்று இருக்கிறது என்பதனை அறியவேண்டும். இதற்கான முன்னேற்றச் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும். அது மட்டுமன்றி உரியவாறான பயிற்சிகளையும் செய்ய வழிப்படுத்த வேண்டும். இப்பயிற்சிகள் உரிய காலத்தினுள் திருத்தப்படல் முக்கிய மானதாகும். ஏனெனில் இப்பிழைகளை மாணவன் இனங்காண வேண்டும் என்பது மிக முக்கியமானதொன் றாகும். இனங்காணப் பட்ட பிழைகள் ஆசிரியரின் உதவியுடன் திருத்தி யமைக்கப்படல் வேண்டும். கணிதபாடப் பயிற்சிகளைச் செய்ய இடர்ப்படும் மாணவர் களுக்குப் பரிகாரக் கற்பித்தல் செய்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்துடன் ஆசிரி யர் கணிதபாடம் கற்பிக்கும்போது கணிதபாட எண்ணக்கருக்களை இலகுவில் இருந்து கடினத்தன்மையை நோக்கியதாகக் கற்பித்தல் செய்கைப்படிகள் அமையவேண்டும்.

கணிதபாட அடிப்படை எண்ணக்கரு பற்றி மாணவர்களிடையே பல தெளிவின்மைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. அதாவது அடிப்படை கணிதபாட அறிவு அற்றவர்களாக மாணவர் கள் காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி மாணவர்கள் மத்தியில் கணிதபாடமானது கஷ்டமான பாடம் என்ற மனப்பயம் பரவலாகக் காணப்படுகின்றது. அதாவது கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களில் "ஒரு சிலர்" மட்டும் மகிழ்ச்சியற்று இறுக்கமான மனநிலையில் இருந்து கற்பிக்கின்றனர். இதனால் மாணவர் களை ஈர்க்கக்கூடிய புதிய நுட்பங்களைக் கையாளும் திறன் அற்றவர்களாகவும் ஆசிரியர்கள் இருப்பதால் கணிதபாடம் ஆனது மாணவர்களுக்குப் வெறுப்பான பாடமாக மாறுகிறது. அதுமட்டுமன்றி எந்த ஒரு மாணவனும் பிறக்கும்போது நல்லவனாகவே பிறக் கின்றான். அவர்கள் நல்லவர்களாக மாறுவதும், தீயவர்கள் ஆக மாறுவதும் ஆசிரியர் இடத்திலும் ஒரு சிறு பங்கு உண்டு. அதாவது ஒரு மாணவனை படிக்கமாட்டான் என்று முடிவு கட்டக்கூடாது. அதாவது மெல்லக்கற்கும் மாணவன் என்று புறந்தள்ளிவிட முடியாது. அவ்வாறு மாணவனை ஒதுக்குவோமாயின் அம்மாணவர்களிடம் ஏற்கனவே உள்ள கணிதம் பற்றிய விருப்பும் தாழ்வு நிலைக்குச் செல்வதனைக் காணமுடிகிறது. இதனால் மாணவர்கள் கணித பாடத்தினை வெறுப்பான பார்வையுடனேயே நோக்குகின்றார்கள். எனவே மாணவர்களிடத்தில் காணப்படும் கணிதபாடம் பற்றிய தவறான அபிப்பிராயத் தினைப் போக்கி அவர்களை நாட்டின் நற் பிரஜைகளாக்குவது பாடசாலைச் சமூகத் தினையே சாரும். எனவே கணிதபாடம் என்ற கனி இனிப்பதும் கசப்பதும் பெற்றோர்களி னதும், ஆசிரியர்களினதும் மாணவர்களி னதும் கையிலேயே தங்கியுள்ளது.

**கணித பாடத்தில் பின்தங்கிய மாணவர்களை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள்.**

**ஆசிரியர்கள்**

1) கணித பாடப் பரப்பில் அடிப்படை எண்ணக்கருக்களை மாணவர்களுக்கு செயற்பாட்டின் மூலம் விளங்க வைத்தல்.
2) கணித பாடத்தில் மாணவர்கள் விடும் பிழைகளை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தல் செயன்முறை மூலம் தீர்த்தல்.
3) விசேட பயிற்சி வகுப்புக்களைத் தொடர்ச்சியாக வழங்குதல்.
4) கணித பாடத்தை கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி கவர்ச்சியாகக் கற்பித்தல்.
5) கணிதச் செயற்பாடுகளை விளையாட்டு மூலம் செயற்படுத்தி கணித பாடம் சுலபமான பாடம் என்ற நேரான மனப்பாங்கை ஏற்படுத்தல்.

**பெற்றோர்கள்**

1) வீட்டில் தங்கள் பிள்ளைகளுக்கு கணித பாடப் பயிற்சிகளைக் கூடியளவு செய்வதற்கு ஏற்றவாறு கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2) தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காகக் கல்வி கற்க அனுப்புதல். (வீட்டு அயலவரின் கொண்டாட்ட நிகழ்வுகளுக்குச் செல்வதனைத் தவிர்த்தல்).
3) தங்கள் பிள்ளைகளின் கணிதபாடக் கொப்பிகளைப் பெற்று மேற்பார்வை செய்தல். தங்கள் பிள்ளைகள் கணித செய்கைகளில் விட்ட பிழைகளை வீட்டில் மீண்டும் பிழைதிருத்தம் செய்து காட்ட வழிப்படுத்தல்.
4) பாடசாலைகளில் தேர்ச்சியறிக்கை வழங்கும் நாளில் பாடசாலைகளுக்குத் தவறாமல் சென்று மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினைப் பற்றியும், அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் கலந்தாலோசித்தல். (பாடசாலைச் சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்தல்)

**கு. கந்தரூபன்**
கணித ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனன் சஞ்சிகை தொடர்ந்து மலரப் பங்களிப்பு நல்கியோர் - 2008

| | |
|---|---|
| 1) திருமதி ச. கனகேஸ்வரன் | 5000.00 |
| 2) திரு. மா. சந்திரகாந்தன் | 2000.00 |
| 3) திரு. N. சிறீதரன் | 2000.00 |
| 4) திரு. சோ. பிரணவரூபன் | 1500.00 |
| 5) திருமதி. உ. குணநேசன் | 1500.00 |
| 6) திரு. L. ரவிசங்கர் | 1500.00 |
| 7) செல்வி T. சங்கரப்பிள்ளை | 1000.00 |
| 8) திரு. சு. ஏழூர்நாயகம் | 1005.00 |
| 9) Dr. நா. சக்திவேல் | 1000.00 |
| 10) திரு. வே. பாலசுப்பிரமணியம் | 1000.00 |
| 11) திரு. S. கதிரமலைப்பிள்ளை | 1000.00 |
| 12) திரு. T. சிவராசா | 1000.00 |
| 13) திரு. சபா. புஸ்பநாதன் | 1000.00 |
| 14) திரு. S. தியாகராசா | 1000.00 |
| 15) திரு. பொ. சுந்தரலிங்கம் | 1000.00 |
| 16) Dr. காயத்திரி அனந்தசயனன் | 1000.00 |
| 17) திருமதி. க. கேதீஸ்வரன் | 1000.00 |
| 18) திரு. சே. விபுலானந்தா | 1000.00 |
| 19) திரு. ச. ஜனார்த்தனன் | 1000.00 |
| 20) திருமதி. த. சண்முகநாதன் | 1000.00 |
| 21) திரு. அ. கோபாலகிருஷ்ணன் | 1000.00 |
| 22) திரு. K. சத்தியதாசன் | 1000.00 |
| 23) திருமதி. கலாதேவி பொன்னம்பலம் | 1000.00 |
| 24) திருமதி. அ. மணிசேகரன் | 1000.00 |
| 25) திரு. A. ரங்கநாதன் | 1000.00 |
| 26) திருமதி பா. குகநேசன் | 1000.00 |
| 27) திரு. தி. பரமேஸ்வரன் | 1000.00 |
| 28) திருமதி. T. தவராஜா | 1000.00 |
| 29) திரு. பா. மகாலிங்கசிவம் | 1000.00 |
| 30) செல்வி. R. சிறிபுராதனி | 1000.00 |
| 31) செல்வி. தயாளினி சிவப்பிரகாசம் | 1000.00 |
| 32) திரு. D. அகில்நாத் | 1000.00 |
| 33) திரு.ப. ரவிசங்கர் | 1010.00 |
| 34) திரு. K. நந்தன் | 1000.00 |
| 35) திரு. T. ஜெயானந்தராஜா | 1000.00 |
| 36) திரு. ந. முருகதாஸ் | 1000.00 |
| 37) சுகந்தினி ஞானேஸ்வரன் | 1000.00 |
| 38) திரு. இ. கமலக்கண்ணன் | 1000.00 |
| 39) திருமதி சி. சொக்கலிங்கம் | 1000.00 |
| 40) Dr. S. சபாநடேசன் | 1000.00 |
| 41) திருமதி. குகதாஸ் பவானி | 1000.00 |
| 42) திருமதி. கமலராணி கிருபானந்தன் | 1000.00 |
| 43) திரு. சம்பந்தர் திருவருட்செல்வம் | 1000.00 |
| 44) செல்வி. நிருஷா இராமச்சந்திரா | 1000.00 |
| 45) திரு. ம. லிங்கபாலன் | 1000.00 |
| 46) திரு. நா. லோகநாதன் | 1000.00 |
| 47) திரு. வே. ஜீவரூபன் | 1000.00 |
| 48) திருமதி. த. கணேசானந்தன் | 1000.00 |
| 49) திரு. V. உமாசுதன் | 1000.00 |
| 50) திருமதி. சி. மதிசீலன் | 1000.00 |
| 51) திரு. க. மயில்வாகனம் | 1000.00 |
| 52) திரு. சி. சிவாகரன் | 1000.00 |
| 53) திரு. சி. தேவகுமார் | 1000.00 |
| 54) திரு. இ. துரைசிங்கம் | 1000.00 |
| 55) செல்வி இ. செனகரத்தினம் | 1000.00 |
| 56) திரு. சு. சயந்தன் | 1000.00 |
| 57) திருமதி . S. சிவசிவா | 1000.00 |
| 58) திருமதி. ம. முருகமூர்த்தி | 1000.00 |
| 59) செல்வி V. பத்மலோஜினி | 1000.00 |
| 60) திருமதி உ. புஸ்பராசா | 1000.00 |
| 61) திரு. S. யோகநாதன் | 1000.00 |
| 62) செல்வி S. செந்தில்வாணி | 1000.00 |
| 63) திரு. T. மதியழகன் | 1000.00 |
| 64) திரு. S. ரமேஷ் | 1000.00 |
| 65) திரு. B. கேதீசன் | 1000.00 |
| 66) திரு. P. நடராஜன் | 1000.00 |
| 67) செல்வி. J. செந்தில்வேல் | 1000.00 |
| 68) திரு. நா. துஷ்யந்தன் | 1000.00 |
| 69) திருமதி. சா. பிரதீபன் | 1000.00 |
| 70) திருமதி. சாந்தி அமிர்தலிங்கம் | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: ANDRA DIGITAL IMAGE T.P 021-4590268